# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2023

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 16
இந்திய வரலாற்று மாநாட்டு அமைப்பின் 81வது கூட்டம் ........ 16
தாவரவியல் பூங்கா - செங்கல்பட்டு ........ 17
கோவில்களில் கைபேசி பயன்பாட்டிற்குத் தடை ........ 17
நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் ........ 18
51,000 கோடி கடன் ........ 18
ஆக்டேவ் 2023 ........ 19
பெண்கள் வேலை வாய்ப்பிற்குச் சிறந்த நகரம் ........ 19
Global Tamil Angels இணையதளம் ........ 20
‘சாரங் 2023’ ........ 20
சேதுசமுத்திர கால்வாய் திட்டம் ........ 21
ஜல்லிக்கட்டுக் கொண்டாட்டங்கள் ........ 22
முதல் சர்வதேசப் புத்தகக் கண்காட்சி ........ 22
செல்வாக்கு மிக்க STEM புத்தாக்க மற்றும் கற்றல் மையம் ........ 23
தமிழ்நாட்டில் பத்ம விருது பெற்றவர்கள் ........ 23
முதல்வரின் கள ஆய்வுப் பயணம் ........ 24
தேசியச் செய்திகள் ........ 25
நிதிசார் கல்வியறிவு மற்றும் நிதி உள்ளடக்கம் பற்றிய கணக்கெடுப்பு ........ 25
பிரஹாரி செயலி ........ 25
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட குடியிருப்புப் பிரிவு ........ 25
தாமஸ் M. தேவசியா குழு ........ 26
தகவல் ஆணையத்தின் (ICs) செயல்திறன் ........ 27
தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (RVM) ........ 27
இட ஒதுக்கீடு குறித்த மும்மைச் சோதனை கணக்கெடுப்பு ........ 28
"குறைந்தபட்ச ஊதியம்" என்பதிலிருந்து "வாழ்விற்கான அடிப்படை ஊதியம்" என்ற நிலைக்கு மாறுவதற்கான ஒரு முன்மொழிதல் ........ 29
2023 ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் அதிகாரப்பூர்வ நாட்காட்டி ........ 30
முன்னெச்சரிக்கை அமைப்பு ........ 30
அசாம் மாநிலத்தில் உள்ள தொகுதிகளின் எல்லை நிர்ணயம் ........ 31
G20 அமைப்பினுடைய அறிவியல் பணிக்குழுவின் செயலகம் ........ 32
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பெண் தொழிலாளர்களின் பங்கீடு ........ 33
புதிய ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம் ........ 34
இந்திய அறிவியல் மாநாட்டு அமைப்பின் 108வது கூட்டம் ........ 35
பணமதிப்பிழப்பு தொடர்பான வழக்கில் தீர்ப்பு ........ 35
ஆயுர்வேதத்திற்கான SMART திட்டம் ........ 36

அணுசக்தி அமைப்புகள் மற்றும் கைதிகள் பற்றிய பட்டியல் ........ 36
பிரஜ்வாலா சவால் ........ 37
இந்தியாவின் முதல் நீரடிச் சுரங்கப்பாதை ........ 37
உலக வங்கியின் முதன்மையான பாலினம் சார்ந்த செயற்கருவித் தொகுப்புப் புத்தகம் ........ 37
இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் கலப்பு திட்டம் ........ 38
18வது தேசிய சாரணர் மற்றும் வழிகாட்டிகள் கூட்டம் ........ 38
BIND திட்டம் ........ 39
தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டம் ........ 40
RISE - தேசியப் பிரச்சாரம் ........ 40
e-SCR திட்டம் ........ 40
உலகின் மிக நீளமான நதிப் பயணக் கப்பல் ........ 41
பத்தாண்டிற்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ........ 42
உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் திட்டம் ........ 43
ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் அமைதிக் காப்புப்படைகளின் மிகப்பெரிய படைப்பிரிவு ........ 43
iFANS-2023 ........ 44
தேசிய மரபணு மாற்றம் மற்றும் பயிற்சி மையம் ........ 44
தானியங்கி சமிக்ஞை அமைப்புடன் கூடிய இந்தியாவின் மிக நீளமான இரயில் பாதை ........ 45
தன்னார்வ வாகன நவீனமயமாக்கல் திட்டம் ........ 45
கருங்காய்ச்சல் நோய்ப் பாதிப்புகள் ........ 46
இணையவழி விளையாட்டு முறைகளுக்கான வரைவுக் கொள்கை ........ 47
தேசியப் புவியியல் கொள்கை 2022 ........ 48
SPRINT முன்னெடுப்பு ........ 48
நிலச்சரிவு - நில அமிழ்தல் மண்டலம் ........ 49
பொது நிறுவனங்கள் கணக்கெடுப்பு 2021-22 ........ 49
குறைவான புகையினை வெளியிடும் உயர் ரக மண்ணெண்ணெய் ........ 50
கல்வி தொடர்பான G-20 சந்திப்பு ........ 51
இரயில்வே நிர்வாகத்தின் ஆற்றல் செயல்திறன் திட்டம் ........ 51
எத்திலீன் கிளைக்கால் (தரக் கட்டுப்பாடு) ஆணை, 2022 ........ 52
26வது தேசிய இளையோர் திருவிழா ........ 53
நிதி உள்ளடக்கத்திற்கான உலகளாவியக் கூட்டாண்மை ........ 53
2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருவநிலை பற்றிய அறிக்கை ........ 53
இந்தியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட நகரம் ........ 54
ஊட்டச்சத்து துணை உணவுகள் குறித்த FSSAI கணக்கெடுப்பு ........ 55
தேசிய குடிநீர், சுகாதாரம் மற்றும் தர மையம் ........ 55
யாத்ரீகர்களுக்கான அரசு விருப்புரிமை அடிப்படையிலான ஹஜ் ஒதுக்கீடு ........ 56
தளவாடங்கள், நீர்வழிகள் மற்றும் தகவல் தொடர்பு கல்வி நிறுவனம் ........ 57
கைபேசி சார்ந்த விளையாட்டுகள் குறித்த அறிக்கை 2022 ........ 57
பாசுமதி அரிசிக்கு FSSAI அமைப்பின் ஒழுங்குமுறை தரநிலைகள் ........ 58
தேசிய அளவில் பல்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் ........ 59

ஆரோக்ய மைத்ரி திட்டம் ... 59
வந்தே பாரத் விரைவு இரயில் ... 60
'Soul of Steel' பிரச்சாரம் ... 60
20 சதவிகித எத்தனால் கலந்த பெட்ரோல் ... 61
பாரத் பிரவா ... 61
வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை 2022 ... 62
போபால் பிரகடனம் ... 63
உயர்மட்ட சியாங் நீர்மின் நிலையம் ... 63
பதோ பர்தேஷ் திட்டம் நிறுத்தம் ... 64
கியூபாவிற்கு பென்டாவலன்ட் தடுப்பூசிகள் வழங்கீடு ... 65
மேற்கூரை விசிறிகளுக்கான எரிசக்தி திறன் கழகத்தின் விதிமுறைகள் ... 65
இந்தியாவின் வலிமையான நிறுவனம் - ஜியோ ... 66
கூடுதல் தடுப்பு மருந்தாக கோவோவாக்ஸ் ... 67
இந்தியாவின் மிக ஆழமான மெட்ரோ இரயில் நிலையம் ... 67
சன்சாத் கேல் மஹாகும்ப் நிகழ்வின் இரண்டாம் கட்டம் 2022-23 ... 68
ஓர் ஆண்டில் 10 மில்லியன் பதிவுகள் ... 68
U-WIN தளம் ... 68
2020 ஆம் ஆண்டில் இயற்கை விவசாய விரிவாக்கம் ... 69
பிரலய் இராணுவப் பயிற்சி ... 70
ஆயுஷ்மான் பாரத் உடன் CGHS இணைப்பு ... 70
குடியரசு தினம் 2023 - முதல் முறை நிகழ்வுகள் ... 71
இந்தியாவில் தினை வகைகள் கொள்முதல் ... 71
13 மொழிகளில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ... 72
முதலாவது பசுமை ஆற்றல் கொண்ட மாநிலம் ... 72
இந்தியாவின் சிறந்த காவல் நிலையம் ... 72
இந்தியாவின் குடிமை 20 அமைப்பின் பணிக் கட்டுப்பாட்டுக் குழு (C20) ... 73
வணிகம் 20 நிகழ்வின் தொடக்க விழா ... 74
உத்திசார் கூட்டாண்மை - இந்தியா மற்றும் எகிப்து ... 74
அந்தமான் தீவுகளின் பெயர் மாற்றம் ... 75
குடியரசு தின அணிவகுப்பு 2023 ... 76
பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் 2023 ... 77
சுபாஷ் சந்திர போஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கார்-2023 ... 78
பத்ம விருதுகள் ... 79
412 வீரதீர விருதுகள் ... 79
இந்திய வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு நதிகளின் பெயர்கள் வழங்கீடு ... 80
அம்ரித் உத்யன் ... 81
உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வு அறிக்கை (AISHE) 2020-2021 ... 81
சர்வதேசச் செய்திகள் ... 83
இஸ்ரேலின் புதிய பிரதமர் ... 83

Stay Safe இயங்கலை பிரச்சாரம் ........ 83
G20 அமைப்பின் எண்ணிமப் புத்தாக்க கூட்டணி (G20-DIA) ........ 83
மங்டேச்சு நீர் மின் நிலையம் ........ 84
ஜப்பான் அரசின் புதிய கொள்கை ........ 85
சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023 ........ 85
ஐரோப்பிய ஒன்றியச் சபையின் தலைமைப் பொறுப்பு ........ 86
ஆங்கிலேய இந்திய இராணுவ நினைவுச் சின்னம் ........ 86
ஆஸ்திரியாவுடனான விரிவான இடம்பெயர்வு மற்றும் போக்குவரத்து கூட்டாண்மை ஒப்பந்தம் ........ 87
ஆசிய பசிபிக் தபால் ஒன்றியம் ........ 87
அர்ஜென்டினாவில் உள்ள லித்தியம் மற்றும் தாமிரச் சுரங்கம் ........ 88
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் புதிய உறுப்பினர்கள் ........ 88
ஆறாம் தலைமுறை தொழில்முறை சார்ந்த போர் விமானம் ........ 89
120 நாடுகளின் உச்சி மாநாடு ........ 89
வீர் கார்டியன்-2023 பயிற்சி ........ 90
எபோலா வைரஸ் பெருந்தொற்றிற்கு முற்றுப்புள்ளி ........ 91
சீனாவின் மக்கள் தொகையில் வீழ்ச்சி ........ 91
உலகிலேயே மிகக் கடுமையான புகைபிடித்தல் தடை சட்டங்கள் ........ 92
ஐரோப்பிய பசுமை ஒப்பந்தம் ........ 93
MAREX-2023 பயிற்சி ........ 94
தெற்காசியாவின் பலவீனமானப் பொருளாதார நாடு ........ 94
உலக மக்கள் தொகை மதிப்பாய்வு ........ 95
ஃபர்ஸ்ட் மூவர்ஸ் கூட்டணி தலைமைத்துவக் கூட்டம் ........ 96
சைக்ளோன் - I பயிற்சி ........ 96
‘ஜனநாயகத்திற்கான கல்வி’ என்ற தீர்மானம் ........ 97
டாவோஸ் உச்சி மாநாடு 2023 ........ 97
உணவு மற்றும் வேளாண் அமைப்பின் துணைத் தலைமை ........ 99
பொருளாதாரச் செய்திகள் ........ 100
ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக வசதியின் மூலம் மேற் கொள்ளப் பட்ட கொடுப்பனவுகளில் சாதனைப் பதிவு ........ 100
யூரோ பண மதிப்பின் ஏற்பு - குரோஷியா நாடு ........ 101
காஃபி ஏற்றுமதி ........ 101
இந்திய ரிசர்வ் வங்கியின் அமைப்புசார் இடர் ஆய்வு ........ 102
இந்தியாவில் வங்கி முறையின் போக்கு மற்றும் முன்னேற்றம் 2021-22 ........ 102
உலகின் 3வது பெரிய வாகனச் சந்தை ........ 103
நிதி நிலைத்தன்மை அறிக்கை ........ 103
தேசிய வருமானத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகள் ........ 104
அந்நியச் செலாவணி கையிருப்பு ........ 104
அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகள் ........ 105
உட்கர்ஷ் 2.0 ........ 106

இந்தியாவில் புத்தொழில் நிதி வழங்கீடு ........ 106
முதல் ஐந்து சமபங்கு மூலதனச் சந்தைகள் ........ 107
பணவீக்கத்தில் வீழ்ச்சி ........ 107
மாநிலங்களின் மொத்த நிதிப் பற்றாக்குறை ........ 108
சீனாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை ........ 108
2047 ஆம் ஆண்டில் 26 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரம் ........ 109
T+1 தீர்வு சுழற்சி ........ 110
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 111
பிரம்மோஸ் ஏவுகணை - 400 கி.மீ. தொலைவு வரம்பு ........ 111
கன்பூசியஸ் ஷிஃபான் ........ 111
கர்ரார்னாவுன் புஷ் வகை தக்காளி ........ 112
'GNB1 மூளை நலிவு' நோய் ........ 113
54 ஸ்டார்லிங்க் v2.0 செயற்கைக்கோள்கள் ........ 113
வெப்பமிகு நட்சத்திரங்கள் மற்றும் வெண் குறுமீன்கள் கண்டுபிடிப்பு ........ 113
ஜெல்போட்ஸ் ........ 114
ஹைட்ரஜன் எரிபொருளினால் இயங்கும் முதலாவது மித அதிவேக இரயில் ........ 115
லும்பி-ப்ரோவாக்ச்சின்ட் தடுப்பூசி ........ 115
மூளையை உண்ணும் அமீபா நோய் ........ 116
ஓத இழுவிசை மூலமான நட்சத்திர சீர்குலைவு நிகழ்வு ........ 117
வால் நட்சத்திரம் C/2022 E3 (ZTF) ........ 118
அண்டங்களின் இணைவு ........ 119
பிருத்வி-II ஏவுகணை ........ 119
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆளில்லா வான்வழி வாகனம் ........ 120
மீயொலி வாகன சோதனை ஓட்டம் ........ 121
விர்ஜின் ஆர்பிட் ஏவுகலம் ........ 121
நுண் நெகிழி வடிப்பான் ........ 122
அல்சைமர் நோய்க்கான லெகனேமாப் மருந்து ........ 122
அம்மோனியா உற்பத்தி செயல்முறைக்கான புதிய மின்பகுபொருள் ........ 123
உயிரிப் பூச்சிக் கொல்லிக்கான உலகளாவிய விருது ........ 124
வணிகரீதியான ஹைப்பர்லூப் தொழில்நுட்பம் ........ 124
5ஜி சேவை பெற்ற இந்தியாவின் முதல் ஆளில்லா விமானம் ........ 125
நீரிலிருந்து மாசுகளை நீக்கும் புதிய பொருள் ........ 126
OneWeb நிறுவனத்தின் 40 செயற்கைக் கோள்கள் ........ 126
VSHORAD ஏவுகணை அமைப்பு ........ 127
CAR-T சிகிச்சையில் மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ........ 128
புவியின் அளவினை ஒத்த பாறைக் கோள் ........ 128
அரிமான தடுப்புத் திறன் கொண்ட நிக்கல் உலோகக் கலவை முலாம் ........ 129
சூரியசக்தியினால் இயங்கும் புதிய அணு உலை ........ 129
செவ்வாய் கிரகத்தில் லாவா அடுக்கு ........ 130

செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி காணப்படும் ஒற்றை அலைகள் ........ 131
இரத்தக் கசிவினைக் கட்டுப்படுத்தும் கட்டுத்துணிப் பட்டை ........ 132
நிலப்பரப்பில் அமைந்த முதல் செயற்கைக்கோள் ஏவுதல் தளம் ........ 132
மின்னலுக்கு வழிகாட்டும் லேசர் கற்றை ........ 133
நாசாவின் ஜியோடெயில் ஆய்வு திட்டம் ........ 133
அணுநிலை ஹைட்ரஜனில் இருந்து உருவாகும் ரேடியோ சமிக்ஞைகள் ........ 134
பார்இயங்குதளம் ........ 135
பான்ட்ரான்ஸ்கிரிப்டோம் ........ 136
வெளிப்புறக்கோள் LHS 475 b ........ 136
டாப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு ........ 137
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 138
விலங்குகளுக்கான முதலாவது நடமாடும் செயற்கைமுறை கருத்தரித்தல் மையம் ........ 138
ஆக்கிரமிப்பு வகை சிப்பி இனங்கள் ........ 138
அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா- பறவைகள் கணக்கெடுப்பு ........ 139
வறண்ட நிலங்களில் உள்ள நகர்ப்புறக் காடுகள் மற்றும் நகர்ப்புறப் பசுமைப் படுத்துதல் திட்டம் ........ 140
5வது வெப்பமான ஆண்டு - 2022 ........ 140
தேனீக்களுக்கான முதல் தடுப்பூசி ........ 141
ஐரோப்பா - குளிர்கால வெப்ப அலை ........ 142
வேர்ப் பாலங்கள் ........ 142
பூமியின் ஓசோன் அடுக்கு மீட்பு ........ 143
பாதுகாக்கப்பட்ட இனங்களின் பட்டியலில் நீலக்குறிஞ்சி ........ 144
உப்புநீர் முதலைகளின் (Saltie) கணக்கெடுப்பு 2023 ........ 145
அரிய வகை வாத்து இனம் ........ 145
பெரிய காட்டு ஆந்தை ........ 146
அரிய வகை டைனோசர் முட்டைகள் ........ 146
கோலே சதுப்பு நிலப் பறவைகள் கணக்கெடுப்பு ........ 147
நான்கு டைனோசர் இனங்கள் கண்டுபிடிப்பு ........ 148
ஐரோப்பாவின் மிகப்பெரிய அரிய மண்தாதுப் படிவு ........ 149
மனிதன் மற்றும் யானை இனங்கள் இடையிலான சூழலியல் சார்ந்த மோதல் ........ 149
ஆரஞ்சு நிற வௌவால் ........ 150
இயற்கை இடர் விவரக்குறிப்பு ........ 151
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 152
உலகிலுள்ள பேறுகால மருத்துவப் பணியாளர்களின் நிலை 2022: கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்கா ........ 152
2022 - Nine Charts அறிக்கை ........ 152
உணவு மற்றும் வேளாண்மையின் எதிர்காலம் - மாற்றத்திற்கான இயக்கிகள் மற்றும் தூண்டுகோல்கள் ........ 153
உணவு விலைக் குறியீடு ........ 154
2022 ஆம் ஆண்டின் சிறந்த செயல்திறன் கொண்ட உலக விமான நிலையங்கள் ........ 154

குழந்தைகள் இறப்பு விகிதம் 2022 ....... 155
ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடு 2023 ....... 156
உலக இடர் அறிக்கை 2023 ....... 157
உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் ....... 157
உலக காலநிதவறாமை பட்டியல் 2023 ....... 158
"பணக்காரர்களின் தக்கனப் பிழைக்கும்" அறிக்கை ....... 159
உலகச் சமூக அறிக்கை 2023 ....... 160
உலக ஆயுத ஆற்றல் குறியீடு 2022 ....... 160
உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம் ....... 161
நிறுவனக் காப்புத்திறன் குறியீடு 2023 ....... 162
உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம் : போக்குகள் 2023 ....... 163
மாநிலச் செய்திகள் ....... 164
லோக் ஆயுக்தா மசோதா – மகாராஷ்டிரா ....... 164
உத்தரப் பிரதேசத்தில் உள்ள இடங்களின் பெயர் மாற்றம் ....... 164
ஜெலியாங்ராங் ஐக்கிய முன்னணி அமைப்பின் அமைதி ஒப்பந்தம் ....... 165
திட்டம் 929 ....... 165
சுழிய அளவு வேட்டையாடல் சம்பவங்கள் பதிவு ....... 165
2வது நீளமான கம்பிவடப் பாலம் ....... 166
சியோம் பாலம் - அருணாச்சலப் பிரதேசம் ....... 167
இலவச அரிசி வழங்கீட்டுத் திட்டம் – தெலுங்கானா ....... 167
மணிப்பூர் கான் ஞாய் திருவிழா ....... 168
இமொயினு இரட்பா விழா ....... 168
உலகின் முதல் பனை ஓலை கையெழுத்துப் படிவ அருங்காட்சியகம் ....... 168
ஊதா திருவிழா 2023 ....... 169
சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு ....... 170
சர்வதேசப் பட்டம் விடும் திருவிழா 2023 ....... 170
கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 5.0 ....... 171
MGNREGS தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ....... 171
தால்ச்சர் உரத் தயாரிப்பு ஆலை ....... 172
ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டம் ....... 173
இந்தியாவில் முதலீடு செய்வதற்கான சிறந்த இடங்கள் ....... 173
நீதிமன்றத்தில் இணையவழிச் செயல்பாட்டு அமைப்பு ....... 174
கேரளாவின் 'நிறுவனங்களின் ஆண்டு' திட்டம் ....... 174
செர்செரா திருவிழா ....... 175
லோஹ்ரி அறுவடைத் திருவிழா ....... 175
அரசியலமைப்பு சார்ந்த கல்வியறிவு பெற்ற முதல் மாவட்டம் ....... 175
இசை, கலாச்சாரம் மற்றும் உணவு வகைகளுக்கான மோங்கீத் திருவிழா ....... 176
மாநில ஸ்தாபன தினம் ....... 177
அனைத்துப் பழங்குடியினருக்கும் அவசியமான அடிப்படை ஆவணங்கள் ....... 177

அசாமின் சாராய்டியோ மொய்டம்கள் ............ 178
மாபெரும் மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் ............ 178
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ............ 179
பிரேசில் - பீலே ............ 179
ஆஸ்திரேலியாவின் ஆடவருக்கான டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் விருது ............ 180
வாசெனார் கூட்டமைப்பின் தலைவர் பதவி ............ 180
போப் பெனடிக்ட் XVI ............ 181
இந்தியாவின் முதல் பெண் முஸ்லிம் ஆசிரியை ............ 181
கௌரி அம்மா அறக்கட்டளை விருது ............ 182
விண்வெளி வீரர் வால்டர் கன்னிங்ஹாம் ............ 182
வார்டன்-QS ரீஇமாஜின் கல்வி விருதுகள் 2022 ............ 183
IACP 2022 விருது ............ 184
உலக வாழ்விட விருது 2023 ............ 184
17வது பிரவாசி பாரதிய சம்மான் விருது ............ 185
Y20 உச்சி மாநாடு ............ 185
மன்பிரீத் மோனிகா சிங் ............ 185
இந்திய உடல் அகநோக்கியியல் அறுவை சிகிச்சை முறையின் தந்தை ............ 186
7வது டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2022 ............ 186
பதங்கராவ் கடம் விருது ............ 187
ஜப்பானில் இந்தியாவின் முதல் பெண் விமானி ............ 187
மகத்தான சேவைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பதக்கம் ............ 188
ஹைதராபாத்தின் கடைசி நிஜாம் ............ 188
எல்லைச் சாலைகள் பாதுகாப்பு அமைப்பின் முதலாவது பெண் அதிகாரி ............ 189
விமர்சகர்களின் விருப்புரிமை விருதுகள் ............ 190
பிரபஞ்ச அழகி 2023 ............ 190
மூன்றாவது பணக்கார நடிகர் ............ 191
சிறந்த சிறு வங்கி விருது ............ 191
MLK கிராண்டே பரேட் சிறப்பு விருது ............ 192
நியூசிலாந்து பிரதமர் ராஜினாமா ............ 192
அசாமிய கவிஞர் நீலமணி பூகன் ............ 193
உலகின் மிகவும் வயதான மனிதர் ............ 193
FITUR சர்வதேசப் பயணக் கண்காட்சி ............ 194
பால்கிருஷ்ணா விதல்தாஸ் தோஷி (1927-2023) ............ 194
இந்தியாவின் இரும்பு மனிதர் ............ 194
2022 ஆம் ஆண்டின் சிறந்த அறிவியலாளர் விருது ............ 195
விளையாட்டுச் செய்திகள் ............ 196
யோ-யோ உடற்தகுதி சோதனை ............ 196
இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் சிறந்த விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2022 ............ 196
ரஞ்சி கோப்பைப் போட்டியில் ஹாட்ரிக் ............ 197

சானியா மிர்சா ஓய்வு.......197
12 மணி நேரத்தில் 4500 சமன்நீக்க உதைகள்.......198
மிகப்பெரிய ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகச் சாதனை.......198
ODI போட்டியில் ஐந்தாவது அதிக ரன் எடுத்த வீரர்.......199
இரட்டைச் சதம் அடித்த இளம் வீரர்.......200
ICC வருடாந்திர விருதுகள் 2022.......200
ஆஸ்திரேலிய டென்னிஸ் ஓபன் போட்டி 2023.......201
முக்கிய தினங்கள்.......202
உலகக் குடும்ப தினம் - ஜனவரி 01.......202
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் உருவாக்க தினம் - ஜனவரி 01.......202
உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04.......203
போர்களின் காரணமாக ஆதரவற்று விடப்படும் குழந்தைகளுக்கான உலக தினம் - ஜனவரி 06.......204
இந்தியப் புத்தொழில் நிறுவனங்களுக்கான புத்தாக்க வாரம்- ஜனவரி 10 முதல் 16 வரை.......204
பிரவாசி பாரதிய திவாஸ் - ஜனவரி 09.......204
தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12.......205
சாலைப் பாதுகாப்பு வாரம் 2023 - ஜனவரி 11/17.......205
7வது ஆயுதப்படை வீரர்கள் தினம் - ஜனவரி 14.......205
75வது இந்திய இராணுவ தினம் - ஜனவரி 15.......206
தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் தினம் - ஜனவரி 16.......206
தேசியப் பேரிடர் மீட்புப் படை தினம் - ஜனவரி 19.......207
பராக்ரம் திவாஸ்/ நேதாஜி ஜெயந்தி - ஜனவரி 23.......207
தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24.......208
சர்வதேச கல்வி தினம் - ஜனவரி 24.......208
உத்தரப் பிரதேசத்தின் ஸ்தாபன தினம் - ஜனவரி 24.......209
தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தினம் - ஜனவரி 25.......209
தேசிய சுற்றுலா தினம் - ஜனவரி 25.......210
இமாச்சலப் பிரதேச மாநிலம் உருவான நாள் - ஜனவரி 25.......210
சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26.......210
சர்வதேச இனப்படுகொலை நினைவு நாள் - ஜனவரி 27.......211
தரவுத் தனியுரிமை தினம் - ஜனவரி 28.......211
உலகத் தொழுநோய் தினம் - ஜனவரி 29.......211
புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் - ஜனவரி 30.......212
இதரச் செய்திகள்.......213
உள்நாட்டுக் கால்நடை இனங்கள்.......213
மெட்டாவெர்ஸ் உலகில் ஹாக்கி இந்தியா நுழைவு.......214
இந்தியக் கடலோரக் காவற்படை கப்பல் 'கம்லா தேவி'.......214
5,000 ஆண்டுகளுக்கு முன்பு பின்பற்றப்பட்ட மரணச் சடங்குகள்.......215
1200 ஆண்டுகள் பழமையான நுண்ணிய ஸ்தூபிகள்.......215
உலகின் பழமையான எழுத்து பொறிக்கப்பட்ட பாறை.......216

அதானி குழுமத்தின் மீதான ஹிண்டன்பர்க் ஆய்வு அறிக்கை ............................................................................217

# TNPSC துளிகள்

- ஊழல் தடுப்பு ஆணையர் பிரவீன் குமார் ஸ்ரீவஸ்தவா, தற்காலிக மத்திய ஊழல் தடுப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் கண்ணூரில் நடைபெற்ற இந்திய நூலக மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் தெலுங்கானாவில் அமைந்துள்ள இரண்டு கோவில்களில் PRASHAD என்ற திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான செயல்பாடுகளைத் தொடங்கி வைத்தார்.
- கர்நாடகாவில் உள்ள தேவனஹள்ளியில் அமைக்கப்பட உள்ள மத்தியத் துப்பறிவுப் பயிற்சி நிறுவனத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.
- கொல்கத்தாவில் உள்ள ஜோகா எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி தேசிய தண்ணீர் மற்றும் துப்புரவு நிறுவனத்தை (SPM-NIWAS) பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- 10 நாட்கள் அளவிலான முதலாவது பேக்கல் சர்வதேசக் கடற்கரைத் திருவிழாவானது கேரளாவின் காசர்கோடு எனுமிடத்தில் நடைபெற்றது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள தெஹ்ரி எனுமிடத்தில் உலகத் தரம் வாய்ந்த கயாக்கிங்-கேனோயிங் (சிறு படகோட்டப் போட்டி) அகாடமி அமைக்கப்பட உள்ளது.
    - இந்த அகாடமியில், உத்தரகாண்ட் மாநிலத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்று விளையாடுவதற்காக வேண்டி, இலவசப் பயிற்சியுடன் சேர்த்து தேவையான அனைத்து வசதிகளையும் அளித்துத் தயார் படுத்தப் படுவார்கள்.
- டெஸ்லா மற்றும் ட்விட்டர் ஆகியவற்றின் தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க் தனது நிகர சொத்து மதிப்பில் இருந்து 200 பில்லியன் டாலர்களை இழந்த முதல் நபர் ஆனார்.
- விரைவு சதுரங்க ஆட்டப் பிரிவின் முன்னாள் உலகச் சாம்பியனான கோனேரு ஹம்பி, கஜகஸ்தானின் அல்மாட்டி நகரில் நடைபெற்ற FIDE உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் இந்திய நாட்டிற்கான முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- புவனேஸ்வர் நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் போட்டிகளின் 18 வயதிற்குட்பட்ட ஆடவருக்கான ஹாக்கி தகுதிச் சுற்றில் மத்தியப் பிரதேச அணி ஒடிசா அணியினை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- கோவா மாநிலத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மோபா சர்வதேச விமான நிலையத்திற்கு முன்னாள் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் அவர்களின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.
- வாரணாசி கேன்ட் இரயில் நிலையம் ஆனது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் நிர்ணய ஆணையத்தின் 5 நட்சத்திர தரச் சான்றிதழுடன் கூடிய 'சரியான உணவு வழங்கீட்டு முறையினைப் பின்பற்றும் நிலையம்' என்ற விருதைப் பெற்றது.
    - இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் நிர்ணய ஆணையமானது, நிலையான உணவுச் சேமிப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்கும் இரயில் நிலையங்களுக்கு இந்தச் சான்றிதழினை வழங்குகிறது.

- சியாச்சின் பனிப்பாறைப் பகுதியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள படைப்பிரிவின் ஒரு முன்னணி பதவியில் கேப்டன் சிவா சௌகான் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - உலகின் மிக உயரமான போர்க்களத்தில் ஒரு பெண் இராணுவ அதிகாரி ஒருவர் பணியில் ஈடுபடுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- ONGC, இந்தியன் ஆயில் நிறுவனம், பவர் கிரிட், NTPC மற்றும் SAIL ஆகிய நிறுவனங்கள் 2021-22 ஆம் ஆண்டில் அதிக இலாபம் ஈட்டும் முன்னணி ஐந்து பொதுத்துறை நிறுவனங்களாக உருவெடுத்துள்ளன.
- அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்கியதற்காக பிரபு சந்திர மிஸ்ராவுக்கு அடல் சம்மான் விருது வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய ஜல் சக்தி அமைச்சகமானது, 'Water Vision@2047' என்ற கருத்துருவில் தண்ணீர் வளம் குறித்த தேசிய அளவிலான ஒரு மாநாட்டினை போபால் நகரில் ஏற்பாடு செய்து உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டியினை முன்னிட்டு, ரூர்கேலாவில் அமைக்கப்பட்டுள்ள 'பிர்சா முண்டா ஹாக்கி மைதானத்தினை' ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அவர்கள் திறந்து வைத்தார்.
- முதல் G-20 கூட்டம் ஆனது ஜனவரி 31ஆம் தேதியன்று புதுச்சேரியில் நடைபெறவுள்ளது.
- பாராளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான சசி தரூர் எழுதிய Ambedkar: A Life என்ற புத்தகமானது சமீபத்தில் நடைபெற்ற கிதாப் கொல்கத்தா என்ற நிகழ்வில் வெளியிடப் பட்டது.
- இந்தியாவின் முதல் ABB FIA ஃபார்முலா E உலக சாம்பியன்ஷிப் கார் பந்தயமானது, ஹைதராபாத் நகரில் நடைபெறவுள்ளது.
- விளையாட்டுத் துறையின் நான்கு முன்னணி நிர்வாக அமைப்புகளில் ஒன்றான, உலக குத்துச் சண்டைப் போட்டிகள் சபையானது (WBC), இந்த ஆண்டு முதல் திருநர் பிரிவை அறிமுகப் படுத்த திட்டமிட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் வரலாறு அடங்கிய புத்தகத்தின் ஐந்தாவது தொகுதியானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
  - இந்தப் புத்தகமானது 1997 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டு கால வரலாற்றினை உள்ளடக்கியது.
- இந்தியாவிலேயே முதல் முறையாக வங்கிச் சேவையில் முழுவதுமாக எண்ணிம மயமாக்கப்பட்ட மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- இந்தியத் தலைமை நீதிபதி D.Y.சந்திரசூட் அவர்களுக்கு, ஹார்வர்டு சட்டக் கல்வி நிறுவனத்தின் உலகளாவியத் தலைமைத்துவத்திற்கான 2022 ஆம் ஆண்டு CLP விருது வழங்கப்பட உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் 18 வயதுக்குட்பட்ட மகளிருக்கான தகுதிச் சுற்றில் மத்தியப் பிரதேச அணியினை வீழ்த்தி, ஹரியானாவின் ஹாக்கி மகளிர் அணி வெற்றி பெற்றது.
- புதுடெல்லியில் நடைபெற்ற MPL 59வது தேசிய முதுநிலை சதுரங்கச் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் 78வது கிராண்ட்மாஸ்டராக கௌஸ்தவ் சட்டர்ஜி ஆனார்.
- ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்ற இரண்டு நாட்கள் அளவிலான 83வது அகில இந்திய அவைத் தலைவர்கள் மாநாட்டினைத் துணைக் குடியரசுத் தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான ஜக்தீப் தன்கர் தொடங்கி வைத்தார்.

- தமிழ்நாட்டினைச் சேர்ந்த சதுரங்க வீரர் M. பிரனேஷ், 2022-23 ஆம் ஆண்டு ரில்டன் கோப்பையை வென்று இந்தியாவின் 79வது கிராண்ட்மாஸ்டர் ஆனார்.
- பிரித்தானிய இளையோர் ஓபன் போட்டியின் 15 வயதிற்குட்பட்ட மகளிருக்கான போட்டிப் பிரிவில் இந்தியாவின் ஸ்குவாஷ் வீராங்கனை அனாஹத் சிங் சாம்பியன் பட்டம் வென்றார்.
- மத்திய அரசின் துணை நிலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது, "2023 ஆம் ஆண்டு தேசிய அறிவியல் தினத்திற்காக, "உலகளாவிய நல்வாழ்வுக்கான உலகளாவிய அறிவியல்" என்ற கருத்துருவினை வெளியிட்டது.
- S.S.ராஜமௌலியின் RRR திரைப்படத்தில் இடம் பெற்ற நாட்டு நாட்டு என்ற பாடல் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த அசல் பாடல் பிரிவில் கோல்டன் குளோப் விருதினை வென்றது.
- ரீநியூ பவர் (ReNew Power) என்ற நிறுவனமானது, இந்தியாவின் முதல் 3x பிளாட்ஃபார்ம் காற்றாலை உற்பத்தி அலகுகளை கர்நாடகாவின் கடக் எனுமிடத்தில் நிறுவியுள்ளது.
- ஐக்கிய இராச்சியத்தின் இளவரசர் ஹாரியின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமான 'Spare' ஜனவரி 10 அன்று வெளியிடப் பட்டதையடுத்து, வேகமாக விற்பனையாகும் ஒரு புனைவுக் கதை அல்லாத புத்தகமாக உருவெடுத்துள்ளது.
- காக்னிசன்ட் நிறுவனமானது, இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் S. ரவிக் குமார் என்பவரை அதன் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்து உள்ளது.
- இந்திய-அமெரிக்க விண்வெளி நிபுணர் A.C.சரணியாவினை, அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா தனது புதிய தலைமை தொழில்நுட்ப வல்லுநராக நியமித்துள்ளது.
- டாட்டா பவர் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் கழக நிறுவனமானது (TPREL), மும்பையில் அமைந்த ஒரு குடியிருப்புச் சமுதாயத்திற்காக இந்தியாவின் முதல் தொகுப்பு அளவிலான சூரிய சக்தி ஆலையை அமைக்க உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஹாக்கி ஆடவருக்கான உலகக் கோப்பைப் போட்டியானது, 2023 ஆம் ஆண்டு ஜனவரி 13 முதல் 29 ஆம் தேதி வரை ஒடிசாவில் நடைபெறுகிறது.
- இந்தியா மற்றும் பிரான்சு இடையேயான இருதரப்பு கடற்படைப் பயிற்சியான 21வது வருணா பயிற்சி சமீபத்தில் இந்தியாவில் தொடங்கியது.
  - இரு கடற்படைகளுக்கும் இடையிலான இந்த இருதரப்புப் பயிற்சியானது 1993 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- மத்தியப் பிரதேசத்தின் உயர் இலட்சியமிக்க மாவட்டமான விதிஷா, புத்தொழில் நிறுவனங்கள் வழங்கும் புதுமை மிக்க 5G பயன்பாடுகளை நேரடியாக அமல்படுத்திய இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியது.
- இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி மற்றும் ஆளில்லா விமான நிறுவனமான கருடா ஏரோஸ்பேஸ் ஆகியவை இணைந்து 'ட்ரோனி' என்ற ஆளில்லா கண்காணிப்பு விமானத்தினை அறிமுகப்படுத்தியுள்ளன.
- இத்தாலிய மனிதர் ஒருவர் 81 புத்தகங்களின் பிரதிகளைப் பின்னோக்கி முறையில் தட்டச்சு செய்து கின்னஸ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
  - இந்த நுட்பம் 'கண்ணாடிப் பிம்ப எழுத்து முறை' என்று அழைக்கப்படுகிறது.
- இணையவழி விளையாட்டுப் போட்டிகளுக்கான இந்தியாவின் முதல் சிறப்பு மையம் (CoE) ஆனது மேகாலயாவின் ஷில்லாங் நகரில் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறுவப்படும்.

- ஜம்முவில் நடைபெற்ற தேசிய ஸ்கே சாம்பியன்ஷிப் போட்டியில் தெற்கு காஷ்மீரைச் சேர்ந்த 11 வயது ஃபலாக் மும்தாஜ் என்பவர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்தியாவின் G-20 அமைப்பின் தலைமைப் பதவியின் ஓர் அங்கமாக, ஜனவரி 22 முதல் 24 ஆம் தேதி வரை நடைபெற உள்ள வணிகம்-20 (B-20) தொடக்கக் கூட்டம் ஆனது குஜராத்தில் உள்ள காந்தி நகரில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- பிரிட்டிஷ் நாட்டின் கருவூலத்திற்கான தலைமைப் பொருளாதார ஆலோசகர், கிளேர் லோம்பார்டெலி, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) புதிய தலைமைப் பொருளாதார நிபுணராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - கடந்த முப்பது ஆண்டுகளில், முதல் முறையாக இந்தப் பொறுப்பினைப் பெற்ற முதல் பிரிட்டிஷ் நபர் இவரே ஆவார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் தலைவர் சுல்தான் அல்-ஜாபர் இந்த ஆண்டு நடைபெற உள்ள 28வது பங்குதாரர்கள் மாநாட்டின் பருவநிலைப் பேச்சுவார்த்தை கூட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகமானது, வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களுடைய சர்வதேச கைபேசி எண்களைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) பயன்படுத்துவதற்கு அனுமதித்துள்ளது.
- அனைத்து வாரியங்களுக்குமான மதிப்பீட்டு வழிகாட்டுதல்களை நிறுவுவதனை ஒரு நோக்கமாகக் கொண்ட PARAKH எனப்படும் (முழுமையான மேம்பாட்டிற்கான செயல் திறன் மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் அறிவுசார் பகுப்பாய்வு) இந்தியாவின் முதல் தேசிய மதிப்பீட்டுக் கட்டுப்பாட்டு அமைப்பினை நிறுவ உள்ளதாக தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) அறிவித்துள்ளது.
- எல்லைப் பாதுகாப்புப் படையின் முன்னாள் தலைமை இயக்குநர் பங்கஜ் குமார் சிங் இந்தியாவின் தேசிய துணைப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் G20 தலைமைத்துவத்தின் கீழான முதல் சுகாதாரப் பணிக்குழுவின் மூன்று நாட்கள் அளவிலான கூட்டமானது திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது சுகாதார மற்றும் உயிர் அறிவியல் ஆகியவற்றினை மையமாகக் கொண்ட நான்காவது தொழில்துறைப் புரட்சிக்கான அதன் சிறப்பு மையத்தை நிறுவுவதற்கு ஹைதராபாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- முற்றிலும் மின் ஆளுமை முறைக்கு மாறிய முதல் இந்திய ஒன்றியப் பிரதேசம் ஆக ஜம்மு மற்றும் காஷ்மீர் மாறியுள்ளது.
  - முழுமையாக எண்ணிம மயமாக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் ஒன்றியப் பிரதேசம் ஜம்மு-காஷ்மீர் ஆகும்.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசாங்கம் ஆனது 2009 ஆம் ஆண்டு விலங்குகள் சட்டத்தின் கீழ், தொற்று மற்றும் கொடிய நோய்களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக முழு ஒன்றியப் பிரதேசத்தையும் "தொற்று அற்ற பகுதி" என்று அறிவித்துள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் உயிரி மருத்துவ ஆராய்ச்சிக்கான தேசிய விலங்கு வள மையமானது ஹைதராபாத்தில் உள்ள ஜீனோம் பள்ளத்தாக்குப் பகுதியில் திறக்கப் பட்டுள்ளது.
- ESAF சிறு நிதி வங்கியானது, நிதி உள்ளடக்க இலக்கினை அடையும் முயற்சியினை மேற்கொள்வதற்காகவும், உள்ளார்ந்த வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காகவும் ஆற்றிய

பங்களிப்பிற்காக வேண்டி 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க நிதி உள்ளடக்க இந்தியா விருதுகளைப் பெற்றுள்ளது.

❖ ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கல்வி தினத்தை ஆப்கானிய சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு அர்ப்பணிக்க முடிவு செய்துள்ளது.

❖ ஹிமாலயன் கண்புரை நோய்த் திட்ட இணை நிறுவனரான டாக்டர் சந்துக் ரூயிட், பஹ்ரைனின் உயர்மட்ட குடிமை விருதான மனித நேயச் சேவைக்கான ISA விருதினை வென்றுள்ளார்.

❖ புகழ்பெற்ற எழுத்தாளர் K.வேணு என்பவர் எழுதிய 'ஓர்ணவசந்தின்டே கதை' என்ற அவரது சுயசரிதைக்காக 2022 ஆம் ஆண்டிற்கான ஃபெடரல் வங்கியின் இலக்கிய விருதானது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ கோவா மனோகர் சர்வதேச விமான நிலையத்திற்கு (MIA), ASSOCHAM அமைப்பின் 14வது சர்வதேச மாநாட்டில் வான்வழிப் போக்குவரத்து நிலைத்தன்மை மற்றும் சுற்றுச் சூழல் என்ற பிரிவின் கீழ் மதிப்பு மிக்க "சிறந்த நிலையான பசுமை வளாகத் திட்ட விமான நிலையம்" என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.

❖ சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பின் 13வது பேரவையின் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்றுள்ளது.

❖ 16வது ஜெய்ப்பூர் இலக்கிய விழாவானது (2023) சமீபத்தில் ராஜஸ்தானில் நிறைவு அடைந்தது.

❖ அமெரிக்காவின் மேரிலாண்ட் மாகாணத்தின் துணை நிலை ஆளுநராகப் பதவியேற்ற முதல் இந்திய-அமெரிக்க அரசியல்வாதி என்ற ஒரு வரலாற்றினை அருணா மில்லர் என்பவர் படைத்துள்ளார்.

❖ 18 வயதுக்கு மேற்பட்ட மாணவிகளுக்கு வருடத்திற்கு 60 நாட்கள் மாதவிடாய் விடுப்பு வழங்கப்படும் என கேரள உயர்கல்வித்துறை அமைச்சர் R. பிந்து அறிவித்துள்ளார்.

❖ நியூசிலாந்து நாட்டின் ஆளும் கட்சியானது, ஜசிந்தா ஆர்டெர்னுக்குப் பதிலாக அதன் புதிய தலைவராக, அந்நாட்டு கல்வி அமைச்சரைத் தேர்ந்தெடுத்து நியூசிலாந்தின் அடுத்த பிரதமராக அறிவித்துள்ளது.

❖ இந்தியக் கடற்படையின் ரேடாருக்குப் புலப்படாத வகையிலான ஐந்தாவது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் வகிர் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்டது.

❖ எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு, ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் மிகப்பெரிய மனித சிவப்பு ரிப்பன் சங்கிலியை உருவாக்குகியது.

❖ இன்ஸ்டாகிராம், முகநூல், ட்விட்டர், டிக்டாக் மற்றும் யூடியூப் ஆகியவற்றில் சர்வதேச கிரிக்கெட் கழகம் (ஐசிசி) 92.2 மில்லியன் அளவில் பின்தொடர்பவர்களைப் பெற்றதன் மூலம் சமூக ஊடகங்களில் அதிகம் பின்பற்றப்படும் ஒரு சர்வதேச விளையாட்டுக் கூட்டமைப்பு ஆக மாறியுள்ளது.

❖ இந்துஸ்தானி பாடகர் பத்ம விபூஷன் டாக்டர் பிரபா அத்ரேவுக்கு பண்டிட் ஹரிபிரசாத் சௌராசியா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

❖ டாடா அறக்கட்டளையானது, சித்தார்த் சர்மாவை அதன் அறக்கட்டளைகளின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் (CEO) அபர்ணா உப்பலூரியைத் தலைமை இயக்க அதிகாரியாகவும் (COO) நியமித்துள்ளது.

- பெட்ரோலியம் விளையாட்டு ஊக்குவிப்பு வாரியத்தின் (PSPB) லட்சுமண் ராவத் NSCI அகில இந்திய ஸ்னூக்கர் ஓபனில் தனது சக போட்டியாளரான ஆதித்யா மேத்தாவைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.
- எட்டாவது இந்திய சர்வதேச அறிவியல் விழா போபாலில் 'அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துடன் அம்ரித் கால் என்ற நிகழ்வை நோக்கி அணி வகுத்துச் செல்வது' என்றத் தலைப்பில் நடைபெற உள்ளது.
- விசாகப்பட்டினம் இரயில் நிலையமானது, மிகவும் உயர்மதிப்பு மிக்க பிளாட்டினம் மதிப்பீட்டினைப் பெற்று, 'பசுமை இரயில் நிலையச் சான்றிதழை' பெற்றுள்ளது.
    - பசுமை சார்ந்த நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்காக என்று இந்தியப் பசுமைக் கட்டிடச் சபையினால் இந்தச் சான்றிதழானது வழங்கப்பட்டது.
- முதலாவது இந்திய மென்பொருள் உருவாக்க நிறுவனங்கள் மாநாடானது, புது டெல்லியில் நடைபெற்றது.
    - உலகம் முழுவதும் இந்தியாவின் எண்ணிமத் தயாரிப்புகளைப் பரவலாக ஏற்றுக் கொள்ளும் ஒரு செயல்முறையினை உறுதி செய்வதற்கான வழிகள் மற்றும் வழி முறைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.
- ICC 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் டி20 கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியில், இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா முதல்முறையாக வெற்றி பெற்றது.
    - ICC 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் டி20 கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியின் முதல் பதிப்பான இது தென்னாப்பிரிக்காவினால் 2023 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு FIH ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டிக்கான சமன் நீக்க வாய்ப்பில் பெல்ஜியம் அணியினை 5-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஜெர்மனி அணி வென்றது.


# தமிழ்நாடு செய்திகள்

## இந்திய வரலாற்று மாநாட்டு அமைப்பின் 81வது கூட்டம்

- இந்திய வரலாற்று மாநாட்டு அமைப்பின் 81வது கூட்டமானது, தாம்பரத்தில் உள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது.
- இது தமிழ்நாட்டில் 25 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு நடத்தப் படுகிறது.
- இந்திய வரலாற்று மாநாட்டு அமைப்பின் இதற்கு முந்தைய கூட்டமானது 1996 ஆம் ஆண்டில், சென்னைப் பல்கலைக் கழகத்தினால் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.
- இந்திய வரலாற்று மாநாட்டு அமைப்பானது 1935 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு, இது தெற்காசியாவில் உள்ள தொழில்முறை வரலாற்றாசிரியர்களின் ஒரு மிகப்பெரிய கூட்டமைப்பாகும்.

## தாவரவியல் பூங்கா - செங்கல்பட்டு

- தமிழக அரசானது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடம்பூர் கிராமத்தில் ஒரு தாவரவியல் பூங்காவினை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.
- 138 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள இந்தப் பூங்காவானது, இலண்டனில் உள்ள கியூவ் எனுமிடத்தில் அமைந்துள்ள ராயல் தாவரவியல் பூங்கா நிர்வாகத்துடன் இணைந்து அமைக்கப்பட உள்ளது.
- அரிய, அச்சுறுத்தல் நிலையில் உள்ள மற்றும் அழிந்து வரும் தாவர இனங்கள் உட்பட, தமிழ்நாட்டினைத் தாயகமாகக் கொண்ட தாவர வகைகளைப் பாதுகாத்து, அவற்றின் பரவலை அதிகரிக்கும் ஒரு நோக்கத்துடன் இந்தத் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட உள்ளது.




## கோவில்களில் கைபேசி பயன்பாட்டிற்குத் தடை




- வழிபாட்டுத் தலங்களின் "புனிதத்தையும் தூய்மையையும்" பேணும் வகையில், தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களில் கைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

- அரசியலமைப்பின் 25வது சட்டப்பிரிவின் கீழ், அனைத்து நபர்களும் சுதந்திரமான முறையில் தனது மதம் பற்றி போதிப்பதற்கும், பின்பற்றுவதற்கும், பரப்புவதற்கும் உரிமை உண்டு என்பதில் எந்த சர்ச்சையும் இருக்க முடியாது என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.
- 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகாரச் சட்டத்தின் விதிகளின்படி, அறங்காவலர்கள் அல்லது கோயிலின் பொறுப்பினை வகிக்கும் எந்தவொரு அதிகாரியும், கோவில் வளாகத்தில் ஒழுங்கு மற்றும் நல்லொழுக்கத்தினைப் பேணுவதற்கான விதிமுறைகளை உருவாக்க இயலும்.
- குருவாயூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் கோவில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் மற்றும் திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோவில் ஆகியவற்றில் கைபேசி பயன்பாட்டிற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது குறித்து நீதிமன்றம் குறிப்பிட்டது.
- இந்தக் கோவில்களின் வளாகத்திற்குள் நுழையும் முன் அங்கு கைபேசிகளை ஒப்படைப்பதெற்கென இந்தக் கோவில்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனி பாதுகாப்பு முகப்புகள் உள்ளன.

## நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

- தமிழகத்தில் உள்ள மேலும் மூன்று கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்குவதற்கான திட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இராமேஸ்வரத்தில் உள்ள இராமநாதசுவாமி கோயில், திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரர் கோயில் மற்றும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் ஆகிய மூன்று கோயில்களில் இத்திட்டமானது தொடங்கப்பட்டது.
- இதன் மூலம் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கும் இந்தத் திட்டமானது தற்போது எட்டு கோவில்களில் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

## 51,000 கோடி கடன்

- 2022-2023 ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (ஜனவரி-மார்ச்) 51,000 கோடி ரூபாய் நிதி திரட்ட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- இது மாநில மேம்பாட்டுக் கடன்கள் எனப்படும் முறையில் பத்திரங்களை ஏலம் விடுவதன் மூலம் திரட்டப் படும்.
- இது 2022 ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் (Q4) பெறப்பட்ட 35,000 கோடி ரூபாயை விட 45.7% அதிகமாகும்.
- 2022 ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-டிசம்பர் காலாண்டில் மாநில அரசு 49,000 கோடி ரூபாயினைக் கடனாகப் பெற்றுள்ள நிலையில், இது 2021 ஆம் நிதியாண்டின் இதே கால கட்டத்தில் பெறப்பட்ட 52,000 கோடி ரூபாயை விடக் குறைவாகும்.
- 2022-23 ஆம் நிதியாண்டில் (அக்டோபர் மாதம் வரை) தமிழக அரசின் மொத்த வருவாய் வரவு 1,29,600.46 கோடியாகும்.
- இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த 1,01,047.40 கோடி ரூபாயிலிருந்து 28.3% அதிகமாகும்.

- 2022 ஆம் நிதியாண்டின் அக்டோபர் மாத இறுதி நிலவரப்படி தமிழக மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை 25,931.10 கோடி ரூபாயாக உள்ளது.
- இது 2021 ஆம் நிதியாண்டின் அக்டோபர் மாத இறுதியில் 28,108.69 கோடி ரூபாயாக இருந்தது.
- 2021-22 ஆம் நிதியாண்டில், மாநிலத்தின் மொத்தக் கடன்கள் 87,000 கோடியாகும்.

## ஆக்டேவ் 2023

- ஆக்டேவ் 2023 என்பது வடகிழக்கு இந்தியாவின் கலாச்சாரத்தைக் கொண்டாடும் ஒரு பண்டிகையாகும்.
- இது தஞ்சாவூரில் அமைந்துள்ள தென் மண்டலக் கலாச்சார மையத்தினால் சென்னை மாநகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த விழாவானது சென்னை மாநகரவாசிகள் வடகிழக்கு இந்திய மாநிலங்களின் கலாச்சாரம், பன்முகத்தன்மை மற்றும் செழுமை ஆகியவை பற்றி அறிந்து கொண்டு போற்ற உதவும்.
- வடகிழக்கில் அமைந்துள்ள எட்டு மாநிலங்கள் நமது நாட்டின் மக்கள்தொகையில் 4 சதவீதத்தினையும் இந்தியாவின் புவியியல் பரப்பில் 8 சதவீதத்தினையும் கொண்டு உள்ளது.

## பெண்கள் வேலை வாய்ப்பிற்குச் சிறந்த நகரம்

**MOST WOMEN-INCLUSIVE CITIES**

With over 1 mn population

| Rank | City | Score |
|---|---|---|
| 1 | Chennai | 78.41 |
| 2 | Pune | 69.44 |
| 3 | Bengaluru | 64.48 |
| 4 | Hyderabad | 62.47 |
| 5 | Mumbai | 61.11 |
| 6 | Ahmedabad | 58.62 |
| 7 | Visakhapatnam | 56.14 |
| 8 | Kolkata | 54.80 |
| 9 | Coimbatore | 51.16 |
| 10 | Madurai | 49.35 |

With <1 mn population

| Rank | City | Score |
|---|---|---|
| 1 | Tiruchirappalli | 71.61 |
| 2 | Vellore | 70.30 |
| 3 | Erode | 66.50 |
| 4 | Salem | 65.86 |
| 5 | Tiruppur | 64.21 |
| 6 | Puducherry | 63.62 |
| 7 | Shimla | 58.05 |
| 8 | Mangaluru | 58.02 |
| 9 | Thiruvananthapuram | 57.19 |
| 10 | Belagavi | 55.51 |

Source: Avtar study

- பெண்களுக்கான வேலைவாய்ப்பில் இந்தியாவிலேயே சிறந்த நகரமாக சென்னை விளங்குகிறது.
- அதைத் தொடர்ந்து புனே, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் மும்பை ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- பணியிடங்களின் உள்ளடக்க மதிப்பீட்டில் நிபுணத்துவம் பெற்ற அவ்தார் எனப்படும் நிறுவனம் இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, பெண்களின் வேலைவாய்ப்பிற்கு உகந்த ஒரு சூழலை மேம்படுத்தும் அளவுருக்களின் அடிப்படையில் 111 நகரங்களைத் தரவரிசைப் படுத்துகிறது.
- ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் அடங்கிய மற்றொருப் பிரிவில் திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு ஆகிய நகரங்கள் முன்னணியில் உள்ளன.
- கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய நகரங்கள் நாட்டிலேயே முதல் ஐந்து மாநில சராசரி மதிப்புகளைப் பெற்றுள்ளன.

## Global Tamil Angels இணையதளம்

- தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் அமைப்பின் Global Tamil Angels என்ற இணைய தளத்தினை (www.tamilangels.fund) தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வெளியிட்டு உள்ளார்.
- இது உலக நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த தமிழின முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான வழிவகைகளை வழங்கச் செய்யும்.
- இந்த இணையதளம் ஆனது, "உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில்" வெளியிடப் பட்டது.

## 'சாரங் 2023'




- நாட்டின் மிகப்பெரிய மாணவர் விழாவான சாரங் 2023 சென்னை மாநகரில் நடைபெற்றது.
- இந்த ஆண்டின் விழாவானது, 28வது சாரங் விழாவாகும்.

- 2023 ஆம் ஆண்டு சாரங் விழாவின் கருத்துரு 'Mystic Hues' என்பதாகும்.
- கோவிட் பெருந்தொற்று காரணமாக மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு இந்த விழாவானது நேரடிப் பங்கேற்பு முறையில் நடத்தப்படுகிறது.
- இதில், நாடு முழுவதிலும் உள்ள 500க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

## சேதுசமுத்திர கால்வாய் திட்டம்




- வெகு நாட்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு மீண்டும் கையிலெடுக்க வலியுறுத்தி தமிழகச் சட்டப் பேரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
- இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்குக் கரையோரங்களுக்கு இடையிலான கடல் போக்குவரத்து இணைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்பதோடு, இதன் மூலம் கப்பல்கள் இலங்கையை சுற்றிப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க முடியும்.
- இது பனாமா மற்றும் சூயஸ் கால்வாய்களுக்கு நிகரான கடல் வர்த்தகத்திற்கு உதவும் என்று கருதப் படுகிறது.
- இது குறித்த கருத்தாக்கமானது, முதன் முதலில் 1860 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தினை, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் 2005 ஆம் ஆண்டு ஜூலை 02 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார்.
- சமய அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்தத் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- 2007 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் எதிர்க்கட்சிக்கு இடையே ஏற்பட்ட சட்ட மோதலைத் தொடர்ந்து இத்திட்டம் முடக்கப்பட்டது.
- இராமர் சேது என்பது இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள இராமேஸ்வரம் தீவிற்கும் இலங்கையின் வடமேற்கில் உள்ள மன்னார் தீவிற்கும் இடையில் உள்ள சுண்ணாம்புக் கற்களால் ஆன சங்கிலித் தொடர் அமைப்பாகும்.
- இந்து புராணங்களின் படி, இந்தப் பாலம் ஆனது ஹனுமான் மற்றும் அவரது படை வீரர்களால் பகவான் ஸ்ரீராமருக்கு உதவுவதற்காக கட்டப்பட்டது.

- இந்தக் கால்வாய் அமைக்கும் திட்டமானது, பாக் வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளின் கடல் சார் சுற்றுச்சூழல் அமைப்புக்குக் கணிசமான அளவில் சேதத்தினை ஏற்படுத்தும்.
- முன்கூட்டியே கணிக்க முடியாத புயல்கள் அவ்வப்போது எழுவதால் இப்பகுதியினை மிகவும் பாதிக்கப்படக் கூடியதாக வானிலை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


## ஜல்லிக்கட்டுக் கொண்டாட்டங்கள்



- 'ஏறு தாழ்வுதல்' மற்றும் 'மஞ்சுவிரட்டு' என்று அழைக்கப்படும் 'ஜல்லிக்கட்டு' மதுரை மாவட்டம் பாலமேட்டில் நடைபெற்றது.
- மாட்டுப் பொங்கல் தினத்தன்று பொங்கல் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப் படுகிறது.
- அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த விளையாட்டுப் போட்டியானது நடத்தப்படுகிறது.
- உழவர் சமுதாயத்தினருக்கு நாட்டுக் காளை மாட்டு இனங்களைப் பாதுகாக்கச் செய்வதற்கான ஒரு பாரம்பரிய வழி இந்த விளையாட்டுப் போட்டிகளாகும்.
- கர்நாடகா மற்றும் தமிழ்நாடு தவிர, பஞ்சாப், ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இந்த விளையாட்டுப் போட்டிக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- கர்நாடகாவில் ஜல்லிக்கட்டு கம்பளா என்று அழைக்கப்படுகிறது.

## முதல் சர்வதேசப் புத்தகக் கண்காட்சி

- முதலாவது சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சியானது நந்தனம் YMCA மைதானத்தில் தொடங்கியது.
- பொது நூலக இயக்குனரகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் மற்றும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து இந்த மூன்று நாட்கள் அளவிலான சர்வதேசக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.
- புத்தகத் திருவிழாக்களுக்கு புகழ் பெற்ற பிராங்ஃபர்ட், போலந்து, இலண்டன் மற்றும் பெய்ஜிங் போன்ற நகரங்களின் பட்டியலில் தற்போது சென்னையும் இணைகிறது.




## செல்வாக்கு மிக்க STEM புத்தாக்க மற்றும் கற்றல் மையம்

- அமெரிக்க இந்திய அறக்கட்டளையானது (AIF), வானவில் மன்றத் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் STEM புத்தாக்க மற்றும் கற்றல் மையத்தை (SILC) சென்னையில் தொடங்கியுள்ளது.
- இந்த மையமானது, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறை சார்ந்த ஒரே ஒரு தீர்வாக இருக்கும் என்று ஒரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த மையம் எந்திரவியல், செயற்கை நுண்ணறிவு, விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் STEM ஊக்குவிப்பு மையம் ஆகியவற்றின் மூலம் மாணவர்களுக்கு இடைநிலை கற்றல் அணுகுமுறையை அறிமுகப்படுத்த உள்ளது.

## தமிழ்நாட்டில் பத்ம விருது பெற்றவர்கள்

- மருத்துவம், கலை, சமூகப் பணி உள்ளிட்ட துறைகளில் பங்காற்றியதற்காக தமிழகத்தைச் சேர்ந்த 6 பேரும், புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவரும் இந்த ஆண்டு பத்ம விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- இருளர் சமூகத்தைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் நிபுணர்களான வடிவேல் கோபால் மற்றும் மாசி சடையன் ஆகியோர் பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.
- பிரபல பாடகி வாணி ஜெயராம் பத்ம பூஷன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட நிலையில், தமிழகத்தைச் சேர்ந்த பாலம் கல்யாண சுந்தரம் (சமூகப் பணி), டாக்டர் கோபால்சாமி வேலுச்சாமி (மருத்துவம்), கே.கல்யாணசுந்தரம் பிள்ளை (கலை) ஆகியோர் பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- புதுச்சேரியைச் சேர்ந்த டாக்டர் நளினி பார்த்தசாரதியும் (மருத்துவம்) பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- கோவிட்-19 மேலாண்மைக்கான சாத்தியமான மருந்தாக 'கபசுரக் குடிநீரை' முதலில் பரிந்துரைத்தவர்களில் டாக்டர் வேலுச்சாமியும் ஒருவர்.
- மதிப்புமிக்க பத்ம பூஷன் விருது பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த ஒரே நபர் வாணி ஜெயராம் ஆவார்.



## முதல்வரின் கள ஆய்வுப் பயணம்




- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்தில் இருந்து கள ஆய்வில் முதல்வர் (முதல்வர் களப் பயணம்) என்ற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல்வர் அவர்கள், இனி வரும் மாதங்களில் மண்டலம் வாரியாக தமிழ் நாடு மாநிலம் முழுவதும் பார்வையிட உள்ளார்.
- இதற்காக, அனைத்து மாவட்டங்களும் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் நான்கு அல்லது ஐந்து மாவட்டங்களைக் கொண்டதாகப் பிரிக்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## நிதிசார் கல்வியறிவு மற்றும் நிதி உள்ளடக்கம் பற்றிய கணக்கெடுப்பு

- இந்தியா முழுவதிலுமான "நிதி கல்வியறிவு மற்றும் நிதி உள்ளடக்கம்" பற்றிய ஒரு கணக்கெடுப்பானது இந்திய ரிசர்வ் வங்கியினால் நடத்தப்பட்டது.
- நாடு முழுவதும் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களிடையே எண்ணிம வங்கி குறித்த விழிப்புணர்வும் கல்வி அறிவும் ஒன்றுக்கொன்று இணையான அளவில் உள்ளன.
- முதலீடு, வரவு செலவுத் திட்டம் மற்றும் தனிப்பட்ட நபரின் நிதி மேலாண்மை போன்ற பல்வேறு நிதிசார் திறன்களைப் பயன்படுத்துவதனைப் பற்றிய ஒரு புரிதலையும், நிபுணத்துவத்தினையும் பெற்றிருப்பது நிதியியல் கல்வியறிவு எனப்படும்.

## பிரஹாரி செயலி

- எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவினர்களுக்கான 'பிரஹாரி' என்ற ஒரு செயலியைச் சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அறிமுகப்படுத்தினார்.
- எல்லைப் பாதுகாப்புப் படையின் வீரர்கள் தங்குமிட வசதிகள், ஆயுஷ்மான்-CAPF மற்றும் விடுப்பு ஆகியவை பற்றியத் தகவல்களைப் பெறுவதற்கு வேண்டி பிரஹார் செயலியினைப் பயன்படுத்த இயலும்.
- இந்த செயலியானது வீரர்களின் சுய விவரக் குறிப்பு பற்றிய தகவல்களையும், "மையப் படுத்தப் பட்ட பொது மக்கள் குறைதீர்ப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு (CP-GRAMS) தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்வது பற்றிய தகவல்களையும் வழங்குகிறது.
- இது எல்லைப் பாதுகாப்புப் படைக்கான பல்வேறு நலத் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குகிறது.
- இது செயலியின் மூலம் பயனரை உள்துறை அமைச்சகத்தின் இணைய தளத்துடன் இணைக்கும்.

## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட குடியிருப்புப் பிரிவு

- இந்திய இராணுவமானது, அகமதாபாத்தில் அமைக்கப்பட்டுள்ள தனது முதலாவது முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட குடியிருப்புப் பிரிவினைத் திறந்து வைத்து உள்ளது.

- இராணுவப் பொறியியலாளர் சேவை வழங்கீட்டு அமைப்பானது, MiCoB பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, சமீபத்திய முப்பரிமாண முறையில் அச்சிடப் பட்ட விரைவுக் கட்டுமானத் தொழில்நுட்பத்துடன் இந்தக் குடியிருப்புப் பிரிவினை உருவாக்கியுள்ளது.
- இது 3வது மண்டலம் சார்ந்த நிலநடுக்கத் தரவுகள் மற்றும் பசுமைக் கட்டிட விதிமுறைகள் ஆகியவற்றிற்கு இணங்கும் வகையில் உள்ளது.




## தாமஸ் M. தேவசியா குழு





- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ஆனது (IRDAI) 24 பேர் கொண்ட ஒரு குழுவினை அமைத்துள்ளது.
- கிராமப்புற மக்களுக்கான மலிவு விலையிலான மற்றும் விரிவான ஒரு காப்பீட்டுத் திட்டத்தினை உருவாக்கி, அதற்கான பரிந்துரைகளை வழங்குவது இதன் பணியாகும்.
- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராக உள்ள தாமஸ் M. தேவாசியா இக்குழுவிற்குத் தலைமை வகிக்க உள்ளார்.
- பயன் அடிப்படையிலான அளவுருக் கட்டமைப்பாக விளங்க உள்ள பிமா விஸ்தார் எனப்படுகின்ற முன்மொழியப் பட்டுள்ள காப்பீட்டுத் திட்டத்திற்கான ஒரு ஒழுங்கு முறை கட்டமைப்பினை இக்குழுப் பரிந்துரை செய்யும்.

## தகவல் ஆணையத்தின் (ICs) செயல்திறன்

- ❖ தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம் மிகக் குறைந்த அளவிலான செயல்திறனையே கொண்டுள்ளது.
- ❖ நாடு முழுவதும் உள்ள 29 தகவல் ஆணையங்களில் கோரப்பட்டத் தகவல்களில் இது வெறும் 14% வரை மட்டுமே ஆகும்.
- ❖ கோரப்பட்டத் தகவல்களில் 23% மட்டுமே வழங்கியதுடன் மகாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ உத்தரப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அவை பெற்ற முறையீடுகள் அல்லது புகார்களில் சுமார் 40% வரையிலானவற்றிற்கு மட்டுமே பதில் அளித்துள்ளன.





## தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (RVM)



- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது இந்தியா முழுவதும் உள்ள உள்நாட்டுப் புலம் பெயர்ந்தோருக்கு வாக்களிப்பதற்கான ஒரு வசதியினை வழங்கும் விதமாக தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் (RVM) ஒரு முன்மாதிரியை உருவாக்கியுள்ளது.
- தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஆனது இணையத்துடன் இணைக்கப் படாமல், தற்போதுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒரு தனிப்பட்ட அமைப்பாகச் செயல்படும்.
- வாக்காளர்களின் தேர்தல் பங்கேற்பினை அதிகரிப்பது மற்றும் உள்நாட்டுப் புலம் பெயர்ந்தோர் தேர்தலில் பங்கேற்பதை எளிதாக்குவது ஆகியவை தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் அறிமுகப்படுத்தப் படுவதன் ஒரு குறிக்கோள் ஆகும்.
- தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் என்பது ஒரு தொலைதூர வாக்குச் சாவடியில் இருந்தே 72 தொகுதிகள் வரையில் கையாளக் கூடிய பல்தொகுதி மின்னணு வாக்குப் பதிவு இயந்திரமாகும்.
- இது நிகழ்நேர அடிப்படையில் சோதனை செய்யப்பட்ட M3 (மார்க் 3) வகை தொலை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்டதோடு மட்டும் அல்லாமல், இது உள்நாட்டுப் புலம்பெயர்ந்தோர், தொலைதூர வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க வழிவகை செய்வதற்காகப் பயன்படுத்தப்படும்.
- தொலைதூர வாக்களிப்பு முறையினை அறிமுகப்படுத்துவதற்காக 1950 மற்றும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், தேர்தல் நடத்தை விதிகள், 1961 மற்றும் வாக்காளர்கள் பதிவு விதிகள், 1960 ஆகியவை திருத்தப்பட வேண்டும்.

## இட ஒதுக்கீடு குறித்த மும்மைச் சோதனை கணக்கெடுப்பு




- இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு இல்லாமல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்துமாறு அலகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரப் பிரதேச மாநில அரசிற்கு உத்தரவிட்டுள்ளது.
- இட ஒதுக்கீட்டிற்கான "மும்மைச் சோதனை" என்ற ஒரு அவசிய நிபந்தனை பூர்த்தி செய்யப் படாததால் இந்த அறிவிப்பானது விடுக்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற விகாஸ் கிஷன்ராவ் கவாலி மற்றும் மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் பிற மாநிலங்கள் இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம் மும்மைச் சோதனை என்ற ஒரு கருத்தினை முன்வைத்தது.
- இந்தக் கருத்தானது, உள்ளாட்சி அமைப்புகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினை இறுதி செய்வதற்கு அரசாங்கம் மூன்று பணிகளைச் செயல்படுத்துதலை உள்ளடக்கியது ஆகும்.
- அந்தப் பணிகள்
    - உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களின் நிலையின் பின்தங்கிய இயல்பு மற்றும் தாக்கங்கள் குறித்து ஒரு ஆழமான தகவல் சார்ந்த ஆய்வினை மேற் கொள்வதற்காக ஒரு பிரத்தியேக ஆணையத்தை அமைத்தல்.
    - ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளில் தேவைப் படும் இட ஒதுக்கீட்டின் விகிதத்தைக் குறிப்பிடுதல்
    - பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான இடஒதுக்கீடுகள் மொத்த இடங்களின் 50 சதவீத வரம்பினைத் தாண்டாமல் இருப்பதை உறுதி செய்தல்.

## "குறைந்தபட்ச ஊதியம்" என்பதிலிருந்து "வாழ்விற்கான அடிப்படை ஊதியம்" என்ற நிலைக்கு மாறுவதற்கான ஒரு முன்மொழிதல்

- இந்தியாவில் வறுமையில் வாழும் அதிகப்படியான மக்களை அந்த நிலையிலிருந்து மீட்டு கொண்டு வரும் ஒரு முயற்சியாக மத்தியத் தொழிலாளர் அமைச்சகம் ஆனது தற்போது "குறைந்தபட்ச ஊதியம்" என்பதிலிருந்து "வாழ்விற்கான ஒரு அடிப்படை ஊதியம்" என்ற நிலைக்கு மாற்றுவது குறித்து ஆலோசித்து வருகிறது.
- "வாழ்விற்கான அடிப்படை ஊதியம்" என்பது ஒரு தனிநபர் அல்லது குடும்பம் தனக்கென போதுமான தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் பிற அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு உதவும் வருமான நிலை ஆகும்.
- குறைந்தபட்ச வருமானம் என்பது மன நிறைவான வாழ்க்கைத் தரத்தை பெற உதவச் செய்வதோடு, அது தனிநபர்களை வறுமையில் விழாமலும் தடுக்கிறது.
- தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான குறைந்தபட்ச வருமானம் ஆனது வாழ்விற்கான ஒரு அடிப்படை ஊதியம் என வரையறுக்கப் படுகிறது.
- இது தொழிலாளர் உற்பத்தித் திறன் மற்றும் செயல்திறன்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்திலிருந்து வேறுபட்டதாகும்.
- குறைந்தபட்ச ஊதியம் என்பது சட்டத்தின் படி ஒரு தொழிலாளி ஈட்டக்கூடிய மிகக் குறைந்தபட்சத் தொகையாகும்.
- பணவீக்கத்தினைப் பொறுத்து இது மாறுபடாது என்பதால் அரசின் திட்டத்தின் மூலமாக மட்டுமே இந்த அளவினை அதிகரிக்க முடியும்.
- வாழ்விற்கான அடிப்படை ஊதியத்தில் இந்தச் செயல்முறை இல்லை.
- வாழ்விற்கான அடிப்படை ஊதியம் என்பது வசதியாக வாழ்வதற்கான சராசரிச் செலவினங்கள் மூலம் நிர்ணயிக்கப் படுகிற நிலையில், குறைந்தபட்ச ஊதியம் என்பது அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிலையான தொகையாகும்.

## 2023 ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் அதிகாரப்பூர்வ நாட்காட்டி



- ❖ மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் 2023 ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் அதிகாரப் பூர்வ நாட்காட்டியினை வெளியிட்டார்.
- ❖ பொது மக்களின் நலனை உறுதி செய்வதற்காக இந்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை வெளிப்படுத்தும் விதமாக 12 மாதங்களுக்கு 12 கருத்துருக்கள் இதில் இடம் பெற்றுள்ளன.
- ❖ ஒட்டு மொத்தமாக, இந்த நாட்காட்டி சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ் பற்றிய இந்திய அரசின் குறிக்கோளினைப் பிரதிபலிக்கிறது.
- ❖ இது 'நயா வர்ஷ், நயே சங்கல்ப்' என்ற கருத்துருவின் அடிப்படையில் உருவாக்கப் பட்டது.
- ❖ இந்த நாட்காட்டி ஆனது ஆங்கிலம் மற்றும் இந்தி உட்பட 13 மொழிகளில் கிடைக்கப் பெறுகிறது.


## முன்னெச்சரிக்கை அமைப்பு

- ❖ மத்திய மின்சார அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை இணைந்து, மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பாதிக்கப் படக் கூடிய நீர் மின் நிலையத் திட்டங்கள் அல்லது மின் நிலையங்களுக்காக சில முன் எச்சரிக்கை அமைப்புகளை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ தற்போது, மலைப்பகுதிகளில் உள்ள பெரும்பாலான நீர்மின் நிலையத் திட்டங்கள் மற்றும் அணைகளில் முன்னெச்சரிக்கை அமைப்புகள் இல்லை.
- ❖ முன்னெச்சரிக்கை அமைப்பு (EWS) என்பது பின்வருவனவற்றினை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த அமைப்பாகும்.
    - ○ இடர் கண்காணிப்பு, முன்னறிவிப்பு மற்றும் கணிப்பு
    - ○ பேரிடர் அபாய மதிப்பீடு
    - ○ தகவல் தொடர்பு மற்றும் ஆயத்த நடவடிக்கைகள் அமைப்பு
    - ○ பேரிடர் அபாயங்களைக் குறைப்பதற்கு தனிநபர்கள், சமூகங்கள், அரசாங்கங்கள் மற்றும் வணிகங்கள் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்க உதவும் சில செயல் முறைகள்.

## அசாம் மாநிலத்தில் உள்ள தொகுதிகளின் எல்லை நிர்ணயம்

- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, அசாம் மாநிலத்தின் சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை நிர்ணயச் செயல்முறையை சமீபத்தில் தொடங்கியது.
- ❖ அசாம் மாநிலத்தில் கடைசியாக 1976 ஆம் ஆண்டில் தான் எல்லை நிர்ணயம் மேற் கொள்ளப்பட்டது.
- ❖ தற்போதைய எல்லை நிர்ணயமானது, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ எல்லை நிர்ணயம் என்பது மாறிவரும் மக்கள்தொகை எண்ணிக்கையை உள்ளடக்கும் வகையில் மாநிலச் சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் மக்களவைத் தொகுதிகளின் எல்லைகளை மறுவடிவமைக்கும் ஒரு செயல்முறையாகும்.
- ❖ மக்கள்தொகையின் அனைத்துப் பிரிவினருக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப் படுவதை உறுதி செய்வதே எல்லை நிர்ணய நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.
- ❖ மக்கள் தொகை ஒரே சீரான முறையில் அதிகரிக்காது என்பதால், எல்லை நிர்ணயம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பதிவான மக்கள்தொகைப் பங்கீட்டில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது.
- ❖ எல்லை நிர்ணய ஆணைக்குழு என்பது எல்லை நிர்ணய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள ஒரு சுயாதீன ஆணையக் குழு ஆகும்.
- ❖ இது எல்லை நிர்ணய ஆணையச் சட்டத்தின் கீழ் மத்திய அரசினால் அமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆணையமானது, இந்தியத் தேர்தல் ஆணையத்துடன் (ECI) இணைந்து எல்லை நிர்ணய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.
- ❖ உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் அந்தந்த மாநிலங்களின் மாநிலத் தேர்தல் ஆணையர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.
- ❖ அரசியலமைப்பின் 82வது சட்டப் பிரிவானது, இந்திய நாடாளுமன்றம் ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகும் ஒரு எல்லை நிர்ணயச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கூறுகிறது.
- ❖ இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததும், உடனே எல்லை நிர்ணய ஆணையத்தினை மத்திய அரசானது அமைக்க வேண்டும்.
- ❖ இது நாள் வரையில் (1952, 1963, 1973 மற்றும் 2002) மொத்தம் 4 எல்லை நிர்ணய ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ 2002 ஆம் ஆண்டு சட்டமானது மக்களவைக்கான மொத்த இடங்களின் எண்ணிக்கையில் அல்லது பல்வேறு மாநிலங்களுக்கு இடையேயான பங்கீடுகளில் எந்த மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை.
- ❖ இச்சட்டம் அசாம், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களை எல்லை நிர்ணய நடவடிக்கையில் இருந்து ஒரு சில பாதுகாப்பு காரணங்களுக்காக அவற்றை ஒதுக்கி வைத்தது.
- ❖ இந்திய அரசாங்கமானது, இந்த 4 மாநிலங்களுக்கும், ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்திற்குமான எல்லை நிர்ணய ஆணையத்தினை 2020 ஆம் ஆண்டில் மறு சீரமைத்தது.

- மக்களவையின் மாநில வாரியான கூட்டமைவினை மாற்றிய முந்தைய எல்லை நிர்ணய நடவடிக்கையானது 1976 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- இது 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நடத்தப் பட்டது.
- அண்மைக் காலமாக எல்லை நிர்ணய நடவடிக்கைகள் அடிக்கடி நடத்தப் படுவது இல்லை.
- இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் மக்களவை இடங்களின் எண்ணிக்கையானது, அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதே இதற்குக் காரணமாகும்.
- இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக 1976 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு எல்லை நிர்ணய நடவடிக்கையானது 2001 ஆம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டு வரை எல்லை நிர்ணய நடவடிக்கையை மேலும் தாமதப் படுத்தச் செய்வதற்காக மற்றொரு திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.





## G20 அமைப்பினுடைய அறிவியல் பணிக்குழுவின் செயலகம்

- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்விக் கழகம் ஆனது (IISc) அறிவியல் 20 (S20) நிகழ்வுக்கான செயலகமாக தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- வறுமை போன்ற ஒரு பொதுவான உலக அளவிலான சவால்களைத் தீர்ப்பதற்கு இது பணியாற்றும்.

- 2023 ஆம் ஆண்டு முழுவதும் அகர்தலா, இலட்சத்தீவு மற்றும் போபால் ஆகிய நகரங்களில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் இது குறித்து விவாதிக்கப்படும்.
- கோயம்புத்தூரில் நடைபெற உள்ள S20 உச்சி மாநாட்டில் G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த அனைத்து அறிவியல் அமைச்சர்களும் பங்கேற்க உள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டு அறிவியல் 20 (S20) மாநாட்டின் கருத்துரு, 'புத்தாக்கம் மிக்க மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான புதிய அறிவியல்' என்பதாகும்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பெண் தொழிலாளர்களின் பங்கீடு




- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGS) பங்குபெறும் பெண் தொழிலாளர்களின் விகிதமானது, நடப்பு நிதியாண்டில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.
- மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி, இந்த ஆண்டில் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திய தொழிலாளர்களில் 57.8% பெண்கள் ஆவர்.
- 2012-13 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதிவான தரவுகளில் பெண்களின் மிக அதிக பட்சப் பங்கேற்பு நிலை இதுவாகும்.
- இதன்படி மதிப்பாய்வு செய்யப்பட்ட 15 மாநிலங்களுள் 14 மாநிலங்களில் பெண்களின் பங்கேற்பில் முன்னேற்றப் போக்குகள் பதிவாகியுள்ளன.
- கேரள மாநிலம் இந்த விகிதத்தில் மிகவும் குறைவான வீழ்ச்சியை மட்டுமே கண்டது.
- கடந்த ஐந்து ஆண்டுகளாக, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பதிவான, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பெண் தொழிலாளர்களின் பங்கீடு 85-90% என்ற விகிதங்களுக்கு இடையே நகர்ந்து வருகிறது.

- பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இந்த அதிகரிப்பு அதிகமாக பதிவாகியிருந்தது.
- பீகாரில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் இந்த ஆண்டு 3.7 சதவீதப் புள்ளிகள் உயர்ந்துள்ள நிலையில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இது 3.3 சதவீதப் புள்ளிகள் அதிகரித்துள்ளன.
- ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பிறகும், உத்தரப் பிரதேச மாநிலத்திற்கான MGNREGA திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட பெண்களின் கட்டாயப் பங்கேற்பு விகிதமான 33 சதவீதத்தினை விட சற்று அதிகமாக மட்டுமே உள்ளது.
- கடந்த ஆண்டில் 34.28% என்ற அளவில் இருந்த பெண்களால் பயன்படுத்தப்பட்ட வேலை நாட்கள் ஆனது இந்த ஆண்டு 37.6% அளவில் மட்டுமே பயன்படுத்தப் பட்டு உள்ளது.
- உத்தரப் பிரதேசம், குஜராத், அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய ஏழு மாநிலங்களில் உள்ள MGNREGA பணியாளர்களில் பெண் பணியாளர்கள் 50 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் ஆவர்.

## புதிய ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம்




- மத்திய அரசானது, சமீபத்தில் புதிய ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழான 81.35 கோடி பயனாளிகளுக்கு 2023 ஆம் ஆண்டில் இலவச உணவு தானியங்களை வழங்க உள்ளது.
- "ஒரே நாடு - ஒரே விலை - ஒரே ரேஷன்" என்ற குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் இந்த மத்திய அரசின் திட்டத்தைச் செயல்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- இது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் உள்ள 81.35 கோடி பயனாளர்களை உள்ளடக்கிய, மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள 67% மக்களுக்குப் பயனளிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய அறிவியல் மாநாட்டு அமைப்பின் 108வது கூட்டம்

- இந்திய அறிவியல் மாநாட்டு அமைப்பின் 108வது வருடாந்திரக் கூட்டமானது நாக்பூரில் உள்ள ராஷ்டிரசாந்த் துகடோஜி மகாராஜ் நாக்பூர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
- இந்த ஆண்டு இந்திய அறிவியல் மாநாட்டு அமைப்பின் மையக் கருத்துரு, “பெண்களுக்கான அதிகாரமளிப்புடன் கூடிய ஒரு நிலையான மேம்பாட்டிற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்” என்பதாகும்.
- இந்த நிகழ்வோடு சேர்ந்து பழங்குடியினர் அறிவியல் மாநாடும் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் முதல் கூட்டமானது 1914 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## பணமதிப்பிழப்பு தொடர்பான வழக்கில் தீர்ப்பு

- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது 2016 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 500 மற்றும் 1,000 மதிப்புள்ள இந்திய ரூபாய் பணத்தாள்கள் செல்லாது என்ற அரசின் அறிவிப்பினை உறுதி செய்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று, இந்தியப் பிரதமர் 500 மற்றும் 1,000 ரூபாய் பணத்தாள்கள் செல்லாது என்ற அறிவிப்பினை விடுத்தார்.
- அதிக மதிப்புள்ள இந்த பணத்தாள்கள் செல்லாது என்ற முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.
- பணமதிப்பிழப்பு தொடர்பான முடிவின் செல்லுபடித் தன்மையினைப் பரிசீலிக்கச் செய்வதற்காக உச்ச நீதிமன்றம் ஆனது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அரசியலமைப்பு அமர்வு ஒன்றினை அமைத்தது.
- தற்போது இதற்கான முடிவு, அரசியலமைப்பு அமர்வின் 4:1 என்ற பெரும்பான்மையின் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.



## ஆயுர்வேதத்திற்கான SMART திட்டம்

- இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் (NCISM) மற்றும் மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிச் சபை (CCRAS) ஆகியவை இணைந்து 'SMART' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- SMART என்பது கற்பித்தல் தொழில்முறையில் ஆயுர்வேத ஆராய்ச்சியின் ஒரு பெரும் போக்கினை நெறிப்படுத்துதல் என்பதனைக் குறிக்கிறது.
- ஆயுர்வேதக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் அறிவியல் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அணுசக்தி அமைப்புகள் மற்றும் கைதிகள் பற்றிய பட்டியல்



India and Pakistan exchanged list of nuclear installation

- 1988 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தங்கள் அணுசக்தி நிலையங்களின் பட்டியலைப் பரிமாறிக் கொண்டன.
- இரு தரப்பிலிருந்தும் வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கைகளின்படி, இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தங்களது அணுசக்தி நிலையங்களைத் தாக்கிக் கொள்வதைத் தடுக்கிறது.
- இந்தப் பட்டியல்கள் ஒரே நேரத்தில் இஸ்லாமாபாத் மற்றும் புது டெல்லியில் உள்ள அந்தந்த நாடுகளின் தூதர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டன.
- 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அந்தந்த அரசுக் காவல்துறையின் காவலில் உள்ள கைதிகளின் பட்டியலையும் ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொண்டன.
- தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 705 இந்தியர்கள், 51 பொதுமக்கள் மற்றும் 654 மீனவர்களின் பட்டியலை பாகிஸ்தான் அரசு பகிர்ந்துள்ளது.
- இந்தியா தனது காவலில் உள்ள 434 பாகிஸ்தானியர்கள், 339 பொதுமக்கள் மற்றும் 95 மீனவர்களின் பட்டியலைப் பகிர்ந்து கொண்டது.
- 2008 ஆம் ஆண்டு உடன்படிக்கையானது, இரு நாடுகளிடமும் காவலில் வைக்கப் பட்டு உள்ள கைதிகளுக்கு அந்தந்த நாடுகளின் தூதரக அணுகலை வழங்குகிறது.
- மேலும், ஒவ்வொரு ஆண்டின் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று தத்தமது காவலில் உள்ள கைதிகளின் பட்டியலை பரிமாறிக் கொள்ள வேண்டும் என்றும் இது குறிப்பிடுகிறது.

## பிரஜ்வாலா சவால்

- ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆனது பிரஜ்ஜ்வாலா சவாலை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது கிராமப்புற பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்கான கருத்தாக்கங்கள், தீர்வுகள் மற்றும் நடவடிக்கைகளை முன்வைப்பதனை வரவேற்கிறது.
- புதுமையான தொழில்நுட்பத் தீர்வு, உள்ளார்ந்த மேம்பாடு, மதிப்புச் சங்கிலிச் சார்ந்த திட்டங்கள், மேம்படுத்தப்பட்ட பெண்கள் தொழில்முனைவு, குறைந்த செலவினம் கொண்ட தீர்வுகள், நிலைத்தன்மை, இடம் சார்ந்த வேலைவாய்ப்பு, உள்ளூர் மயமாக்கப் பட்ட மாதிரிகள் ஆகியவற்றினைச் சார்ந்த கருத்தாக்கங்கள் மற்றும் தீர்வுகளை வரவேற்கிறது.

## இந்தியாவின் முதல் நீரடிச் சுரங்கப்பாதை



- கொல்கத்தாவின் கிழக்கு-மேற்கு பிரிவு மெட்ரோ வழித்தடத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவின் முதல் நீரடிச் சுரங்கப் பாதையானது மேற்கு வங்காளத்தில் பாயும் ஹூக்ளி ஆற்றின் கீழ் பகுதியில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- இந்தக் கட்டமைப்பைப் பயன்படுத்த உள்ள மெட்ரோ இரயில்கள், நீருக்கடியில் அமைந்த இந்த 520 மீட்டர் நீள சுரங்கப் பாதையைக் கடக்க வெறும் 45 வினாடிகளே ஆகும்.
- கொல்கத்தாவில் அமைந்துள்ள கொல்கத்தா மெட்ரோ சுரங்கப் பாதையானது ஆற்றுப் படுகைக்கு கீழே 13 மீட்டர் மற்றும் தரையில் இருந்து 33 மீட்டர் ஆழத்தில் அமைந்து உள்ளது.

## உலக வங்கியின் முதன்மையான பாலினம் சார்ந்த செயற்கருவித் தொகுப்புப் புத்தகம்

- "அனைத்து பாலினங்களுக்குப் பொருந்தக்கூடிய நகர்ப்புறப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களை உருவாக்குதல்" என்பதன் அடிப்படையிலான பாலினம் சார்ந்த செயற் கருவித் தொகுதிப் புத்தகம் ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது போக்குவரத்து மற்றும் நகர வடிவமைப்பு ஆகியவற்றில் உள்ள பாலினம் சார்ந்த சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயற்கருவித் தொகுப்புப் புத்தகம் என்பது உலக வங்கியினால் வெளியிடப்பட்ட இரண்டு தொகுதிகள் கொண்ட வழிகாட்டியாகும்.

- அனைத்து பாலினங்களுக்குப் பொருந்தக் கூடிய நகர்ப்புறப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களை உருவாக்குதல் திட்டத்தை வடிவமைப்பதற்கு என்று நகர்ப்புற அமைப்புகளுக்குத் தேவையான நான்கு அம்ச அமலாக்கக் கட்டமைப்பின் விவரங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.



## இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் கலப்பு திட்டம்

- தேசிய அனல் மின் கழகம் மற்றும் குஜராத் எரிவாயு நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் கலப்புத் திட்டத்தினை சூரத்தில் தொடங்கி உள்ளன.
- சூரியசக்தி அல்லது காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி, நீரியல் மின்னாற் பகுப்பு முறை மூலம் இந்தப் பசுமை ஹைட்ரஜன் தயாரிக்கப்படுகிறது.
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் ஆனது, முதலில் பசுமை ஹைட்ரஜனை குழாய் வழி இயற்கை வாயுவுடன் (PNG) அதன் மொத்த கன அளவில் 5% கலப்பிற்கு அனுமதி அளித்துள்ளது.
- பின் கலவையின் அளவு படிப்படியாக அதிகரிக்கப் பட்டு 20% என்ற அளவினை எட்டும்.




## 18வது தேசிய சாரணர் மற்றும் வழிகாட்டிகள் கூட்டம்

- 66 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, 18வது தேசிய சாரணர் மற்றும் வழிகாட்டிகள் கூட்டத்தினை ராஜஸ்தான் மாநில அரசு நடத்துகிறது.

- இந்தக் கூட்டமானது (ஜம்போரி), இளம் சாரணர்கள் தங்கள் பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கங்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் சமயம் சார்ந்த நடை முறைகள் ஆகியவற்றினை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதற்கானத் தளத்தை வழங்குகிறது.
- இந்தக் கூட்டத்தின் போது பல்வேறு போட்டிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

## BIND திட்டம்

- ஒளிபரப்பு உள்கட்டமைப்பு மற்றும் வலையமைப்பு மேம்பாடு (BIND) திட்டத்திற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு அங்கீகாரம் அளித்துள்ளது.
- இது பிரச்சார் பாரதியின் உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றோடு எண்ணிம உள்ளடக்கம் மற்றும் விநியோக வலையமைப்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பிரசார் பாரதி வெளிப்புற ஒளிபரப்பு வாகனங்களை வாங்குவதோடு, தூர்தர்சன் மற்றும் அகில இந்திய வானொலி மையங்களை உயர்தர நிலைக்குத் தயார் செய்வதற்காக அவற்றினை எண்ணிம முறையில் மேம்படுத்த உள்ளது.
- தற்போது, தூர்தர்சன் 28 பிராந்திய அலைவரிசைகள் உட்பட 36 தொலைக்காட்சி அலைவரிசைகளை இயக்கி வருகிற அதே சமயம் அகில இந்திய வானொலி மையம் 500 ஒளிபரப்பு மையங்களை இயக்கி வருகிறது.
- BIND திட்டம் ஆனது தற்போது இந்தியாவில் 59% மற்றும் 68% ஆக உள்ள அகில இந்திய வானொலி மையத்தின் FM அலைபரப்பிகளின் பரவலை முறையே புவியியல் பரப்பு என்ற அளவில் 66% ஆகவும், மக்கள் தொகை அடிப்படையில் 80% ஆகவும் அதிகரிக்க உள்ளது.



## தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டம்

- தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் துணை விளைபொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கான உலகளாவிய மையமாக இந்திய நாட்டினை மாற்றுவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பசுமை ஹைட்ரஜனின் தேவை உருவாக்கம், உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான வசதிகளை வழங்க இந்தத் திட்டம் உதவும்.
- இது இந்திய நாட்டினை எரிசக்தித் துறையில் சுயசார்பு உடையதாக மாற்றவும், பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளில் கார்பன் நீக்கம் செய்யவும் உதவும்.




## RISE - தேசியப் பிரச்சாரம்

- 'RISE - ஆன்மிக அதிகாரமளித்தல் மூலம் இந்திய நாட்டினை எழுச்சி பெறச் செய்தல்' என்ற தேசியப் பிரச்சாரமானது ராஜஸ்தானின் மவுண்ட் அபுவில் பிரம்ம குமாரிகள் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது "பொன்மயமான இந்தியா" என்ற ஒரு குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் இந்தியக் குடிமக்களை ஆன்மீக ரீதியில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- சுயமாற்றம் உலக மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்ற கொள்கையில் பிரம்ம குமாரிகள் அமைப்பு நம்பிக்கை கொண்டுள்ளது.

## e-SCR திட்டம்

- இந்தியாவின் தலைமை நீதிபதி DY சந்திரசூட் இந்திய உச்ச நீதிமன்றத்தின் மின்னணு முறையிலான அறிக்கைகள் (e-SCR) என்ற திட்டத்தைத் தொடங்க உள்ளதாக அறிவித்து உள்ளார்.

- வழக்கறிஞர்கள், சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர், உச்ச நீதிமன்றத்தின் சுமார் 34,000 தீர்ப்புகள் குறித்த அறிக்கைகளை இலவசமாக அணுகச் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தீர்ப்புகள் உச்ச நீதிமன்றத்தின் இணையதளத்திலும், கைபேசிச் செயலியிலும், தேசிய நீதித்துறை தரவுக் கட்டமைப்பின் தீர்ப்புகள் அடங்கிய தளத்திலும் கிடைக்கப் பெறும்.
- உச்ச நீதிமன்றத்தில் நடுநிலைக் குறிப்பேடுகள் என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் இந்தியத் தலைமை நீதிபதி அவர்கள் அறிவித்தார்.
- நடுநிலைக் குறிப்பேடுகள் என்பது ஒரு சட்ட ரீதியிலான ஆவணத்தின் வெளியீட்டாளரின் அடையாளத்தினை வெளிப்படுத்தாத தரப்படுத்தப்பட்ட சட்டக் குறிப்பேடாகும்.
- இது பாரபட்சமற்ற மற்றும் மெய்மைசார் குறிப்புகளை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.
- டெல்லி மற்றும் கேரள உயர் நீதிமன்றங்கள் ஏற்கனவே இவ்வகை நடுநிலைக் குறிப்பேடுகளைப் பயன்படுத்துகின்றன.




## உலகின் மிக நீளமான நதிப் பயணக் கப்பல்


- வாரணாசியில் இருந்து வங்காளதேசம் வழியாக திப்ருகர் வரையிலான பயணத்தினை மேற்கொள்ள உள்ள 'கங்கா விலாஸ்' எனப்படும் உலகின் மிக நீளமான நதிப் பயணக் கப்பலானது தொடங்கப்பட உள்ளது.
- இது 50 நாட்களில் 3200 கிலோமீட்டர் தொலைவு வரை பயணிக்க உள்ளதோடு, இது இந்தியா மற்றும் வங்காளதேசத்தில் உள்ள 27 நதி நீரோட்டங்கள் வழியாகப் பயணிக்கவும் உள்ளது.
- இந்த உல்லாசப் பயணக் கப்பல் ஆனது இதில் பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகப் பாரம்பரியத் தளங்கள் உட்பட பல்வேறு கட்டடக்கலை சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த 50 இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ளச் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அளிக்கும்.
- இது சுந்தரவன கழிமுகக் காடுகள் மற்றும் காசிரங்கா தேசியப் பூங்கா உள்ளிட்ட பல்வேறு தேசியப் பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் வழியாகவும் பயணிக்க உள்ளது.



## பத்தாண்டிற்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

- பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணிகளானது இந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- நிர்வாக எல்லைகளை தீர்மானிப்பதற்கானத் தேதியானது ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளதாக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- விதிமுறைகளின்படி, மாவட்டங்கள், துணை மாவட்டங்கள், வட்டங்கள், தாலுகாக்கள் மற்றும் காவல் நிலையங்கள் போன்ற நிர்வாக அலகுகளின் எல்லை வரம்புகள் நிர்ணயிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு மட்டுமே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.
- கடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது 2011 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் முதல் கட்டமான - தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டை (NPR) புதுப்பித்தல் பணியோடு சேர்த்து வீடுகளின் பட்டியல் மற்றும் வீட்டுகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பு ஆகியவை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலத்தில் நடத்தப்பட திட்டமிடப்பட்டது.
- ஆனால் COVID-19 பெருந்தொற்று காரணமாக அவை காலவரையின்றி ஒத்தி வைக்கப் பட்டன.
- தற்போது மேற்கொள்ளப் பட உள்ள மக்கள்தொகைக் கணக்கெடுப்பானது முதன் முறையாக எண்ணிம முறையிலும் காகிதப் பதிவேடு (கேள்வித்தாள்/படிவங்கள்) ஆகிய இரண்டு வகையிலும் மேற்கொள்ளப்பட உள்ளது.

## உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் திட்டம்




- மத்திய அரசானது, உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் திட்டத்தினை (ABP) தொடங்க உள்ளது.
- இது உயர் இலட்சியமிக்க மாவட்டங்கள் திட்டத்தின் வகையிலான புதிய முன்னெடுப்பு ஆகும்.
- இது பல்வேறு மேம்பாட்டு அளவுருக்களின் அடிப்படையில் பின்தங்கியுள்ள மாவட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் திட்டத்தின் கீழ், மாநிலங்கள் முழுவதும் உள்ள 500 தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- கடந்த ஆண்டில் அரசால் அமைக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த 500 தொகுதிகள் அடையாளம் காணப் பட்டு உள்ளன.

## ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் அமைதிக் காப்புப்படைகளின் மிகப்பெரிய படைப்பிரிவு

- சூடானில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் தூதுக் குழுவிற்கான அமைதிக் காப்பு மகளிர் படைப் பிரிவினை இந்திய அரசு அனுப்ப உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் தூதுக் குழுவில் இடம் பெறும் இந்திய மகளிர் அமைதிக் காப்புப் படைப் பிரிவின் மிகப்பெரிய ஒற்றைப் படைப் பிரிவாக இது விளங்கும்.
- இந்தியா முதன்முதலில் தனது அனைத்து மகளிர் படைப் பிரிவினை 2007 ஆம் ஆண்டில் லைபீரியாவில் நிலை நிறுத்தியது.
- ஐக்கிய நாடுகள் அமைதி காப்பு திட்டம் என்பது அமைதி நடவடிக்கை துறைக்கும் செயல்பாட்டு ஆதரவு வழங்கீட்டுத் துறைக்கும் இடையிலான ஒரு கூட்டு முயற்சி ஆகும்.
- இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தும் நாடுகளுக்கு மோதல்கள் நிறைந்த சூழ்நிலைகளில் இருந்து அமைதி நிலைக்கு மாறச் செய்வதற்கு உதவச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிக் காப்புப் பணிகளில் 12 பணிகளில் ஈடுபடுத்தப் பட்டதுடன், இந்தியா வங்காளதேசத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரியப் பங்களிப்பு நாடாகத் திகழ்கிறது.




**iFANS-2023**




- 'உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு-2023 (iFANS-2023)' ஆனது மொஹாலியில் தொடங்கப்பட்டது.
- iFANS-2023 மாநாடானது வேளாண்மை, உணவு மற்றும் ஊட்டச்சத்து, உயிரித் தொழில் நுட்பம் மற்றும் மரபணு மாற்றம் ஆகிய துறைகளில் காணப்படும் சர்வதேச நிபுணர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய மரபணு மாற்றம் மற்றும் பயிற்சி மையம்

- தேசிய மரபணு மாற்றம் மற்றும் பயிற்சி மையம் (NGETC) என்பது ஒற்றைச் சாளர அமைப்புடன் கூடிய ஒரு அதிநவீன மையமாகும்.
- CRISPR-Cas வழியிலான மரபணு மாற்ற முறை உட்பட பல்வேறு மரபணுத் திருத்த முறைகளை ஏற்பதற்கான பிராந்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தேசிய தளமாக இது செயல்படும்.
- மரபணுத் திருத்தம் என்பது இந்திய ஆராய்ச்சித் துறையானது பயிர்களில் விரும்பத் தகுந்த மாற்றங்களை உருவாக்கி வழங்கும் வகையில் மாறுவதற்கான நம்பத் தகுந்தத் தொழில் நுட்பமாக விளங்கும்.

- ❖ தேசிய வேளாண்-உணவு உயிரித் தொழில்நுட்ப நிறுவனமானது, வாழை, அரிசி, கோதுமை, தக்காளி, மக்காச்சோளம் மற்றும் தினை உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களில் மரபணு மாற்றம் மேற்கொள்வதற்கான செயற்முறைகளை விரிவுபடுத்தச் செய்யும் தனது செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது.

## தானியங்கி சமிக்ஞை அமைப்புடன் கூடிய இந்தியாவின் மிக நீளமான இரயில் பாதை



- ❖ இந்திய இரயில்வேயானது ஒரு பணி முறையில் 'தானியங்கி சமிக்ஞை அமைப்பினை' உருவாக்கியுள்ளது.
- ❖ தானியங்கி சமிக்ஞை அமைப்பு என்பது ஒரு செலவு குறைந்தத் தீர்வாகும்.
- ❖ இந்திய இரயில்வே நிர்வாகத்தின் காசியாபாத் - பண்டிட் தீன தயாள் உபாத்யாய் இரயில்வே நிர்வாகப் பிரிவானது, நாட்டின் மிக நீளமான முழு அளவிலான தானியங்கி சமிக்ஞை பிரிவாக மாறியுள்ளது.
- ❖ 762 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த இரயில் பாதையானது முழுவதுமாக தானியங்கி மயமாக்கப் பட்டுள்ளது.
- ❖ தானியங்கி சமிக்ஞை அமைப்பானது, தானியங்கி நிறுத்த சமிக்ஞைகள் மூலம் இரயில்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

## தன்னார்வ வாகன நவீனமயமாக்கல் திட்டம்


- ❖ தன்னார்வ வாகன நவீனமயமாக்கல் திட்டத்திற்கான (V-VMP) தேசிய ஒற்றைச் சாளர அமைப்பில் 11 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இணைந்துள்ளன.
- ❖ இது மகிழுந்துகளின் மறுசுழற்சிக்கான சுற்றுச்சூழல் அமைப்பில் வெகுவாக தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும்.
- ❖ பழைய வாகனங்களின் அகற்றல் கொள்கை என்பது பழைய மற்றும் தகுதியற்ற வாகனங்களை அகற்றி, இந்தியச் சாலைகளில் நவீன மற்றும் புதிய வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்கச் செய்வதற்காக தொடங்கப்பட்டு, அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் திட்டமாகும்.

- நாட்டில் குறைந்த கரியமில வெளியீட்டுத் தடத்தினை அடைவதற்காகத் தகுதியற்ற மற்றும் மாசுபடுத்தும் வகையிலான வாகனங்களைப் படிப்படியாக அகற்றுவதற்கான ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதே இந்தக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும்.




## கருங்காய்ச்சல் நோய்ப் பாதிப்புகள்

- இந்தியாவில் 2007 ஆம் ஆண்டில் 44,533 ஆக பதிவாகியிருந்த கருங்காய்ச்சல் நோய்ப் பாதிப்புகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 834 ஆக குறைந்து 98.7 சதவீத சரிவினைக் கண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவிலிருந்து கருங்காய்ச்சல் நோய்ப் பாதிப்பினை ஒழிப்பதாக இந்தியா உறுதி பூண்டுள்ளது.
- நோய் ஒழிப்பு என்பது, வருடாந்திர கருங்காய்ச்சல் பாதிப்பினை துணை மாவட்ட அளவில் 10,000 பேருக்கு 1 நபர் என்ற வீதத்திற்கும் குறைவான அளவிற்குக் குறைப்பது என வரையறுக்கப் படுகிறது.
- மலேரியாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது கொடிய ஒட்டுண்ணி மூலம் பரவக் கூடிய உயிர்க்கொல்லி நோயாக கருங்காய்ச்சல் கருதப்படுகிறது.



## இணையவழி விளையாட்டு முறைகளுக்கான வரைவுக் கொள்கை




- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் (MeitY) ஆனது சமீபத்தில் இணையவழி விளையாட்டு முறைகளுக்கான வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது.
- இந்த முன்மொழியப்பட்ட விதிகளானது, 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிகளில் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் எண்ணிம ஊடக நெறிமுறைகள் குறியீடு) மேற்கொள்ளப்பட்ட திருத்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- இதன் படி இணையவழி விளையாட்டு நிறுவனங்கள் ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பில் பதிவு செய்ய வேண்டும்.
- இணையவழி விளையாட்டு நிறுவனங்கள், பயனர்களின் KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிதல்), வெளிப்படையான முறையில் பணம் பெறுதல் கொள்கை மற்றும் பணத்தைத் திரும்ப வழங்கல் உள்ளிட்டவற்றுடன் கூடிய கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்.
- இதன் படி விளையாட்டு நிறுவனங்களும் சமவாய்ப்பு எண் உருவாக்க சான்றிதழைப் பெற வேண்டும்.
- இதில் இணைய வழி விளையாட்டு நிறுவனங்களானது விளையாட்டுகளின் முடிவுகளை வைத்து பந்தயத்தில் ஈடுபட அனுமதிக்கப் படாது.

- சமூக ஊடகங்கள் மற்றும் இணைய வழி வர்த்தக நிறுவனங்களைப் போலவே, இணையவழி விளையாட்டு நிறுவனங்களின் தளங்களும், அந்தத் தளம் விதி முறைகளை முறையாகப் பின்பற்றுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக என்று ஓர் இணக்க அதிகாரியை நியமிக்க வேண்டும்.

## தேசியப் புவியியல் கொள்கை 2022

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது, 2022 ஆம் ஆண்டிற்கான தேசியப் புவியியல் கொள்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இது தேசிய மேம்பாடு, பொருளாதாரச் செழிப்பு மற்றும் வளர்ந்து வரும் தகவல் பொருளாதாரம் ஆகியவற்றினை ஆதரிப்பதற்காக புவிசார் துறையை வலுப்படுத்த முயல்கின்ற, குடிமக்களை மையமாகக் கொண்ட ஒரு கொள்கையாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள், உயர் துல்லியமிக்க எண்ணிம புவிப்பரப்பு மாதிரியுடன் கூடிய (DEM) உயர் தெளிவுத்திறன் கொண்ட நிலப்பரப்பு ஆய்வு மற்றும் வரைபடமிடல் முறையை நிறுவுவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் புவிசார் பொருளாதாரம் ஆனது, 2025 ஆம் ஆண்டில் 12.8% என்ற வளர்ச்சி விகிதத்தில் ரூ.63,000 கோடியைத் தாண்டும் என்றும், 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.





## SPRINT முன்னெடுப்பு

- இந்தியக் கடற்படையானது, 'SPRINT' என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் ஆயுதம் தாங்கிய தன்னியக்க படகுகளை வாங்குவதற்காக சாகர் டிஃபென்ஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- 'SPRINT' திட்டம் என்பது உள்நாட்டு நிறுவனங்களின் முக்கியப் பாதுகாப்புத் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.

- SPRINT என்பது "சிறப்பான பாதுகாப்பு துறைக்காக புத்தாக்கங்கள் மூலமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் கூடுதல் ஆதரவு வழங்குவதை ஆதரித்தல் என்பதை குறிக்கிறது.
- இது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது.

## நிலச்சரிவு - நில அமிழ்தல் மண்டலம்


- உத்தரகாண்டில் உள்ள ஜோஷிமத் என்ற சிறிய நகரத்தில் அமைந்துள்ள மொத்தம் 4,500 கட்டிடங்களில் 610 கட்டிடங்கள் விரிசல் அடைந்த நிலையில் உள்ளது.
- அதிகாரிகள் இந்தப் பகுதியினை நிலச்சரிவு - நில அமிழ்தல் மண்டலமாக அறிவித்து உள்ளனர்.
- இது நிலத்தடிப் பொருட்களின் அகற்றம் அல்லது நகர்வு காரணமாக பூமியின் மேற் பரப்பில் படிப்படியாக தாழ்வு அல்லது திடீரென கீழிறங்குதல் நிகழ்வு ஆகும்.
- தண்ணீர், எண்ணெய், இயற்கை எரிவாயு, அல்லது கனிம வளங்கள் நிலத்தில் இருந்து, குழாய் மூலம், பாறைகளை உடைப்பதன் மூலம் அல்லது சுரங்க நடவடிக்கைகளால் வெளியேற்றப் படுவதால் பெரும்பாலும் நில அமிழ்தல் ஏற்படுகிறது.
- 1976 ஆம் ஆண்டு மிஸ்ரா குழுவின் அறிக்கையின்படி, ஜோஷிமத் ஒரு பிளவு தளத்தில் அமைந்துள்ளது.
- ஜோஷிமத் ஒரு நிலச்சரிவு மிகுந்த அமைப்பு மீது (அதாவது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு) அமைந்துள்ளது.
- ஜோஷிமத் பத்ரிநாத் மற்றும் ஹேம்குண்ட் சாஹிப் செல்லும் பாதையில் அமைந்து உள்ளது.
- இது அதிக ஆபத்துள்ள 'Zone-V' எனப்படும் நில அதிர்வு மண்டலத்தில் அமைந்துள்ளது.




## பொது நிறுவனங்கள் கணக்கெடுப்பு 2021-22

- இந்திய மின்கட்டமைப்பு கழக நிறுவனமானது (POWERGRID) சேவைத் துறையில் முதல் இடம் பெற்றுள்ளது.
- இது அதிக இலாபம் ஈட்டும் முதல் 10 நிறுவனங்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

- இந்த அறிவிப்பானது, பொது நிறுவனங்கள் துறையால் வெளியிடப்பட்டது.
- POWERGRID நிறுவனமானது, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஒட்டுமொத்த மின் பகிர்மானப் பணியில் ஈடுபட்டுள்ளது.
- இந்தியாவில், இந்நிறுவனமானது 50% மின்சாரத்தினை விநியோகிக்கிறது.
- POWERGRID நிறுவனத்தின் அசல் பெயர் "தேசிய மின் பகிர்மானக் கழகம்" ஆகும்.




## குறைவான புகையினை வெளியிடும் உயர் ரக மண்ணெண்ணெய்

Bharat Petroleum
energising lives


- பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (BPCL) நிறுவனமானது, ஜம்முவில் நிலை நிறுத்தப் பட்டுள்ள இந்திய இராணுவத்திற்காக குறைவான புகையினை வெளியிடும் உயர் ரக மண்ணெண்ணெயினை (SKO) அறிமுகப்படுத்தியுள்ளது.
- உயரமான இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் உள்ள அறை சூடேற்றிகளில் இவை எரிபொருளாக பயன்படுத்தப்படுவதால் இராணுவத்திற்கு SKO வழங்கப் படுவது இன்றியமையாத ஒன்றாகும்.
- சாதாரண மண்ணெண்ணெய் ஆனது அதிக உயரத்தில் பயன்படுத்தப்படும் போது, ஆக்ஸிஜன் அளவு மிகக் குறைவாக இருப்பதால் இராணுவ வீரர்களுக்கு உடல்நலக் கேடினை விளைவிக்கும் வகையில் கணிசமான அளவில் புகையை வெளியிடுகிறது.

## கல்வி தொடர்பான G-20 சந்திப்பு

- இந்திய நாடானது, G-20 அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்று, 2023 ஆம் ஆண்டில் முதல் முறையாக G-20 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டினை நடத்தத் தயாராகி வருகிறது.
- கல்வித் துறை அமைச்சகம் ஆனது யுனிவர்சிட்டி கனெக்ட் என்ற தனித்துவமான ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் G20 தலைமைப் பொறுப்பில் இளைஞர்களை ஈடுபடுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் G20 தலைமைப் பொறுப்பின் ஒரு பகுதியாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- சென்னை, அமிர்தசரஸ், புவனேஸ்வர் மற்றும் புனே ஆகிய இடங்களில் நான்கு கல்வி தொடர்பான செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.





## இரயில்வே நிர்வாகத்தின் ஆற்றல் செயல்திறன் திட்டம்



- இந்திய இரயில்வே அமைச்சகம் ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் கார்பன் நடுநிலைத் தன்மைக் கொண்டதாக மாறுவதற்காக வேண்டி ஐந்து அம்சத் திட்டத்தினை வெளிக் கொணர்ந்துள்ளது.
- திறம் மிக்கச் செயல்பாடுகள் மூலம் ஆற்றல் நுகர்வைக் குறைத்து, புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாட்டை அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அனைத்து இரயில்வே நிர்வாக அமைப்புகளிலும் சூரியசக்தி உற்பத்திக்கான தகடுகள் கொண்ட மேற்கூரையினை நிறுவுவது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.

## எத்திலீன் கிளைக்கால் (தரக் கட்டுப்பாடு) ஆணை, 2022

- இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறையானது இரசாயன மற்றும் உரங்கள் அமைச்சகத்துடன் இணைந்து, எத்திலீன் கிளைக்கால் (தரக் கட்டுப்பாடு) ஆணை, 2022 என்ற தலைப்பிலான ஒரு அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டது.
- இந்திய மருந்து தயாரிப்பு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட மருந்துக் கரைசலை உட் கொண்டதால், சமர்க்கண்டில் 18 குழந்தைகள் இறந்ததாக உஸ்பெகிஸ்தான் அரசு குற்றம் சாட்டியதனையடுத்து ஒரு நாளுக்குப் பிறகு இந்த நடவடிக்கையானது மேற் கொள்ளப் பட்டுள்ளது.
- இதில் சர்ச்சைக்குரிய மருந்து நிறுவனமான மரியன் பயோடெக், உத்தரப் பிரதேச மாநிலத்தின் நொய்டாவில் அமைந்துள்ளது.
- இந்நிறுவனம் தயாரித்த மருந்துக் கரைசலில் எத்திலீன் கிளைக்கால் இருந்தது.
- எத்திலீன் கிளைக்கால் என்பது, உட்கொண்டால் மரணத்தை விளைவிக்கின்ற ஒரு நிறமற்ற மற்றும் மணமற்ற ஆல்கஹால் கலவையாகும்.
- இது பெரும்பாலும் வாகனங்களில் உறைதல் தடுப்பானாகவும் பாலிஸ்டர் இழைகளை தயாரிப்பதற்கான மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.
- டைஎத்திலீன் கிளைக்கால் மற்றும் எத்திலீன் கிளைக்கால் ஆகியவை சில நேரங்களில் சட்ட விரோதமாக திரவ மருந்துகளில் கரைப்பான்களாகப் பயன்படுத்தப்படுகின்ற கலப்படப் பொருளாகும்.
- மருந்து உற்பத்தி நிறுவனங்கள் செலவைக் குறைப்பதற்காக கிளிசரின் அல்லது ப்ரோப்பிலீன் கிளைக்கால் போன்ற நச்சுத்தன்மையற்ற கரைப்பான்களுக்கு மாற்றாக டைஎத்திலீன் கிளைக்கால் மற்றும் எத்திலீன் கிளைக்கால் ஆகியவற்றினைப் பயன்படுத்துகின்றன.




## 26வது தேசிய இளையோர் திருவிழா

- 26வது தேசிய இளையோர் திருவிழாவானது, கர்நாடக மாநிலத்தின் ஹுப்பள்ளி - தர்வாத் என்னுமிடத்தில் ஜனவரி 12 முதல் 16 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்திருவிழாவின் கருத்துரு, "விக்சித் யுவ விக்சித் பாரத்" என்பது ஆகும்.
- இது இந்தியாவின் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கச் செய்வதையும், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் அவர்களின் தீவிர பங்களிப்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நிதி உள்ளடக்கத்திற்கான உலகளாவியக் கூட்டாண்மை

- 'நிதி உள்ளடக்கத்திற்கான உலகளாவியக் கூட்டாண்மை' குறித்த மூன்று நாட்கள் அளவிலான G20 நாடுகளின் கூட்டம் ஆனது கொல்கத்தாவில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் எண்ணிம நிதி உள்ளடக்கம், பணம் அனுப்புதல் மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதி உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப் பட்டது.
- G 20 நாடுகளின் தலைவர்கள் இந்தியாவிற்கு வெளியே உள்ள தொழிலாளர்களுக்கு பணம் அனுப்புதலில் ஆகும் அதிக செலவினம் குறித்து விவாதித்தனர்.
- இதனை 2027 ஆம் ஆண்டிற்குள் சராசரியாக 3 சதவீதமாக குறைக்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தற்போது பணம் அனுப்புதலுக்கான செலவினமானது சராசரியாக ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் சுமார் 6 சதவீதமாக உள்ளது.

## 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருவநிலை பற்றிய அறிக்கை




- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் வருடாந்திர சராசரி நில மேற்பரப்பு காற்றின் வெப்ப நிலை நீண்ட காலச் சராசரியை (1981-2010 காலம்) விட 0.510 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது.
- இது 1901 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் கணக்கெடுப்பு தொடங்கியதிலிருந்து பதிவாகியுள்ள ஐந்தாவது வெப்பமான ஆண்டாகப் பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான உலகளாவியச் சராசரி வெப்பநிலையானது, தற்போது தொழில்துறை காலத்திற்கு முந்தைய அளவின் (1850-1900) சராசரியை விட 1.15 ± 0.13 °C அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான மழைப் பொழிவானது 1971-2020 ஆம் கால கட்டத்தின் அடிப்படையில், அதன் நீண்ட காலச் சராசரி மதிப்பில் 108% ஆகும்.

- ❖ குளிர்காலத்தில் பதிவான மழைப்பொழிவானது, அதன் நீண்ட காலச் சராசரியில் 147% ஆகும்.
- ❖ பருவமழைக்கு முந்தைய மழைப்பொழிவானது அதன் நீண்ட காலச் சராசரியில் 99% ஆகும்.
- ❖ தென்மேற்கு பருவமழை காலத்தில் பதிவான மழைப்பொழிவானது, அதன் நீண்ட காலச் சராசரியில் 106 % ஆகும்.
- ❖ பருவமழைக்குப் பிந்தையப் பருவத்தில் பதிவான மழைப்பொழிவானது அதன் நீண்ட காலச் சராசரியில் 119% ஆகும்.

## இந்தியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட நகரம்

**THE WORST 10**

| Rank 2022 (2019) | City | Annual PM2.5 2022 |
|---|---|---|
| 1(3) | Delhi | 99.7 |
| 2 (-) | Faridabad | 95.6 |
| 3 (1) | Ghaziabad | 91.3 |
| 4 (-) | Patna | 90.9 |
| 5 (-) | Muzaffarpur | 86.9 |
| 6 (2) | Noida | 80.4 |
| 7 (-) | Meerut | 77.7 |
| 8 (8) | Gobindgarh | 72.4 |
| 9 (-) | Gaya | 70.8 |
| 10 (6) | Jodhpur | 69.3 |


*Figures in brackets represent 2019 ranks.
(-) signifies no data available for 2019

- ❖ 2022 ஆம் ஆண்டில், இந்தியாவிலேயே மிகவும் மாசுபட்ட நகரமாக டெல்லி அறிவிக்கப் பட்டது.
- ❖ இது பாதுகாப்பான வரம்பை விட இரண்டு மடங்கு அதிகமாக PM2.5 துகளை கொண்டு இருந்ததோடு, இது மூன்றாவது அதிகபட்சச் சராசரி PM10 செறிவு கொண்ட நகரமாக விளங்குகிறது.
- ❖ இது 2019 ஆம் ஆண்டில் பதிவான ஒரு கன மீட்டருக்கு 108 மைக்ரோகிராம் என்ற அளவில் இருந்த PM2.5 மாசுபாடு ஆனது 2022 ஆம் ஆண்டில் ஒரு கன மீட்டருக்கு 99.71 மைக்ரோகிராம் என்ற அளவில் குறைந்து, கடந்த நான்கு ஆண்டுகளில் அது 7 சதவீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது.
- ❖ ஹரியானாவின் ஃபரிதாபாத் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளன.

- தேசிய தூய்மைக் காற்று திட்டமானது (NCAP) 2024 ஆம் ஆண்டிற்குள் மாசுபாட்டின் அளவினை 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறைப்பதற்கு இலக்கு நிர்ணயித்து உள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்குள் 102 நகரங்களில் காணப்படும் PM2.5 மற்றும் PM10 என்ற மாசுபாடுகளின் அளவுகளை 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறைப்பதற்காக மத்திய அரசானது தேசிய தூய்மைக் காற்று திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- தேசியத் தூய்மைக் காற்று திட்டத்திற்கான அடிப்படை ஆண்டாக 2017 ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டது.

## ஊட்டச்சத்து துணை உணவுகள் குறித்த FSSAI கணக்கெடுப்பு


- இந்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது, 2021-22 ஆம் ஆண்டிற்கான ஊட்டச்சத்து துணை உணவுகள் குறித்த ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் வீரர்கள் பயன்படுத்தும் புரதமாவுப் பொருட்கள் மற்றும் துணை உணவுகள் உள்ளிட்ட 15% உணவுப் பொருட்கள் உண்பதற்குப் பாதுகாப்பற்றவை அல்லது தரமற்றவை என்று அது கண்டறிந்துள்ளது.
- இந்தியாவில் புரதமாவுப் பொருட்கள் மற்றும் பிற உணவுப் பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்தச் செய்வதற்கான குறிப்பிட்ட விதிகளை FSSAI அறிவித்துள்ளது.




## தேசிய குடிநீர், சுகாதாரம் மற்றும் தர மையம்

- தேசிய குடிநீர், சுகாதாரம் மற்றும் தர மையத்தின் பெயரை "டாக்டர். சியாமா பிரசாத் முகர்ஜி தேசிய நீர் மற்றும் சுகாதார நிறுவனம்" (SPM-NIWAS) என்று பெயர் மாற்றம் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் உள்ள ஜோகாவில் இந்த நிறுவனம் அமைக்கப் பட்டுள்ளது.

- இந்த நிறுவனம் ஆனது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரதமரால் திறந்து வைக்கப் பட்டது.
- டாக்டர். சியாமா பிரசாத் முகர்ஜி தேசிய ஒருமைப்பாட்டிலும், தொழில் மயமாக்கலுக்கான உத்வேகத்திலும் முன்னோடியாக விளங்கியவர் ஆவார்.
- அவர் ஒரு சிறந்த அறிஞர் மற்றும் கல்வியாளர் மற்றும் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் இளைய துணைவேந்தராகவும் பணியாற்றியவர் ஆவார்.




## யாத்ரீகர்களுக்கான அரசு விருப்புரிமை அடிப்படையிலான ஹஜ் ஒதுக்கீடு

- யாத்ரீகர்களுக்கான அரசு விருப்புரிமை அடிப்படையிலான ஹஜ் ஒதுக்கீட்டினை இந்திய அரசாங்கம் நீக்கியுள்ளது.
- ஹஜ் யாத்திரை என்பது சவூதி அரேபியாவில் உள்ள மெக்காவிற்கு ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் ஒரு இஸ்லாமிய யாத்திரையாகும்.
- சவூதி அரேபிய அரசானது, ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்துப் பயணம் மேற்கொள்கின்ற யாத்ரீகர்களின் மொத்த எண்ணிக்கையை நிர்ணயிக்கும் வகையில் நாடு வாரியான ஒதுக்கீட்டை வழங்குகிறது.
- "அரசு விருப்புரிமை ஒதுக்கீடு" ஆனது மேலும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இதில் 200 இடங்கள் ஹஜ் குழுவிடமும், 300 இடங்கள் மத்திய அரசில் முக்கியமான பதவிகளைக் கொண்டுள்ளவர்களிடமும் உள்ளன.
- இதில் குடியரசுத் தலைவரிடம் 100, பிரதமரிடம் 75, குடியரசுத் துணைத் தலைவரிடம் 75, சிறுபான்மை விவகார அமைச்சரிடம் 50 ஆகியவை அடங்கும்.
- இந்த இடங்கள் தற்போது மீண்டும் பொதுக் குழுவில் சேர்க்கப்பட்டதன் மூலம் இந்த ஒதுக்கீடானது தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.

- இந்தியா சவூதி அரேபியாவுடனான 2023 ஆம் ஆண்டு ஹஜ் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, மொத்தம் 1,75,025 இந்திய ஹஜ் யாத்ரீகர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள முடியும்.
- இது வரலாற்றில் மிக உயர்மதிப்பு கொண்டதாகக் கருதப் படுகிறது.




## தளவாடங்கள், நீர்வழிகள் மற்றும் தகவல் தொடர்பு கல்வி நிறுவனம்

- இந்தியாவின் முதல் தளவாடங்கள், நீர்வழிகள் மற்றும் தகவல் தொடர்புக் கல்வி நிறுவனமானது அகர்தலாவில் தொடங்கப் பட்டது.
- இப்பகுதியில், போக்குவரத்து மற்றும் தளவாடத் துறையில் உலகத் தரம் வாய்ந்த நிபுணர்களாக விளங்கும் திறமைசாலிகளின் ஒரு வளமான குழுவின் செயல்திறனை வெளிக் கொணர்வதை இந்த நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இப்பகுதியின் செழுமையான நீர்வழிகளில் மனித வளங்களின் உள்ளார்ந்தத் திறனை இந்த நிறுவனம் வெளிக் கொணரும்.

## கைபேசி சார்ந்த விளையாட்டுகள் குறித்த அறிக்கை 2022

- கைபேசி சார்ந்த விளையாட்டுகள் விளையாடுபவர்களை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ள இடங்களின் பட்டியலில் உத்தரப் பிரதேசம் முதலிடத்தினைப் பெற்று உள்ளது.
- உத்தரப் பிரதேசத்தினைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, ராஜஸ்தான், பீகார் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் கைபேசி சார்ந்த விளையாட்டுகள் விளையாடுபவர்களின் எண்ணிக்கையானது அதிக அளவில் அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு, 15 பில்லியனுக்கும் அதிகமான பதிவிறக்கங்களைப் பதிவு செய்து, உலகின் கைபேசி சார்ந்த விளையாட்டுகளின் மிகப்பெரிய நுகர்வோர் நாடாக இந்தியா மாறியது.




## பாசுமதி அரிசிக்கு FSSAI அமைப்பின் ஒழுங்குமுறை தரநிலைகள்

- இந்தியாவில் முதன்முறையாக, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது பாசுமதி அரிசிக்கான அடையாளத் தர நிலைகளைக் குறிப்பிட்டு உள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- பாசுமதி அரிசியின் வர்த்தகத்தில் நியாயமான நடைமுறைகளை நிறுவுதல் மற்றும் உள்நாட்டிலும் உலக அளவிலும் உள்ள நுகர்வோர் நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பாசுமதி அரிசியானது பாசுமதி அரிசியின் இயற்கையான வாசனைப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- 2-அசிடைல்-1-பைரோலின் என்ற வேதிப் பொருள் இருப்பதால் இது ஒரு தனித்துவமான மணம் மற்றும் சுவை கொண்டுள்ளது.
- இது செயற்கை வண்ணம், பொலிவுக் காரணிகள் மற்றும் செயற்கை நறுமணங்கள் ஆகியவை இல்லாமல் இருக்க வேண்டும்.



## தேசிய அளவில் பல்மாநில கூட்டுறவுச் சங்கங்கள்

- மூன்று தேசிய அளவிலான பல்மாநில கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- விதைகளைக் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றிற்கான உயர்நிலை அமைப்பாக இது செயல்படும்.
- இந்தச் சங்கங்கள், 2002 ஆம் ஆண்டு பல்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் (MSCS) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட உள்ளன.




## ஆரோக்ய மைத்ரி திட்டம்

> I would now like to announce a new **'Aarogya Maitri'** project. Under this project, India will provide essential medical supplies to any developing country affected by natural disasters or humanitarian crisis.
>
> PM Modi's opening remarks on day 2 of Voice of Global South Summit, 13 January 2023

- இந்தத் திட்டத்தின் கீழ், இயற்கைப் பேரழிவுகள் அல்லது மனிதாபிமானம் சார்ந்த நெருக்கடி ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு வளர்ந்து வரும் நாட்டிற்கும் இந்தியா அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை வழங்க உள்ளது.

- மேலும், இந்தியா 'உலகத் தெற்கு நாடுகளுக்கானச் சிறப்பு மையத்தினையும்' நிறுவ உள்ளது.
- எந்தவொரு வளர்ந்து வரும் நாட்டின் மேம்பாடு சார்ந்தத் தீர்வுகள் அல்லது சிறந்த நடைமுறைகள் குறித்த ஒரு ஆராய்ச்சியை இது மேற்கொள்ள உள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக 'உலகத் தெற்கு நாடுகளுக்கான உதவித் தொகை அடிப்படையிலான கல்வித் திட்டத்தினையும்' இந்தியா அமைக்க உள்ளது.

## வந்தே பாரத் விரைவு இரயில்

- செகந்திராபாத்தை விசாகப்பட்டினத்துடன் இணைக்கும் புதிய வந்தே பாரத் விரைவு இரயில் சேவையானது தொடங்கப்பட்டது.
- இந்த இரயில் ஆனது இந்திய இரயில்வே நிர்வாகம் அறிமுகப்படுத்திய எட்டாவது வந்தே பாரத் விரைவு இரயில் ஆகும்.
- தெலுங்கு மொழி பேசும் மக்களைக் கொண்ட இரண்டு மாநிலங்களை இணைக்கும் முதல் இரயில் சேவை இதுவாகும்.




## 'Soul of Steel' பிரச்சாரம்

- ஒரு நபர் உயரமான இடங்களில் உயிர் வாழ்வதற்கான தாங்குதிறனைச் சோதிக்கச் செய்வதற்காக இந்தியாவில் 'Soul of Steel' என்ற சவால் தொடங்கப்பட உள்ளது.
- இது உத்தரகாண்டில் மேற்கொள்ளப்பட உள்ள ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- முன்னாள் வீரர்களால் நடத்தப்படும் CLAW குளோபல் என்ற ஒரு துணிகர முதலீட்டு நிறுவனத்தினால் நடத்தப் படுகின்ற இந்த நிறுவனத்திற்கு இந்திய இராணுவம் உதவிகளை வழங்குகிறது.
- இந்தச் சாதனையானது ஐரோப்பாவில் மேற்கொள்ளப் படும் 'அயர்ன்மேன் டிரையத்லான்' என்ற ஒரு தனிநபரின் மன உறுதியையும் தாங்குதிறனையும் சோதிக்கின்ற நீண்ட தூர டிரையத்லான் சவாலினை ஒத்துள்ளது.

## 20 சதவிகித எத்தனால் கலந்த பெட்ரோல்

- E20 (20 சதவீதம் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல்) ரக பெட்ரோலினைப் படிப்படியாக அறிமுகப்படுத்தும் நடவடிக்கையானது ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது.
- திட்டமிடப்பட்டதற்கு முன்பாகவே 10 சதவிகிதம் எத்தனால் (10 சதவிகிதம் எத்தனால், 90 சதவிகிதம் பெட்ரோல்) கலந்த பெட்ரோலை விநியோகிக்கும் இலக்கை இந்தியா 2022 ஜூன் மாதத்தில் அடைந்தது.
- மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை விநியோகித்தல் என்ற இலக்கினை 5 ஆண்டுகளுக்குள் அடைவதற்காக 2025 என்று நிர்ணயித்துள்ளது.
- 20 சதவீத எத்தனால் கலவைக்கு 1,000 கோடி லிட்டர் எத்தனால் தேவைப்படும்.




## பாரத் பிரவா





- பாரத் பிரவா-கடற்கரையோர இந்தியா என்பது ஆறுகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்தின் முக்கியத்துவம் மற்றும் காட்சிகளை, நாடு தழுவிய அளவில் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளின் மூலம் முன்னிலைப்படுத்தச் செய்வதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- கப்பல் போக்குவரத்து, ஆறுகள், கடல் பகுதிகள் மற்றும் மக்களைப் பற்றிய ஒரு பெரும்

குறிக்கோளினை உருவாக்கும் நோக்கத்திற்காக பல்வேறு துறைகளைச் சேர்ந்த பங்கு தாரர்களை ஒன்றிணைப்பதற்கான பொதுவான தளமாக பாரத் பிரவா செயல்படும்.

- கடல்சார் துறை தொடர்பான சவால்கள், கொள்கைச் சிக்கல்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை இது முன்னிலைப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை (ASER) ஆனது பிரதாம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 97.2% ஆக இருந்த 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஒட்டு மொத்தச் சேர்க்கைப் பதிவு ஆனது 2022 ஆம் ஆண்டில் 98.4% ஆக அதிகரித்துள்ளன.
- அரசுப் பள்ளிகளில் 2018 ஆம் ஆண்டில் 65.6% ஆக இருந்த குழந்தைகளின் சேர்க்கை விகிதமானது 2022 ஆம் ஆண்டில் 72.9% ஆக அதிகரித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 27.3% ஆக இருந்த, அரசு அல்லது தனியார் பள்ளிகளில் 2 ஆம் வகுப்பு பாடங்களைப் பயிலும் திறன் கொண்ட குழந்தைகள் 3 ஆம் வகுப்பில் சேராமல் இடைநின்ற குழந்தைகளின் சதவிகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 20.5% ஆக குறைந்தது.
- 2018 ஆம் ஆண்டில் 50.5% ஆக இருந்த, அரசு அல்லது தனியார் பள்ளிகளில் குறைந்த பட்சம் 2 ஆம் வகுப்பு பாடங்களைப் பயிலும் திறன் கொண்ட குழந்தைகள் 5 ஆம் வகுப்பில் சேர்வதற்கான சதவீதம் ஆனது, 2022 ஆம் ஆண்டில் 42.8% ஆக குறைந்தது.
- தேசிய அளவில், 2018 ஆம் ஆண்டில் 44.1% ஆக இருந்த வகுத்தல் கணக்குகளைக் கையாளக் கூடிய குழந்தைகளின் விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 44.7% ஆக சற்று அதிகரித்துள்ளது.




- தனியார் கற்பிப்பு வகுப்புகளுக்குச் (ட்யூஷன்) செல்லும் மாணவர்களை அதிக சதவீதத்தில் கொண்டுள்ள மாநிலமாக பீகார் (71.7%) உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து மணிப்பூர் (53.4%) மற்றும் ஜார்க்கண்ட் (45.3%) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- இதில் விதிவிலக்காக திகழும் மாநிலங்கள் குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா மற்றும் திரிபுரா ஆகியனவாகும்.

- உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், திரிபுரா ஆகியவை குறைவான வருகை விகிதம் கொண்ட மாநிலங்களாகும்.
- மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில், பள்ளிகளில் சேர்ந்துள்ள மாணவர்களில் 86%க்கும் அதிகமான மாணவர்கள் பள்ளிக்கு வருகை தருகின்றனர்.

## போபால் பிரகடனம்

- போபால் நகரில் நடைபெற்ற G20 நாடுகளின் Think-20 அமைப்பின் இரண்டு நாள் அளவிலான கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விவாதத்திற்குப் பிறகு போபால் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இது G20 நாடுகளின் சிந்தனைக் குழுக்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களின் Think20 (T20) கூட்டத்திற்குப் பிறகு வெளியிடப்பட்டது.


### *சிறப்பம்சங்கள்*

- ஆயுஷ் போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகளை ஊக்குவிப்பதனை வலியுறுத்தல்
- உள்கட்டமைப்பில் மதிப்பு சார்ந்த வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்
- சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நலத்திற்கான முயற்சி
- குழந்தைகள் மற்றும் பெண்களின் மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்துதல்
- நாட்டின் வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் கவனம் செலுத்துதல்
- G-20 நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதில் உள்ளூர் மயமாக்கலின் முக்கியத்துவம்
- அரசு, சமூகம் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு இடையேயான மும்முனை ஒத்துழைப்பின் அவசியம்.

## உயர்மட்ட சியாங் நீர்மின் நிலையம்


- தேசிய நீர் மின்னாற்றல் கழகமானது, 'உயர்மட்ட சியாங் பல்பயன்பாட்டு நீர்த் தேக்கத்திற்கான' முன் சாத்தியக்கூறு அறிக்கையை இந்திய மத்திய மின்சார ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் நிறுவப்பட உள்ள இந்தியாவின் மிகப்பெரிய நீர் மின் நிலையமாக இது இருக்கும்.
- இந்த உயர்மட்ட சியாங் நிலையமானது நீர்த்தேக்கமாக செயல்படும்.
- இந்த நிலையத்தில் இருந்து பெறப்படும் நீர்மின் உற்பத்தியானது இதன் "ஒரு துணை தயாரிப்பு" மட்டுமே ஆகும்.
- மெடோக் எனுமிடத்தில் சீனா நிறுவ உள்ள 60,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு அணையானது பிரம்மபுத்திரா நதியிலிருந்து வரும் இயற்கையான நீரோட்டத்தின் அளவைக் குறைக்கும் என்பது கவலைக்குரிய ஒன்றாக உள்ளது.

- சீனாவின் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ள நிலையில், இந்த மாபெரும் நீர்த் தேக்கம் ஆனது அருணாச்சலப் பிரதேசத்திற்கும் அதன் பாசனத் தேவைகளுக்கும் அவசியமான நீர்த் தேவையினை வழங்க முடியும்.
- இந்தியாவைப் பொறுத்தவரை, பிரம்மபுத்திரா நதியானது இந்தியாவின் மொத்த நன்னீர் வளங்களில் 30 சதவீதத்தையும், மொத்த நீர் மின் ஆற்றல் திறனில் 40 சதவீதத்தையும் கொண்டுள்ளது.




## பதோ பர்தேஷ் திட்டம் நிறுத்தம்

- மௌலானா ஆசாத் தேசிய உதவித் தொகைத் திட்டமானது (MANF திட்டம்) சிறுபான்மை மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் கிடைக்கப் பெறாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- சிறுபான்மை விவகார அமைச்சகம் மேற்கொண்ட அதிகாரப்பூர்வ முடிவிற்குப் பிறகு, சமூகத்தில் சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்குமான "பதோ பர்தேஷ் திட்டத்தை" நிறுத்தியது.
- இது 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரதமரின் 15 அம்ச திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.
- இது சச்சார் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாகும்.
- சிறுபான்மை சமூகங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த தகுதியான மாணவர்களுக்கு வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுவதற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குவதோடு அவர்களின் வேலை வாய்ப்பு விகிதத்தையும் மேம்படுத்துவதற்காக, வட்டி மானியங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பதோ பர்தேஷ் திட்டம், இந்தத் திட்டத்திற்கான முகமை வங்கியாக நியமிக்கப்பட்ட கனரா வங்கி மூலம் செயல்படுத்தப் பட்டது.




## கியூபாவிற்கு பென்டாவலன்ட் தடுப்பூசிகள் வழங்கீடு


- கியூபாவிற்கு 12,500 தவணை பெண்டாவலன்ட் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளது.
- பெண்டாவலன்ட் தடுப்பூசியானது ஒரு குழந்தைக்கு உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய தொண்டை அழற்சி, கக்குவான் இருமல், டெட்டனஸ், கல்லீரல் அழற்சி பி மற்றும் ஹிப் வகை ஆகிய 5 வகையான நோய்களிலிருந்துப் பாதுகாப்பை வழங்குகிறது.




## மேற்கூரை விசிறிகளுக்கான எரிசக்தி திறன் கழகத்தின் விதிமுறைகள்

- திருத்தப்பட்ட எரிசக்தி திறன் கழகத்தின் (BEE) விதிமுறைகளின்படி, மேற்கூரை விசிறி வகையானது, ஜனவரி 01 ஆம் தேதி முதல் கட்டாய நட்சத்திரக் குறியீட்டு முறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
- நட்சத்திரக் குறியீட்டு வழங்கல் என்பது ஒரு நட்சத்திர மதிப்பிடப்பட்ட விசிறிகளுக்கு குறைந்த பட்சம் 30% மற்றும் ஐந்து நட்சத்திர மதிப்பிடப்பட்ட விசிறிகளுக்கு 50%க்கும் அதிகமான ஆற்றல் சேமிப்புத் திறனைக் குறிக்கிறது.

- இந்தப் புதிய ஆணையின் கீழ், மின்விசிறி உற்பத்தியாளர்கள் தங்கள் மின்விசிறித் தயாரிப்புகளுக்கான நட்சத்திர மதிப்பீடுகளைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.
- நட்சத்திர மதிப்பீடு ஆனது சேவை மதிப்பைப் பொறுத்தது ஆகும் (ஒரு நிமிடத்திற்கு ஒரு கன மீட்டரில் உள்ள காற்று பரவல் / ஆற்றல் நுகர்வு- வாட் அளவில்).




## இந்தியாவின் வலிமையான நிறுவனம் - ஜியோ




- ஜியோ நிறுவனமானது இந்தியாவில் வலிமையான நிறுவனமாகவும், உலகின் வலிமையான நிறுவனங்களில் ஒன்பதாவது இடத்தினையும் பெற்றுள்ளது.
- பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள ‘உலக நிறுவனங்கள் 500 – 2023’ என்ற அறிக்கையின் படி இந்தத் தகவலானது குறிப்பிடப்பட்டுள்ளது.
- உலகின் வலிமையான நிறுவனங்களின் பட்டியலில் EY, Coca Cola மற்றும் Accenture போன்ற நிறுவனங்களை முந்தி 'ஜியோ' ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது.

## கூடுதல் தடுப்பு மருந்தாக கோவோவாக்ஸ்

- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது (DCGI), இந்திய சீரம் நிறுவனத்தின் (SII) கோவோவாக்ஸ் மருந்தினை ஒரு கலப்பு கூடுதல் தடுப்பு மருந்தாக பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதற்கு முன்பு, கோவாக்சின் அல்லது கோவிஷீல்ட் ஆகியவற்றின் இரண்டு தவணைகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு இதைப் பயன்படுத்தலாம்.
- மூன்றாவது தவணையானது, முந்தையத் தடுப்பு மருந்துகளில் இருந்து வேறுபட்டு இருப்பது ஒரு கலப்பு கூடுதல் தடுப்பு மருந்தாகும்.
- நோவோவாக்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் கோவோவாக்ஸ் தயாரிக்கப் படுகிறது.




## இந்தியாவின் மிக ஆழமான மெட்ரோ இரயில் நிலையம்





- இந்தியாவின் மிக ஆழமான நிலத்தடி இரயில் நிலையம் புனேயின் உரிமையியல் நீதிமன்ற நிறுத்தத்தில் நிறுவப்பட உள்ளது.
- இது 33.1 மீட்டர் ஆழத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## சன்சாத் கேல் மஹாகும்ப் நிகழ்வின் இரண்டாம் கட்டம் 2022-23

- 2022-23 ஆம் ஆண்டின் சன்சத் கேல் மஹாகும்ப் நிகழ்வின் இரண்டாம் கட்டமானது, உத்தரப் பிரதேசத்தின் பஸ்தி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.
- கேல் மகாகும்பத்தின் முதல் கட்டமானது, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 10 முதல் 16 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கேலோ இந்தியா மாவட்ட வாரி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவற்றுள் 750க்கும் மேற்பட்ட மையங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## ஓர் ஆண்டில் 10 மில்லியன் பதிவுகள்

- அடல் ஓய்வூதியத் திட்டமானது (APY), அமைப்புசாராத் துறையின் தொழிலாளர்களை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 36 சதவீதம் உயர்ந்து, இதுவரை இல்லாத அளவுக்கு அதிகளவினை எட்டியுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, ஓர் ஆண்டில் முதல் முறையாக 10 மில்லியன் அளவிலான எண்ணிக்கையினைத் தாண்டியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 9.2 மில்லியனாக இருந்த பதிவுகளின் எண்ணிக்கையானது, 2022 ஆம் ஆண்டில் 12.5 மில்லியனாக உயர்ந்துள்ளது.




## U-WIN தளம்

- Co-WIN என்ற தளத்தின் வெற்றிக்குப் பிறகு, U-WIN எனப் பெயரிடப்பட்ட வழக்கமான தடுப்பூசிகளுக்கான மின்னணுப் பதிவேட்டை அமைக்க அரசாங்கம் இப்போது அதைப் பிரதியெடுத்துள்ளது.
- இந்தத் திட்டம் இந்தியாவின் அணைவருக்குமான நோய்த் தடுப்புத் திட்டத்தை (UIP) டிஜிட்டல் மயமாக்குகிறது.
- இது ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தின் இரண்டு மாவட்டங்களில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது.

- நோய்த் தடுப்புச் சேவைகள், தடுப்பூசி நிலையைப் புதுப்பித்தல், அதன் வழங்குதலின் விளைவு, வழக்கமான நோய்த் தடுப்பு அமர்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் ஆன்டி ஜென் வாரியான வழங்குதல் போன்ற அறிக்கைகள் போன்றவற்றிற்கான முக்கியத் தகவல்களின் ஒரே ஆதாரமாக U-WIN தளம் இருக்கும்.

## 2020 ஆம் ஆண்டில் இயற்கை விவசாய விரிவாக்கம்

- 2020 ஆம் ஆண்டில் இயற்கை விவசாயத்தின் பரப்பளவு அதிகபட்சமாக விரிவடைந்த உலகின் முதல் மூன்று நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் மொத்தம் 3 மில்லியன் ஹெக்டேர் (mh) இயற்கை விவசாயத்தில் சேர்க்கப் பட்டது.
- இந்தப் பட்டியலில் அர்ஜென்டினா முதலிடம் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து உருகுவே மற்றும் இந்தியா ஆகியவை உள்ளன.
- ஆஸ்திரேலியாவில் உலகில் 35.7 மில்லியன் ஹெக்டேர் என்ற அளவில் இயற்கை விவசாயம் உள்ள நிலையில் அதே சமயம் இந்தியாவில் 2.8 மில்லியன் ஹெக்டேர் மட்டுமே உள்ளது.
- உலகில் மொத்தமுள்ள 34 லட்சம் இயற்கை உற்பத்தியாளர்களில், இந்தியாவில் 16 லட்சம் விவசாயிகள் சான்றளிக்கப்பட்ட இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.



## பிரலய் இராணுவப் பயிற்சி

- இந்திய விமானப் படை உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே பிரலய் எனும் ஒரு பெரிய இராணுவப் பயிற்சியை நடத்த உள்ளது.
- இங்கு ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த வேண்டி இந்திய அரசு எல்லையில் இது போன்ற ராணுவப் பயிற்சிகளை நடத்துகிறது.
- இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு, மற்றும் இந்தியா - சீனா எல்லையில் உள்ள உண்மைக் கட்டுப்பாட்டுக் கோடு ஆகியவற்றில் ஊடுருவல்கள் பொதுவாக நிகழும்.
- இந்தியாவின் முன்னணி போர் விமானங்களான ரஃபேல் மற்றும் சுகாய் 30 ஆகியவை இதில் பங்கேற்கும்.
- இந்தியா சமீபத்தில் S - 400 ஏவுகணைகளை இப்பகுதியில் நிலை நிறுத்தியது.
- இந்திய விமானப்படை இந்தப் பயிற்சியில் பங்கேற்பதற்காக வேண்டி தனது ஆளில்லா விமானங்களையும் சிலிகுரி வழித்தட பகுதிக்கு மாற்றியுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் உடன் CGHS இணைப்பு




- ஆயுஷ்மான் பாரத் மற்றும் மத்திய அரசின் சுகாதாரத் திட்டம் (CGHS), அரசாங்கத்தால் நடத்தப்படும் இரண்டு தனித்தனி மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் ஆகும்.
- ஆயுஷ்மான் பாரத் வரம்பின் கீழ் தற்போதுள்ள அனைத்து மாநில மற்றும் மத்திய அரசு சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களை இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டம் 10.74 கோடிக்கும் அதிகமான ஏழைக் குடும்பங்களின் சுமார் 50 கோடி மக்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் அளவிற்குச் சுகாதாரக் காப்பீட்டினை வழங்குகிறது.
- இது இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் பராமரிப்பு மருத்துவமனைச் சேவையை உள்ளடக்கியது.
- மத்திய அரசின் சுகாதாரத் திட்டமானது (CGHS) அதன் கீழ் பதிவு செய்யப்பட்ட மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு விரிவான மருத்துவச் சேவையை வழங்குகிறது.

## குடியரசு தினம் 2023 - முதல் முறை நிகழ்வுகள்

- எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தாஹ் எல்-சிசி அணிவகுப்பில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.
- முதன்முறையாக 16 அணிவகுப்புக் குழுக்களில் ஒரு பகுதியாகவும், எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எஃப்) ஒட்டகக் குழுவின் ஒரு பகுதியாகவும் 12 பெண் வீரர்கள் இடம் பெற்றனர்.
- இந்த ஆண்டு, "ஆத்மநிர்பர் பாரத்" என்ற கருப்பொருளை வைத்து, குடியரசு தின அணி வகுப்பில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுத அமைப்புகள் மட்டுமே காட்சிப் படுத்தப் பட்டன.
- புதிதாக பணியமர்த்தப்பட்ட அக்னிவீரர்களும் முதன்முறையாக அணிவகுப்பின் ஒரு பகுதியாக இருந்தனர்.
- போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் முதல் முறையாக ஒரு அட்டவணையை காட்சிப் படுத்தியது.
- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முறையாக, அணிவகுப்பின் போது குடியரசுத் தலைவருக்கு மரியாதை அளிக்கும் சின்னமான 21-துப்பாக்கி முழக்க மரியாதையில் பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்ட 25-பவுண்டர் துப்பாக்கிகளுக்குப் பதிலாக 105 மிமீ இந்தியத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டது.
- முதன்முறையாக, வடக்கு மற்றும் தெற்கு பகுதியின் முகப்பில் பாசறை திரும்பும் விழாவின் போது முப்பரிமாணத் திரையிடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தினை வகைகள் கொள்முதல்




- தினை வகைகளின் உற்பத்தி நாற்பது முதல் ஐம்பது லட்சம் டன்கள் அதிகரிக்கும் என இந்திய அரசு எதிர்பார்க்கிறது.
- 2023 ஆம் ஆண்டில், நாட்டில் தினை உற்பத்தி சுமார் ஆறு முதல் ஏழு லட்சம் டன்கள் ஆகும்.
- தினை வகைகள் உற்பத்தி அதிகரிப்புக்கு முக்கியமான காரணம் பின்வரும் ஒன்பது மாநிலங்கள் ஆகும்.
- அவை மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஹரியானா, தமிழ்நாடு, குஜராத், ஒடிசா, உத்தரகாண்ட், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகியனவாகும்.
- உலகின் 41% தினை வகைகள் விளைச்சல் இந்தியாவில் நிகழ்கிறது.
- உலகில் தினை வகைகளை உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று ஆகும்.

## 13 மொழிகளில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்

- 1,200 உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஜனவரி 26 அன்று குடியரசு தினத்திலிருந்து அஸாமி, காரோ, இந்தி, கன்னடம், காசி, மலையாளம், மராத்தி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு மற்றும் உருது ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டு உள்ளன.
- தீர்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் உச்ச நீதிமன்றம் மின்னணு - உச்ச நீதிமன்ற அறிக்கைகள் (e-SCR) திட்டத்தைச் செயல்படுத்துகிறது.
- அதன்கீழ் சுமார் 34,000 தீர்ப்புகளை வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு இலவசமாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது டிஜிட்டல் மயமாக்கலை நோக்கிய உச்ச நீதிமன்றத்தின் முக்கியப் படியாகும்.




## முதலாவது பசுமை ஆற்றல் கொண்ட மாநிலம்

- இமாச்சலப் பிரதேச மாநிலமானது, 2025 ஆம் ஆண்டிற்குள் முதலாவது 'பசுமை ஆற்றல் கொண்ட மாநிலமாக' மாறுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக நீர்மின்னாற்றல், ஹைட்ரஜன் மற்றும் சூரிய ஆற்றல் ஆகியவற்றினைப் பயன்படுத்துவதற்கு இம்மாநிலம் இலக்கு நிர்ணயித்து உள்ளது.

## இந்தியாவின் சிறந்த காவல் நிலையம்



- மத்திய உள்துறை அமைச்சர், ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள அஸ்கா காவல் நிலையத்திற்கு நாட்டின் சிறந்த காவல் நிலையம் என்ற விருதினை வழங்கினார்.
- காவல் நிலையங்களைத் தரவரிசைப்படுத்துதல் என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தினால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும்.
- குற்ற விகிதம், விசாரணை மற்றும் வழக்குகளைத் தீர்ப்பது, உள்கட்டமைப்பு மற்றும் பொதுச் சேவை வழங்கல் போன்ற 165 வெவ்வேறு அளவுருக்களின் அடிப்படையில் காவல் நிலையங்கள் மதிப்பிடப் படுகின்றன.

## இந்தியாவின் குடிமை 20 அமைப்பின் பணிக் கட்டுப்பாட்டுக் குழு (C20)

- G20 அமைப்பிற்கான இலாப நோக்கமற்ற, தன்னார்வ குடிமக்கள் சார்ந்த குழுக்களின் சமூக சேவையினை பிரதிநிதித்துவப்படுத்துகிற வகையில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பிற்கான அதிகாரப்பூர்வ பணிக் கட்டுப்பாட்டுக் குழுவாகும்.
- இது கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள அமிர்தபுரி எனுமிடத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவி (அம்மா) C20 கூட்டத்தின் தலைவராக உள்ளார்.
- G20 அமைப்பின் அரசு சாராத பிரிவில் ஒன்பது பணிக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் உள்ளன.
- இந்தக் குழுக்கள் G20 நாடுகளின் தலைவர்களுக்குக் கொள்கை சார்ந்த வகையிலான பரிந்துரைகளை வழங்கி அவர்களைத் தகவமைக்க உதவுகின்றன.
- வணிகம் 20, குடிமை 20, தொழில்துறை 20, பாராளுமன்றம் 20, அறிவியல் 20, உச்சத் தணிக்கை நிறுவனங்கள் 20, புத்தொழில் 20, ஆலோசனை வழங்கீடு 20, நகர்ப்புறம் 20, பெண்கள் 20 மற்றும் இளைஞர்கள் 20 ஆகியவை இந்த ஒன்பது குழுக்களாகும்.



## வணிகம் 20 நிகழ்வின் தொடக்க விழா

- வணிகம் 20 நிகழ்வின் தொடக்கக் கூட்டமானது குஜராத் மாநிலத்தின் காந்தி நகரில் தொடங்கியது.
- இது G20 மாநாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது.
- இந்தக் கூட்டத்திற்கு டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் சந்திரசேகரன் தலைமை தாங்கினார்.
- B20 இந்தியா 2023 என்ற பேச்சுவார்த்தையானது, 'RAISE' என்ற கருத்துருவின் கீழ் நடைபெறுகிறது.
- பொறுப்பு மிக்க, துரிதப்படுத்தப்பட்ட, புதுமைமிக்க, நிலையான மற்றும் சமமான வணிகம் என்பதன் சுருக்கமே RAISE என்பதாகும்.
- இந்தக் கூட்டத்தில் G20 நாடுகளின் பிரதிநிதிகள், வணிகப் பிரதிநிதிகள், தலைமை நிர்வாக அதிகாரி, இரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.
- முதல் முறையாக, இந்தச் சந்திப்பில் ஆப்பிரிக்க நாட்டிற்கானச் சிறப்புப் பணிக்குழு இடம் பெற்றுள்ளது.
- இந்தியாவின் G20 பிரதிநிதி நிதி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி அமிதாப் காந்த் ஆவார்.
- பருவநிலை இலக்குகளை அடைவதில் சிறப்பாக செயல்படும் முதல் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளதோடு, இந்த இடத்தைப் பெற்ற ஒரே G20 அமைப்பு சார்ந்த நாடும் இதுவாகும்.




## உத்திசார் கூட்டாண்மை - இந்தியா மற்றும் எகிப்து

- இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் தங்களது இருதரப்பு உறவுகளை "உத்தி சார் கூட்டாண்மை என்ற நிலைக்கு" உயர்த்த ஒப்புக் கொண்டுள்ளன.
- இது அரசியல், பாதுகாப்பு, இராணுவம், எரிசக்தி மற்றும் பொருளாதார அம்சங்களை உள்ளடக்கியது.
- கடந்த ஐந்தாண்டுகளில் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக மதிப்பானது, 12 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது.

- இந்தியா எகிப்துடனான ஒரு பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளது.
- மேலும், இணையப் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், இளையோர், கலாச்சாரம் மற்றும் ஒளிபரப்பு போன்ற பல்வேறு துறைகளில் இந்த ஒப்பந்தம் கவனம் செலுத்துகிறது.
- எகிப்து நாட்டினை, ஐரோப்பிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுடனான தொடர்புகளுக்கான நுழைவாயிலாக இந்தியா கருதுகிறது.
- G-20 அமைப்பின் மாநாட்டிற்கானச் சிறப்பு விருந்தினராக எகிப்து அரசினையும் இந்தியா அழைத்துள்ளது.
- இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் உலக விவகாரங்களில் உருவாக்கப்பட்ட அணி சேரா இயக்கத்தின் ஸ்தாபன பங்குதார நாடுகள் ஆகும்.



## அந்தமான் தீவுகளின் பெயர் மாற்றம்

- அந்தமான் மற்றும் நிக்கோபாரில் உள்ள 21 தீவுகளுக்கு இந்தியாவின் மிக உயர்ந்த இராணுவ அங்கீகாரமான பரம் வீர் சக்ரா விருது பெற்றவர்களின் பெயர்களை பிரதமர் அதற்கு பெயர் சூட்டி கௌரவித்தார்.
- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 126வது பிறந்தநாளை முன்னிட்டு இந்தப் பெயர்களானது சூட்டப்பட்டது.
- அந்தமான் நிக்கோபார் தீவுகளில் அமைக்கப்படவுள்ள போஸ் அவர்களுக்கான நினைவிடத்தின் மாதிரியையும் பிரதமர் திறந்து வைத்தார்.
- நேதாஜி அவர்களுக்காக நிறுவப்பட உள்ள இந்த நினைவிடமானது, 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு ராஸ் தீவு என்று அழைக்கப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தீவுகளில் அமைக்கப்பட உள்ளது.
- இதில் பெயரிடப்படாத மிகப்பெரியத் தீவுகளுக்கு முதலாவது பரம் வீர் சக்ரா விருது பெற்றவரின் பெயரானது வழங்கப்பட்டது.
- இதில் இரண்டாவது பெரிய தீவிற்கு பரம் வீர் சக்ரா விருது பெற்ற இரண்டாவது வீரரின் பெயரானது வழங்கப்பட்டது.
- இந்த விருதினை முதன் முதலில் பெற்றவர் மேஜர் சோம்நாத் சர்மா ஆவார்.

- 1947 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் தேதியன்று ஸ்ரீநகர் விமான நிலையம் அருகே பாகிஸ்தானிய படையினர் மேற்கொண்ட ஊடுருவல்களுக்கு எதிராக போரிட்ட போது அவர் உயிர் இழந்தார்.

Below are all the 21 islands that were named

1. Dhan Singh Island after Lieutenant Colonel (then Major) Dhan Singh Thapa
2. Tarapore Island after Lt Col Ardeshir Burzorji Tarapore
3. Karam Singh Island after Lance Naik (Hony. Captain) Karam Singh
4. Bana Island after Naib Subedar Bana Singh
5. Ekka Island after Lance Naik Albert Ekka
6. Khetrapal Island after 2nd Lt Arun Khetrapal
7. Pandey Island after Lt Manoj Kumar Pandey
8. Hoshiar Island after Major Hoshiar Singh
9. Shaitan Island after Major Shaitan Singh
10. Jadunath Island after Nayak Jadunath Singh
11. Yogender Island after Subedar Major (Hony. Captain) Yogendra Singh Yadav
12. Hamid Island after Company Quartermaster Havildar (CQMH) Abdul Hamid
13. Rane Island after 2nd Lt Rama Raghoba Rane
14. Ramaswamy Island after Major Ramaswamy Parameswaran
15. Batra Island after Captain Vikram Batra
16. Joginder Island after Subedar Joginder Singh
17. Salaria Island after Captain G S Salaria (then Major)
18. Piru Island after Company Havildar Major Piru Singh
19. Somnath Island after Major Somnath Sharma
20. Sekhon Island after Flying Officer Nirmaljit Singh Sekhon
21. Sanjay Island after Subedar Major (then Rifleman) Sanjay Kumar

## குடியரசு தின அணிவகுப்பு 2023

- 2023 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் பங்குபெற்ற பல மாநிலங்களின் காட்சி வாகனத்தில் 'நாரி சக்தி' என்ற கருத்துருவே அதிகம் இடம் பெற்றிருந்தது.
- 96 வயதில் எழுத்தறிவுத் தேர்வில் முதலிடம் பெற்ற, 2020 ஆம் ஆண்டு நாரி சக்தி புரஸ்கார் விருதை வென்ற கார்த்தியாயனி அம்மாவினைச் சித்தரிக்கும் வகையில் கேரள மாநிலத்தின் காட்சி வாகனம் இடம் பெற்றிருந்தது.
- நாட்டிலேயே பெண்களின் கல்வியறிவு விகிதத்தில் கேரளா முதலிடத்தில் உள்ளதோடு அந்த மாநிலம் குடும்பஸ்ரீ எனப்படும் உலகின் மிகப்பெரிய மகளிர் சுய உதவிக் குழு வலையமைப்பினையும் கொண்டுள்ளது.

- தமிழ்நாடு மாநிலத்தின் காட்சி வாகனமானது, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் மாநிலத்தின் கலாச்சாரத்தைச் சித்தரிக்கும் வகையில் இருந்தது.
- இந்தக் காட்சி வாகனத்தின், முன் பகுதியில் அறிவுசார் பெண்களுக்கான சின்னமாக விளங்கும் கவிஞர் ஔவையார் அவர்களின் சிலை காட்சிப் படுத்தப்பட்டது.
- அந்த வாகனத்தின் முன்பக்கத்தின் இருபுறமும் வீரமங்கை வேலு நாச்சியார் அவர்கள் குதிரை மீது ஏறி நிற்கும் சிலை வைக்கப் பட்டிருந்தது.
- இவர் சிவகங்கையின் இராணி (1780-90) ஆவார்.
- இந்தக் காட்சி வாகனத்தின், நடுப்பகுதியில் புகழ்பெற்ற பெண் ஆளுமைகளின் சிலைகள் காட்சிக்கு வைக்கப் பட்டன.
- கர்நாடக இசைப் பாடகி M.S. சுப்புலட்சுமி, சிறந்த பரதநாட்டிய மேதை தஞ்சை பால சரஸ்வதி ஆகியோரின் சிலைகள் இதில் இடம் பெற்றன.
- சமூகச் சீர்திருத்தவாதியும் மருத்துவருமான முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய சிலையும் இடம் பெற்றது.
- திராவிட இயக்கத்தின் ஆசிரியரும் அரசியல் ஆர்வலருமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் சிலையும் இடம் பெற்றிருந்தது.
- தனது 105 வயதிலும் விவசாயத் துறையில் தீவிரமாகப் பணியாற்றி வரும் பிரபலமான இயற்கை விவசாயி பாப்பம்மாள் அவர்களின் சிலையும் இதில் இடம் பெற்றது.



## பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் 2023

- இது முன்னதாக ஒரு தனித்துவமான சாதனைக்கான தேசியக் குழந்தை விருது என்று அழைக்கப்பட்டது.
- இது குழந்தைகளுக்கான இந்தியாவின் உயரியக் குடிமை விருதாகும்.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தினால் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.
- இந்த விருதானது இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

- புதுமை, கல்விசார் சாதனைகள், சமூகச் சேவை, கலை மற்றும் கலாச்சாரம், வீரம் அல்லது விளையாட்டு ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் சிறந்த சாதனைகளுக்காக 18 வயதுக்குட்பட்ட இந்தியக் குடிமக்களுக்கு பால் சக்தி புரஸ்கார் வழங்கப்படுகிறது.
- குழந்தை மேம்பாடு, குழந்தைகள் பாதுகாப்பு அல்லது குழந்தைகள் நலனில் சிறந்த பங்களிப்பைச் செய்த தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு பால் கல்யாண் புரஸ்கார் வழங்கப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், 11 வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த 11 குழந்தைகளுக்கு (ஆறு சிறுவர்கள் மற்றும் ஐந்து சிறுமிகள்) இந்த விருதானது வழங்கப்பட்டது.




## சுபாஷ் சந்திர போஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கார்-2023

- இந்தியாவின் பேரிடர் மேலாண்மைத் துறையில், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆற்றிய ஒப்பற்றப் பங்களிப்பையும் தன்னலமற்றச் சேவையையும் அங்கீகரித்துக் கௌரவிப்பதற்கான விருதாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்காக, ஒடிசா மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (OSDMA) மற்றும் மிசோரம் லுங்கிலி தீயணைப்பு நிலையம் (LFS) ஆகிய இரண்டும் நிறுவனப் பிரிவில், பேரிடர் மேலாண்மையில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக 2023 ஆம் ஆண்டு சுபாஷ் சந்திர போஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கார் விருதிற்கு என்று தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளன.



## பத்ம விருதுகள்




- பத்ம விருதுகள் ஆனது சமூகச் சேவை, கல்வி, இலக்கியம், பொது விவகாரங்கள், கல்வி போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த நபர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப் படுகிறது.
- முலாயம் சிங் யாதவ், ஜாகீர் உசேன், K.M. பிர்லா, சுதா மூர்த்தி உள்ளிட்ட 106 பேர் இந்த ஆண்டிற்கான பத்ம விருதுகளைப் பெற்றுள்ளனர்.
- இது இந்தியாவில் வழங்கப்படும் உயரிய குடிமை விருதுகளில் ஒன்றாகும்.
- இந்த விருதானது பத்ம பூஷன், பத்ம விபூஷன், பத்மஸ்ரீ என மூன்று பிரிவுகளில் வழங்கப் படுகிறது.
- பத்ம விருதுகள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படுகின்றன.
- திருமதி வாணி ஜெய்ராம், K.கல்யாணசுந்தரம், பாலம் கல்யாண சுந்தரம், வடிவேல் கோபால் & மாசி சடையன் மற்றும் டாக்டர் கோபால்சாமி வேலுச்சாமி ஆகியோர் இந்த ஆண்டிற்கான விருதினைப் பெற்ற தமிழ்நாட்டினைச் சேர்ந்த நபர்கள் ஆவர்.

## 412 வீரதீர விருதுகள்

- ஆயுதப்படை வீரர்கள் மற்றும் பிற நபர்களுக்கான 412 வீரதீர விருதுகள் மற்றும் பிற பாதுகாப்பு துறை விருதுகளை வழங்குவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.
- மேஜர் ஷுபாங் மற்றும் நாயக் ஜிதேந்திர சிங் ஆகியோர் கீர்த்தி சக்ரா விருதைப் பெற உள்ளனர்.
- MiG-29K ரக போர் விமான விபத்தில் உயிரிழந்த கடற்படையைச் சேர்ந்த படைத்தளபதி நிஷாந்த் சிங், நவ் சேனா பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட உள்ளார்.
- இந்த விருதுகளில் பின்வருவன அடங்கும்
    - ஆறு கீர்த்தி சக்கரா விருதுகள் (நான்குபேருக்கு - மரணத்திற்குப் பின்),

- 15 சௌரிய சக்கரா விருதுகள் (இரண்டு பேருக்கு - மரணத்திற்குப் பின்),
- 93 சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்) (நான்கு பேருக்கு - மரணத்திற்குப் பின்),
- ஒரு நவ் சேனா பதக்கம் (வீரதீரச் செயல்) மரணத்திற்குப் பின்,
- ஏழு வாயு சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்),
- 29 பரம் விசிஷ்ட் சேவா பதக்கங்கள் (PVSM),
- மூன்று உத்தம் யுத் சேவா பதக்கங்கள் (UYSM),
- 53 அதி விஷிஷ்ட் சேவா பதக்கங்கள் (AVSM),
- 10 யுத் சேவா பதக்கங்கள் (YSM),
- 40 சேனா பதக்கங்கள் (கடமைப் பற்று),
- 13 நவ் சேனா பதக்கங்கள் (கடமைப் பற்று) (அவற்றில் ஐந்து மரணத்திற்குப் பின்),
- 14 வாயு சேனா பதக்கங்கள் (கடமைப் பற்று) மற்றும்
- 128 விஷிஷ்ட் சேவா பதக்கங்கள் (VSM).




## இந்திய வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு நதிகளின் பெயர்கள் வழங்கீடு

- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, நதிகளின் பெயர்களை இந்திய வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு இட்டு அதனைக் குறியீட்டுப் பெயராகவும் முத்திரைப் பெயராகவும் பயன்படுத்த உள்ளதாக முன்மொழிந்துள்ளது.
- கங்கை, பிரம்மபுத்திரா, காவிரி, கோதாவரி போன்ற நதிகளின் பெயர்களை அதன் வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு வழங்க உள்ளது.
- இது வேளாண் உற்பத்திப் பொருட்களின் பரவலினை அதிகரிக்கும்.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் நடவடிக்கையானது, 2021-22 ஆம் ஆண்டில் வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை 25.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்தியது.
- இது நாட்டின் மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் 51% ஆகும்.

एपीडा
APEDA
Ministry of Commerce and Industry
Government of India

## அம்ரித் உத்யன்


- முகலாயத் தோட்டங்கள் என்று பிரபலமாக அறியப்பட்ட, இராஷ்டிரபதி பவன் தோட்டங்கள் அம்ரித் உத்யன் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- எட்வின் லுட்யென்ஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தோட்டமானது 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதோடு, இது முகலாய மற்றும் ஆங்கிலேயப் பாணியிலான வடிவமைப்புகளைக் கொண்டது.
- இந்தப் பிரதானத் தோட்டமானது அந்தத் தோட்டத்தைச் சதுர வடிவமாகப் பிரிக்கிற வகையில், முகலாய நில வடிவமைப்பில் காணப்படும் பொதுவான அம்சமான, சார் பாக் என்று அழைக்கப்படுகிற வகையில் (நான்கு மூலைகள் கொண்ட தோட்டம்), செங் கோணங்களில் வெட்டும் இரண்டு ஓடைகளைக் கொண்டு உள்ளன.



## உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வு அறிக்கை (AISHE) 2020-2021

- உயர்கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையானது, 2019-20 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.5% அதிகரித்துள்ளதோடு, 2014-15 ஆண்டு தரவுடன் ஒப்பிடும்போது அது 21% அதிகரித்துள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 4.14 கோடிக்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளது.
- இந்த எண்ணிக்கை 4 கோடியைக் கடந்தது இதுவே முதல் முறையாகும்.
- 2019-20 ஆம் ஆண்டில் இருந்து பெண்களின் சேர்க்கை எண்ணிக்கை 13 லட்சம் அளவிற்கு அதிகரித்து அது 2 கோடியை எட்டியுள்ளது.


- அனைத்துச் சமூகக் குழுக்களிலும் பதிவான முந்தைய ஆண்டு எண்ணிக்கையினை விட மொத்தப் பதிவு விகிதம் (GER) அதிகரித்துள்ளது.
- தொலைதூரக் கல்வியில் சேர்க்கையானது, 2019-20 ஆம் ஆண்டில் பதிவான அளவினை விட 2020-21 ஆம் ஆண்டில் 7% அதிகரித்துள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 1 ஆக இருந்த பாலினச் சமத்துவக் குறியீடு (GPI) ஆனது 2020-21 ஆம் ஆண்டில் 1.05 ஆக அதிகரித்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில், வடகிழக்கு மாநிலங்களில் பதிவான பெண்களின் படிப்பறிவு 6.14 லட்சமாக உள்ள நிலையில், இது ஆண்களின் படிப்பறிவு வீதத்தினை விட (5.92 லட்சம்) அதிகமாகும்.
- உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் கர்நாடகா ஆகியவை கல்விச் சேர்க்கை எண்ணிக்கையில் முன்னணியில் உள்ள 6 மாநிலங்களாகும்.
- அதிக அளவில் பல்கலைக் கழகங்கள் ராஜஸ்தான் (92), உத்தரப் பிரதேசம் (84) மற்றும் குஜராத் (83) ஆகியவற்றில் உள்ளன.
- அதிக கல்லூரி எண்ணிக்கைகள் கொண்ட மாநிலங்கள்: கர்நாடகா (62), தெலுங்கானா (53), கேரளா (50), இமாச்சலப் பிரதேசம் (50), ஆந்திரப் பிரதேசம் (49), உத்தரகாண்ட் (40), ராஜஸ்தான் (40), தமிழ்நாடு (40) ஆகியனவாகும்.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்கள் கல்லூரிகளின் எண்ணிக்கையில் முன்னணியில் உள்ள 8 மாநிலங்களாகும்.
- 2019-20 ஆம் ஆண்டில் இருந்த மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை தற்போது 47,914 ஆக அதிகரித்துள்ளது.



# சர்வதேசச் செய்திகள்

## இஸ்ரேலின் புதிய பிரதமர்

- பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலின் பிரதமராக ஆறாவது முறையாகப் பதவி ஏற்று உள்ளார்.
- இவர் ஏற்கனவே இஸ்ரேலின் நீண்ட காலம் பணியாற்றியப் பிரதமராக விளங்குகிறார்.
- இஸ்ரேல் நாட்டுப் பாராளுமன்றமானது (நெசட்) தனது புதிய சபாநாயகராக அமீர் ஒஹானா என்பவரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ஒஹானா இஸ்ரேல் நாட்டுப் பாராளுமன்றத்தின் முதல் ஓரின சேர்க்கை இனத்தினைச் சேர்ந்த சபாநாயகர் ஆவார்.




## Stay Safe இயங்கலை பிரச்சாரம்

- இது G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இணையத்தைச் சார்ந்திருக்கும் நிலை அதிகரித்து வரும் நிலையில் இயங்கலை உலகில் பாதுகாப்பாக செயல்படுவதன் ஒரு முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- Stay Safe (பாதுகாப்பாக இருங்கள்) இயங்கலைப் பிரச்சாரமானது பல்வேறு இணைய வெளி அபாயங்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்கிறது.

## G20 அமைப்பின் எண்ணிமப் புத்தாக்க கூட்டணி (G20-DIA)

- இது G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் மற்றும் உறுப்பினர் அல்லாத நாடுகளில் அமைந்த புத்தொழில் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட புதுமையான மற்றும் நேர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான எண்ணிமத் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு, அங்கீகரித்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பங்கள் வேளாண்மை, சுகாதாரம், கல்வி, நிதி, பாதுகாப்பான எண்ணிம உள்கட்டமைப்பு மற்றும் சுழற்சிமுறைப் பொருளாதாரம் ஆகிய 6 பரந்த கருப்பொருள்களில் காணப்படும் மனிதகுலத்தின் தேவைகளை நிவர்த்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும்.

- இந்த கருப்பொருள்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் எண்ணிமப் பொதுப் பொருட்கள் உள்கட்டமைப்பு வசதி மூலம் செயல்படுத்தப்படும்.
- பெங்களூருவில் நடைபெற்ற எண்ணிமப் பொருளாதாரச் செயற்குழு (DEWG) கூட்டத்தின் ஒரு பகுதியாக, G20 அமைப்பின் எண்ணிமப் புத்தாக்கக் கூட்டணியின் (G20-DIA) உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.




## மங்டேச்சு நீர் மின் நிலையம்

- இது பூடானில் உள்ள டுரூக் பசுமை ஆற்றல் உற்பத்திக் கழக நிறுவனத்திடம் (DGPC) சமீபத்தில் ஒப்படைக்கப்பட்டது.
- இது இந்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.
- இதன் மூலம் இரு நாடுகளும் நான்கு மாபெரும் நீர் மின் நிலையத் திட்டங்களை வெற்றி கரமாக நிறைவு செய்துள்ளன.
- மொத்தத் தேசிய மகிழ்ச்சி நிலை என்ற ஒரு குறியீட்டின் அடிப்படையில் பூடானின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கு நீர் மின்னாற்றல் துறை மிகுந்தப் பங்களிக்கும் என்று இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.



## ஜப்பான் அரசின் புதிய கொள்கை

- நிலையான மின்சார வழங்கீடு மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்காக அணு சக்தியை அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலான ஒரு புதிய கொள்கையை ஜப்பான் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் அணுசக்திப் பயன்பாட்டினை படிப்படியாக நிறுத்துவதற்கான அதன் முந்தையத் திட்டத்தை ஜப்பான் அரசு மாற்றியமைத்தது.
- இந்தப் புதிய கொள்கையானது, தற்போதுள்ள அணு உலைகளை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்கும், பழைய அணு உலைகளின் செயல்பாட்டு நாட்களை நீட்டிக்கச் செய்வதற்கும் ஒரு அழைப்பினை விடுத்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டு ஃபுகுஷிமா பேரழிவிற்குப் பிறகு ஜப்பானில் அணுசக்தி எதிர்ப்பு உணர்வு மற்றும் பாதுகாப்பு சார்ந்த கருத்துகள் கணிசமாக அதிகரித்தன.


## சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

- ஐக்கிய நாடுகள் சபையானது 2023 ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானிய ஆண்டாக (IYM) அறிவித்துள்ளது.
- சர்வதேச சிறுதானிய ஆண்டு என்பது இந்த "ஊட்டச்சத்து மிக்க தானியங்களின்" பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட திட்டமாகும்.
- இது சர்வதேச சிறுதானிய ஆண்டினை (2023) ஒரு 'மக்கள் இயக்கமாக' மாற்றுவதுடன் இந்திய நாட்டினை 'சிறுதானிய உற்பத்திக்கான உலகளாவிய மையமாக' நிலை நிறுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சிறுதானிய வகைகள் "ஊட்டச்சத்து மிக்க தானியங்கள்" என மறுபெயரிடப் பட்டன.
- 2018 ஆம் ஆண்டானது தேசிய சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டது.
- உலகின் சிறுதானிய உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கினை இந்தியா மேற்கொண்டு வருகிறது.
- இந்தியாவில் ராஜஸ்தான், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிறுதானியம் அதிகளவில் உற்பத்தி செய்யப் படுகிறது.



## ஐரோப்பிய ஒன்றியச் சபையின் தலைமைப் பொறுப்பு

- ஐரோப்பிய ஒன்றியச் சபையின் (EU) சுழற்சி முறையிலான ஆறு மாதத் தலைமைப் பொறுப்பினை செக் குடியரசு நாட்டிடமிருந்து சுவீடன் பெற்றுள்ளது.
- சுவீடன் அரசானது 2023 ஆம் ஆண்டு 30 ஆம் தேதி வரையில் ஆறு மாதங்களுக்குத் தலைமைப் பொறுப்பினை வகிக்கும்.
- சுவீடன் நாட்டு அரசானது 1995 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது.
- சுவீடன் நாடானது, 2001 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் முறையே இரண்டு முறை ஐரோப்பிய ஒன்றியச் சபையின் தலைமைப் பதவியினை வகித்தது.




## ஆங்கிலேய இந்திய இராணுவ நினைவுச் சின்னம்



- ஸ்காட்லாந்தின் உள்ளாட்சி அரச சபையானது இது சார்ந்த திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததையடுத்து, ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரத்தில் புதிய ஆங்கிலேய இந்திய இராணுவ நினைவுச்சின்னம் நிறுவப்பட உள்ளது.

- இது இரண்டு உலகப் போர்களின் போதும், ஆங்கிலேயர்களுடன் இணைந்து போரிட்ட இலட்சக்கணக்கான இந்திய வீரர்களின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் நிறுவப் பட உள்ளது.

## ஆஸ்திரியாவுடனான விரிவான இடம்பெயர்வு மற்றும் போக்குவரத்து கூட்டாண்மை ஒப்பந்தம்




- ஆஸ்திரியாவுடனான 'விரிவான இடம்பெயர்வு மற்றும் போக்குவரத்து கூட்டாண்மை ஒப்பந்தத்தில்' (MMPA) இந்திய அரசு கையெழுத்திட்டது.
- இது இந்திய மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் இடம்பெயர்வு மற்றும் போக்குவரத்திற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜெர்மனி, பிரான்ஸ், போர்ச்சுகல், இங்கிலாந்து மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளுடன் இதே போன்ற ஒப்பந்தங்கள் சமீபத்தில் இந்திய அரசினால் மேற் கொள்ளப் பட்டன.

## ஆசிய பசிபிக் தபால் ஒன்றியம்




- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், ஆசிய பசிபிக் தபால் ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்றுள்ளது.
- இந்தியாவின் இந்த நான்கு ஆண்டு கால ஆட்சிக் காலத்தில், இந்த ஒன்றியத்தின் பொதுச் செயலாளராக டாக்டர் வினயா பிரகாஷ் சிங் பொறுப்பேற்க உள்ளார்.
- இது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள 32 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் தாய்லாந்தின் பாங்காக் நகரில் அமைந்துள்ளது.

- உறுப்பினர் நாடுகளுக்கு இடையேயான அஞ்சல் சேவை சார்ந்த உறவுகளை விரிவு படுத்துதல், எளிதாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அஞ்சல் சேவைத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## அர்ஜென்டினாவில் உள்ள லித்தியம் மற்றும் தாமிரச் சுரங்கம்

- சாத்தியக் கூறுகள் மிக்க கையகப் படுத்துதல் அல்லது நீண்ட கால குத்தகைப் பணிகளுக்காக அர்ஜென்டினாவில் உள்ள இரண்டு லித்தியச் சுரங்கங்கள் மற்றும் ஒரு தாமிரச் சுரங்கம் ஆகியவற்றினை இந்தியா அடையாளம் கண்டுள்ளது.
- KABIL என்பது தேசிய அலுமினிய நிறுவனம் (Nalco), இந்துஸ்தான் காப்பர் (HCL) மற்றும் MECL ஆகியவற்றின் பங்கேற்பின் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இது உள்நாட்டுச் சந்தையில் முக்கியமான மற்றும் மூலோபாயம் மிக்க கனிமங்களின் சீரான விநியோகத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- உலக அளவிலான லித்தியம் உற்பத்தியில் அர்ஜென்டினா தற்போது 4வது இடத்தில் உள்ளது.
- சிலி மற்றும் பொலிவியா ஆகியவற்றுடன் சேர்ந்து, இந்த நாட்டின் வடமேற்குப் பகுதியானது "லித்தியம் முக்கோணம்" என்று அழைக்கப்படுகிறது.
- உலக அளவிலான லித்தியம் உற்பத்தியில் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது.
- இலத்தீன் அமெரிக்காவில் சாலார் என்று அழைக்கப் படுகிற இந்த லித்தியம் ஆனது செடிமைன் பாறை உருவாக்கம் மற்றும் உப்புக்கல் வடிவில் காணப் படுகிறது.
- இதற்கான மற்ற மாற்று வடிவம் அதன் திரவ வடிவமாகும்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் புதிய உறுப்பினர்கள்

- ஈக்வடார், ஜப்பான், மால்டா, மொசாம்பிக் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் புதிய உறுப்பினராக இணைந்துள்ளன.

- சமீபத்தில் இணைந்த இந்த ஐந்து உறுப்பினர் நாடுகள் இந்தியா, அயர்லாந்து, கென்யா, மெக்சிகோ மற்றும் நார்வே ஆகியவற்றிற்குப் பதிலாக இடம் பெறுகின்றன.
- அல்பேனியா, பிரேசில், காபோன், கானா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை தற்போதைய இரண்டு ஆண்டு பதவிக் காலம் கொண்ட மற்ற உறுப்பினர் நாடுகள் ஆகும்.
- சீனா, பிரான்சு, ரஷ்யா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்தச் சபையில் நிரந்தர மற்றும் தடுப்பாணை அதிகாரம் கொண்ட உறுப்பினர் நாடுகள் ஆகும்.
- இச்சபையின் மற்ற 10 உறுப்பினர் நாடுகள், 193 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பொதுச் சபையினால் இரண்டு வருட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

## ஆறாம் தலைமுறை தொழில்முறை சார்ந்த போர் விமானம்




- ஜப்பான் நாடானது இங்கிலாந்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுடன் இணைந்து, தனது அடுத்த தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த போர் விமானத்தினை உருவாக்கச் செய்கிறது.
- இந்தப் புதிய ஜெட் விமானமானது, பிரிட்டனின் டைபூன் ரக போர் விமானங்கள் மற்றும் ஜப்பானின் F-2 ரக விமானங்களுக்கான ஒரு மாற்றாகக் கருதப்படுகிறது.
- இந்த மூன்று நாடுகளும் அமெரிக்காவின் ஐந்தாம் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த F-35 ரேடாருக்குப் புலப்படாத வகையிலான போர் விமானங்கள் திட்டத்தின் ஒரு பங்குதாரர் ஆகும்.
- இதற்கிடையில், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் ஆறாம் தலைமுறை தொழில் நுட்பம் சார்ந்த விமானங்களை வாங்க முயல்வதாகக் கருதப் படுகிறது.
- சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தற்போது பெய்ஜிங்கின் J-20 மற்றும் J-31 ஜெட் விமானங்கள் மற்றும் மாஸ்கோவின் Su-57 போன்ற ஐந்தாம் தலைமுறை தொழில் நுட்பம் சார்ந்த போர் விமானங்களை இயக்கி வருகின்றன.

## 120 நாடுகளின் உச்சி மாநாடு

- 120க்கும் மேற்பட்ட நாடுகளின் இரண்டு நாட்கள் அளவிலான காணொளி வாயிலான "Voice of Global South Summit" என்ற தலைப்பிலான ஒரு கூட்டத்தினை இந்தியா நடத்த உள்ளது.

- இது ‘குரல்களின் ஒற்றுமை, நோக்கத்தின் ஒற்றுமை’ என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடைபெற உள்ளது.
- இது G20 உச்சிமாநாட்டின் பங்குதாரர்களுக்கு சில முக்கியமான தொலைநோக்குப் பார்வைகளை வழங்கும்.
- உலகத் தெற்கு நாடுகள் என்பது பெரும்பாலும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளைக் குறிக்கிறது.




## வீர் கார்டியன்-2023 பயிற்சி

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் விமானப்படைகளுக்கு இடையேயான ஒரு கூட்டுப் பயிற்சியான 'வீர் கார்டியன் 2023' தொடங்க உள்ளது.
- இந்திய விமானப் படையும், ஜப்பான் விமானத் தற்காப்புப் படையும் இணைந்து இந்த கூட்டுப் பயிற்சியை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தப் பயிற்சியானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை ஆழப் படுத்தச் செய்வதுடன், பாதுகாப்பு ஒத்துழைப்பில் ஒரு முக்கியப் படிநிலையாகவும் அமையும்.



## எபோலா வைரஸ் பெருந்தொற்றிற்கு முற்றுப்புள்ளி


- சூடான் எபோலா வைரசினால் ஏற்பட்ட எபோலா பெருந்தொற்றானது உகாண்டாவில் முடிவுக்கு வந்ததாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று மத்திய முபெண்டே மாவட்டத்தில் இந்த நோயின் முதல் பாதிப்பானது உறுதி செய்யப்பட்டது.
- இது ஒரு தசாப்தத்தில் ஏற்பட்ட உகாண்டாவின் முதல் சூடான் எபோலா வைரஸ் பெருந் தொற்றாகும் என்பதோடு, இது ஒட்டு மொத்தமாக உகாண்டாவில் ஏற்பட்ட ஐந்தாவது பெருந்தொற்றாகும்.
- எபோலா வைரஸ் நோய் என்பது எபோலா வைரஸ் திரிபுகளுள் ஒன்றினால் ஏற்படும் தொற்று காரணமாக ஏற்படுகின்ற அரிதான மற்றும் கொடிய நோயாகும்.
- இந்த வைரஸ் ஆனது முதன்முதலில் 1976 ஆம் ஆண்டில் எபோலா நதிக்கு அருகில் கண்டறியப் பட்டது.
- உகாண்டாவில் ஏற்பட்டுள்ள இந்தப் தொற்றுப் பெருவெடிப்பானது, சூடான் எபோலா வைரசினால் ஏற்பட்டதாகும்.
- எபோலா வைரஸின் ஆறு வகைகளில் இதுவும் ஒன்றாகும் என்பதோடு, இதனைத் தடுப்பதற்காக வெற்றிகரமான தடுப்பூசி எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை.




## சீனாவின் மக்கள் தொகையில் வீழ்ச்சி

- 2022 ஆம் ஆண்டில் சீனாவில் 9.56 மில்லியன் மக்கள் பிறந்ததாகவும், 10.41 மில்லியன் மக்கள் இறந்துள்ளதாகவும் சீன அரசாங்கம் கூறியுள்ளது.
- 1960 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இருந்து சீனாவில் பிறப்புகளை விட இறப்புகள் அதிகமாக பதிவாகியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

- இங்கு பிறப்பு எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் பதிவான 10.6 மில்லியன் என்ற அளவிருந்து குறைந்துள்ளது என்பதோடு, இது தொடர்ந்து ஆறாவது ஆண்டாகவும் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மக்கள் தொகை 1.4118 பில்லியன் ஆக பதிவாகியுள்ள நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 850,000 அளவிற்குக் குறைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 7.52 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2022 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.
- 2035 ஆம் ஆண்டளவில், சீனாவில் 400 மில்லியன் மக்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிற நிலையில், இது அதன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.
- ஒப்பிட்டுப் பார்க்கையில் 2021 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் 1,000 பேருக்கு 11.06 பிறப்புகளும், ஐக்கிய இராச்சியத்தில் 10.08 பிறப்புகளும் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் அதே ஆண்டில் பதிவான பிறப்பு விகிதம் 16.42 ஆகும்.




## உலகிலேயே மிகக் கடுமையான புகைபிடித்தல் தடை சட்டங்கள்

- மெக்சிகோ அரசானது சமீபத்தில் உலகிலேயே மிகக் கடுமையான புகைபிடித்தல் தடை சட்டத்தினை விதித்துள்ளது.
- இது தங்கும் விடுதிகள், கடற்கரைகள் மற்றும் பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு முழுமையான தடையை இச்சட்டம் அமல்படுத்துகிறது.
- புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல், விளம்பரம் செய்தல் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியளித்தல் ஆகியவை மீது மொத்தமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.
- மின்னணு சிகரெட் மற்றும் குட்கா ஆகியவற்றின் விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவையும் இந்தப் புதியக் கட்டுப்பாடுகளுக்கு உட்படும்.
- இதனுடன், அயர்லாந்து, கிரீஸ், ஹங்கேரி மற்றும் மால்டா போன்ற நாடுகள் அடங்கிய மிகவும் கடுமையான சட்டங்களுடன் கூடிய, புகையிலை-இல்லாத சூழலைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் மெக்ஸிகோ இணைகிறது.




## ஐரோப்பிய பசுமை ஒப்பந்தம்

- ஐரோப்பிய ஆணையமானது, பசுமை ஒப்பந்தத் தொழில்துறைத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டமானது உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு மற்றும் அமெரிக்காவின் பணவீக்கக் குறைப்புச் சட்டம் (IRA) போன்ற பிற உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த சட்டப்பூர்வ உறுதிப்பாடுகளின் பிரதிபலிப்பாகும்.
- முதல் கட்டமாக நிகர-சுழிய உமிழ்வு தொழில்துறைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, தூய்மையான தொழில்நுட்ப உற்பத்தி மற்றும் தயாரிப்புச் செயல்முறைக்கான முதலீடு மற்றும் நிதியுதவி அதிகரிக்கப்பட உள்ளது.
- பசுமை ஒப்பந்தத் தொழில்துறை திட்டம் அறிமுகப்படுத்தல், ஐரோப்பிய சூரியசக்தி உற்பத்தியாளர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த தருணமாகும்.



## MAREX-2023 பயிற்சி

- இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள், ஒரு வார கால கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு CARAT/MAREX இலங்கைப் பயிற்சியானது, இத்தகைய ஐந்தாவது இரு தரப்புப் பயிற்சியாகும்.
- உத்திசார்ந்த முக்கியத்துவம் வாய்ந்தப் பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்து வரும் இராணுவச் சூழ்ச்சிகளுக்கு மத்தியில், பேரழிவுகளுக்கான நிவாரணத்திற்குத் தயார் படுத்துதல் மற்றும் சுதந்திரமான மற்றும் தடையற்ற இந்தோ-பசிபிக் பகுதியினை நிலவச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பயிற்சிக்கு, கடல்சார் ஒத்துழைப்பு தயார்நிலை மற்றும் பயிற்சி (CARAT)/ இலங்கை கடல்சார் பயிற்சி (MAREX) 2023 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியில் இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படை, ஜப்பான் கடல் சார் தற்காப்புப் படை மற்றும் மாலத்தீவு தேசியப் பாதுகாப்புப் படை ஆகியவை இதில் பங்கேற்க உள்ளன.




## தெற்காசியாவின் பலவீனமானப் பொருளாதார நாடு

- உலக வங்கியின் தரவுகளின் படி, தெற்காசியாவின் பலவீனமானப் பொருளாதாரம் கொண்ட நாடாக பாகிஸ்தான் விளங்குகிறது.
- நடப்பு ஆண்டில் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் 2 சதவீதமாக குறையும்.
- இது அதன் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாத மதிப்பீட்டில் இருந்து இரண்டு சதவீதப் புள்ளிகள் வீழ்ச்சியைக் காணும்.
- கடந்த ஆண்டு ஜூலை மாதம் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளம், அந்நாட்டின் நிச்சயமற்றப் பொருளாதார நிலைக்கு முக்கியக் காரணமாகக் கூறப்பட்டது.
- பாகிஸ்தானின் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 4.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற ஒரு அளவினை எட்டியுள்ள நிலையில், இது மூன்று வாரங்களுக்கான வெளிநாட்டுக் கட்டணங்களை செலுத்தக் கூட போதுமானதாக இல்லை.

- கோதுமை விலை 57 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ள நிலையில், கோதுமை மாவின் விலையும் 41 சதவீதம் அதிகரித்துள்ளது.
- பாகிஸ்தானில் 15 கிலோ மாவு பை ஆனது 2,050 ரூபாய்க்கு விற்கப் படுகிறது.




## உலக மக்கள் தொகை மதிப்பாய்வு

- அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு வாரியமான உலக மக்கள்தொகை கடிகார நிறுவனமானது சமீபத்தில் தனது "உலக மக்கள்தொகை மதிப்பாய்வு" அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நிலவரப்படி உலக மக்கள் தொகை 7.9 பில்லியனாக இருந்தது.
- இது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் 8 பில்லியனை எட்டும்.
- 2015 ஆம் ஆண்டில், உலக மக்கள் தொகை 7.2 பில்லியனாக இருந்தது.
- 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையினை கொண்ட நாடுகள் இந்தியாவும் சீனாவும் மட்டுமே ஆகும்.
- 1.42 பில்லியன் மக்கள் தொகையுடன் சீனா உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக விளங்குகிறது.
- இந்தியாவின் மக்கள் தொகை 1.41 பில்லியன் ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா சீனாவைப் பின்னுக்குத் தள்ளி, அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறும்.
- உலக நாடுகளின் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் ஆனது குறைந்து வருகிறது.
- 2080-2100 ஆகிய ஆண்டுகளுக்குள் இந்த அளவு சுழிய அளவினை எட்டும் ஆனால் 2100 ஆம் ஆண்டிற்குப் பிறகு வளர்ச்சி விகிதம் பிற்போக்கில் இருக்கும்.
- 2100 ஆம் ஆண்டில் வாக்கில் உலக நாடுகளின் மக்கள் தொகை 10.4 பில்லியனை எட்டும்.
- 500 மக்கள் தொகையுடன் உலகின் மிகக் குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடாக வாடிகன் நகரம் திகழ்கிறது.
- உலக மக்கள்தொகையானது, நிமிடத்திற்கு சுமார் 140 பேர் என்ற அளவில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

- வளர்ச்சி விகிதம் ஆனது 2020 ஆம் ஆண்டில் 1% க்கும் கீழே சரிந்தது.
- 1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக இவ்வாறு பதிவாகியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் உலகளவில் உள்ள மக்களின் ஆயுட்காலம் 72.8 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.
- இது 1990 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட ஒன்பது ஆண்டுகள் அதிகமாகும்.
- உலகளவில் உள்ள மக்களின் ஆயுட்காலமானது 2050 ஆம் ஆண்டில் 77.2 வருடங்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

Countries with more than 100 million people

| Country | Population | Country | Population |
|---|---|---|---|
| United States | 338,653,036 | Russia | 144,704,502 |
| Indonesia | 275,908,026 | Mexico | 127,724,673 |
| Pakistan | 236,882,454 | Japan | 123,801,638 |
| Nigeria | 219,741,895 | Ethiopia | 124,095,535 |
| Brazil | 215,538,160 | Philippines | 115,969,226 |
| Bangladesh | 171,594,827 | Egypt | 111,384,124 |

## ஃபர்ஸ்ட் மூவர்ஸ் கூட்டணி தலைமைத்துவக் கூட்டம்

- உலகப் பொருளாதார மன்றமானது, சமீபத்தில் ஃபர்ஸ்ட் மூவர்ஸ் கூட்டணி என்பதின் தலைமைத்துவக் கூட்டத்தை நடத்தியது.
- தூய எரிசக்தி தொழில்நுட்பங்களின் அவசியங்கள் குறித்து இக்கூட்டம் ஆலோசிக்கச் செய்கிறது.
- இக்கூட்டணியானது, 2021 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்களால் தொடங்கப் பட்டது.
- தூய எரிசக்தி தொழில்நுட்பங்களுக்குத் தேவையான வலுவான ஒரு சந்தையை உருவாக்குவதே இக்கூட்டணியின் நோக்கமாகும்.
- இந்தியா, ஜப்பான், நார்வே, இத்தாலி, சுவீடன், இங்கிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர், ஜெர்மனி, டென்மார்க் மற்றும் கனடா ஆகிய நாடுகள் இதில் இடம் பெற்றுள்ளன.
- இந்த நாடுகளைத் தவிர, 60 பன்னாட்டு நிறுவனங்களும் இந்தக் கூட்டணியின் ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளன.

## சைக்ளோன் - I பயிற்சி

- இந்தியா மற்றும் எகிப்திய நாட்டு இராணுவங்கள் இணைந்து, சைக்ளோன்-I என்ற தனது முதல் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளன.
- இரு நாடுகளின் சிறப்புப் படைகளை ஒரு பொதுவான தளத்திற்குக் கொண்டு வரும் இந்தப் பயிற்சியானது இவ்வகையிலான முதல் பயிற்சியாகும்.

- டெசர்ட் வாரியர் என்பது இந்த இரு நாடுகளின் விமானப்படைகளுக்கு இடையே மேற் கொள்ளப் படும் மற்றுமொருப் பயிற்சியாகும்.




## 'ஜனநாயகத்திற்கான கல்வி' என்ற தீர்மானம்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது (UNGA), அனைவருக்கும் கல்வி என்ற ஒரு உரிமையை உறுதிப்படுத்துகின்ற வகையிலான 'ஜனநாயகத்திற்கான கல்வி' என்ற தலைப்பிலான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தத் தீர்மானத்திற்கு இந்திய அரசு இணை ஆதரவு வழங்கியது.
- "அனைவருக்கும் கல்வி" என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிக்கிறது என்பதை இத்தீர்மானம் அங்கீகரிக்கிறது.
- ஜனநாயகத்திற்கான கல்வி என்ற இந்தத் தீர்மானத்தினை உறுப்பினர் நாடுகள் தங்களது கல்வித் தரநிலைகளுடன் ஒருங்கிணைப்பதற்கு வேண்டி இந்தத் தீர்மானம் ஊக்குவிக்கிறது.

## டாவோஸ் உச்சி மாநாடு 2023

- சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் வருடாந்திர உலகப் பொருளாதார மன்ற உச்சி மாநாட்டின் 53வது பதிப்பு நடைபெற்றது.
- இதன் கருப்பொருள் 'பிளவுபட்ட உலகில் ஒத்துழைப்பு' என்பதாகும்.
- இந்நிகழ்வில் தலைமைப் பொருளாதார நிபுணர் கண்ணோட்ட அறிக்கை தொடங்கப் பட்டது.
- காலநிலை தொடர்பான வர்த்தக அமைச்சர்களின் புதிய கூட்டணி தொடங்கப்பட்டது.
- இது காலநிலை, வர்த்தகம் மற்றும் நிலையான வளர்ச்சியில் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிக்க 50 நாடுகளை ஒன்றிணைத்தது.

- காலநிலை நெருக்கடிக்கான நிதியை உருவாக்க, புரவலர்கள் முறை மூலதனத்தைப் பயன்படுத்துவதற்காக, புவிப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பெருக்குவதற்கான ஒரு புதிய முயற்சி (GAEA) தொடங்கப்பட்டது.
- இது 45க்கும் மேற்பட்ட பெரியப் புரவலர்கள், பொது மற்றும் தனியார் துறைப் பங்காளர்களால் ஆதரிக்கப்படும் ஒரு புதிய முயற்சியாகும்.
- உலகளாவிய ஒத்துழைப்பு கிராமம் என பெயரிடப்பட்ட அதன் சொந்த மெட்டாவர்ஸ் தளத்தை வெளியிடுவதாக அறிவித்துள்ளது.
- தொற்றுநோய்க்கான தயார்நிலை மற்றும் கண்டுபிடிப்புகளுக்கானக் கூட்டணி (CEPI) தொற்றுநோய்க்கானப் பதில் நடவடிக்கைகளுக்கு என ஒரு புதிய 100 நாள் இலக்கை நிர்ணயித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு நார்வே மற்றும் இந்திய அரசாங்கங்கள், பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் உலகப் பொருளாதார மன்றம் ஆகியவற்றால் தடுப்பூசிகள் மற்றும் தொற்றுநோய்க்கு எதிரான பிற உயிரியல் எதிர் நடவடிக்கைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த இந்த CEPI தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டு இந்தியா - உலகப் பொருளாதார மன்ற ஒத்துழைப்பின் 36வது ஆண்டு ஆகும்.
- ‘இந்தியா@100 : 26 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தின் திறனை உணர்தல்’ எனும் ஒரு அறிக்கை, உச்சி மாநாட்டின் இணை நிகழ்வாக இந்தியாவால் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, நாட்டின் சுதந்திரத்தின் 100வது ஆண்டான 2047 ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 26 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும்.
- மகாராஷ்டிரா மாநில அரசு, நகர மாற்றத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் உத்திகளைப் பெற உலகப் பொருளாதார மன்றத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தெலுங்கானா அரசு உயிர் அறிவியல் மையம் மற்றும் சுகாதார மையத்தைப் பெறச் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



*மற்ற முயற்சிகள்*

- ஃபயர்ஆல்ட் முயற்சி - இது செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திக் காட்டுத்தீயை நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எண்ணெய் மற்றும் எரிவாயு முன்முயற்சியில் இணையத் தாங்குதிறன் - எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்களைப் பாதுகாப்பதற்கான இணைய தீர்வுகளைக் கண்டறிய இந்த முயற்சி செயல்படும்.

## உணவு மற்றும் வேளாண் அமைப்பின் துணைத் தலைமை




- அரசுகளுக்கிடையேயான ஒரு தொழில்நுட்ப பணிக்குழுவானது, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பில் உள்ள தொழில்நுட்பச் சிக்கல்களை மதிப்பாய்வு செய்து, முக்கிய முடிவுகளில் அந்த அமைப்பிற்குத் தேவையான ஆலோசனை வழங்குகிறது.
- இந்தக் குழுவின் 12வது அமர்வில் இந்தியா இந்த அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பினை ஏற்க உள்ளது.
- அரசுகளுக்கிடையேயான தொழில்நுட்பப் பணிக்குழுவின் கூட்டமானது, 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரோம் நகரில் நடைபெற உள்ள நிலையில், இதில் விலங்குகளின் மரபணு வளங்களைப் பற்றி விவாதிக்கப்பட உள்ளது.
- இந்த அமர்விற்கு அமெரிக்கா தலைமை தாங்க உள்ளது.
- இந்தியாவுடன் சேர்ந்து மற்ற சில நாடுகளும் துணைத் தலைமைப் பதவியை வகிக்க உள்ளன.
- அவை ஸ்பெயின், சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, டோங்கா மற்றும் பிரேசில் ஆகியனவாகும்.
- துணைத் தலைமை பதவியுடன் சேர்த்து, அறிக்கை வழங்கீட்டு நாடு பதவியையும் இந்தியா வகிக்க உள்ளது.
- அறிக்கை வழங்கீட்டு நாடு என்றால் அமைப்பு குறித்த அறிக்கையினை வெளியிடும் நாடாகும்.


# பொருளாதாரச் செய்திகள்

## ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக வசதியின் மூலம் மேற் கொள்ளப் பட்ட கொடுப்பனவுகளில் சாதனைப் பதிவு

- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக வசதியின் மூலம் (UPI) டிசம்பர் மாதத்தில் 7.82 பில்லியன் அளவிலான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளது.
- இதன் மதிப்பு 12.82 ட்ரில்லியன் ரூபாய் (174.6 பில்லியன் டாலர்) ஆகும்.
- இது நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் அளவில் 7.12 சதவீத அதிகரிப்பினையும் மற்றும் மதிப்பில் 7.73 சதவீத அதிகரிப்பினையும் குறிக்கிறது.
- இதில் ஆண்டிற்கு ஆண்டு உயர்வு என்ற அடிப்படையில், அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 71% மற்றும் 55% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.



## யூரோ பண மதிப்பின் ஏற்பு - குரோஷியா நாடு




- குரோஷியா யூரோ பண மதிப்பினை ஏற்றுக் கொண்டு ஷெங்கன் மண்டலத்தினுள் இணைகிறது.
- இந்த நாடானது அதிகாரப் பூர்வமாக ஜனவரி 01 ஆம் தேதியன்று யூரோ மண்டலத்தின் 20வது உறுப்பினராக மாறியது.
- அண்டை நாடான ஸ்லோவேனியா மற்றும் ஹங்கேரி ஆகியவற்றுடனான நில எல்லைக் கட்டுப்பாடுகளை அகற்றியதன் மூலம் ஷெங்கன் மண்டலத்தில் இந்த நாடு இணைவது சாத்தியமானது.
- 26 ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே கடவுச்சீட்டு இன்றி பயணம் மேற்கொள்வதனை அனுமதிக்கும் ஷெங்கன் மண்டலத்தில் குரோஷியா இணைந்துள்ளது.

## காஃபி ஏற்றுமதி

- காஃபி வாரியத்தின் கூற்றுப்படி, இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் காஃபி ஏற்றுமதி, 2022 ஆம் ஆண்டில் 1.66% உயர்ந்து 4 லட்சம் டன்னாக பதிவாகியுள்ளது.
- ஆசியாவின் மூன்றாவது பெரிய காஃபி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக திகழும் நாடு இந்தியா ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில் இதன் ஏற்றுமதி 3.93 லட்சம் டன்னாக பதிவாகியிருந்தது.
- உடனடி காஃபி வகை தவிர, ரோபஸ்டா மற்றும் அரேபிகா போன்ற வகைகளையும் இந்தியா அதிகளவில் ஏற்றுமதி செய்கிறது.

- ❖ இத்தாலி, ஜெர்மனி மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இந்தியக் காப்பிக் கொட்டை வகைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளாகும்.




## இந்திய ரிசர்வ் வங்கியின் அமைப்புசார் இடர் ஆய்வு

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் அமைப்புசார் இடர் ஆய்வின் 23வது சுற்று ஆனது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் தனது அறிக்கையை வெளியிட்டது.
- ❖ உலகளாவியத் தாக்கப் பரவல், நிதிச் சந்தை மற்றும் பொதுவான அபாயங்கள் அதிகரித்துள்ளன எனவும், அதே சமயம் பேரியல் பொருளாதாரம் சார்ந்த இடர்கள் மிதமானதாக உள்ளது எனவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ❖ இந்த ஆய்வின்படி, கடந்த ஆறு மாதங்களில் உலக நிதி அமைப்பின் நிலைத்தன்மை மீதான நம்பிக்கையானது ஓரளவு குறைந்துள்ளது.
- ❖ இதற்கு நேர்மாறாக, ஆய்வில் பங்கேற்ற 93.6 சதவீத பங்கேற்பாளர்களின் கூற்றுப்படி இந்திய நிதி அமைப்பு மீதான நம்பிக்கை மேலும் மேம்பட்டுள்ளது.

## இந்தியாவில் வங்கி முறையின் போக்கு மற்றும் முன்னேற்றம் 2021-22

- ❖ இந்த அறிக்கையானது 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி சட்டப் பூர்வமாக இணங்கும் வகையில் உள்ளது.
- ❖ இது வங்கித் துறைகளின் (கூட்டுறவு வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் உட்பட) செயல்திறன் குறித்த தகவல்களை வழங்குகிறது.
- ❖ இந்தியாவில் உள்ள பட்டியலிடப்பட்ட வணிகம் சார்ந்த வங்கிகளின் ஒருங்கிணைந்த நிதிநிலைகள் அறிக்கைகளில் ஏழாண்டு இடைவெளிக்குப் பிறகு 2021-22 ஆம் ஆண்டில் இரட்டை இலக்க அதிகரிப்பானது பதிவாகியுள்ளன.
- ❖ 2017-18 ஆம் ஆண்டில் உச்சத்தில் இருந்த பட்டியலிடப்பட்ட வணிகம் சார்ந்த வங்கிகளின் மொத்த வாராக் கடன்களின் (GNPA) விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதியில் 5.8% ஆகக் குறைந்து வருகிறது.

## உலகின் 3வது பெரிய வாகனச் சந்தை

- இந்திய நாடானது ஜப்பான் நாட்டினைப் பின்னுக்குத் தள்ளி உலக அளவில் 3வது பெரிய வாகனச் சந்தையாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவில் புதிய வாகனங்களின் விற்பனையானது குறைந்தபட்சம் 4.25 மில்லியன் அலகுகளாக பதிவாகியுள்ளது.
- ஜப்பானில் 4.2 மில்லியன் புதிய வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில், 26.27 மில்லியன் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதுடன், உலக வாகனச் சந்தையில் சீனா தொடர்ந்து முன்னிலை வகித்தது.
- 15.4 மில்லியன் வாகன விற்பனையுடன் அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது.


INDIA BECOMES THE WORLD'S THIRD-LARGEST AUTO MARKET

| Top 5 | Country/Territory | CY2022 | % growth |
|---|---|---|---|
| 1 | Mainland China | 24.8 | 3.60% |
| 2 | United States | 13.8 | -8.30% |
| 3 | India | 4.4 | 23.40% |
| 4 | Japan | 4.2 | -4.40% |
| 5 | Germany | 2.8 | -2.90% |

*Above table is based on Light Vehicle Sales (0-6 ton) in million units*


## நிதி நிலைத்தன்மை அறிக்கை

- இந்திய ரிசர்வ் வங்கி 26வது நிதி நிலைத்தன்மை அறிக்கையினை வெளியிட்டது.
- 2022-23 நிதியாண்டின் முதல் பாதியில், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் வரிக்குப் பிந்தைய இலாபம் ஆனது 40.7% வளர்ச்சியைக் கண்டுள்ளது.



- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன்களின் விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5.0% ஆக படிப்படியாகக் குறைந்துள்ளது.
- மேலும், மொத்தச் சொத்துக்களில் நிகர வாராக் கடன்களின் (NNPA) அளவானது 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 1.3% ஆகக் குறைந்துள்ளன.

## தேசிய வருமானத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகள்





- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) ஆனது 2022-23 ஆம் நிதியாண்டிற்கான தேசிய வருமானத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளை வெளியிட்டது.
- 2021-22 ஆம் ஆண்டில் 8.7 சதவீதமாக பதிவான இந்தியாவின் நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2022-23 ஆம் ஆண்டில் 7 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 19.7 சதவீதமாக பதிவான இந்தியாவின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2022-23 ஆம் ஆண்டில் 15.4 சதவீதமாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் பதிவான நிலையான (2011-12) அல்லது மாறா விலைமதிப்பு அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 157.60 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான தற்காலிக மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு 147.36 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.

## அந்நியச் செலாவணி கையிருப்பு

- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 2022 ஆம் ஆண்டில் 70.1 பில்லியன் டாலர்கள் குறைந்துள்ளது.
- டிசம்பர் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 562.9 பில்லியன் டாலராக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு இணையான ரூபாயின் மதிப்பு 10.2% வரை சரிந்தது.

- 2022-ஆம் ஆண்டில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்நாட்டு பங்குச் சந்தையில் இருந்து ரூ.1.2 லட்சம் கோடியைத் திரும்பப் பெற்றனர்.
- வெளிநாட்டு நிறுவனம் சார்ந்த முதலீட்டாளர்கள், தங்கள் பங்கு சார்ந்த முதலீட்டை ரூபாய் மதிப்பில் விற்பனை செய்து, அதை டாலராக மாற்றிப் பணத்தைத் திரும்பப் பெறுகிறார்கள்.
- அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது, 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இது வரை இல்லாத அளவுக்கு 642.5 பில்லியனை எட்டியது.




## அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகள்




- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2023 ஆம் ஆண்டிற்கான அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகளின் பட்டியலை வெளியிட்டது.
- பாரத் ஸ்டேட் வங்கி, ICICI வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவை இன்னும் அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் ICICI ஆகிய வங்கிகள் முறையே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகளாக இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்டன.

## உட்கர்ஷ் 2.0

- இந்திய ரிசர்வ் வங்கியானது, ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை வழிமுறைகளை வலுப்படுத்துவதற்காக வேண்டி உத்கர்ஷ் 2.0 எனப்படும் அதன் இடைக்கால உத்திசார் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது 2023 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு வழிமுறைகளை வழங்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டப்பூர்வ மற்றும் பிற செயல்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஆறு கொள்கைசார் அறிக்கைகள் இதில் அடங்கும்.




## இந்தியாவில் புத்தொழில் நிதி வழங்கீடு


- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் புத்தொழில் நிதி வழங்கீட்டின் தரவரிசையில் 10.8 பில்லியன் டாலர்கள் நிதி வழங்கீட்டுடன் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 3.9 பில்லியன் டாலர்களுடன் மும்பை நகரமும், 2.6 பில்லியன் டாலர்களுடன் குருகிராம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.
- டெல்லி மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் அமைந்துள்ள புத்தொழில் நிறுவனங்கள் தலா 1.2 பில்லியன் டாலர் நிதியுதவியை வழங்கியுள்ள நிலையில், அதைத் தொடர்ந்து 1 பில்லியன் டாலர் நிதி உதவியுடன் புனே இடம் பெற்று உள்ளது.
- இந்தத் தரவுகளானது Tracxn எனப்படும் முன்னணி உலகளாவியச் சந்தை நுண்ணறிவு தளத்தினால் வழங்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் 46 யூனிகார்ன் நிறுவனங்களும் 2022 ஆம் ஆண்டில் 22 யூனிகார்ன் நிறுவனங்கள் பதிவாகியுள்ளன.

## முதல் ஐந்து சமபங்கு மூலதனச் சந்தைகள்

| Fishing in troubled seas | Fund raising landscape remained challenging last year | |
|---|---|---|
| - | **Funds raised ($ bn)** | **YoY Change (%)** |
| China | 164.6 | -38 |
| United States | 73.4 | -85 |
| Germany | 20.9 | -28 |
| Canada | 19.4 | -56 |
| India | 16.4 | -43 |
| United Kingdom | 13.9 | -78 |
| Australia | 11.3 | -63 |

- சம பங்கு நிதி திரட்டலின் அடிப்படையில், உலக அளவில் முதல் ஐந்து சந்தைகளில் இந்திய நாடும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் பங்குசார் மூலதனச் சந்தை (ECM) நடவடிக்கை மூலம் 16.4 பில்லியன் டாலர் தொகை பரிவர்த்தனை செய்யப்பட்டது.
- பொதுவாக, ECM செயல்பாட்டின் அடிப்படையில் முதல் 10 இடங்களில் இந்தியா அவ்வப்போது இடம் பெற்று வந்தது.

## பணவீக்கத்தில் வீழ்ச்சி





- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், சில்லறைப் பணவீக்கம் ஓராண்டில் இல்லாத அளவுக்கு 5.72 சதவீதமாகக் குறைந்தது.
- இது இரண்டாவது மாதத்திற்கான இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) தளர்வு வரம்பான 2 சதவிகிதம் முதல் 6 சதவிகிதம் வரை என்ற வரம்பிற்குள்ளேயே இருந்தது.
- நுகர்வோர் விலைக் குறியீடு அடிப்படையிலான பணவீக்க விகிதம் டிசம்பர் மாதத்தில் 5.72 சதவீதமாகக் குறைந்துள்ளது.

- இது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 5.88 சதவீதமாகவும், 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 6.77 சதவீதமாகவும் இருந்தது.
- தொழிற்சாலை உற்பத்தியானது, அக்டோபர் மாதத்தில் 4.2% ஆக குறைந்ததையடுத்து, அடுத்த ஐந்து மாதங்களில் இது அதிகபட்சமாக 7.1% என்ற அளவிற்கு வேகமாக அதிகரித்தது.


## மாநிலங்களின் மொத்த நிதிப் பற்றாக்குறை

- 2020-21 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதமாக இருந்த மாநிலங்களின் மொத்த நிதிப் பற்றாக்குறையானது, 2022-23 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாகக் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.1 சதவீதமாக இருந்த மாநிலங்களின் கடன் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 29.5 சதவீதமாக குறையும்.
- 2018 ஆம் ஆண்டு நிதிப் பொறுப்பு மற்றும் நிதிநிலை அறிக்கைச் சட்டத்தின் மறு ஆய்வுக் குழு பரிந்துரைத்த 20 சதவீதத்தை விட இது இன்னும் அதிகமாக உள்ளது.




## சீனாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை

- சீனாவுடனான இந்தியாவின் இருதரப்பு வர்த்தகம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 135.98 பில்லியன் டாலர்களை எட்டியது.
- இந்தியாவிலிருந்து சீனாவிற்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி மதிப்பானது 28.1 பில்லியன் டாலரிலிருந்து 17.48 பில்லியன் டாலராக குறைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 69.4 பில்லியன் டாலராக இருந்த வர்த்தகப் பற்றாக்குறையானது 45% அதிகரித்து 101.02 பில்லியன் டாலரை எட்டியது.
- 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில், இந்தியா-சீனா இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 13% என்ற சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதத்துடன் 75% வளர்ச்சி அடைந்தது.


Trade imbalance

Chinese customs data on Friday showed bilateral trade had climbed 8.4% last year to $135.98 billion

- India's imports accounted for $118.5 billion of 2-way trade, up from $97.5 billion the previous year
- India's exports to China fell from $28.1 billion to $17.48 billion
- Trade deficit widened to $101.02 billion, up by 45%, from the $69.4 billion seen in 2021

## 2047 ஆம் ஆண்டில் 26 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரம்

- 2047 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் தனிநபர் வருமானம் ஆனது, 15,000 அமெரிக்க டாலர்களை எட்ட உள்ளதன் மூலம் 26 டிரில்லியன் அமெரிக்க டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு கொண்ட பொருளாதாரமாக மாறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- எர்ன்ஸ்ட் & யங்ஸ் என்ற உலக ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனத்தின் அறிக்கையில் இத்தகவலானது தெரிவிக்கப்பட்டுள்ளது.




- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆகியவை FY23 ஆம் ஆண்டில் 6.8% வளர்ச்சி இருக்கும் என்றும், அதே சமயம் உலக வங்கியானது 6.9% வளர்ச்சி இருக்கும் என்றும் கணித்துள்ளது.
- இலண்டனில் அமைந்துள்ள ஐஎச்எஸ் மார்கிட் என்ற நிறுவனமானது, 2030 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.4 டிரில்லியன் டாலர் என்ற மதிப்பினை எட்டும் என்று கணித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டினைப் பின்னுக்கு தள்ளி ஆசியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும்.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவானது ஜெர்மனி மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் மதிப்பினை விஞ்சி உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

- தற்போது, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியா ஆறாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது.

## T+1 தீர்வு சுழற்சி




- இந்தியா, இதற்கு முந்தைய T+2 சுழற்சி முறையில் இருந்து பங்குகளுக்கானச் சந்தை அளவிலான பரிவர்த்தனை+1 (T+1) என்ற தீர்வு முறைக்கு மாறியது.
- இந்தப் புதிய முறையானது முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் சந்தைக் கட்டுப்பாட்டு அமைப்பான இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- சந்தை மூலதனமாக்கல் மூலமாக சிறிய நிறுவனங்களில் தொடங்கி பெரிய நிறுவனங்கள் வரை இது கட்டம் கட்டமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- T+2 தீர்வு சுழற்சியைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகியவற்றிற்கு முன்னதாக, சீனாவிற்கு அடுத்தபடியாக இந்த முறைக்கு மாறிய இரண்டாவது பெரிய சந்தையாக இந்தியா மாறியுள்ளது.
- ஒரு வர்த்தகம் என்பது தனித்தனி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தகம், கணக்கு நிறைவு மற்றும் தீர்வு ஆகிய மூன்று முக்கியச் செயல்பாடுகளை உள்ளடக்கியது.
- அதாவது ஒரு குறிப்பிட்ட நாளில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் என்பது இதில் வர்த்தகம் ‘T’ என்ற எழுத்தினைக் கொண்டு குறிப்பிடப்படுகிறது.
- தீர்வு கிடைக்கப் பெற்ற நாளினைத் தொடர்ந்து வரும் நாளிற்கு மறுநாள் கணக்குத் தீர்வு நடைபெறுவதால், முந்தைய வழிமுறை 'T+2' என வரையறுக்கப்பட்டது.
- இனிமேல், இது அடுத்த நாளே தீர்வு செய்யப்படுவதால் இம்முறை T+1 என்றழைக்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிரம்மோஸ் ஏவுகணை - 400 கி.மீ. தொலைவு வரம்பு

- இந்திய விமானப் படையானது, பிரம்மோஸ் ஏவுகணையின் தொலைவு வரம்பு நீட்டிக்கப் பட்ட ஏவுகணை வடிவத்தினை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- இது Su-30 MKI போர் விமானத்தில் இருந்து ஒரு கப்பலினை இலக்காகக் கொண்டு ஏவப் பட்டது.
- பிரம்மோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட வரம்பானது கடலில் உள்ள 400 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டதாக நம்பப்படுகிறது.
- பிரம்மோஸ் மீயொலி சீர்வேக ஏவுகணையானது இரண்டு-நிலை திட உந்துசக்தி இயந்திரங்களைக் கொண்டுள்ளதோடு, அதன் முதல் கட்ட இயந்திரமானது அந்த ஏவுகணையினை மீயொலி வேகத்திற்கு கொண்டு செல்ல உதவுகிறது.
- இதன் இரண்டாம் நிலையானது, திரவ நிலை ராம்ஜெட் இயந்திரம் ஆகும்.
- இது சீர்வேக இயக்க நிலையில் 3 மாக் (ஒலியின் வேகத்தை விட 3 மடங்கு) வேகத்தில் இயங்குகிறது.




## கன்பூசியஸ் ஷிஃபான்

- 119 மில்லியன் ஆண்டுகள் பழமையான அலகு கொண்ட ஒரு பறவையின் புதைபடிவ எச்சங்கள் சமீபத்தில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டன.
- இது இன்றைய சீனாவில், சுமார் 119 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பான ஆரம்பகால கிரெட்டேசியஸ் காலத்தில் வாழ்ந்தததாக கருதப் படுகிறது.
- இது காகத்தின் அளவுள்ள அலகு கொண்ட பறவை இனங்களின் குழுவான கன்பூசியசோர்னிஸ் இனத்தைச் சேர்ந்த கன்பூசியசோர்னிதிடே குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.
- இது கிழக்கு ஆசியாவின் ஜெஹோல் பயோட்டாவில் காணப்படும் ஆரம்பகால கிரெட்டேசியஸ் பைகோஸ்டிலியன் பறவை இனங்களின் குழுவாகும்.
- இந்தக் குழுவானது முதன்முதலில் அறியப்பட்ட பற்களற்ற, அலகுகள் கொண்ட பறவைகளைக் குறிக்கிறது.




## கர்ரார்னாவுன் புஷ் வகை தக்காளி

- புஷ் வகை தக்காளியின் புதிய இனம் ஒன்று ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் கண்டு பிடிக்கப் பட்டது.
- இது தற்போது உலகில் ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது.
- சோலனம் என்ற தாவரப் பேரினத்தினைச் சேர்ந்த சுமார் 1,400 ஏற்றுக் கொள்ளப்பட்ட இனங்கள் உலகம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன.
- இந்த தாவரப் பேரினத்தினைச் சேர்ந்த இனங்கள் அண்டார்டிகாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் பரவிக் காணப்படுகின்றன.
- இது சோலனேசி குடும்பத்தில் உள்ள அதிக இனங்கள் கொண்டுள்ள பேரினமாகும்.
- இது ஆஞ்சியோஸ்பெர்ம்களில் (பூக்கும் தாவரங்கள்) மிகப்பெரியதாகும்.
- உயர் பொருளாதார மதிப்பைக் கொண்ட 3 உணவுப் பயிர்கள் இந்த இனத்தில் அடங்கும்.
- அவை உருளைக்கிழங்கு, தக்காளி மற்றும் கத்திரிக்காய் (பிரிஞ்சால்) ஆகியனவாகும்.
- சோலனத்தைச் சேர்ந்த பெரும்பாலான இனங்கள் அமேசானிய வெப்பமண்டல தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன.
- இருப்பினும், அவை அதிகம் காணப்படும் பகுதிகள் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களிலும் காணப் படுகின்றன.



## 'GNB1 மூளை நலிவு' நோய்

- இந்தியா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் தற்போது GNB1 மூளை நலிவு நோய் என்ற அரிய வகை மரபணு சார்ந்த நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்கான மருந்தினை உருவாக்க முயற்சித்து வருகின்றனர்.
- GNB1 மூளை நலிவு நோய் என்பது GNB1 மரபணுவில் ஏற்படும் பிறழ்வுகளால் ஏற்படும் ஒரு அரிய வகை மரபணு சார்ந்த மூளை நோயாகும்.
- உலகளவில் 100க்கும் குறைவான GNB1 மூளை நலிவு நோய் பாதிப்புகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.





## 54 ஸ்டார்லிங்க் v2.0 செயற்கைக்கோள்கள்

- முதல் 54 v2.0 அல்லது Gen2 ஸ்டார்லிங்க் செயற்கைக் கோள்கள் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 என்ற ஏவுகலம் மூலம் புவித் தாழ்மட்ட சுற்றுப்பாதையில் செலுத்தப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, 60 ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன ஏவுப் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது, தற்போது சுற்றுப்பாதையில் 3,604 செயல்பாட்டு ஸ்டார் லிங்க் செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.
- வருங்காலத்தில் அனுப்பப்பட உள்ள மொத்த செயற்கைக் கோள்களின் எண்ணிக்கை 12,000 ஆக உள்ள நிலையில் இது 42,000 ஆக அதிகரிக்கப்படும்.

## வெப்பமிகு நட்சத்திரங்கள் மற்றும் வெண் குறுமீன்கள் கண்டுபிடிப்பு

- இந்திய வானியற்பியல் கழகத்தின் (IIA) வானியலாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள், வெப்பமிகு நட்சத்திரங்கள் மற்றும் வெண் குறுமீன்கள் ஆகியவை எதிர்பார்த்ததை விட குறைவான அளவிலேயே புற ஊதாக் கதிர்வீச்சை வெளியிடுவதாகக் கண்டறிந்து உள்ளனர்.


- நமது அண்டத்தில் உள்ள மிகப் பெரிய கோள வடிவ விண்மீன் திரள் அமைப்பான ஒமேகா சென்டாரியைப் ஆய்வு செய்யும் போது இது கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த நட்சத்திரங்களால் வெளிப்படும் குறைவான புற ஊதா கதிர்வீச்சுக்கு ஹீலியத்தின் விரிவாக்கமும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று இவர்கள் கூறுகின்றனர்.
- ஆஸ்ட்ரோசாட் ஆய்வகத்தில் உள்ள புற ஊதா வரைபடமிடல் தொலைநோக்கியின் மூலம் பெறப்பட்ட படங்களைப் பயன்படுத்தி இந்த விண்மீன் திரளில் உள்ள விசித்திரமான வெப்பமிகு நட்சத்திரங்களை இந்த ஆராய்ச்சிக் குழு கண்டறிந்தது.
- 2015 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிற ஆஸ்ட்ரோசாட் இந்தியாவின் முதல் பிரத்தியேக விண்வெளி ஆய்வகம் ஆகும்.




## ஜெல்போட்ஸ்

- அமெரிக்காவின் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஜெல்போட்ஸ் என்ற மென்ரக ரோபோவினை (எந்திரத்தினை) உருவாக்கியுள்ளனர்.
- ஜெலட்டின் கொண்டு முப்பரிமாண அச்சிடல் முறையின் மூலம் இந்த ஜெல்போட்கள் உருவாக்கப் படுகின்றன.
- அவற்றின் வடிவம், அளவுருக்கள் மற்றும் ஜெல் வடிவமைப்பு ஆகியவை வடிவமைக்கப் பட்டுள்ள முறையின் காரணமாக எந்தவொரு கூடுதல் ஆற்றல் மூலங்களின் தேவை இல்லாமல் இவை இயங்கும் திறன் கொண்டவையாகும்.
- வெப்பநிலைக்கு ஏற்ப இந்த ஜெல்கள் (கூழ்மம்) விரிவடைவது அல்லது சுருங்குவதே இதற்குக் காரணமாகும்.
- திறன்மிகுக் கட்டமைப்புகளை உருவாக்க அவற்றைப் பயன்படுத்த இயலும்.
- மனித உடலின் வழியாக உடல்பரப்புகளில் வழியே உட்சென்று, இலக்கு நிர்ணயிக்கப் பட்ட இடங்களுக்கு மருந்துகளைக் கொண்டு செல்வதற்கும் இவை பயன்படுத்தப் படலாம்.
- அவை கடல் சார் எந்திரங்களாக, கடலின் மேற்பரப்பைக் கண்காணிக்கவும் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படலாம்.

- ஜெல்போட்கள் மனித உயிர் குறிப்பான்கள் மற்றும் உயிர்வேதியியல் ஆகியவற்றில் ஏற்படும் மாறுபாடுகளுக்கு ஏற்றவாறு ஊர்ந்து செல்லும் வகையில் பயிற்சிக்கப் படக் கூடியவையாகும்.



## ஹைட்ரஜன் எரிபொருளினால் இயங்கும் முதலாவது மித அதிவேக இரயில்


- நகர்ப்புற இரயில்வே இயக்கத்திற்காக ஆசியாவில் முதல் முறையாக ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில்களை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த ஹைட்ரஜன் இரயில் ஆனது மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது.
- இது எரிபொருள் நிரப்பப்படாமல் 600 கி.மீ. தொலைவு வரை இயங்கக் கூடியது.
- இந்த இரயிலில், ஆக்ஸிஜனுடன் ஹைட்ரஜனை இணைத்து ஆற்றலை உருவாக்கி, நீர் மற்றும் நீராவி ஆகியவற்றை மட்டுமே வெளியேற்றுகின்ற எரிபொருள் செல்கள் நிறுவப் பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில்களை அறிமுகப்படுத்திய முதல் நாடு ஜெர்மனியாகும்.




## லும்பி-ப்ரோவாக்ச்சின்ட் தடுப்பூசி

- புனேவில் உள்ள கால்நடை சார்ந்த உயிரியல் பொருட்கள் தயாரிப்புகள் நிறுவனம் (IVBP) ஆனது "லும்பி-ப்ரோவாக்" தடுப்பூசியின் வணிகரீதியான உற்பத்திக்காக என்று "பிரத்தியேகம் சாரா உரிமைகளை" பெற்றுள்ளது.


- லும்பி-ப்ரோவாக் தடுப்பூசியானது, விலங்குகளில் பயன்படுத்துவதற்கு என்று மிகவும் பாதுகாப்பானதோடு தோல் தடிப்பு நோய் வைரசுடன் தொடர்புடைய ஆன்டிபாடிகள் மற்றும் செல் வழி நோய் எதிர்ப்புச் சக்தி ஆகியவற்றினைத் தூண்டுகிறது.
- தோல் தடிப்பு நோய்க்கு எதிரான எதிர்ப்புச் சக்தியினை விலங்குகளுக்குச் செயற்கை முறையில் வழங்குவதற்காக (சுமார் ஒரு வருடத்திற்குப் பாதுகாப்பினை வழங்கும்) இந்தத் தடுப்பூசியானது பயன்படுத்தப் படுகிறது.
- தோல் தடிப்பு நோய் (LSD) என்பது கால்நடைகள் மற்றும் எருமைகளில் பரவும் வைரஸ் தொற்று நோயாகும் என்பதோடு, இது ஒப்பீட்டளவில் குறைந்த அளவு உயிரிழப்பினை ஏற்படுத்துகிறது.
- தோல் தடிப்பு நோய் வைரஸ் என்பது பாக்ஸ்விரிடே குடும்பத்தில் உள்ள கேப்ரிபோக்ஸ் வைரஸ் பேரினத்தைச் சேர்ந்த ஒரு வைரஸ் ஆகும்.
- கொசுக்கள், உண்ணிகள் மற்றும் சில வகையான ஈக்கள் போன்ற இரத்தத்தை உண்ணும் பூச்சிகளால் இது பரவுகிறது.
- இது மனிதர்களைப் பாதிக்காது.




## மூளையை உண்ணும் அமீபா நோய்


- தென் கொரிய நாடானது, நாட்டில் நெக்லேரியா ஃபவ்லேரி அல்லது "மூளை உண்ணும் அமீபாவின்" முதல் நோய்த் தொற்று பதிவானதை உறுதி செய்துள்ளது.
- நெக்லேரியா என்பது ஓர் அமீபா மற்றும் ஒரு செல் உயிரினம் என்பதோடு, இது இந்த வகை இனங்களில் காணப்படும் இத்தகைய ஒரே வகையாகும்.
- இது முதன்முதலில் 1965 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இது பொதுவாக வெந்நீர் ஊற்றுகள், ஆறுகள் மற்றும் ஏரிகள் போன்ற சூடான நன்னீர் வாழிடங்களில் காணப்படுகிறது.
- அமீபா மூக்கு வழியாக மனித உடலில் நுழைந்து பின்னர் மூளை வரை பரவுகிறது.

- நெக்லேரியா ஃபவ்லேரி மூளைக்குச் சென்றவுடன், அது மூளை திசுக்களை அழித்து, முதன்மை அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் (PAM) எனப்படும் ஆபத்தான தொற்று நோயை ஏற்படுத்துகிறது.




## ஒத இழுவிசை மூலமான நட்சத்திர சீர்குலைவு நிகழ்வு


- நாசா நிறுவனத்தினால் இயக்கப்படும் தொலைநோக்கிகளானது, சமீபத்தில் ஒரு பெரிய கருந்துளை ஒரு நட்சத்திரத்தை உள்வாங்குவதைப் பதிவு செய்தன.
- ஒரு கருந்துளை ஒரு நட்சத்திரத்தை உள்வாங்கும் இந்த சம்பவம் ஆனது அண்மையில் நிகழ்ந்த ஐந்தாவது நிகழ்வாகும்.
- இது பூமியிலிருந்து 250 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள, மற்றொரு அண்டத்தின் மையப் பகுதியில் நிகழ்ந்தது.
- ஒரு கருந்துளையால் ஒரு நட்சத்திரம் அழிக்கப்படும் வானியல் நிகழ்வு ஆனது முறையாக ஒத இழுவிசை மூலமான நட்சத்திரச் சீர்குலைவு நிகழ்வு (TDE) என்று அழைக்கப் படுகிறது.
- ஒத இழு விசை என்பது இரண்டு புள்ளிகளுக்கு இடையே உள்ள ஈர்ப்பு வலிமையில் உள்ள வேறுபாடாகும்.



- ஒரு அமைப்பின் மீது செலுத்தப்படும் ஒத இழுவிசையானது, அதை ஒன்றாக இணைத்திருக்கும் மூலக்கூறுகளுக்கிடையிலான விசையை விட அதிகமாக இருந்தால், அந்த அமைப்பு சீர்குலைந்து விடும்.
- இந்நிகழ்வு அதிகாரப்பூர்வமாக AT2021ehb என அழைக்கப்படுகிறது.
- இது நமது சூரியனை விட சுமார் 10 மில்லியன் மடங்கு நிறை கொண்ட மத்திய கருந்துளை கொண்ட ஒரு அண்டத்தில் நிகழ்ந்தது.

## வால் நட்சத்திரம் C/2022 E3 (ZTF)

- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வால் நட்சத்திரம் ஆனது பூமியையும் சூரியனையும் கடந்து செல்லும் போது வெற்றுக் கண்களுக்குப் புலப்படும் என கூறப்பட்டுள்ளது.
- இவ்வாறு இந்த வால் நட்சத்திரம் வெற்றுக் கண்களுக்குப் புலப்படுவது 50,000 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.
- நமது சூரியக் குடும்பத்தின் பனி நிறைந்தப் பகுதிகளைக் கடந்தப் பிறகு அது சூரியனுக்கு மிக அருகில் வந்து பூமிக்கு மிக அருகில் கடந்து செல்லும்.
- இந்த வால் நட்சத்திரம் ஆனது ஒரு கிலோமீட்டர் விட்டம் கொண்டதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த வால் நட்சத்திரமானது, தனது வாழ்நாளின் பெரும்பகுதியை "சூரியனிலிருந்து பூமி உள்ள தொலைவினை விட குறைந்தது 2,500 மடங்கு அதிகமான தொலைவினில் கழிக்கிறது.
- கடைசியாக இந்த வால் நட்சத்திரம் பூமியைக் கடந்த நிகழ்வானது, நியாண்டர் தால்கள் பூமியில் சுற்றித் திரிந்த பழைய கற்காலத்தின் போது நிகழ்ந்தது.
- இந்த வால் நட்சத்திரமானது அடுத்து சூரியக் குடும்பத்தினுள் நுழையும் நிகழ்வானது இன்னும் 50,000 ஆண்டுகளில் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பூமியைக் கடந்துச் சென்ற, வெறும் வெற்றுக் கண்களுக்குப் புலப்படும் வகையிலான NEOWISE எனப்படும் ஒரு முந்தைய வால் நட்சத்திரத்தினை விட சிறியதாக இருக்கும்.
- முன்னதாக 1997 ஆம் ஆண்டில், பேரழிவு விளைவிக்கும் திறன்கொண்ட அளவில் சுமார் 60 கிலோமீட்டர் விட்டம் கொண்ட ஹேல்-பாப் வால் நட்சத்திரமானது கடந்துச் சென்றது.



## அண்டங்களின் இணைவு

- பூமியில் இருந்து சுமார் 500 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள இரண்டு அண்டங்களின் செயல்பாடுகளை வானியலாளர்கள் ஆய்வு செய்தனர்.
- இணைவின் விளைவாக ஒன்றிணையும் அண்டத்தின் மையத்திற்கு அருகில் சுழல் வடிவில் இரண்டு கருந்துளைகளின் அளவும் வளர்ந்து கொண்டிருந்தன.
- UGC 4211 எனப்படும் அவற்றின் புரவல அண்டங்கள் மோதிய போது அவை ஒன்றுக்கொன்று எதிர்கொண்டன.
- அவற்றுள் ஒன்று நமது சூரியனின் நிறையை விட 200 மில்லியன் மடங்கு கொண்டது என்ற நிலையில் மற்றொன்று நமது சூரியனின் நிறையை விட 125 மில்லியன் மடங்கு கொண்டதாகும்.
- அறிவியலாளர்கள் இதுவரையில் கண்டிராத வகையில், சுமார் 750 ஒளியாண்டுகள் இடைவெளியில் இந்தக் கருந்துளைகள் ஒன்றாக அமைந்துள்ளன.



## பிருத்வி-II ஏவுகணை

- இந்திய நாடானது பிரித்வி-II எனப்படும் தனது உத்திசார் உந்துவிசை ஏவுகணையின் சோதனையினை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது கண்டம் விட்டு கண்டம் பாயக் கூடிய அணுசக்தி திறன் கொண்ட கொண்ட குறுகிய தூர வரம்புடைய உந்துவிசை ஏவுகணையாகும்.
- இது ஒற்றை நிலை கொண்ட திரவ எரிபொருளில் இயங்கும் ஏவுகணையாகும்.
- பிரித்வி-II ஏவுகணையானது சுமார் 350 கிலோமீட்டர் தூரம் வரை பாய்ந்துத் தாக்கும் திறன் கொண்டது.
- இது சுமார் 250 கிலோமீட்டர் முதல் 350 கிலோமீட்டர் தூரம் வரை பாயக்கூடிய மற்றும் ஒரு டன் எடையைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (DRDO) அதன் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் (IGMDP) கீழ் உருவாக்கப் பட்டது.




## பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆளில்லா வான்வழி வாகனம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) ஆனது வரம்பற்றப் பல்வேறு சுழலிகளால் இயங்கக் கூடிய ஒரு ஆளில்லா வான்வழி வாகனத்தினை (UAV) உருவாக்கியுள்ளது.
- இது 5 கிலோ எடை கொண்ட தாங்கு சுமையுடன் பறக்கும் திறன் கொண்டது மற்றும் எதிரி நாட்டுப் பிரதேசங்களில் கூட குண்டுகளையும் வீசும் திறன் கொண்டது.
- பல்வேறு சுழலிகளால் இயங்கக் கூடிய இந்த வாகனமானது, 5 கி.மீ. சுற்றளவு வரையிலான பகுதிகளில் குறிப்பிட்ட இலக்கு நிர்ணய வழிசெலுத்தலுடன் தானாகவே பணிகளை மேற்கொள்ளக் கூடியது.
- மஹாராஷ்டிராவின் நாக்பூரில் நடைபெற்ற 108வது இந்திய அறிவியல் மாநாட்டில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் பல்வேறு சுழலிகளால் இயங்கக் கூடிய ஒரு ஆளில்லா வான்வழி வாகனம் காட்சிப்படுத்தப்பட்டது.



## மீயொலி வாகன சோதனை ஓட்டம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இணைந்து மீயொலி வாகன சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- அதிநவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த மீயொலி வாகனமானது, விண்வெளியை விரைவாக அடைவதன் மூலம் நீண்ட தொலைவிற்கு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.
- ஒரு மீயொலி வாகனம் என்பது ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமாக அல்லது மேக் 5 என்ற அளவை விட அதிகமான வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்ட ஒரு விமானம், ஏவுகணை அல்லது விண்கலமாக இருக்கலாம்.
- இந்தியா ரஷ்யாவுடன் இணைந்து மீயொலி ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது.



## விர்ஜின் ஆர்பிட் ஏவுகலம்


- ஐக்கிய இராச்சியத்தினால் விண்ணில் ஏவப்பட இருந்த முதல் சுற்றுப்பாதை ஆய்வுக் கலமானது வெற்றியடையவில்லை.
- இந்த "கிடைமட்ட ஏவுதல்" திட்டமானது கடலோர நகரமான நியூகுவேயில் இருந்து ஏவப் பட்டது.



- இந்த ஏவுகலமானது, "காஸ்மிக் கேர்ள்" என்று அழைக்கப்படும் மாற்றியமைக்கப்பட்ட போயிங் 747 வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அட்லாண்டிக் பெருங்கடல் பரப்பில் விடுவிக்கப்பட்டது.

- அதன் அமெரிக்கத் தளத்திற்குப் பதிலாக வேறு ஒரு பகுதியிலிருந்து மேற்கொள்ளப் படும் இந்த முதல் ஆய்வுத் திட்டத்தில் ஒன்பது சிறிய செயற்கைக் கோள்களைப் புவியின் தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் (LEO) நிலை நிறுத்தத் திட்டமிட்டிருந்தது.
- விர்ஜின் ஆர்பிட்டின் வரலாற்றில், 2020 ஆம் ஆண்டில் முதன்முதலில் விண்ணில் ஏவப் பட்ட ஒரு பணி தோல்வியடைந்ததையடுத்து, இவ்வாறு நிகழ்ந்தது இது இரண்டாவது முறையாகும்.

## நுண் நெகிழி வடிப்பான்




- தென் கொரியா நாடானது நீரிலுள்ள நுண் நெகிழிகளை 10 வினாடிகளில் திறம்பட்ட முறையில் அகற்றும் ஒரு புதிய நீர்ச் சுத்திகரிப்பு முறையை உருவாக்கியுள்ளது.
- இந்த அமைப்பானது, இது ஒப்பீட்டளவில் விலை மலிவான மற்றும் சிறந்த உறிஞ்சுதல் செயல்திறன் கொண்ட நல்ல ஒளிவெப்பப் பண்புகளைக் கொண்டுள்ள பாலிமரைப் பயன்படுத்துகிறது.
- நுண் நெகிழிகள் எனும் 5 மில்லி மீட்டருக்கும் குறைவான விட்டம் கொண்ட சிறிய நெகிழித் துகள்கள் உலகளாவியப் பிரச்சனையாக திகழ்கிறது.
- அவை நீர்நிலைகள், மண் மற்றும் காற்றில் காணப்படுவதோடு, அவை மனித உணவுச் சங்கிலியிலும் கூட நுழைந்துள்ளன.
- நீரில் நுண் நெகிழிகள் காணப்படுதல், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் மனித ஆரோக்கியத்தில் பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.


## அல்சைமர் நோய்க்கான லெகனேமாப் மருந்து

- அல்சைமர் நோய்க்கான சிகிச்சையில் லெகனேமாப் மருந்தினைப் பயன்படுத்தச் செய்வதற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அங்கீகாரம் அளித்துள்ளது.
- லெகெம்பி என்ற தயாரிப்பு பெயரில் விற்கப்பட உள்ள லெகனேமாப் மருந்தானது, அல்சைமர் நோய்க்கான இந்த வகையிலான முதல் சிகிச்சையாகும்.




## அம்மோனியா உற்பத்தி செயல்முறைக்கான புதிய மின்பகுபொருள்

- நுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள அறிவியலாளர்கள் சோடியம் டெட்ராபுளோரோபோரேட் (NaBF4) என்ற புதிய மின்பகுபொருளை உருவாக்கியுள்ளனர்.
- இது ஊடகத்தில் N2 கடத்தியாகச் செயல்படுவதோடு, இது அந்தச் சூழலில் அதிகளவில் அம்மோனியாவினை உருவாக்குவதற்காக MnN4 உடன் "இணை-வினையூக்கியாக" செயல்படுகிறது.
- பசுமை ஆற்றல் அல்லது ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் தொழில்சாலைகளுக்கு அம்மோனியா உற்பத்தி முறை ஒரு முக்கியமான செயல்முறையாகும்.
- நைட்ரஜனின் மின்வேதியியல் பண்பு குறைப்பு என்பது, நைட்ரஜன் குறைப்பு எதிர் வினை (NRR) என்றும் அழைக்கப்படுகிறது.
- நீரில் நைட்ரஜன் குறைவான கரைதிறன் கொண்டதாக இருப்பதால் இந்த அமைப்பில் இது ஒரு பெரிய தடையாக உள்ளதோடு, இது நைட்ரஜன் குறைப்பு எதிர்வினையின் செயல்திறனைக் கட்டுப்படுத்துகிறது.




## உயிரிப் பூச்சிக் கொல்லிக்கான உலகளாவிய விருது

- ஐதராபாத்தைச் சேர்ந்த ICRISAT நிறுவனத்தின் ஆராய்ச்சி சார்ந்தப் பயிற்சியாளர் சர்வேஷ் பிரபு, அமெரிக்காவின் அட்லாண்டாவில் நடைபெற்ற சர்வதேச அறிவியல் மற்றும் பொறியியல் கண்காட்சியில் மூன்றாம் பரிசினை வென்றுள்ளார்.
- செலவு குறைந்த உயிரிப் பூச்சிக் கொல்லியை உருவாக்கியதற்காக உயிரி வேதியியல் பிரிவில் இவருக்கு விருது வழங்கப்பட்டது.
- இந்த பூச்சிக்கொல்லியானது ராம்பால் அல்லது ஒருவகை 'சீத்தாப்பழம்' மரத்தின் இலைகளிலிருந்துத் தயாரிக்கப் படுகிறது.
- பாரம்பரிய மருத்துவத்தில், இந்த தாவரத்தின் சாறு வயிற்றுப் போக்கு சிகிச்சைக்குப் பயன்படுத்தப் படுகிறது.
- அதே சமயம், இந்த உயிரிப் பூச்சிக் கொல்லியின் விலை ரூ.750 முதல் 1,000 வரை உள்ளது என்பதோடு இது சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலானதாகும்.




## வணிகரீதியான ஹைப்பர்லூப் தொழில்நுட்பம்

- டாட்டா ஸ்டீல் மற்றும் டுட்டுர் ஹைப்பர்லூப் நிறுவனம் ஆகியவை ஹைப்பர்லூப் தொழில் நுட்பத்தின் மேம்பாடு மற்றும் செயலாக்கம் ஆகியவற்றில் கூட்டாக இணைந்து பணியாற்றுவதற்காக சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் ஒரு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளன.
- இதற்கான முக்கிய ஆராய்ச்சிப் பகுதிகள் வடிவமைப்பு மற்றும் பாகப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள முக்கியச் சவால்களின் மீது கவனம் செலுத்தும்.
- உலகளவில், ஹைப்பர்லூப் எதிர்காலத்தின் அதிவேக நிலையான போக்குவரத்தினை உருவாக்குவதற்கான பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- ஹைப்பர்லூப் என்பது பயணிகள் மற்றும் சரக்கு ஆகிய இரண்டு வகையான போக்குவரத்திற்குமான அதிவேக, குறைந்த விலை கொண்ட, ஒரு நிலையானப் போக்குவரத்து அமைப்பிற்கான எதிர்காலத் தேர்வாக அமையும்.




## 5ஜி சேவை பெற்ற இந்தியாவின் முதல் ஆளில்லா விமானம்



- ஸ்கைஹாக் எனப்படும் 5ஜி சேவை பெற்ற இந்தியாவின் முதல் ஆளில்லா விமானத்தினை, நொய்டாவைச் சேர்ந்த ஐஜி ட்ரோன் எனும் நிறுவனம் உருவாக்கி உள்ளது.
- இது செங்குத்தான கோணத்தில் மேலெழும்பும் திறன் மற்றும் தரையிறங்கும் திறன் கொண்டது.
- ஸ்கைஹாக் 10 கிலோகிராம் பொருட்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- இது பாதுகாப்பு, மருத்துவப் பயன்பாடுகள் மற்றும் பிற துறைகளில் பயன்படுத்தப் படக் கூடியது.
- இது சுமார் ஐந்து மணிநேரம் இயங்கும் திறன் கொண்டதோடு, இணைய இணைப்பு கிடைக்காத பட்சத்தில் செயற்கைக் கோள்கள் மூலம் செயல்படும் ஒரு திறனையும் கொண்டது.


## நீரிலிருந்து மாசுகளை நீக்கும் புதிய பொருள்

- புனேயில் உள்ள IISER நிறுவனமானது, மாசுபட்ட நீரை திறம்பட சுத்தப்படுத்தும் திறன் கொண்ட தனித்துவமான மூலக்கூறான பஞ்சு போன்ற ஒரு பொருளை உருவாக்கி உள்ளது.
- இந்தப் பொருளானது, பெரு/நுண்துளை அயனி கரிமக் கட்டமைப்பு எனப்படும் ஒரு பொருளாகும்.
- இது கரிமச் சாயங்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், பூச்சிக்கொல்லிகள், அயோடைடுகள் மற்றும் பெர்ஹனேட் போன்ற ஆக்ஸிஜன்-மாசுபடுத்திகள் உட்பட பலவிதமான நச்சுப் பொருட்களை உறிஞ்சி அகற்றும் திறன் கொண்டது.
- இந்த மாசுக்கள் மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் நேரடியாக அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவை என்பதோடு, அவை பொதுவாக நன்னீர் வளங்களில் காணப் படுகின்றன.





## OneWeb நிறுவனத்தின் 40 செயற்கைக் கோள்கள்

- பாரதி நிறுவனத்தின் ஆதரவு பெற்ற OneWeb என்ற நிறுவனமானது அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் 40 செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக அவற்றின் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது.
- இது OneWeb நிறுவனத்தின் 16வது ஏவுதலைக் குறிக்கிறது.
- இந்த நிறுவனம் அதன் முதல் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த செயற்கைக் கோள் தொகுப்பினை நிறைவு செய்வதற்கு இன்னும் இரண்டு ஏவுதல் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.
- இவை விண்ணில் ஏவப்பட்டதன் மூலம், OneWeb நிறுவனமானது விண்வெளியின் சுற்றுப் பாதையில் மொத்தம் 542 செயல்பாட்டுச் செயற்கைக் கோள்களைக் கொண்டு உள்ளது.
- இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ள மொத்தமான 648 செயற்கைக் கோள்களில் இது 83 சதவீதத்திற்கும் அதிகமாகும்.
- இந்த நிறுவனத்தின் செயற்கைக்கோள் வலையமைப்பானது முழுமையாக நிலை நிறுத்தப் பட்டவுடன், OneWeb நிறுவனமானது ஸ்டார்லிங்க் போன்று, புவியின் தாழ் மட்ட செயற்கைக் கோள்களின் தொகுப்பினைப் பயன்படுத்தி குறைந்த தாமத வரம்பு கொண்ட அதிவேகச் செயற்கைக் கோள் வழியிலான இணையச் சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளது.





## VSHORAD ஏவுகணை அமைப்பு

- பாதுகாப்பு கொள்முதல் சபையானது, மிகக் குறுகிய தூர வரம்புடைய வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு அல்லது VSHORAD ஏவுகணை அமைப்பினை வாங்குவதற்காக, தேவை உணர்வு ஒப்புதலினை (AoN) வழங்கியுள்ளது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது.
- VSHORADS என்பது மனிதர்களால் சுமந்துச் செல்லக் கூடிய வகையிலான வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு (MANPAD) ஆகும்.
- குறுகிய தொலைவு வரம்புகளில் உள்ள தாழ்மட்ட அளவிலான வான்வழி அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கான இந்த ஏவுகணையானது, இரட்டை உந்துதல் கொண்ட திட எரிபொருள் இயக்கி மூலம் செலுத்தப்படுகிறது.
- தேவை உணர்வு ஒப்புதல் (AoN) என்பது பாதுகாப்புத் துறையில் நீண்டகால மூலதன அமைப்புகளின் கொள்முதல் செயல்முறையின் முதல் படிநிலையாகும்.




## CAR-T சிகிச்சையில் மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு




- ❖ டெக்சாஸ் பல்கலைக் கழகத்தின் தென்மேற்கு மருத்துவ மையமானது, சேதமடைந்த இதயத் திசுக்களை சரி செய்வதற்காக வேண்டி மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு சோதனையினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- ❖ கால்சியம் கால்மோடுலின் சார்ந்த புரோட்டீன் கைனேஸ் IIδ எனப்படும் நொதியை மாற்றியமைப்பதற்காக CRISPR-Cas9 நியூக்ளியோடைடு மரபணு மாற்ற முறையை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.
- ❖ இந்தப் புரதமானது, உடலின் பல்வேறு செயல்பாடுகளுக்கான வழித் தடங்களில் சமிக்ஞை வழங்கும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

## புவியின் அளவினை ஒத்த பாறைக் கோள்

- ❖ நாசாவின் இடப்பெயர்வு புறக்கோள் ஆய்வு செயற்கைக்கோள் (TESS) ஆய்வுத் திட்டம் தனது நட்சத்திர மண்டலத்திற்குள்ளேயே காணப்படும் புவியின் அளவினை ஒத்துள்ள இரண்டாவது பாறைக் கோளினைக் கண்டுபிடித்துள்ளது.
- ❖ இந்த கிரகத்தின் மேற்பரப்பின் வரம்பானது திரவ வடிவிலான தண்ணீர் உருவாகக் கூடிய வகையில் உள்ளது.





- ❖ இந்தக் கோளிற்கு 'TOI 700 e என்று பெயரிடப்பட்டுள்ளது.

- இந்தக் கோளானது 95% புவியின் அளவினை ஒத்துள்ளதாகவும், மேலும் பாறைகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.
- முன்னதாக, வானியலாளர்கள் இந்த மண்டலத்தில் TOI 700 b, c மற்றும் d என அழைக்கப் படும் மூன்று கிரகங்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

## அரிமான தடுப்புத் திறன் கொண்ட நிக்கல் உலோகக் கலவை முலாம்


- பொறியியல் சார்ந்தப் பயன்பாடுகளில் அதிக செயல்திறன் கொண்ட பொருட்களின் மீது நிக்கல் உலோகக் கலவைப் பூச்சுகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதிய முறையானது கண்டறியப்பட்டுள்ளது.
- இது சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலான குரோம் முலாம் பூச்சு முறைக்கான ஒரு மாற்றாக அமையும்.
- இந்த முறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பூச்சுகள் அரிமானத்தினை எதிர்க்கும் திறனை அதிகளவில் கொண்டதாகும் என்பதோடு மேலும், இது நெகிழிப் பொருட்கள் தொழில்துறைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- இந்தச் செயல்முறையானது, சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிக்கல் மற்றும் டங்ஸ்டன் அயனிகளைக் கொண்ட, தனிம டங்ஸ்டன் (W) மற்றும் நிக்கல் (Ni) ஆகியவற்றை வலுப் படுத்துவதற்கான ஒரு மூலப்பொருளாக விளங்குகின்ற மின்பகுளிகளைக் கொண்டு உள்ளது.




## சூரியசக்தியினால் இயங்கும் புதிய அணு உலை


- ஐக்கிய இராஜ்ஜியத்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆனது, நெகிழிக் கழிவுகள் மற்றும் பசுமை இல்ல வாயுக்கள் ஆகியவற்றினை நிலையான எரிபொருள்கள் மற்றும் பிற மதிப்பு மிக்கப் பொருட்களாக மாற்றும் ஒரு முறையினை உருவாக்கி உள்ளது.
- இது சூரிய சக்தி மூலம் பெறப்படும் ஆற்றலைப் பயன்படுத்துகிறது.

- இந்த ஒருங்கிணைந்த அணு உலை இரண்டு தனித்தனி பெட்டகங்களைக் கொண்டு உள்ளது.
- இதில் ஒரு பெட்டகமானது நெகிழிப் பொருட்களுக்கும் மற்றொன்று பசுமை இல்ல வாயுக்களுக்குமானதாகும்.
- இந்த உலையானது, பெரோவிசுக்கைட்டு என்ற ஒரு கனிமத்தினால் ஆன ஒளி உட்கிரகிப்பானைப் பயன்படுத்துகிறது.
- பெரோவிசுக்கைட்டு என்பது அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த சூரிய மின்கலங்கள் உற்பத்தியில் சிலிக்கானுக்கு மாற்றாக அமையக்கூடிய ஒரு நம்பத்தகு மாற்றாக இருக்கும்.
- இந்த உலையானது, பாலி எத்திலீன் டெரெப்தாலேட் (PET) நெகிழிக் குடுவைகள் மற்றும் கார்பன் டை ஆக்சைடு ஆகியவற்றினை கிளைகோலிக் அமிலமாக மாற்றுவதுடன் கார்பன் மோனாக்சைடு, செயற்கை வளிமம் அல்லது படிவங்கள் போன்ற பல்வேறு கார்பன் சார்ந்த எரிபொருளாக மாற்றுகிறது.




## செவ்வாய் கிரகத்தில் லாவா அடுக்கு

- செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பினை, மேல்நோக்கித் தள்ளுகின்ற, தீவிர எரிமலை மற்றும் நில அதிர்வு இயக்கங்களை இயக்குகின்ற ஒரு மாபெரும் லாவா அடுக்கு இருப்பதனை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அதன் மத்திய ரேகைக்கு வடக்கே அமைந்துள்ள எலிசியம் பிளானிஷியா எனப்படும் தாழ்வான பகுதிக்கு அடியில் இது அமைந்துள்ளது.
- பூமி மற்றும் வெள்ளி ஆகிய கோள்களில் லாவா அடுக்குகள் செயல்பாட்டில் உள்ளன என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன.
- லாவா அடுக்கு என்பது ஒரு கிரகத்தின் நில உட்பரப்பிலிருந்து மேற்பரப்பை நோக்கி எழுகின்ற உருகியப் பாறையின் பெரிய குமிழ்கள் ஆகும்.
- அவை இடைநிலை அல்லது கவச அடுக்குகளின் வழியாகத் தள்ளப்பட்டு மேலோட்டின் அடிப்பகுதியில் குவிகின்றன.
- இந்தப் புவியியல் நிகழ்வினை லாவா அடுக்கில் இருந்து சூடான பாறைக் குழம்புகள் பாறைப் பிளவுகளில் இருந்து வெளியேறி பெரிய எரிமலைச் சமவெளிப் பகுதிகளை உருவாக்குகின்ற ஹவாய் பகுதிகளில் காணலாம்.




## செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி காணப்படும் ஒற்றை அலைகள்

- செவ்வாய்க் கிரகத்தில் ஒற்றை அலைகள் அல்லது தனித்துவமான மின் புல ஏற்ற இறக்கங்கள் இருப்பதற்கான முதல் ஆதாரத்தை இந்தியப் புவிக் காந்தவியல் நிறுவனத்தின் (IIG) வானியலாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.
- அலைத் துகள் தொடர்புகள் ஆனது, துகள்களின் ஆற்றலேற்றம், பிளாஸ்மா இழப்பு, இயக்கம் போன்றவற்றை நேரடியாகக் கட்டுப்படுத்துவதால், இந்த அலைகள் குறித்து ஆய்வு மேற்கொள்வது முக்கியமான ஒன்றாகும்.
- ஒரு கிரகத்தைச் சுற்றி காணப்படும் காந்தப் புலத்தாலான ஒரு கவசமாக பூமியானது தன்னைச் சுற்றி ஒரு காந்த மண்டலத்தைக் கொண்டுள்ளது.
- செவ்வாய்க் கோளானது, அதன் மேலோட்டுக் காந்த மூலங்களிலிருந்துப் பெறப்படும் பலவீனமான காந்தப் புலத்தை மட்டுமே கொண்டுள்ளது.
- இது சூரியக் காற்றுகளை செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலத்துடன் தொடர்பு கொள்ளச் செய்து, ஒற்றை அலைகளை உருவாக்கவும் வழிவகை செய்கிறது.
- ஒற்றை அலைகள் என்பது, நிலையான அலைவீச்சுக் கூறு தொடர்புகளைப் பின்பற்றச் செய்யும் தனித்துவமான மின்புல ஏற்ற இறக்கங்கள் (இருமுனை அல்லது ஒற்றை முனை) ஆகும்.



## இரத்தக் கசிவினைக் கட்டுப்படுத்தும் கட்டுத்துணிப் பட்டை

- ❖ அறிவியலாளர்கள், இரத்தக் கசிவினைக் கட்டுப்படுத்தும் துணிப்பட்டை வடிவிலான உயிரி பாலிமர் அடிப்படையிலான கூழ்மக் கலவை மற்றும் கட்டுத்துணிகளைத் தயாரித்துள்ளனர்.
- ❖ இரத்தக் கசிவை கட்டுப்படுத்துவதற்கு வேண்டி ஒரு பயனுள்ள மற்றும் பாதுகாப்பான கட்டுத்துணிகள் தேவைப்படுவது அவசியமான ஒன்றாகும்.
- ❖ காயங்களை 'ஹீமோஹால்ட்' இந்தத் துணிகளைக் கொண்டு கட்டினால், மூன்று நிமிடங்களில் அதிக இரத்தப் போக்கு நிறுத்தப் படும்.
- ❖ இது சிகிச்சை அளிப்பதற்கு முன்பு ஏற்படும் இரத்த இழப்பைக் குறைத்து உயிர்களைக் காப்பாற்றும் மற்றும் போர்க்களத்தில் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்கும்.
- ❖ இந்த கட்டுத்துணியானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனமான MACS-அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.





## நிலப்பரப்பில் அமைந்த முதல் செயற்கைக்கோள் ஏவுதல் தளம்



- ❖ சுவீடன் நாட்டின் மன்னர் பதினாறாம் கார்ல் குஸ்டாஃப் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலப்பரப்பில் அமைந்த முதல் சுற்றுப்பாதை ஏவுதல் தளத்தினைத் தொடங்கி வைத்தார்.

- எஸ்ரேஞ்ச் விண்வெளி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதியத் தளமானது, பிரெஞ்சு கயானாவில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய ஏவுதல் திறன்களுக்கு ஈடாக அமைய வேண்டும்.
- அடுத்த ஆண்டு இந்தத் தளத்திலிருந்து முதல் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப் படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## மின்னலுக்கு வழிகாட்டும் லேசர் கற்றை





- மின்னலைப் புவிப்பரப்பினை அடைவதற்கு வழிகாட்டுவதற்காக அறிவியலாளர்கள் முதன்முறையாக லேசர் கற்றைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த நுட்பம் கொடிய இடி தாக்குதல்களுக்கு எதிராக கட்டிடங்களைப் பாதுகாக்க உதவும்.
- உலகம் முழுவதும் ஒரு நொடிக்கு 40-120 முறை மின்னல் தாக்குதல் நிகழ்கிறது.
- மின்னல் தாக்குதல்கள் 4,000க்கும் மேற்பட்ட மக்களின் உயிரை பலி கொண்டு உள்ளதோடு, ஒவ்வோர் ஆண்டும் அது பில்லியன் டாலர் மதிப்புள்ள சேதங்களை ஏற்படுத்துகிறது.
- மின்னல் என்பது புயல்களால் உருவாகும் மேகங்களில் அல்லது மேகங்களுக்கும் தரைக்கும் இடையே உருவாகும் நிலை மின்னியல் விசையின் வெளியேற்றமாகும்.
- லேசர் கற்றைகள் பிளாஸ்மாவை உருவாக்குவதோடு, இதில் மின்னேற்றம் செய்யப் பட்ட அயனிகள் மற்றும் எலக்ட்ரான்கள் காற்றை வெப்பப் படுத்துகின்றன.
- காற்று ஊடகமானது "ஓரளவு கடத்தும் தன்மையினைக் கொண்டதால் மின்னல் கடந்து செல்வதற்கு உகந்தப் பாதையாக இது அமையும்".
- அதாவது கோட்பாட்டு ரீதியாக, இந்த நுட்பம் மின்னலைக் கடத்துவதற்கு மட்டும் அல்லாமல், மின்னல் தாக்குதலைத் திசை திருப்பவும் உதவும்.


## நாசாவின் ஜியோடெயில் ஆய்வு திட்டம்

- விண்வெளி சுற்றுப் பாதையில் மேற்கொள்ளப்பட்ட 30 ஆண்டு கால அளவிலான ஆய்வுப் பணிகளுக்குப் பிறகு, நாசா-ஜாக்சா நிறுவனங்களின் ஜியோடெயில் என்ற ஒரு கூட்டு விண்கலத்திற்கான பணி நடவடிக்கைகள் முடிவடைந்தன.

- இது 1994 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இந்த ஆய்வுப் பணியானது சர்வதேச சூரிய நிலப்பரப்பு இயற்பியல் (ISTP) திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது புவியின் காந்த கவசக் குமிழான காந்த மண்டலத்தின் அமைப்பு மற்றும் இயக்கவியல் பற்றிய மாபெரும் தரவுத் தொகுப்பைச் சேகரித்தது.
- ஜியோடெயில் ஆய்வுப் பணியானது முதலில் நான்கு வருடம் இயக்கப்படுவதற்காக திட்டமிடப் பட்டது, ஆனால் அதன் உயர்தர ரீதியிலான தரவு வழங்கீட்டின் காரணமாக இந்த ஆய்வுப் பணிக் காலமானது பல முறை நீட்டிக்கப்பட்டது.
- ஜியோடெயிலின் இரண்டு தரவுப் பதிவுக் கருவிகளுள் ஒன்று 2012 ஆம் ஆண்டில் பழுது அடைந்தாலும், அதன் இரண்டாவது கருவி 2022 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதியன்று பழுதடையும் வரை தொடர்ந்து இயங்கி வந்தது.




## அணுநிலை ஹைட்ரஜனில் இருந்து உருவாகும் ரேடியோ சமிக்ஞைகள்




- சமீபத்தில், மிகத் தொலைதூர அண்டத்தில் உள்ள அணுநிலை ஹைட்ரஜனில் இருந்து உருவான ஒரு ரேடியோ சமிக்ஞைகள், மாபெரும் மீட்டர் அலை ரேடியோ தொலை நோக்கி (GMRT) மூலம் கண்டறியப்பட்டது.

- ஓர் அண்டத்தில் நட்சத்திர உருவாக்கத்திற்குத் தேவையான அடிப்படை மூலப்பொருள் அணுநிலை ஹைட்ரஜன் ஆகும்.
- அணுநிலை ஹைட்ரஜன் ஆனது 21 செ.மீ. அலைநீளம் கொண்ட ரேடியோ அலைகளை வெளியிடுகிறது.
- அலைநீளம் அருகிலுள்ள மற்றும் தொலைதூர அண்டங்களில் உள்ள அணுநிலை வாயுக்களை நேரடியாகக் கண்டறிய உதவும்.
- அந்தப் பேரண்டமானது உருவாகி 4.9 பில்லியன் ஆண்டுகள் மட்டுமே நிறைவு அடைந்திருந்த போது அண்டத்தினால் வெளியிடப்பட்ட சமிக்ஞைகளை இந்த ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.
- செந்நிற அலை மாற்றம் (ரெட்ஷிஃப்ட்) என்பது பொருளின் இருப்பிடம் மற்றும் இயக்கத்தைப் பொறுத்து சமிக்ஞையின் அலைநீளம் மாறுவதனைக் குறிக்கிறது.
- Z என்பதன் அதிக மதிப்பானது அந்தப் பொருள் தொலைதூரத்தில் இருப்பதைக் குறிக்கிறது.


## பார்இயங்குதளம்

- பார்இயங்குதளம் (BharOS) என்பது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகம், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட திறன்பேசிகளுக்கான இயங்குதளமாகும்.
- இது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் ஆதரவு பெற்ற ஜான்ட்கே ஆபரேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஜாண்ட்காப்ஸ்) நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.
- தற்போது இத்தகைய திறன்களைக் கொண்ட சில நாடுகளுக்கு இணையாக இந்திய நாட்டினை இது நிலை நிறுத்த முனைகிறது.
- இது அரசு மற்றும் பொது அமைப்புகளில் பயன்படுத்துவதற்கான இலவச மற்றும் தடையற்ற இயக்க முறைமையை (OS) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பார்இயங்குதளம் எவ்விதக் கட்டாயச் செயலிகளும் இன்றி கிடைக்கப் பெறுகிறது.



## பான்ட்ரான்ஸ்கிரிப்டோம்


- பான்ட்ரான்ஸ்கிரிப்டோம் என்பது டிரான்ஸ்கிரிப்டோம் (உயிர்மக் குறிப்பு) மற்றும் மரபணுத் தொகை ஆகியவற்றின் கலவையாகும்.
- இது ஒற்றை நேரியல் இழைக்குப் பதிலாக பல்வேறு நபர்களின் குழுவினைச் சேர்ந்த மரபணுப் பொருளைக் கொண்டுள்ளது.
- RNAவினுடைய மிகவும் பொதுவான செயல்பாட்டு DNAவை புரதங்களாக மாற்றச் செய்வதாகும்.
- ஆனால் இது பெரும்பாலான RNA, புரதங்களை உருவாக்கவில்லை என்பதை தற்போது அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ள நிலையில் இதற்கு மாறாக செல் கட்டமைப்பில் தாக்கம் உருவாக்குதல் அல்லது மரபணுக்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற சில பணிகளை இவற்றினால் மேற்கொள்ள இயலும்.
- முழு RNA கட்டமைப்பும் டிரான்ஸ்கிரிப்டோம் என்று அழைக்கப்படுகிறது.
- பான்ட்ரான்ஸ்கிரிப்டோம் என்ற கருத்தாக்கமானது, மரபியல் துறையில் "மரபணுத் தொகை" என்ற அதிகரித்து வரும் கருத்தாக்கத்தின் மூலம் உருவாக்கப் பட்டது.
- ஒரு மரபணுத் தொகையைப் பயன்படுத்துவதால், ஒரு நபரின் மரபணுவை ஒரே நேரத்தில் மரபணு ரீதியாக வேறுபட்ட, பல்வேறு உயிர் புவியியல் சார்ந்த வம்சாவளியினைச் சேர்ந்த நபர்களிடமிருந்துப் பெறப்பட்ட பல்வேறு மரபணுக் குறிப்புகளுடன் ஒப்பிட ஆராய்ச்சியாளர்களுக்கு இது வாய்ப்பளிக்கிறது.





## வெளிப்புறக்கோள் LHS 475 b

- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி அதன் முதல் புதிய வெளிப்புறக் கோளைக் கண்டுபிடித்துள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கிரகத்திற்கு LHS 475 b எனப் பெயரிட்டுள்ளனர்.
- இது தோராயமாக பூமியின் அளவுடையது ஆகும்.
- இது வெறும் 41 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்தக் கிரகம் ஒரு சிவப்புக் குள்ள நட்சத்திரத்திற்கு மிக அருகில் சுற்றி வருவதோடு இரண்டு நாட்களில் அதன் முழு சுற்றுப்பாதையையும் நிறைவு செய்கிறது.

- புறக்கோள்கள் என்பவை மற்ற நட்சத்திரங்களைச் சுற்றி வருகின்ற மற்றும் நமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் அமைந்துள்ள கிரகங்கள் ஆகும்.
- நாசாவின் கூற்றுப்படி, இன்று வரையில் 5,000க்கும் மேற்பட்ட புறக்கோள்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.




## டாப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு




- ஜம்மு & காஷ்மீர், உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் நான்கு புதிய டாப்ளர் வானிலை ரேடார் அமைப்புகள் திறக்கப்பட்டன.
- தீவிர வானிலை நிகழ்வுகள் தொடர்பான மிகவும் துல்லியமான சில முன்னறிவிப்பு நிகழ்வுகளுக்காக டாப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு 2025 ஆம் ஆண்டளவில் முழு நாட்டையும் உள்ளடக்கும்.
- 2025 ஆம் ஆண்டுக்குள் 660 மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு அலகுகளை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.
- டாப்ளர் ரேடார்கள் மழைப்பொழிவு மற்றும் மேக அமைப்புகளின் அளவு மற்றும் தீவிரத்தைக் கண்காணிக்கவும், இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலை நிகழ் நேரத்தில் கண்காணிக்கவும் உதவுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விலங்குகளுக்கான முதலாவது நடமாடும் செயற்கைமுறை கருத்தரித்தல் மையம்

- இந்தியாவில் முதல்முறையாக விலங்குகளுக்கான நடமாடும் செயற்கை முறை கருத்தரித்தல் மையமானது குஜராத்தின் அம்ரேலியில் தொடங்கப்பட்டுள்ளது.
- நடமாடும் செயற்கை முறை கருத்தரித்தல் மைய வசதி கொண்ட ஒரு வாகனமானது, "இந்திய அரசு மற்றும் அமர் டெய்ரி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் மூலம் தொடங்கப் பட்டுள்ளது".
- செயற்கை முறை கருத்தரித்தல் என்பது கருவுறுதலுக்கு உதவுவதற்கும் குழந்தையின் கரு வளர்ச்சிக்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு சிக்கலான செயல்முறை ஆகும்.
- இது விலங்குகளில் காணப்படும் அதிகளவிலான பெண் முதலுருக்களை அதிக விகிதத்தில் பெருக்கமடையச் செய்வதற்கான ஒரு மேம்படுத்தப் பட்ட இனப்பெருக்கத் தொழில்நுட்பமாகும்.




## ஆக்கிரமிப்பு வகை சிப்பி இனங்கள்

- ஆக்கிரமிப்பு வகை சிப்பி இனங்கள் பரவும் நிகழ்வானது, ஆறு மற்றும் கடற்பரப்பில் உள்ள இறால் இனங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.
- இது தென்னமெரிக்க மட்டி (சிப்பி) இனமாகும்.
- இது சென்னை காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு வருகை தரும் கப்பல்களில் உள்ள நிலைப்புப் பார பகுதியில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதால் பரவுகிறது.
- கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இந்த ஆக்கிரமிப்பு இனங்கள் கண்டறியப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இவை முதன்முறையாக எண்ணூர் சதுப்பு நிலங்களில் உள்ளூர் மீனவர்களால் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்டன.




## அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா- பறவைகள் கணக்கெடுப்பு

- டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் பறவைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட முதல் பறவை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்தக் கணக்கெடுப்பு குறிப்பிடுகிறது.
- இந்த கணக்கெடுப்பில் 141 இனங்களை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 17 புதிய இனங்களாகும்.
- இதுவரை அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் 175 வகையான பறவை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- 2006 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 139 பறவை இனங்கள் அடையாளம் காணப்பட்டன.
- 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட இனங்களின் எண்ணிக்கை 142 ஆக உயர்ந்தது.
- இதன் முதல் கணக்கெடுப்பு 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் நடத்தப்பட்டது.
- அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவினை தாவரவியலாளர் ராபர்ட் வைட் என்பவர் முதன்முதலாக 1847 ஆம் ஆண்டில் ஆய்வு செய்தார்.
- இந்தப் பூங்காவானது, தென்னிந்தியாவின் ஐந்தாவது உயரமான சிகரமான முகூர்த்தி சிகரத்தின் அருகாமையில் அமைந்துள்ளது.



## வறண்ட நிலங்களில் உள்ள நகர்ப்புறக் காடுகள் மற்றும் நகர்ப்புறப் பசுமைப் படுத்துதல் திட்டம்


- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, அதன் பசுமை நகர்ப்புறச் சோலைகள் திட்டத்திற்கான கட்டமைப்பின் கீழ் இந்த அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- உலகின் மிகப்பெரிய நகரங்களில் 35% நகரங்கள் (புது டெல்லி, மெக்சிகோ நகரம் போன்றவை உட்பட) உலகின் வறண்ட நிலங்களில் தான் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- ஒட்டு மொத்தத்தில், அவற்றில் 2 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கின்ற நிலையில், அவற்றுள் 90 சதவீத நபர்கள் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளனர்.
- நகர்ப்புறக் கொள்கைகள், பெரும்பான்மையான வறண்ட நிலங்களில் உள்ள நகரங்களுக்கான கொள்கைகளில் வன வளம் மற்றும் பசுமையாக்கம் ஆகியவற்றிற்கான உத்திகளை இன்னும் இணைக்கவில்லை.
- தற்போது, உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நகரங்களில் வாழ்கின்ற நிலையில், தற்போது மற்றும் 2050 ஆம் ஆண்டிற்குள் ஏற்பட உள்ள 95 சதவீத நகர்ப்புற மேம்பாடானது உலகின் தெற்கு நாடுகளில் நிகழ உள்ளதாக எதிர் பார்க்கப் படுகிறது.
- வறண்ட நிலங்கள் என்பது 0.65க்கும் குறைவான வறட்சிக் குறியீடு கொண்ட நிலங்கள் ஆகும்.
- வறட்சிக் குறியீடு என்பது சராசரி வருடாந்திர மழைப்பொழிவிற்கும் சாத்தியமான நீராவிப் போக்கிற்கும் இடையிலான ஒரு விகிதமாகும்.




## 5வது வெப்பமான ஆண்டு - 2022

- இந்தியாவில் 1901 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பதிவான ஐந்தாவது மிக வெப்பமான ஆண்டாக, 2022 ஆம் ஆண்டை இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டில் வருடாந்திர சராசரி நில மேற்பரப்பு காற்றின் வெப்பநிலையானது, நீண்ட காலச் சராசரியை விட 0.51 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது.
- நீண்ட காலச் சராசரி என்பது 1981 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்திற்கான சராசரி வெப்பநிலையாகும்.

- இது 2016 ஆம் ஆண்டில் இந்தியாவில் காணப்பட்ட அதிக வெப்பநிலையை விடக் குறைவாகும்.
- 2016 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான சராசரி வெப்பநிலை 0.71 டிகிரி செல்சியஸ் ஆகும்.
- 1971 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பதிவான மதிப்புகளின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பதிவான மழைப் பொழிவு அதன் நீண்ட காலச் சராசரி மதிப்பில் 108 சதவீதமாக இருந்தது.




## தேனீக்களுக்கான முதல் தடுப்பூசி





- உலகில் முதல் முறையாக தேனீக்களுக்கான தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அமெரிக்க ஃபவுல்புரூட் நோயால் ஏற்படும் தேனீக்களின் இறப்புகளைத் தடுக்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இது தேனீக்களின் லார்வாக்களைத் தாக்கி தேனீக் கூட்டங்களினை வலுவிழக்கச் செய்யும் ஒரு பாக்டீரியா நோய்த் தொற்றாகும்.
- இராணித் தேனீக்கு அளிக்கப்படும் ராயல் ஜெல்லி எனப்படும் சுரப்பியில் செயலற்ற ஒரு பாக்டீரியாவினை உட்செலுத்துவதன் மூலம் இது செயல்படுகிறது.
- அமெரிக்காவில் 2006 ஆம் ஆண்டு முதல் தேனீக் கூடுகளின் எண்ணிக்கையானது வருடாந்திர அளவில் சரிவினைக் கண்டுள்ளது.

## ஐரோப்பா - குளிர்கால வெப்ப அலை

- புத்தாண்டின் வார இறுதியில் ஐரோப்பாவின் பல பகுதிகளில் எதிர்பாராத வகையில் குளிர்கால வெப்ப அலை வீசியது.
- வெப்பநிலையானது, இயல்பை விட 10 முதல் 20 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளது.
- ஐரோப்பாவின் மீதான தீவிர குளிர்கால வெப்ப அலையின் தாக்கங்கள் விண்வெளியில் இருந்து கண்கூடாக தெரியும் வகையில் இருந்தது.
- ஜனவரி மாதத்தில் குறைந்த பட்சம் ஏழு நாடுகளிலாவது அதிக வெப்பமான வானிலை பதிவாகியுள்ளன.
- இதில் போலந்து, டென்மார்க், செக் குடியரசு, நெதர்லாந்து, பெலாரஸ், லிதுவேனியா மற்றும் லாட்வியா ஆகியவை அடங்கும்.




## வேர்ப் பாலங்கள்


- விவசாயி ஒருவர், சிரபுஞ்சியில் உள்ள உம்கார் ஆற்றின் குறுக்கே, இரண்டு பகுதிகளை இணைக்கும் வகையிலான வேர்ப் பாலங்களைக் கட்டமைக்கச் செய்வதற்காக அந்த மாநிலத்தில் பின்பற்றப்படும் ஒரு பாரம்பரிய நடைமுறையைப் பின்பற்றி அந்தப் பாலங்களைக் கட்டமைக்கும் பணியினை முன்னெடுத்து மேற்கொண்டு வருகிறார்.

- மேகாலயாவின் சீரற்ற கிழக்கு காசி மலைகளில் உள்ள சோஹ்ரா என்றும் அழைக்கப் படும் சிரபுஞ்சிக்கு அருகிலுள்ள சீஜ் கிராமத்தின் வழியே பாயும் உம்கார் ஆற்றின் மீது அவர் உருவாக்கிய இந்தக் கட்டமைப்பு ஒரு அதிசயமாக உருவடுத்துள்ளது.
- இதற்கான பாரம்பரிய நடைமுறையைப் போலவே, அவர் இரப்பர் மரத்தின் (ஃபிக்கஸ் எலாஸ்டிகா) வேர்களைப் பயன்படுத்தியுள்ளார்.
- உம்கார் ஆற்றின் குறுக்கே கட்டமைக்கப்பட்டுள்ள வேர்ப் பாலம் ஆனது, இரண்டு அடுக்குகளாக வளர்ந்து, முறையே 20 மீட்டர் மற்றும் 15 மீட்டர் வரை நீண்டு காணப் படுகிறது.
- மேகாலயா அதன் வேர்ப் பாலங்களுக்கு புகழ் பெற்றதோடு, உள்மாநிலத்தில் இவை ஜிங்கிங் ஜ்ரி என்று அழைக்கப்படுகின்றன.
- இவை யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய தளங்களின் தற்காலிகப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- இந்த மாநிலம் முழுவதும் காணப்படும் பல பாலங்கள் ஒரு நூற்றாண்டு கால அளவில் பழமையானவையாகும்.



## பூமியின் ஓசோன் அடுக்கு மீட்பு

- தடை செய்யப்பட்ட ஓசோன்-குறைப்புப் பொருட்களில் கிட்டத்தட்ட 99 சதவிகிதப் பொருட்கள் படிப்படியாக வெளியேற்றப்பட்டு வருவதை மாண்ட்ரீல் நெறிமுறை அறிக்கை உறுதிப்படுத்தியது.
- இந்த அறிக்கையின்படி, தற்போதையக் கொள்கைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தால், 2040 ஆம் ஆண்டில் ஓசோன் அடுக்கு 1980 ஆம் ஆண்டில் இருந்த அளவிற்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஓசோன் அடுக்கில் துளை இருப்பது முதன் முதலில் 1985 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிவியலாளர்களால் அறிவிக்கப்பட்டது.
- அண்டார்டிகா பகுதி மீது காணப்படும் ஓசோன் அடுக்கில் சுமார் 2066 ஆம் ஆண்டிலும், ஆர்க்டிக் பகுதியில் 2045 ஆம் ஆண்டிலும் இந்த மீட்சி நிகழும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இருப்பினும், அண்டார்டிக் பகுதியில் ஓசோன் குறைபாடானது, 2000 ஆம் ஆண்டிலிருந்து அதன் பரப்பளவிலும் ஆழத்திலும் மெதுவாக மேம்பட்டு (சரி செய்யப் பட்டு) வருகிறது.





## பாதுகாக்கப்பட்ட இனங்களின் பட்டியலில் நீலக்குறிஞ்சி

- ❖ சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகமானது (MoEF) நீலக் குறிஞ்சியினை (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா) பாதுகாக்கப்பட்ட தாவரங்களின் பட்டியலில் சேர்த்து, 1972 ஆம் ஆண்டு வன உயிரினங்கள் (பாதுகாப்பு) சட்டத்தின் IIIவது அட்டவணையின் கீழ் பட்டியலிட்டுள்ளது.
- ❖ இதன் படி இந்தச் செடியைப் பிடுங்குபவர் அல்லது இதனை அழிப்பவர்களுக்கு ரூ. 25,000 அபராதம் மற்றும் மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- ❖ இந்த ஆணைப் படி, நீலக்குறிஞ்சியினைப் பயிரிடுவதற்கும் அல்லது அதனை வைத்து இருப்பதற்கும் அனுமதியில்லை.
- ❖ மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில், கிட்டத்தட்ட 70 வகையான நீலக்குறிஞ்சி செடிகள் கண்டறியப்பட்டுள்ளன.
- ❖ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா எனப்படும் நீலக் குறிஞ்சி மிகவும் பிரபலமானதாகும்.
- ❖ இருப்பினும், நீலக் குறிஞ்சியின் வேறு சில அரிய வகைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் காணப்படுகின்றன.



## உப்புநீர் முதலைகளின் (Saltie) கணக்கெடுப்பு 2023

- ஒடிசாவின் கேந்திரப்பாரா மாவட்டத்தில் உள்ள பித்தர்கனிகா தேசியப் பூங்கா மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் வாழும் உப்பு நீர் முதலைகளின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.
- வனத்துறை அதிகாரிகள் இந்த ஆண்டு அப்பகுதிகளில் 1,793 முதலைகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.
- இவற்றுள் 20 வெள்ளை நிற முதலைகளும் அடங்கும்.
- கடந்த ஆண்டு, 1,784 முதலைகள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டது.




## அரிய வகை வாத்து இனம்

- மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள லோக்டாக் ஏரியில் 90 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, கிரேட்டர் ஸ்காப் என்ற ஒரு அரிய வகை வாத்து இனமானது சமீபத்தில் தென்பட்டுள்ளது.



- இது அப்பகுதியில் சடாங்மான் என்று அழைக்கப்படுகிறது.

- கிரேட்டர் ஸ்காப் என்பது அனாடிடே குடும்பத்தைச் சேர்ந்த நடுத்தர அளவிலான நீரில் மூழ்கி நீந்தக் கூடிய வாத்து இனமாகும்.
- கூர்க்கா ரைபிள்ஸ் படைப் பிரிவின் தலைவர் L. கேம்பிள் மற்றும் இந்திய குடிமைப் பணி அதிகாரி JP மில்ஸ் ஆகியோர் முறையே 1925 ஆம் ஆண்டு ஜனவரி 25 மற்றும் 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வாத்துகளைச் சுட்டுக் கொன்றதற்கான பதிவுகள் உள்ளன.

## பெரிய காட்டு ஆந்தை

- பெரிய காட்டு ஆந்தையானது முதல் முறையாக ஆந்திராவின் சேஷாசலம் காட்டில் தென்பட்டுள்ளது.
- அடர்ந்த காடுகளில் உள்ள பெரிய மரங்களில் காணப்படும் இந்தப் பறவையின் வாழ்விடம், இந்திய துணைக் கண்டம் முழுவதும் பரவியுள்ளது.
- ஆனால், இதற்கு முன்பு இம்மாநிலத்தில் இரண்டு முறை மட்டுமே இது தென்பட்டுள்ள நிலையில், அந்த இரண்டு முறையும் அது நாகார்ஜுனாசாகர் ஸ்ரீசைலம் புலிகள் காப்பகத்தில் மட்டுமே தென்பட்டது.
- இப்பறவை மனிதர்களைப் போல் ஒரு விசித்திரமான அலறலையே உருவாக்குவதால், இது இந்தியாவில் 'காட்டில் வாழும் பேய்' என்றும் இலங்கையில் 'அசுர பறவை' என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்த வகை ஆந்தை இனங்கள் இந்தியா, இலங்கை, நேபாளம், பூடான், வங்காளதேசம், மியான்மர், சீனா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் பரவிக் காணப்படுகின்றன.




## அரிய வகை டைனோசர் முட்டைகள்

- மத்திய இந்தியாவின் நர்மதா பள்ளத்தாக்கில் அமைந்துள்ள லேமென்ட்டா நில அமைப்பில் சமீபத்திய மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வுப் பணியில், டைட்டானோசர் இனங்களின் 92 முட்டையிடும் தளங்களைக் கண்டறியப்பட்டுள்ளது.
- அவை உலகில் இதுவரை வாழ்ந்த டைனோசர்களில் மிகப் பெரியவையாக கருதப் படுகின்றன.
- இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்ந்த டைட்டானோசர் இனங்களைப் பற்றிய முக்கியமான விவரங்களை வெளிப்படுத்தச் செய்யும் 250க்கும் மேற்பட்ட புதைபடிவ முட்டைகளை அக்குழு கண்டுபிடித்துள்ளது.

- இந்தப் புதைபடிவங்கள் பிற்கால கிரெட்டேசியஸ் காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- மேலும் ஆராய்ச்சியாளர்கள் ஆறு வெவ்வேறு "ஓஸ்பீசிஸ்" ( புதைப்படிவமாக்கப்பட்ட) அல்லது முட்டை இனங்களை அடையாளம் கண்டுள்ளனர்.




## கோலே சதுப்பு நிலப் பறவைகள் கணக்கெடுப்பு




- திருச்சூர் மற்றும் மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் 13,632 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள கோலே சதுப்பு நிலங்களில் பறவைகள் கணக்கெடுப்பானது மேற் கொள்ளப் பட்டது.
- இங்கு ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்த பறவைகள் வருகை தருகின்றன.

- பறவைகளின் அதிகளவிலான எண்ணிக்கை மற்றும் அவற்றின் பன்முகத்தன்மைக்கு பெயர் பெற்ற ராம்சர் தளமான திருச்சூர்-பொன்னானி கோலே தளங்களில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பின் முதல் நாளில், நீர்ப்பறவைகளின் எண்ணிக்கையானது கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது.
- இந்த ஆண்டு 90 வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த 9,904 பறவைகள் இங்கு காணப் படுவதாகக் கணக்கிடப்பட்டன.
- 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் பதிவான எண்ணிக்கைகள் முறையே 16,634 & 15,956 ஆக இருந்தது.
- 2018 ஆம் ஆண்டில் 33,499 ஆக இருந்த பறவைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத் தக்க அளவில் சரிவு ஏற்பட்டுள்ளது.

## நான்கு டைனோசர் இனங்கள் கண்டுபிடிப்பு

- மெகாராப்டர் உள்ளிட்ட நான்கு வகை டைனோசர் இனங்களின் எஞ்சிய பாகங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அர்ஜென்டினாவின் எல்லைக்கு அருகில் உள்ள தெற்கு சிலியின் லாஸ் சைனாஸ் பள்ளத்தாக்கில் உள்ள செரோ கைடோவில் இந்தப் புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.
- அவை இதுவரை அப்பகுதியில் அடையாளம் காணப்படாத டைனோசர் இனங்களைச் சேர்ந்தவையாகும்.
- மெகாராப்டர் இனங்கள் கிரெட்டேசியஸ் காலத்தில் வாழ்ந்த ஒரு பெரிய தெரோபாட் இன டைனோசர் ஆகும்.



- இந்த மாமிச உண்ணும் டைனோசர்கள், ராப்டார் இன உயிரினங்களின் நகங்கள், கிழிப்பதற்கு ஏதுவான சிறிய பற்கள் மற்றும் பெரிய மேல்கால் மூட்டுகளை கொண்டு இருந்தன.
- அவை 66 முதல் 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கிரெட்டேசியஸ் காலத்தின் முடிவின் போது வாழ்ந்தவையாகும்.

- புவியியல் காலத்தில், கிரெட்டேசியஸ் காலம் என்பது மீசோசோயிக் சகாப்தத்தின் மூன்று கால கட்டங்களின் கடைசி கால கட்டமாகும்.
- கிரெட்டேசியஸ் காலமானது, 145.0 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முடிந்தது.
- தெரோபாட் குழுவில் இதுவரையில் அறியப்பட்ட அனைத்து வகை மாமிசம் உண்ணும் டைனோசர்களும் மற்றும் பறவைகளும் அடங்கும்.

## ஐரோப்பாவின் மிகப்பெரிய அரிய மண்தாதுப் படிவு


- ஐரோப்பாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட அரிய மண் தாதுக்களின் மிகப்பெரிய படிவுகளில், ஒரு மில்லியன் டன்களுக்கும் அதிகமான அரிய மண் தாது ஆக்சைடுகள் இருப்பதாக ஸ்விட்சர்லாந்து அரசாங்கம் அறிவித்தது.
- ஐரோப்பாவில் தற்போது அரிய மண் தாதுச் சுரங்கங்கள் ஏதும் இல்லை.
- உலகின் அரிய மண் தாதுக்கள் விநியோகத்தில் 61% சீனா உற்பத்தி செய்கிறது.
- உலகில் இதுவரை அறியப்பட்ட மிகப்பெரிய அரிய மண் தாதுப் படிமமானது, வடக்கு சீனாவின் உள் மங்கோலியாவில் உள்ள பயான் ஒபோ என்ற பகுதியாகும்.
- இங்கு 1957 ஆம் ஆண்டு முதல் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரப்படுகிற நிலையில் இது சுமார் 40 மில்லியன் டன் இருப்புகளைக் கொண்டுள்ளது.
- மொத்தமாக 17 அரிய மண் தாதுக்கள் உள்ள நிலையில் அவை அவற்றின் சிறந்த காந்தம் மற்றும் கடத்துத்திறன் பண்புகளுக்காக அதிகளவில் மதிப்பிடப்படுகின்றன.
- தற்போது பிரபலமாகப் பெருமளவில் பயன்படுத்தப்படும் அரியமண் தாது நியோடைமியம், போரான் மற்றும் இரும்புடன் கலக்கப்பட்டு உலகின் வலிமையான நிலைக் காந்தங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- கைபேசிகள், வன்தட்டுகள் மற்றும் இரயில்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன.




## மனிதன் மற்றும் யானை இனங்கள் இடையிலான சூழலியல் சார்ந்த மோதல்

- ஒடிசா அரசானது, யானைகளைப் பாதுகாப்பதற்காகவும், மனிதன் மற்றும் யானை இனங்கள் இடையிலான சூழலியல் சார்ந்த மோதலைத் தணிப்பதற்காகவும் ஒரு விரிவான செயல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இதன்படி அம்மாநிலமானது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- மூன்று யானைகள் காப்பகங்களைக் கொண்டிருக்கும் மண்டலம் I - என்பது 'யானை பாதுகாப்பு மண்டலமாக' விளங்கும்.
- மண்டலம் II ஆனது, வாழ்விடத்தின் தரம் மற்றும் வாழ்தகவுத் திறனை அதிகரிக்கச் செய்வதற்காகவும், நீண்டகால உத்திகள் மூலம் மோதலைக் குறைப்பதற்காகவும் ஒரு சகவாழ்வு மண்டலமாக பேணி காக்கப்படும்.
- மண்டலம் III ஆனது, குறுகிய கால உத்திகள் மூலம் மோதலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் வகையில் ஒரு மோதல் தணிப்பு மண்டலமாக இருக்கும்.
- மண்டலம் IV என்பது யானைகள் நடமாட்டம் இல்லாத ஒரு பகுதியாக இருக்கும்.
- இந்த மண்டலத்தில் சுற்றித் திரியும் யானைகள் பிடிக்கப்பட்டு, அவை எங்கிருந்து வந்தன என்று அடையாளம் காணப்பட்டு அவை அந்த இடங்களுக்கு உடனடியாக இட மாற்றம் செய்யப் படும்.
- கடந்த ஒன்பது ஆண்டுகளில், ஒடிசாவில் 700 யானைகள் உயிரிழந்துள்ள நிலையில், மனிதன் மற்றும் யானை ஆகியவற்றுக்கு இடையிலான சூழலியல் சார்ந்த மோதலால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு 860 என்ற எண்ணிக்கையினை எட்டியுள்ளது.




## ஆரஞ்சு நிற வெளவால்

- சத்தீஸ்கரில் அச்சுறுத்தப்படுதல் நிலையில் உள்ள அரிய வகை ஆரஞ்சு நிற வெளவால் தென்பட்டுள்ளது.
- 'வர்ணம் பூசப்பட்ட வெளவால்' என்றும் அழைக்கப்படுகின்ற இந்த விலங்கானது, பிரகாசமான ஆரஞ்சு மற்றும் கருப்பு நிற இறக்கைகளால் தனித்து வகைப்படுத்தப் படுகிறது.
- இந்தப் பிரகாசமான ஆரஞ்சு நிற வெளவால் ஆனது, பாஸ்தார் மாவட்டத்தில் அமைந்து உள்ள கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில், கடந்த சில ஆண்டுகளில் மூன்றாவது முறையாக தென்பட்டது.
- இந்தத் தேசியப் பூங்காவானது, அதன் சுண்ணாம்புக் கற்களால் ஆன குகைகளுக்குப் புகழ் பெற்றதோடு, இது வெளவால்களுக்கு உகந்த வாழ்விடத்தையும் வழங்குகிறது.

- 'கெரிவௌலா பிக்டா' என்ற அறிவியல் பெயரினைக் கொண்ட இந்த வர்ணம் பூசப் பட்ட வௌவால் இனமானது "அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள" இனமாகும்.
- வங்காளதேசம், மியான்மர், கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் இவை பொதுவாகக் காணப் படுகின்றன.



## இயற்கை இடர் விவரக்குறிப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் S&P குளோபல் நிறுவனம் ஆகியவை இணைந்து இயற்கை இடர் விவரக்குறிப்பு என்ற இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- இது இயற்கையின் மீது நிறுவனங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் மற்றும் அவற்றின் சார்புகள் ஆகியவை குறித்து பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு புதிய வழிமுறையாகும்.
- இயற்கையின் மீதான தாக்கங்கள் மற்றும் சார்புகள் பற்றிய அறிவியல் ரீதியாக ஒரு வலுவான மற்றும் நடவடிக்கை எடுக்கத் தகுந்தப் பகுப்பாய்வுகளை வழங்குவதன் மூலம் இயற்கை தொடர்பான இடர்களை மதிப்பிடுவதற்கும் அவற்றினை நிவர்த்திச் செய்வதற்குமான வழிமுறையினை செயல்படுத்தச் செய்வதற்கு நிதித் துறைக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகிலுள்ள பேறுகால மருத்துவப் பணியாளர்களின் நிலை 2022: கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்கா

❖ ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவை இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

❖ இதன்படி, பேறுகால மருத்துவப் பணியாளர்கள் வழங்கும் சேவைகளுக்கான பொது வழங்கீட்டுத் திட்டம் இருந்தால், கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்காவில் 2035 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.2 மில்லியன் உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

❖ பாலியல், இனப்பெருக்கம், தாய், பச்சிளம் குழந்தை மற்றும் இளம் பருவத்தினர் ஆகியோரின் ஆரோக்கியத்தை (SRMNAH) மேம்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் உத்திகளை வெற்றிகரமாக அடைவதற்கு ஒரு வலுவான எண்ணிக்கையில் பேறுகால மருத்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.





## 2022 - Nine Charts அறிக்கை

❖ இந்த அறிக்கையானது, சமீபத்தில் உலக வங்கியினால் வெளியிடப்பட்டது.


❖ 2022 ஆம் ஆண்டின் இறுதியில், உலக நாடுகளானது 1970 ஆம் ஆண்டில் பதிவான உலகளாவிய வறுமையை விட "மிக அதிகளவிலான மந்த நிலையை" எதிர்கொண்டு வருகிறது.

- தற்போது, 685 மில்லியன் மக்கள் கடுமையான வறுமை நிலையில் வாழ்கின்றனர்.
- இது 2020 ஆம் ஆண்டிற்கு அடுத்தபடியாக, கடந்த 20 ஆண்டுகளில் பதிவான வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளுக்கான ஒரு இரண்டாவது மோசமான ஆண்டாக 2022 ஆம் ஆண்டினைக் குறிப்பிடுகிறது.





## உணவு மற்றும் வேளாண்மையின் எதிர்காலம் - மாற்றத்திற்கான இயக்கிகள் மற்றும் தூண்டுகோல்கள்

- இந்த அறிக்கையினை உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கை வேளாண் உணவு முறைகளின் தற்போதைய மற்றும் அதிகரித்து வரும் இயக்கிகள் மற்றும் அவற்றின் சாத்தியமான எதிர்காலப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்தது.
- இந்த அறிக்கையின்படி, வேளாண் உணவு இலக்குகள் உட்பட 2030 ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைய வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.
- எதிர்காலத்தில் நிலையான உணவுப் பாதுகாப்பின்மை, வளங்களின் சீரழிவு மற்றும் நீடித்து நிலைக்க முடியாத பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை உலகம் எதிர் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் ஒட்டு மொத்த நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு விளைவுகளைக் கொண்டு வரும் வேளாண் உணவு முறைகளுக்கான பின்வரும் நான்கு எதிர்கால சூழ்நிலைகளை இந்த அறிக்கை கணித்துள்ளது.
  - ஒரே மாதிரியான சூழ்நிலைகள்
  - நிகர் செய்யப்பட்ட எதிர்காலம்
  - அதிகப்படியான போட்டி
  - நிலைத்தன்மைக்கான வர்த்தகப் பரிமாற்றம்




## உணவு விலைக் குறியீடு


- உணவு மற்றும் வேளாண் அமைப்பின் உணவு விலைக் குறியீடு (FFPI) என்பது ஒரு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் சர்வதேச விலைகளில் ஏற்படும் மாதாந்திர மாற்றத்தின் ஒரு மதிப்பீடு ஆகும்.
- இந்த அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் உலக உணவுப் பொருட்களின் விலை வரலாறு காணாத அளவிலான உச்சத்தை எட்டியது.
- இது 2021 ஆம் ஆண்டில் பதிவானதை விட 14.3% அதிகமாக உள்ளதைக் குறிப்பதோடு இது 1990 ஆம் ஆண்டில் இதற்கான பதிவுகள் தொடங்கியதிலிருந்து இதுவரை பதிவான மிக அதிக அளவிலான உயர்வாகும்.




## 2022 ஆம் ஆண்டின் சிறந்த செயல்திறன் கொண்ட உலக விமான நிலையங்கள்

- பெங்களூருவில் உள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையம் மற்றும் டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆகியவை முறையே இந்தப் பட்டியலில் இரண்டாவது மற்றும் ஏழாவது இடங்களைப் பிடித்துள்ளன.


- டோக்கியோவின் ஹனேடா விமான நிலையம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அசுல் ஏர்லைன்ஸ் நிறுவனமானது, உலகளவிலான நேரம் தவறாத விமான நிறுவனங்களின் பட்டியலில் "முன்னணியில்" திகழ்கிறது.




## குழந்தைகள் இறப்பு விகிதம் 2022

- 2021 ஆம் ஆண்டில், 5 மில்லியன் குழந்தைகள் தனது 5 வயதினை அடையும் முன்பே இறந்துள்ளனர்.
- அதே ஆண்டில் 5 முதல் 24 வயதுக்குட்பட்ட 2.1 மில்லியன் அளவிலான குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டில், உலகளவில் பதிவான ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 1,000 பிறப்புகளுக்கு 38 இறப்புகள் ஆக இருந்தது.
- ஆனால் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் இந்த விகிதமானது 1,000 பிறப்புகளுக்கு 74 என்ற அளவில் உள்ளது.
- குறைந்த வருமானம் உள்ள நாடுகளில், 2021 ஆம் ஆண்டில் பதிவான ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 1,000 பிறப்புகளுக்கு 67 இறப்புகள் ஆகும்.
- அதிக வருமானம் உள்ள நாடுகளில் 1,000 பிறப்புகளுக்கு 5 இறப்புகள் என்ற விகிதமே பதிவாகியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் துணை சஹாரா நாடுகள் மற்றும் தெற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் மற்ற எல்லாப் பகுதிகளையும் விட அதிகமான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் இறப்பு ஆனது பதிவாகியுள்ளது.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புகளில் 80 சதவீதத்திற்கும் அதிகமான இறப்புகள் மற்றும் 5-24 வயதுக்குட்பட்ட நபர்களிடையே பதிவான 70 சதவீத இறப்புகள் ஆகியவை ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் தெற்கு ஆசியா ஆகிய நாடுகளிலேயே பதிவாகியுள்ளன.
- குழந்தை பிறந்த முதல் 28 நாட்கள் அந்தக் குழந்தை உயிர்வாழ்வதற்குப் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகும் வகையிலான காலமாகும்.
- 2021 ஆம் ஆண்டில், குழந்தை பிறந்த முதல் மாதத்தில் சுமார் 2.3 மில்லியன் குழந்தைகள் அல்லது ஒரு நாளைக்கு 6,400 குழந்தைகள் இறந்துள்ளன.

FIGURE 2 Under-five mortality rate, by Sustainable Development Goal region, 1990, 2000 and 2021




## ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடு 2023

- இலண்டனில் அமைந்துள்ள ஹென்லி & பார்ட்னர்ஸ் நிறுவனமானது, உலகம் முழுவதும் உள்ள கடவுச்சீட்டுகளை தரவரிசைப்படுத்தியதற்கான ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் 199 வெவ்வேறு நாடுகளின் கடவுச் சீட்டுகள் மற்றும் 227 வெவ்வேறு பயண இடங்கள் இடம் பெற்றுள்ளன.
- நுழைவு இசைவுச் சீட்டு இல்லா அணுகலில் 193 நாடுகளுடன் ஜப்பான் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ஜப்பானிய கடவுச் சீட்டு ஆனது உலகின் அதிகாரம் வாய்ந்த கடவுச்சீட்டு என்ற தகுதியினைப் பெறுவது இது தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகும்.
- இந்தியா இக்குறியீட்டில் 85வது இடத்தைப் பிடித்துள்ளதோடு இது 59 நாடுகளுக்குப் பயணிப்பதற்கான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத அணுகலைப் பெற்றுள்ளது.
- பாகிஸ்தான் (32), சிரியா (30), ஈராக் (29), ஆப்கானிஸ்தான் (27) ஆகியவை இந்தக் குறியீட்டில் கடைசி 4 இடங்களைப் பெற்ற நாடுகளாகும்.

| COUNTRY | RANK | ACCESS |
|---|---|---|
| Japan | 1 | 193 |
| Singapore, South Korea | 2 | 192 |
| Germany, Spain | 3 | 190 |
| Finland, Italy, Luxembourg | 4 | 189 |
| Austria, Denmark, Netherlands, Sweden | 5 | 188 |
| France, Ireland, Portugal, United Kingdom | 6 | 187 |
| Belgium, Czech Republic, New Zealand, Norway, Switzerland, United States | 7 | 186 |
| Australia, Canada, Greece, Malta | 8 | 185 |
| Hungary, Poland | 9 | 184 |
| Lithuania, Slovakia | 10 | 183 |

## உலக இடர் அறிக்கை 2023

- உலகப் பொருளாதார மன்றமானது, 2022-2023 ஆம் ஆண்டு உலகளாவிய இடர் கருத்துக் கேட்புக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் உலக இடர் அறிக்கையின் 18வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- வாழ்க்கைச் செலவின நெருக்கடி, உணவு விநியோக நெருக்கடி, எரிசக்தி விநியோக நெருக்கடி, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உள் கட்டமைப்பு மீதான இணையத் தாக்குதல்கள் ஆகியவை தற்போது உலகம் எதிர் கொண்டு வரும் மிகப்பெரிய ஆபத்துகளாகும்.
- தற்போதைய புவிசார் அரசியல் மற்றும் பொருளாதாரப் போக்குகளால் உருவாக்கப் படுகின்ற சமூக மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான இடர்கள் 2025 ஆம் ஆண்டில் அதிகம் ஏற்பட உள்ளன.
- உலக அபாயங்கள் அனைத்திலும் 'வாழ்க்கைச் செலவினம் சார்ந்த நெருக்கடி தான்' முதல் இடத்தில் இருப்பதாக இந்த அறிக்கை தரவரிசைப் படுத்தியுள்ளது.
- எரிபொருள் விலையேற்றம் காரணமாக கிட்டத்தட்ட 92 நாடுகளில் போராட்டங்கள் வெடித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள்

- உலக வங்கியானது, அதன் சமீபத்திய உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் என்ற அறிக்கையை வெளியிட்டது.
- உலகப் பொருளாதாரம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் 1.7% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 2.7% ஆகவும் வளர்ச்சி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில், வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் உள்ள தனி நபர் வருமான வளர்ச்சியானது சராசரியாக 2.8% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- 2023-24 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் உள்ள தனிநபர் வருமான வளர்ச்சி சராசரியாக 1.2% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 2.5% ஆக உள்ள வளர்ச்சி பெற்ற பொருளாதாரங்களின் வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டில் 0.5% ஆக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதியில், புதிதாக உருவாகி வரும் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவுகள் தொற்றுநோய்க்கு முன்பு எதிர்பார்க்கப்பட்ட அளவை விட தோராயமாக 6% குறைவாக இருக்கும்.

South Asia Country Forecasts
(Annual percent change unless indicated otherwise)

| | 2020 | 2021 | 2022e | 2023f | 2024f |
|---|---|---|---|---|---|
| GDP at market prices (average 2010-19 US$) | | | | | |
| **Calendar Year Basis** [a] | | | | | |
| **Afghanistan** [b] | -2.4 | -20.7 | .. | .. | .. |
| **Maldives** | -33.5 | 41.7 | 12.4 | 8.2 | 8.1 |
| **Sri Lanka** | -3.5 | 3.3 | -9.2 | -4.2 | 1.0 |
| | 2019/20 | 2020/21 | 2021/22e | 2022/23f | 2023/24f |
| **Fiscal Year Basis** [a] | | | | | |
| **Bangladesh** | 3.4 | 6.9 | 7.2 | 5.2 | 6.2 |
| **Bhutan** | -2.3 | -3.3 | 4.6 | 4.1 | 3.7 |
| **India** | 3.7 | -6.6 | 8.7 | 6.9 | 6.6 |
| **Nepal** | -2.4 | 4.2 | 5.8 | 5.1 | 4.9 |
| **Pakistan (factor cost)** | -0.9 | 5.7 | 6.0 | 2.0 | 3.2 |


## உலக காலந்தவறாமை பட்டியல் 2023

| Rank | Coverage | Airport Name | Country | Code | OTP 2022 | Cancellation Rate % 2022 | OTP 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 94.6% | Osaka Intl (Itami) | Japan | ITM | 91.45% | 1.04% | 88.03% |
| 2 | 92.7% | Matsuyama | Japan | MYJ | 91.44% | 0.72% | - |
| 3 | 90.3% | Miyazaki | Japan | KMI | 91.34% | 2.45% | - |
| 4 | 97.2% | Nagoya Chubu Centrair International Apt | Japan | NGO | 90.78% | 1.04% | - |
| 5 | 81.5% | Durban King Shaka International Apt | South Africa | DUR | 89.73% | 1.37% | 83.59% |
| 6 | 94.2% | Kagoshima | Japan | KOJ | 89.05% | 2.14% | 83.34% |
| 7 | 88.9% | Kumamoto | Japan | KMJ | 88.87% | 1.95% | - |
| 8 | 82.0% | Pinto Martins – Fortaleza Intl Apt | Brazil | FOR | 88.81% | 1.06% | 83.34% |
| 9 | 97.3% | Panama City Tocumen International | Panama | PTY | 88.65% | 0.47% | 92.21% |
| 10 | 93.7% | Fukuoka | Japan | FUK | 88.26% | 3.02% | - |
| 11 | 86.8% | Sapporo New Chitose Apt | Japan | CTS | 88.06% | 2.25% | 84.06% |
| 12 | 90.6% | Tokyo Intl (Haneda) | Japan | HND | 88.06% | 2.10% | 86.60% |
| 13 | 88.1% | Coimbatore | India | CJB | 88.01% | 0.54% | - |
| 14 | 98.9% | Belo Horizonte Tancredo Neves Int Apt | Brazil | CNF | 87.26% | 1.66% | 81.55% |
| 15 | 86.6% | Alejandro Velasco Astete Intl Apt | Peru | CUZ | 87.08% | 3.42% | - |

- ஜப்பானிய விமான நிலையங்கள் முதல் மூன்று இடங்களையும், உலகின் முதல் 12 இடங்களில் ஒன்பது இடங்களையும் பிடித்தன.
- ஒசாகா சர்வதேச விமான நிலையமானது நேரந்தவறாமை செயல்திறன் (OTP) மதிப்பீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மாட்சுயாமா, மியாசாகி மற்றும் நகோயா சுபு சென்ட்ரேர் விமான நிலையங்கள் உள்ளன.
- இந்தியாவின் தென் மாநிலமான தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர் (CJB) விமான நிலையம் இதில் 13வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியாவின் மற்ற விமான நிலையங்கள் எதுவும் இதன் முதல் 20 இடங்களுக்குள் இடம் பெறவில்லை.


## "பணக்காரர்களின் தக்கனப் பிழைக்கும்" அறிக்கை

- "பணக்காரர்களின் உய்தல்" என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையினை ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, தற்போது நாட்டின் மொத்தச் செல்வத்தில் 40%க்கும் அதிகமான அளவிலான சொத்துக்களை இந்தியாவில் உள்ள 1% பணக்காரர்களே கொண்டு உள்ளனர்.
- 2012 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், நாட்டின் மக்கள்தொகையின் அடி மட்ட நிலையில் உள்ள மக்கள் நாட்டின் செல்வத்தில் வெறும் 3% மட்டுமே கொண்டு உள்ளனர்.
- இந்தியாவின் பத்துப் பணக்காரர்களுக்கு 5% வரி விதிப்பதன் மூலம் நாட்டிலுள்ள பல்வேறு குழந்தைகளை மீண்டும் பள்ளிக்குக் கொண்டு வந்து கல்வி வழங்குவதற்கு போதுமான பணத்தைப் பெற முடியும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இதன்படி ஆண் தொழிலாளர்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு 1 ரூபாய்க்கும் பெண் தொழிலாளர்கள் வெறும் 63 பைசா மட்டுமே சம்பாதித்துள்ளனர்.
- 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் கிராமப்புற தொழிலாளர்கள் ஆகியோர் முறையே 55% மற்றும் முன்னேறியச் சமூக குழுக்கள் பெற்றதில் பாதியளவு மட்டுமே சம்பாதித்துள்ளனர்.



## உலகச் சமூக அறிக்கை 2023


- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது (UN DESA) 2023 ஆம் ஆண்டிற்கான உலகச் சமூக அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின் கருத்துரு "முதுமை அடைந்து வரும் உலகில் யாரும் விடுபட்டு விடக் கூடாது" என்பதாகும்.
- இந்த அறிக்கையின்படி, உலகளவில் உள்ள 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது உடையவர்களின் எண்ணிக்கையானது அடுத்த 30 ஆண்டுகளில் இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- முதியோர்களின் எண்ணிக்கையானது, உலக மக்கள்தொகையில் 16 சதவீதத்திற்கும் அதிகமான அளவில், 2050 ஆம் ஆண்டில் 1.6 பில்லியனை எட்டும்.
- வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் ஆகியவை இதில் மிகவும் வேகமான வளர்ச்சியை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மேலும், தற்போது ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இணைந்து அதிக முதியோர்கள் பங்கைக் கொண்டுள்ளன.
- இந்தியாவில், 2050 ஆம் ஆண்டுக்குள், நாட்டில் உள்ள முதியோர் எண்ணிக்கை 324 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## உலக ஆயுத ஆற்றல் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டு உலக ஆயுத ஆற்றல் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தினை வகிக்கிறது.
- அமெரிக்காவைத் தொடர்ந்து ரஷ்யா இரண்டாவது இடத்திலும், சீனா 3வது இடத்திலும், இந்தியா 4வது இடத்திலும் உள்ளன.

- உலக ஆயுத ஆற்றல் குறியீடு ஆனது நாடுகளை அவற்றின் இராணுவ வலிமையின் அடிப்படையில் தர வரிசைப்படுத்துகிறது.
- நீண்ட கால தாக்குதல் மற்றும் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த நாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- இப்பட்டியலில் பாகிஸ்தான் 7வது இடத்தில் உள்ளது.
- இந்தியா போர் ரக பீரங்கிகள் எண்ணிக்கையில் 6வது இடத்தையும், கடற்படையின் எண்ணிக்கையில் 8வது இடத்தையும் பிடித்தது.
- இந்தக் குறியீடு உலக நாடுகளின் அணுசக்தித் திறன்களை மதிப்பீட்டில் எடுத்து கொள்ளவில்லை.




## உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம்




- ஃபைனான்ஸ் எனப்படும் தயாரிப்பு நிறுவன மதிப்பீட்டு ஆலோசக நிறுவனத்தின் அறிக்கையின்படி, அமேசான் உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

- இந்த அறிக்கையின் பெயர் "உலகின் முன்னணி 500 தயாரிப்பு நிறுவனங்கள் 2023" ஆகும்.
- ஆப்பிள் உலகின் இரண்டாவது மிக மதிப்புமிக்க நிறுவனமாக தரவரிசைப்படுத்தப் பட்டுள்ள நிலையில், அதைத் தொடர்ந்து கூகுள் நிறுவனம் இதில் இடம் பெற்றுள்ளது.
- கடந்த ஆண்டு 78 ஆக இருந்த இந்தியாவின் டாடா குழுமத்தின் நிறுவன மதிப்ப்பீட்டுத் தரவரிசையானது 69 ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியத் தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்களில், கடந்த ஆண்டு 158வது இடத்திலிருந்த இன்ஃபோசிஸ் நிறுவனம் 150வது இடத்திற்கு முன்னேறியது.

## நிறுவனக் காப்புத்திறன் குறியீடு 2023


- 2023 ஆம் ஆண்டு நிறுவனக் காப்புத்திறன் குறியீட்டில், முகேஷ் அம்பானி உலக அளவில் 2வது இடத்தையும், இந்திய அளவில் முதல் இடத்தையும் பிடித்துள்ளார்.
- என்விடியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, ஜென்சன் ஹுவாங், உலக அளவில் அதிக மதிப்புமிக்க தலைமை நிர்வாக அதிகாரியாக இடம் பெற்றுள்ளார்.
- இதில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சத்யா நாதெல்லா 3வது இடத்தைப் பிடித்து உள்ளார்.
- அவரைத் தொடர்ந்து அடோப் நிறுவனத்தின் சாந்தனு நாராயண் மற்றும் கூகுள் நிறுவனத்தின் சுந்தர் பிச்சை ஆகியோர் உள்ளனர்.
- இந்தக் குறியீட்டை பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனம் தொகுத்து வெளியிடுகிறது.
- வணிக வெற்றி, நீண்ட கால நிறுவன உருவாக்கம் மற்றும் நிறுவனத்தின் தனிப்பட்ட நற்பெயரைப் பேணிக் காத்தல் ஆகியவற்றின் தேவைகளைச் சமநிலைப்படுத்தும் தலைமை நிர்வாக அதிகாரிகளை இந்த குறியீடானது பாராட்டி அதனைத் தரவரிசைப் படுத்துகிறது.



## உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம் : போக்குகள் 2023

- உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம் : போக்குகள் 2023 (WESO போக்குகள்) என்ற அறிக்கையினை சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டு உள்ளது.
- உலகளாவிய வேலைவாய்ப்பு வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டில் 1% மட்டுமே இருக்கும் என்று இந்த அறிக்கை கணித்துள்ள நிலையில், இது 2022 ஆம் ஆண்டில் இருந்த அளவின் பாதி அளவை விட குறைவாக இருக்கும்.
- உலகளாவிய வேலையின்மை அளவானது 2023 ஆம் ஆண்டில் சிறிது சிறிதாக சுமார் மூன்று மில்லியன் அதிகரித்து 208 மில்லியனாக உயரும்.
- 2022 ஆம் ஆண்டில், 214 மில்லியன் தொழிலாளர்கள், அதாவது உலக மக்கள் தொகையில் 6.4 சதவீதம் பேர் மிகவும் மோசமான வறுமை நிலையில் உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 47.4% ஆக இருந்த நிலையில், ஆண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 72.3% ஆகும்.
- இளைஞர்கள் (15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்கள்) முறையான வேலைவாய்ப்பைக் கண்டுபிடித்து அதனைத் தக்க வைத்திருப்பதில் கடுமையான சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.
- அவர்களின் வேலையின்மை விகிதம் வயது வந்தோர் பிரிவினரை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- ஐந்தில் ஒருவருக்கு அதாவது 23.5% இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சி கிடைக்கப் பெறவில்லை.
- இவை 1970 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக, ஒரே நேரத்தில் அதிக பண வீக்கம் மற்றும் குறைந்த வளர்ச்சி - போன்ற தேக்கநிலைக்கான நிலைமைகளை உருவாக்கி உள்ளன.

Figure 1.9. Average annual employment growth, 2010-24, world and by country income group (percentages)



# மாநிலச் செய்திகள்

## லோக் ஆயுக்தா மசோதா – மகாராஷ்டிரா

- லோக் ஆயுக்தா மசோதாவினை நிறைவேற்றிய முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- ஊழலுக்கு எதிரான கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பின் கீழ் மாநில முதல்வர் மற்றும் அமைச்சர்கள் குழு ஆகியவற்றினைக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா லோக் ஆயுக்தா மற்றும் உப-லோகாயுக்தா என்ற சட்டமானது அம்மாநிலத்தில் தற்போது அமலில் உள்ளது.
- தற்போதுள்ள சட்டத்தின்படி, ஊழல் தடுப்பு குறைதீர்ப்பாளர் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மட்டுமே பரிந்துரைக்க முடியும்.
- எனினும், இந்தப் புதியச் சட்டமானது, ஊழல் தொடர்பான வழக்கினை விசாரிக்குமாறு மாநில அரசு சார்ந்த முகமைகளுக்கு வலியுறுத்துவதற்கு லோக் ஆயுக்தா மற்றும் உப-லோக் ஆயுக்தா ஆகிய அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.




## உத்தரப் பிரதேசத்தில் உள்ள இடங்களின் பெயர் மாற்றம்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள இரண்டு இடங்களின் பெயர்களை மாற்ற மத்திய உள் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அந்த 2 இடங்கள்
  - கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிக் கழகம் 'முண்டேரா பஜார்' என்ற இடத்தின் பெயர் 'சௌரி-சௌரா' எனவும்,
  - தியோரியா மாவட்டத்தில் உள்ள 'டெலியா ஆப்கான்' கிராமத்தின் பெயரானது 'டெலியா சுக்லா' எனவும் மாற்றப்பட்டுள்ளன.
- ஒரு கிராமம், சிறுநகரம் அல்லது பெருநகரத்தின் பெயரை மாற்றுவதற்கு, ஒரு நிர்வாக அரசின் உத்தரவு தேவையாகும்.
- ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்கு வேண்டி பாராளுமன்றத்தில் சாதாரணப் பெரும்பான்மையுடன் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

## ஜெலியாங்ராங் ஐக்கிய முன்னணி அமைப்பின் அமைதி ஒப்பந்தம்

- வன்முறையைக் கைவிட்டு, அமைதியான ஜனநாயகச் செயல்பாட்டில் இணைவதற்கு ஒப்புக் கொண்ட மணிப்பூர் கிளர்ச்சிக் குழுவுடன் மத்திய அரசு ஒரு அமைதி ஒப்பந்தத்தினை மேற்கொண்டது.
- இந்த முத்தரப்பு ஒப்பந்தமானது மத்திய அரசு மற்றும் மணிப்பூர் அரசாங்கங்கள் மற்றும் ஜெலியாங்ராங் ஐக்கிய முன்னணி அமைப்பின் (ZUF) கிளர்ச்சிக் குழு ஆகியவற்றுக்கு இடையே கையெழுத்தானது.
- ஆயுதமேந்தியப் போராளிகளின் மறுவாழ்வு மற்றும் மறு குடியேற்றத்திற்கு இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது.
- ஒன்றாக ஒப்புக் கொள்ளப்பட்ட அடிப்படை விதிகளை அமல்படுத்துவதை மேற் பார்வையிட ஒரு கூட்டுக் கண்காணிப்புக் குழுவானது அமைக்கப்படும்.
- ஜெலியாங்ராங் ஐக்கிய முன்னணி அமைப்பு என்பது நாகா பழங்குடியினரின் ஜெலியாங்ராங் சமூக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- ஜெலியாங்ராங் ஐக்கிய முன்னணி அமைப்பு ஆனது மணிப்பூரில் செயல்படும் 13 கிளர்ச்சிக் குழுக்களில் ஒன்றாக தெற்காசியப் பயங்கரவாத இணையதளத்தினால் பட்டியலிடப் பட்டுள்ளது.



## திட்டம் 929

- திரிபுரா முழுவதும் உள்ள 929 வாக்குச் சாவடிகளில் தேர்தல் ஆணையம் முழு கவனம் செலுத்தி, அங்கு நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 92 சதவீத வாக்குப் பதிவு என்ற அளவை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்தச் சாவடிகளில் 89 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளேப் பதிவாகியுள்ளன.
- இந்தச் சாவடிகளில் பதிவாகி வரும் குறைந்த வாக்குச் சதவீதத்தை அதிகரிக்கச் செய்வதற்காக, தேர்தல் ஆணையம் 'திட்டம்-929' என்ற ஒரு திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

## சுழிய அளவு வேட்டையாடல் சம்பவங்கள் பதிவு

- அசாம் மாநிலத்தில் 2022 ஆம் ஆண்டில் காண்டாமிருகங்கள் எதுவும் வேட்டையாடப் படவில்லை என்று அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா ஜனவரி 01 ஆம் தேதியன்று அறிவித்தார்.

- அசாம் மாநிலத்தில் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு காண்டாமிருக வேட்டையாடுதல் சம்பவங்கள் எதுவும் பதிவாகாதது இதுவே முதல் முறையாகும்.
- கடைசியாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று கோலாகாட் மாவட்டத்தில் உள்ள கோஹோராவில் அமைந்த ஹிலகுண்டா எனுமிடத்தில் காண்டாமிருகங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் பதிவானது.
- இந்தியக் காண்டாமிருக (Rhinoceros unicornis) இனங்கள் பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கு, வடக்கு வங்காளத்தின் சில பகுதிகள் மற்றும் தெற்கு நேபாளத்தின் சில பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது.
- இந்தியக் காண்டாமிருக இனங்கள் IUCN அமைப்பின் சிவப்புப் பட்டியலில் பாதிக்கப் படக்கூடிய இனங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




## 2வது நீளமான கம்பிவடப் பாலம்




- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, ஜுவாரி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வரும் புதிய பாலத்தின் முதல் கட்ட கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.
- இது வடக்கு கோவாவில் உள்ள பாம்போலிம் மற்றும் தெற்கு கோவாவில் உள்ள வெர்னா ஆகிய பகுதிகளை இணைக்கிறது.
- இது கோவா மாநிலத்தில் உள்ள பன்ஜிம்-மங்களூர் பிரிவில் அமைந்துள்ள NH-17/NH-66 சாலையில் அமைந்துள்ளது.

- இந்தப் பாலம் ஆனது வடக்கு மற்றும் தெற்கு கோவா இடையேயான பயண நேரத்தை குறைக்கும்.

## சியோம் பாலம் - அருணாச்சலப் பிரதேசம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சியோம் பாலம் சமீபத்தில் திறக்கப் பட்டது.
- இந்த உள்கட்டமைப்புத் திட்டமானது எல்லைச் சாலைகள் அமைப்பினால் (BRO) நிறைவு செய்யப்பட்டது.
- இது அலோங்-யிங்கியோங் சாலையில் அமைந்துள்ளது.
- சியோம் பாலம் ஆனது படைப்பிரிவுகளை நிலைநிறுத்தச் செய்வதற்கான கால தாமதத்தினைக் குறைப்பதிலும், கனரக உபகரணங்கள் மற்றும் இயந்திர மயமாக்கப் பட்ட வாகனங்களின் போக்குவரத்தினைப் பெருமளவில் மேம்படுத்தவும் உதவும்.




## இலவச அரிசி வழங்கீட்டுத் திட்டம் – தெலுங்கானா




- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழான மத்திய அரசின் இலவச அரிசி வழங்கீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு தெலுங்கானா அரசு முடிவு செய்துள்ளது.
- அம்மாநிலத்தில் உள்ள தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் அட்டைதாரர்களுக்கு, ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு வீதம் ஐந்து கிலோ அரிசி வழங்குவதற்கு இந்த மத்திய அரசின் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆனால் மாநில அரசு தனது சொந்தச் செலவில் கூடுதலாக 35.52 லட்சம் அட்டை தாரர்களுக்கும் இந்தத் திட்டத்தின் பயனை விரிவுபடுத்த உள்ளது.

- இரண்டு வகையான திட்டங்களின் அட்டைதாரர்கள், டிசம்பர் 31 ஆம் தேதி வரை பொது விநியோகத் திட்டத்தின் (PDS) கீழான பிரதம மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கீட்டுத் திட்டத்தின் பலனைப் பெற்று வந்தனர்.

## மணிப்பூர் கான் ஞாய் திருவிழா

- கான் ஞாய் என்ற ஒரு திருவிழாவானது, மணிப்பூர் மாநிலத்தில் உள்ள செலியாரோங் சமூகத்தினரால் கொண்டாடப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகும்.
- இந்த விழாவானது சமூகத்தை ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியுடன் ஒன்றிணைக்கின்ற கலாச்சாரம், இசை, நடனம் மற்றும் ஆன்மீகச் சடங்குகளின் கொண்டாட்டமாகும்.
- ரோங்மெய், லியாங்மெய் மற்றும் ஜீம் பழங்குடியினர் ஆகியோரை உள்ளடக்கிய செலியாரோங் சமூகமானது, அந்த மாநிலத்தின் மிக முக்கியமான ஒரு பழங்குடி சமூகங்களில் ஒன்றாகும்.



## இமொயினு இரட்பா விழா

- இமொயினு இரட்பா அல்லது எமொயினு இரட்பா என்பது மணிப்பூரில் உள்ள மெய்தே சமூகத்தினரால் கொண்டாடப்படும் ஒரு திருவிழா ஆகும்.
- இது 'இமோயினு அஹோங்பி' என்ற ஒரு பெண் தெய்வத்தினை வழிபடும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- 'இமொயினு' அல்லது 'எமொயினு' என்பது இத்திருவிழாவின் கொண்டாட்டத்தில் வழி படப்படும் தெய்வமாகும்.
- மெய்தே சமூகத்தின் புராணங்களில், இந்தத் தெய்வம் வீடு, அடுமனை, சமையலறை, செல்வம், அமைதி மற்றும் செழிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய தெய்வமாகும்.
- இவர் லீமரேல் சிதாபி என்ற ஒரு தெய்வத்தின் அவதாரங்களில் ஒருவராகவும் கருதப் படுகிறார்.

## உலகின் முதல் பனை ஓலை கையெழுத்துப் படிவ அருங்காட்சியகம்

- உலகின் முதல் பனை ஓலை கையெழுத்துப் படிவ அருங்காட்சியகத்தினை நவீன ஒலிப்பதிவு மற்றும் காட்சிப்பதிவுத் தொழில்நுட்பத்தின் மூலமாக கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் திறந்து வைத்தார்.

- "உலகின் முதல் பனை ஓலை கையெழுத்துப் படிவ அருங்காட்சியகம்" என புகழப் படும் இந்த அருங்காட்சியகமானது, கேரள வரலாறு மற்றும் பாரம்பரியத் தளங்கள் அருங்காட்சியகத்துடன் இணைந்து ஆவணக் காப்பகத் துறையால் நிறுவப் பட்டது.
- இந்த அருங்காட்சியகமானது, 19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் 650 ஆண்டுகள் நீடித்த திருவிதாங்கூர் அரசின் நிர்வாக, சமூக-கலாச்சார மற்றும் பொருளாதார அம்சங்களின் சுவாரசியமான தகவல்களின் ஒரு களஞ்சியமாகும்.
- இது அருங்காட்சியகமாக மாறுவதற்கு முன்பு வரையில் 1887 ஆம் ஆண்டிலிருந்து மத்திய வட்டார மொழி ஆவணக் காப்பு அலுவலகமாக விளங்கியது.



## ஊதா திருவிழா 2023


- 'ஊதா திருவிழா: பன்முகத் தன்மையினைக் கொண்டாடுதல்' எனப்படும் இந்தியாவின் முதல் வகையான உள்ளடக்க அம்சத் திருவிழாவானது கோவாவில் தொடங்கப்பட்டது.
- இந்த மூன்று நாட்கள் அளவிலான திருவிழாவானது "அனைவரையும் வரவேற்கும் வகையிலான மற்றும் உள்ளார்ந்த உலகினை உருவாக்கச் செய்வதற்காக நாம் எவ்வாறெல்லாம் ஒன்றிணையலாம்" என்பதை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- ஊதா திருவிழாவானது, கோவாவின் சமூக நலன் மற்றும் பொழுதுபோக்கு சங்கத்தின் இயக்குநரகத்துடன் இணைந்து கோவா மாநில அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆணையத்தினால் நடத்தப்பட உள்ளது.

## சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு

- பீகாரில் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் தேதியன்று தொடங்கியது.
- சமூகத்தின் நலிவடைந்தப் பிரிவினருக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தச் செய்வதற்கான அறிவியல் பூர்வமான தரவுகளை இது வழங்கும்.
- சாதி அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆனது 2023 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.




## சர்வதேசப் பட்டம் விடும் திருவிழா 2023

- 2023 ஆம் ஆண்டு சர்வதேசப் பட்டம் விடும் திருவிழாவானது அகமதாபாத்தில் தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டின் இத்திருவிழாவானது, 'ஒரே பூமி, ஒரு குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற G20 மாநாட்டின் கருத்துருவில் நடத்தப்பட்டது.

- கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு இந்தத் திருவிழாவானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- உத்தராயணத்தின் அதிகாரப்பூர்வக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அகமதாபாத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் சர்வதேச காத்தாடி திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.





## கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 5.0

- 2022 ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் சின்னம், ஜோதி மற்றும் கீதம் ஆகியவை மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டது.
- ஐந்தாவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை மத்தியப் பிரதேசம் ஏற்பாடு செய்கிறது.
- முதல் முறையாக, நீர் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள், கேனோயிங் (சிறுபடகுப் போட்டி) மற்றும் வாள்வீச்சு போட்டிகள் இந்த கேலோ இந்தியா போட்டிகளின் ஒரு பகுதியாக இடம் பெற உள்ளன.


## MGNREGS தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

- கேரளா மாநில அரசானது இந்தியாவிலேயே முதன்முறையாக, மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS) மற்றும் கேரளா மாநிலத்தின் நகர்ப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டமான அய்யன்காளி நகர்ப்புற வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்காக ஒரு நல நிதி வாரியத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த நலநிதி வாரியத்தில் ஒரு தலைமை நிர்வாக அதிகாரி, ஐந்து அதிகாரப்பூர்வ உறுப்பினர்கள் மற்றும் எட்டு அதிகாரப் பூர்வமற்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த நல நிதி வாரியத்தின் இயக்குநர்களாக பணியாற்றுவர்.
- இது தொழிலாளர்கள் தனது 60 வயதை எட்டும்போது இந்த வாரியத்திடமிருந்து மாதாந்திர ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு வழிவகை செய்யும்.

- ஒரு மாநில அரசானது, MGNREGS தொழிலாளர்களுக்காக ஒரு நல நிதி வாரியத்தை உருவாக்குவது இதுவே முதல் முறையாகும்.
- 2021 ஆம் ஆண்டில், அம்மாநிலச் சட்டமன்றமானது இதற்கான வாரியம் அமைப்பது தொடர்பான மசோதாவினை நிறைவேற்றியது.
- 18 வயது முதல் 55 வயது வரை உள்ள எந்த ஒரு தொழிலாளியும் இந்த நிதி வாரியத்தில் உறுப்பினராகலாம்.
- அவர்கள் 55 வயது அடையும் வரை, ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை தவணையாக (தற்காலிகமாக ரூ.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது) செலுத்த வேண்டும்.
- குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தனது பங்களிப்பைச் செலுத்திய நிலையில் உறுப்பினர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார்.




## தால்ச்சர் உரத் தயாரிப்பு ஆலை




Coal Gasification Process of Talcher Fertilizer

- இந்தியாவில் முதல் முறையாக நிலக்கரி வளிமமாக்கல் முறையினை அடிப்படையாகக் கொண்ட உர உற்பத்தி ஆலையானது ஒடிசாவில் உள்ள தால்ச்சர் பகுதியில் 2024 ஆம் ஆண்டில் திறக்கப்பட உள்ளது.
- தால்ச்சரில் அமைய உள்ள இந்த ஆலையானது யூரியாவை உற்பத்தி செய்வதற்கு நிலக்கரி வளிமமாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்.
- இந்தியா நாடு யூரியாவிற்காக இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்க இந்த ஆலை உதவும்.

## ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டம்


- கர்நாடகாவின் இரண்டு பழைய அரச நகரங்கள் மத்திய அரசின் ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தின் கீழ் விரைவில் மேம்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்காக தேர்வு செய்யப்பட்ட 19 இடங்களுள் மைசூரு மற்றும் ஹம்பி ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டத்திற்காக, எட்டு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 19 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.




## இந்தியாவில் முதலீடு செய்வதற்கான சிறந்த இடங்கள்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் குஜராத் மற்ற அனைத்து இந்திய மாநிலங்களையும் விஞ்சியுள்ளது.
- இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தினால் (CMIE) இந்த தரவுகள் வெளியிடப் பட்டுள்ளன.
- 2022 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான, இரண்டாவது முதலீடு ஈர்ப்பு மிக்க இடமாக ராஜஸ்தான் உருவெடுத்துள்ளது.

- இந்த காலகட்டத்தில் அம்மாநிலம் கிட்டத்தட்ட 535 சதவீதம் என்ற அளவில் மிக அதிக வளர்ச்சி விகிதத்தைக் கண்டது.




## நீதிமன்றத்தில் இணையவழிச் செயல்பாட்டு அமைப்பு




- உஸ்மானாபாத் மாவட்ட நீதிமன்றம் ஆனது மகாராஷ்டிராவில், இணையவழிச் செயல்பாட்டு அமைப்பினை அறிமுகப்படுத்திய முதல் நீதிமன்றமாக மாறியுள்ளது.
- இந்த அமைப்பின் கீழ், வழக்குத் தாக்கல் செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் பிற நீதிமன்றச் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு நீதிமன்றத் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் கைபேசிச் செயலி அல்லது இணையவழி முறைகள் மூலம் மேற் கொள்ளப் படும்.
- இது தவிர, நீதிமன்ற நூலகமும் எண்ணிம முறையில் மாற்றப்பட்டுள்ளது.

## கேரளாவின் 'நிறுவனங்களின் ஆண்டு' திட்டம்

- கேரள அரசின் 'நிறுவனங்களின் ஆண்டு' திட்டம் சிறந்த நடைமுறை மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டமானது, ஓராண்டில் ஒரு லட்சம் நிறுவனங்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டது.

- இருப்பினும், அம்மாநில அரசு இந்த இலக்கை வெறும் எட்டு மாதங்களில் எட்டியது.
- எனவே, இந்தியாவில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்குவித்தல் என்ற நோக்கத்தில் கேரளா ஒரு புதிய தரத்தினை எட்டியுள்ளது.




## செர்செரா திருவிழா

- சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்பூரில் உள்ள துதாதாரி மடத்தில் செர்செரா திருவிழா கொண்டாடப் பட்டது.
- பயிர்களைப் பயிரிட்டு அறுவடை செய்வதால் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் இன்பத்தின் கொண்டாட்டமாக இந்த திருவிழா கொண்டாடப்படுகிறது.
- பயிர்ச் சாகுபடி காலம் முடிந்து அறுவடை தொடங்குவதைக் குறிக்கும் வகையில் இந்த விழா கொண்டாடப் படுகிறது.

## லோஹ்ரி அறுவடைத் திருவிழா

- லோஹ்ரி என்பது குளிர்காலப் பயிர்களுக்கான அறுவடைப் பருவக் காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் கொண்டாடப் படுகின்ற ஒரு பிரபலமான இந்தியப் பண்டிகை ஆகும்.
- இமாச்சலப் பிரதேசம், ஹரியானா மற்றும் ஜம்மு போன்ற நாட்டின் பிற பகுதிகளிலும் இவ்விழா பிரபலமாக கொண்டாடப்படுகிறது.
- லோஹ்ரி திருவிழாவானது பாரம்பரியமாக ராபி பயிர்களின் அறுவடைக் காலத்துடன் தொடர்புடையது.
- இத்திருவிழாவின் தோற்றத்தை துல்லா பத்தியின் கதையிலிருந்து அறியலாம்.
- அவர் பஞ்சாபின் புகழ்பெற்ற நாயகர் ஆவார் என்பதோடு, அவர் முகலாயப் பேரரசர் அக்பருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு கிளர்ச்சிக்கும் தலைமை தாங்கினார்.

## அரசியலமைப்பு சார்ந்த கல்வியறிவு பெற்ற முதல் மாவட்டம்

- இந்தியாவின் கொல்லம் மாவட்டமானது, இந்தியாவில் அரசியலமைப்பு சார்ந்த கல்வியறிவு பெற்ற முதல் மாவட்டமாக மாறியுள்ளது.

- கொல்லம் மாவட்டப் பஞ்சாயத்து, மாவட்டத் திட்டமிடல் குழு மற்றும் கேரள உள்ளூர் நிர்வாகக் கழகம் (KILA) ஆகியவை இணைந்து நடத்திய ஏழு மாத காலப் பிரச்சாரத்தின் விளைவாக இந்த வெற்றியினை அந்த மாவட்டம் பெற்றுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது, இம்மாவட்டத்தில் உள்ள 7 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 23 லட்சம் குடிமக்களுக்கு அரசியலமைப்பு பற்றிய கல்வியறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்த இலக்கினை அடைவதற்காக, கொல்லத்தில் உள்ள சுமார் 90% மக்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.



## இசை, கலாச்சாரம் மற்றும் உணவு வகைகளுக்கான மோங்கீத் திருவிழா

- மோங்கீத் எனப்படும் உயர்நிலை திருவிழாவானது, அசாமில் உள்ள மஜூலி மற்றும் சாதியாவில் உள்ள தேகாசங் எனுமிடத்தில் நடைபெற உள்ளது.
- இந்த விழாவானது அம்மாநிலத்தில் உள்ள இளம் திறமையாளர்கள் தங்கள் இசைத் திறனை வெளிப்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்குகிறது.
- இந்தத் திருவிழாவில், பிரபல இசைக் கலைஞர்கள் அவர்களுக்கான வழிகாட்டுதல் தகவல்களையும் அறிவுரைகளையும் வழங்குவர்.
- 2020 ஆம் ஆண்டில் கலை மற்றும் இசை இயக்கமாகத் தொடங்கப்பட்ட மோங்கீத், அசாம் மாநிலத்தின் எதிர்கால இசைத் திறமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## மாநில ஸ்தாபன தினம்

- மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்களின் ஸ்தாபன தினமானது ஜனவரி 21 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டானது, மூன்று மாநிலங்களின் 51வது ஸ்தாபன ஆண்டைக் குறிக்கிறது.
- மணிப்பூர் மற்றும் திரிபுரா ஆகியவை 1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவில் இணைக்கப் பட்ட சுதேச அரசுகள் ஆகும்.
- சுதந்திரத்திற்குப் பிறகு மேகாலயா அசாமின் ஒரு பகுதியாக ஆனது.
- 1971 ஆம் ஆண்டு வடகிழக்குப் பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம் இயற்றப்பட்ட பின்னர் 1972 ஆம் ஆண்டில் இம்மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.




## அனைத்துப் பழங்குடியினருக்கும் அவசியமான அடிப்படை ஆவணங்கள்







- அனைத்துப் பழங்குடியினருக்கும் அவசியமான அடிப்படை ஆவணங்கள் மற்றும் வசதிகளை வழங்கிய நாட்டின் முதல் மாவட்டமாக கேரளாவின் வயநாடு திகழ்கிறது.
- அனைத்துப் பழங்குடியினருக்கும் வழங்கப்படும் ஆதார் அட்டைகள், குடும்ப அட்டைகள், பிறப்பு/இறப்புச் சான்றிதழ்கள், தேர்தல் அடையாள அட்டைகள், வங்கிக் கணக்குகள் மற்றும் மருத்துவக் காப்பீடு ஆகியவை இதில் அடங்கும்.

- ஆவணங்களை எண்ணிம மயமாக்கலுக்கான அக்சயா பிக் (ABCD) என்ற ஒரு பிரச்சாரத்தின் மூலம் வயநாடு மாவட்ட நிர்வாகம் இந்தச் சிறப்பானச் சாதனையை எட்டியுள்ளது.

## அசாமின் சாராய்டியோ மொய்டம்கள்

- யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய மையத்திற்கு அஸ்ஸாமில் உள்ள சாராய்டியோ மொய்டம்களைப் பரிந்துரைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இது தேர்ந்தெடுக்கப் பட்டால், காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் மனாஸ் தேசியப் பூங்காவுடன் சேர்த்து அஸ்ஸாம் மூன்று உலகப் பாரம்பரிய தளங்களைக் கொண்டு இருக்கும்.
- ஆனால் வடகிழக்கு இந்தியாவில் கலாச்சாரப் பாரம்பரியம் என்ற பிரிவில் தற்போது உலகப் பாரம்பரிய தளம் ஏதும் இல்லை.
- அஸ்ஸாமில் உள்ள தை அஹோம் சமூகத்தின் பிற்பகுதியில் உள்ள மேட்டில் புதைக்கும் இடைக்காலப் பாரம்பரியத்தை சாராய்டியோ மொய்டம்கள் குறிக்கிறது.
- இதுவரை ஆய்வு செய்யப்பட்ட 386 மைடம்கள் அல்லது மொய்டம்களில், சாராய்டியோவில் உள்ள 90 அரசப் புதைகுழிகள் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.
- தற்போதைய நிலவரப்படி, அந்த அரசப் புதைகுழிகளில் 30 மட்டுமே இந்திய அரசின் தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ளன.



## மாபெரும் மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

- வட இந்தியாவின் மிகப்பெரிய, 2000kWp திறன் கொண்ட மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் சண்டிகரில் திறக்கப்பட்டது.
- இந்த மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையமானது, சண்டிகரில் உள்ள வாட்டர் ஒர்க்ஸ் அமைப்பின் 39வது பிரிவில் அமைந்துள்ளது.
- இது ஆண்டிற்கு 28,00,000 அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.
- இந்த ஆலையானது 80,000 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினை ஈடு செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பிரேசில் - பீலே

- ❖ பிரேசில் நாட்டுக் கால்பந்து ஜாம்பவான் பீலே தனது 82வது வயதில் காலமானார்.
- ❖ அவர் தனது 21 வருடத் தொழில்முறை வாழ்க்கையில் தான் பங்கேற்ற 1,363 போட்டிகளில் 1,281 கோல்களை அடித்த உலக சாதனையினைப் படைத்தவராக கருதப் படுகிறார்.
- ❖ உலகக் கோப்பையை மூன்று முறை வென்ற ஒரே இவரே ஆவார்.
- ❖ இவர் 1958, 1962 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளில் கோப்பைகளை வென்றுள்ளார்.
- ❖ பீலே 2000 ஆம் ஆண்டில் FIFA அமைப்பின் ஆண்டின் சிறந்த வீரராக அறிவிக்கப்பட்டார்.



## ஆஸ்திரேலியாவின் ஆடவருக்கான டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் விருது

- ஆஸ்திரேலியாவின் ஆடவருக்கான டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் விருதானது, புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்னே என்பவரை கௌரவிக்கும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ஷேன் வார்னே ஆடவருக்கான டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் விருதானது ஆண்டு தோறும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் விருதுகளில் ஒன்றாக வழங்கப்படும்.
- வார்னே 2005 ஆம் ஆண்டில் 40 விக்கெட்டுகளை வீழ்த்தியதற்காக ஒருமுறை 2006 ஆம் ஆண்டில் இந்த விருதினை வென்றார்.




## வாசெனார் கூட்டமைப்பின் தலைவர் பதவி

- அயர்லாந்தின் தூதர் இயோன் ஒ லியோரி, தான் வகித்து வந்த தலைமைப் பொறுப்பினை இந்தியத் தூதர் ஜெய்தீப் மசூம்தாரிடம் ஒப்படைத்தார்.
- மரபு சார்ந்த ஆயுதங்கள் மற்றும் இரட்டைப் பயன்பாடு கொண்டப் பொருட்களின் பரிமாற்றத்தைக் கண்காணிக்கிற வாசெனார் கூட்டமைப்பு என்பது ஒரு தன்னார்வ ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அமைப்பாகும்..
- இந்திய அரசானது, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வாசெனார் கூட்டமைப்பின் 42வது பங்கேற்பாளர் உறுப்பினராக இணைந்தது.

**Founded in 1996, the Wassenaar Arrangement (WA) is an elite club of countries subscribing to arms export controls, similar to the NSG and the Missile Technology Control Regime**

- Headquartered in Vienna, it has 42 members, the latest entrant being India. Barring China, all permanent members of the U.N. Security Council are its signatories
- Its goal is to "promote transparency and greater responsibility in transfer of conventional arms and dual-use goods and technologies"
- Since it's not a signatory to the Nuclear Non-Proliferation Treaty, India will look to the WA membership to boost its credentials to enter NSG


## போப் பெனடிக்ட் XVI

- முன்னாள் போப் (திருத்தந்தை) பெனடிக்ட் (ஜெர்மனி) சமீபத்தில் காலமானார்.
- இவருக்கு முன்னாள் திருத்தந்தையாக இருந்த இரண்டாம் ஜான் பால் இறந்த பிறகு 2005 ஆம் ஆண்டில் இவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- கடந்த ஆறு நூற்றாண்டுகளில் முதல் முறையாக பதவி விலகிய முதல் போப்பாண்டவர் இவரே ஆவார்.
- 2013 ஆம் ஆண்டில், உடல்நலக் காரணங்களுக்காக அவர் போப்பாண்டவர் பதவியில் இருந்து விலக முடிவு செய்தார்.
- 600 ஆண்டுகளில் முதல் முறையாக பதவி விலகிய முதல் போப்பாண்டவர் பதினாறாம் பெனடிக்ட் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.




## இந்தியாவின் முதல் பெண் முஸ்லிம் ஆசிரியை

- இந்தியாவின் முதல் பெண் முஸ்லீம் ஆசிரியை பாத்திமா ஷேக் தற்போது ஆந்திரப் பிரதேச மாநில அரசினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.
- எட்டாம் வகுப்பு பள்ளி பாடப்புத்தகங்களில் இவரது பங்களிப்பு குறித்த பாடத் திட்டத்தினை அம்மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- முந்தைய மகாராஷ்டிரா மாநில அரசும் அதன் பள்ளி பாடத்திட்டத்தில் பாத்திமா ஷேக் அவர்களின் பங்களிப்புகள் பற்றிய விரிவான பாடத் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- பாத்திமா ஷேக், ஜோதிராவ் பூலே மற்றும் சாவித்ரிபாய் பூலே ஆகியோருக்கு பூனாவில் உள்ள தனது இல்லத்தில் 1848 ஆம் ஆண்டில் அடைக்கலம் கொடுத்ததாக அறியப் படுகிறது.
- ஷேக், சாவித்ரிபாய் பூலேவுடன் இணைந்து சிந்தியா ஃபரார் நடத்தி வந்த ஒரு கல்வி நிறுவனத்தில் தனது ஆசிரியர் பயிற்சி படிப்பினை நிறைவு செய்தார்.
- அதன் பிறகு பூலே தம்பதியுடன் சேர்ந்து, அவர் தனது வீட்டிலேயே முதலாவது அனைத்து மகளிர் பள்ளியைத் தொடங்கினார்.
- பூலே அவர்களால் நடத்தப்பட்ட ஐந்து பள்ளிகளிலும் பாத்திமா ஷேக் ஆசிரியராக பணி புரிந்ததோடு, 1851 ஆம் ஆண்டில் மும்பையில் இரண்டு பள்ளிகளையும் அவர் நிறுவினார்.




## கௌரி அம்மா அறக்கட்டளை விருது

- ❖ கியூப நாட்டின் பிரபல சமூக சேவகரும் மனித உரிமை ஆர்வலருமான அலீடா குவேரா, K.R. கௌரி அம்மா அறக்கட்டளையினால் நிறுவப்பட்ட முதல் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ❖ மாற்றுத் திறனாளி குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு கடன் நிவாரணம் வழங்குவது தொடர்பான அவரது முயற்சிகளுக்காக வேண்டி இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- ❖ டாக்டர் அலீடா, இலத்தீன் அமெரிக்காவில் உள்ள குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக செயல்பட்டு வரும் கியூபா மருத்துவத் திட்ட அமைப்பின் ஒரு நடைமுறை உறுப்பினராகவும் உள்ளார்.



## விண்வெளி வீரர் வால்டர் கன்னிங்ஹாம்

- ❖ விண்வெளி வீரர் வால்டர் கன்னிங்ஹாம் சமீபத்தில் காலமானார்.
- ❖ நாசாவின் அப்பல்லோ விண்வெளி ஆய்வுப் பயணத் திட்டத்தின் கீழ், முதல் வெற்றி கரமான விண்வெளிப் பயணத்தினை மேற்கொண்ட குழுவில் எஞ்சியிருந்த கடைசி விண்வெளி வீரர் இவரே ஆவார்.
- ❖ 1968 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட அப்பல்லோ 7 ஆய்வுப் பயணத்தில் விண்வெளிக்குப் பயணித்த மூன்று விண்வெளி வீரர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- ❖ அப்பல்லோ 1 விண்வெளி ஆய்வுப் பயணம் தோல்வியடைந்தப் பிறகு, நாசா நிறுவனம் மேற்கொண்ட விண்வெளி வீரர்கள் கொண்ட முதல் விண்வெளிப் பயணம் இதுவாகும்.



## வார்டன்-QS ரீஇமாஜின் கல்வி விருதுகள் 2022

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, அமெரிக்காவின் பிலடெல்பியாவில் உள்ள வார்டன் கல்வி நிறுவனத்தின் வார்டன்-QS ரீஇமாஜின் கல்வி விருதுகளை வென்றுள்ளது.
- தரவு அறிவியல் மற்றும் பயன்பாடுகள் கல்விக்கான அறிவியல் சார்ந்த இளங்கலைப் படிப்பிற்கு, சிறந்த இயங்கலை கல்வித் திட்டப் பிரிவில் வெள்ளி விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் வழங்கும் தேசிய மேம் படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மூலமான கற்றல் திட்டம் (NPTEL) என்ற அமைப்பானது, வாழ்நாள் முழுவதும் கற்றல் என்ற பிரிவில் தங்க விருதினை வென்றது.
- இந்த விருதுகள் கல்வித் துறையில் புதுமை படைக்கும் மற்றும் சிறந்து விளங்கும் கல்வியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றின் பல சிறந்தச் சாதனைகளை அங்கீகரித்து விருது வழங்குகிறது.



## IACP 2022 விருது

- சர்வதேச காவல்துறைத் தலைவர்கள் சங்கம் ஆனது (IACP), சத்தீஸ்கர் காவல் துறையின் 'நிஜாத்' என்ற போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத முறையிலான மது விற்பனைக்கு எதிரான பிரச்சாரத்தினை நிறுவனம் சார்ந்த பிரிவில் 'குற்றத் தடுப்புக்கான தலைமைத்துவ விருதிற்காக' தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகம் (BPR&D) ஆனது நாட்டின் முப்பது சிறந்த திறன்மிகு காவல்துறை இயக்கங்களில் ஒன்றாக நிஜாத் பிரச்சாரத்தையும் சேர்த்தது.
- நிஜாத் என்பதன் பொருள் நீக்கம் அல்லது விடுதலை என்பதாகும்.
- இந்தியக் காவல் பணி அதிகாரி சந்தோஷ் குமார் சிங் தலைமையில் சத்தீஸ்கர் காவல்துறையினரால் இந்த இயக்கமானது தொடங்கப்பட்டது.
- சர்வதேச காவல்துறைத் தலைவர்கள் சங்கம் என்பது அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு சர்வதேச அமைப்பாகும்.




## உலக வாழ்விட விருது 2023




- ஒடிசா அரசானது, ஐக்கிய நாடுகள் சபையின் வாழ்விட அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான உலக வாழ்விட விருதினை வென்றது.
- இந்தத் திட்டமானது, குடிசைவாசிகளின் வாழ்க்கையை மேம்படுத்தச் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்ட நில உரிமை வழங்கீடு மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.

- முன்னதாக 2019 ஆம் ஆண்டில், குடிசைவாசிகளுக்கு நில உரிமைப் பாதுகாப்பை வழங்குவதில் வெற்றி கண்டதற்காக இந்தத் திட்டத்திற்கு உலக வாழ்விட விருதுகள் வழங்கப் பட்டது.

## 17வது பிரவாசி பாரதிய சம்மான் விருது

- 17வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடானது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர் நகரில் நடைபெறவுள்ளது.
- பூடான் நாட்டினைச் சேர்ந்த ஒரு கல்வியாளர், புருனே நாட்டினைச் சேர்ந்த ஒரு மருத்துவர் மற்றும் எத்தியோப்பியா, இஸ்ரேல் மற்றும் போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த உள்ள பொதுச் சேவை சார்ந்த சமூக ஆர்வலர்கள் உட்பட 27 நபர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான பிரவாசி பாரதிய சம்மான் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- பிரவாசி பாரதிய சம்மான் விருதானது, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டின் ஒரு பகுதியாக இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படுகிறது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய கௌரவ விருது இது ஆகும்.

## Y20 உச்சி மாநாடு

- G20 உச்சி மாநாட்டினை ஒட்டி முதலாவது Y20 (இளைஞர் 20) உச்சி மாநாடானது இந்தியாவில் நடைபெற உள்ளது.
- இது எதிர்கால வேலைவாய்ப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் ஆபத்துக் குறைப்பு; அமைதி நிலையினை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம்; மற்றும் ஜனநாயகத்தில் இளைஞர்கள் ஆகிய கருத்துருக்கள் மீது கவனம் செலுத்தும்.
- Y20 உச்சி மாநாட்டின் கருத்துருக்கள், சின்னம் மற்றும் இணையதளம் ஆகியவை புது டெல்லியில் வெளியிடப் பட்டது.




## மன்பிரீத் மோனிகா சிங்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மன்பிரீத் மோனிகா சிங் ஹாரிஸ் கௌன்ட்டி எனப் படும் மாவட்ட அமைப்பின் நீதிபதியாக பதவியேற்றுள்ளார்.
- இதன் மூலம், இவர் அமெரிக்காவின் முதல் பெண் சீக்கிய நீதிபதி என்ற ஒரு பெருமையினைப் பெற்றார்.
- அவரது தந்தை 1970 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் அமெரிக்காவிற்குக் குடி பெயர்ந்தார்.



## இந்திய உடல் அகநோக்கியியல் அறுவை சிகிச்சை முறையின் தந்தை



- இந்தியாவில் லேப்ராஸ்கோபிக் (உடல் அகநோக்கியியல் அறுவை சிகிச்சை) அறுவை சிகிச்சையின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் டெஹம்டன் E. உத்வாடியா சமீபத்தில் காலமானார்.
- 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இந்தியாவில் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.
- மருத்துவத் துறையில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக 2002 ஆம் ஆண்டில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் அவருக்கு, நாட்டின் மூன்றாவது உயரிய குடிமக்கள் விருதான பத்ம பூஷன் வழங்கப்பட்டது.

## 7வது டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2022

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், 7வது டிஜிட்டல் இந்தியா விருதுகளை (2022) வழங்கினார்.
- 7வது டிஜிட்டல் இந்தியா விருதுகளானது, பின்வரும் ஏழு பிரிவுகளின் கீழ் வழங்கப் பட்டது.
    - குடிமக்களுக்கு டிஜிட்டல் அதிகாரமளித்தல்
    - அடிமட்ட அளவிலான டிஜிட்டல் முயற்சிகள்
    - வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கான டிஜிட்டல் முன்னெடுப்புகள்
    - சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தரவுப் பகிர்வு மற்றும் பயன்பாடு

- பொது எண்ணிமத் தளங்கள் - மத்திய அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநிலங்கள்
- புத்தொழில் நிறுவனங்களுடனான டிஜிட்டல் முன்னெடுப்புகள்
- GIGW & அணுகல்தன்மை வழிகாட்டுதல்களுடன் இணங்கும் வகையிலான சிறந்த இணையம் மற்றும் கைபேசி சார்ந்த முன்னெடுப்புகள்

## பதங்கராவ் கடம் விருது

- ❖ தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனமான இந்திய சீரம் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ஆதார் பூனவல்லாவிற்கு பதங்கராவ் கடம் விருது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்திய சீரம் நிறுவனமானது, இதுவரை 160 தடுப்பூசிகளைத் தயாரித்துள்ளதால் ஆதார் பூனவல்லா தனது தந்தை டாக்டர் சைரஸ் பூனவல்லாவின் செல்வாக்கினை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.
- ❖ டாக்டர் பதங்கராவ் கடம் அவர்கள் தரமான கல்வியை வழங்குவதற்காக 190 கல்வி நிறுவனங்களை உருவாக்கி, தரமான மனித வளத்தை உருவாக்கிய தலைவர் ஆவார்.

## ஜப்பானில் இந்தியாவின் முதல் பெண் விமானி

- ❖ படைத் தலைவர் அவனி சதுர்வேதி, வீர் கார்டியன் 2023 எனப்படும் விமானப் பயிற்சியில் பங்கேற்க உள்ளார்.
- ❖ இந்திய விமானப்படையின் முதல் பெண் போர் விமானி இவரே ஆவார்.
- ❖ பெண் அதிகாரிகள் வெளிநாடுகளில் இந்தியாவின் சார்பாக பிரதிநிதித்துவப் படுத்தும் முதல் சந்தர்ப்பமாக இது அமையும்.
- ❖ இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையே இருதரப்பு வான் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.
- ❖ வான்படைப்பிரிவுத் தலைவர் பாவனா காந்த், மோகனா சிங் ஜிதர்வால் மற்றும் அவனி சதுர்வேதி ஆகியோர் முதல் மூன்று பெண் போர் விமானிகள் மற்றும் Su-30MKI போர் விமானங்களின் விமானிகள் ஆவர்.
- ❖ Su-30MKi என்பது ஒரு பல்துறை போர் விமானம் என்பதோடு, இது வான்வழி முதல் தரை வரையிலான மற்றும் வான்வழி நடவடிக்கைகள் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளக் கூடியத் திறன் கொண்டது.




## மகத்தான சேவைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பதக்கம்

- தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகத்துடன் இணைந்து செயல்படும் இந்திய அமைதி காப்புப் படையினருக்கு மதிப்பு மிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.
- இந்தியாவிலிருந்து 1,171 அமைதி காப்புப் படையினர் தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, 2370 இந்திய இராணுவ வீரர்கள் தெற்கு சூடானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணியில் பணியமர்த்தப் பட்டுள்ள நிலையில், இது ருவாண்டாவிற்கு (2637) அடுத்தபடியாக இரண்டாவது மிக அதிகமாகும்.



## ஹைதராபாத்தின் கடைசி நிஜாம்

- ஹைதராபாத்தின் கடைசி நிஜாம் முகரம் ஜா பகதூர் துருக்கியில் காலமானார்.
- 1948 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்துடன் இணைந்த பிறகு ஹைதராபாத் நிஜாமின் ஆட்சி முறை ஆதிக்கம் அழிந்து போனது.
- ஏழாவது நிஜாம் மிர் உஸ்மான் அலி கான், இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட நாளான 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி முதல் அக்டோபர் 31 ஆம் தேதி வரை அம்மாநிலத்தின் அரசப் பிரமுகராக பணியாற்றினார்.
- ஹைதராபாத் மாநிலத்தின் சில பகுதிகள் அண்டைப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டு ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- 1954 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், உஸ்மான் அலி கான் முகரம் ஜாவை தனது வாரிசாக அங்கீகரிக்குமாறு கடிதம் மத்திய அரசுக்கு எழுதிய நிலையில் அந்த முன்னாள் மன்னரின் இந்த கோரிக்கையானது 1964 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 1966 ஆம் ஆண்டில் உஸ்மான் அலி கான் காலமானதைத் தொடர்ந்து, ஜா ஹைதராபாத் நிஜாம் என்ற பட்டத்தை 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை கொண்டிருந்தார்.
- 1971 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் தனியுரிமைக் கருவூலம் மற்றும் அரசப் பட்டங்களை ரத்து செய்தது.
- தற்போது, முகரம் ஜாவின் மறைவு 1724 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஆசஃப் ஜாஹி வம்சத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.




## எல்லைச் சாலைகள் பாதுகாப்பு அமைப்பின் முதலாவது பெண் அதிகாரி

- இந்திய இராணுவத்தின் கேப்டன் சுர்பி ஜக்மோலா, எல்லைச் சாலைகள் அமைப்பின் வெளிநாட்டுப் பணிப் பிரிவில் நியமிக்கப்படும் முதல் பெண் அதிகாரி ஆவார்.
- இந்த அதிகாரி டான்டக் திட்டத்தின் ஒரு பகுதியாக பூடானுக்கு அனுப்பப்பட உள்ளார்.
- எல்லைச் சாலைகள் அமைப்பு என்பது இந்திய ஆயுதப் படைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் ஒரு நிர்வாக ரீதியான சாலைக் கட்டுமானப் படையாகும்.
- எல்லைச் சாலைகள் அமைப்பு இந்தியாவின் எல்லைகள் மற்றும் நட்பு ரீதியிலான அண்டை நாடுகளில் சாலைக் கட்டமைப்புகளை உருவாக்கிப் பராமரிக்கிறது.



## விமர்சகர்களின் விருப்புரிமை விருதுகள்




- 28வது விமர்சகர்கள் விருப்புரிமை விருது வழங்கும் விழாவானது, சமீபத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.
- S.S.ராஜமௌலியின் RRR திரைப்படமானது இதில் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.
    - சிறந்த அயல்நாட்டு மொழித் திரைப்படம்: "RRR"
    - சிறந்தப் பாடல்: “நாட்டு நாட்டு”: “RRR”


## பிரபஞ்ச அழகி 2023

- அமெரிக்க அழகி பட்டம் பெற்ற ஆர்’போனி கேப்ரியல் என்பவர் 71வது பிரபஞ்ச அழகிப் பட்டத்தினை வென்றுள்ளார்.
- வெனிசுலா அழகிப் பட்டம் வென்ற அமண்டா டுடாமெல் மற்றும் டொமினிகன் குடியரசு அழகிப் பட்டத்தினை வென்ற ஆன்ட்ரீனா மார்டினெஸ் ஆகியோர் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களைப் பெற்ற இரண்டு நபர்கள் ஆவர்.
- இதில் இந்தியாவின் திவிதா ராய் எந்த முன்னணி இடத்தையும் பெற முடியவில்லை.



## மூன்றாவது பணக்கார நடிகர்

- உலகப் புள்ளி விவரங்கள் நிறுவனம் சமீபத்தில் வெளியிட்ட ஒரு பட்டியலின்படி, ஷாருக் கான் உலகின் மூன்றாவது பணக்கார நடிகராகத் திகழ்கிறார்.
- 1 பில்லியன் டாலர்களுடன் ஜெர்ரி சீன்ஃபீல்ட் மற்றும் டைலர் பெர்ரி ஆகியோர் இந்தப் பட்டியலில் முன்னணியில் உள்ளனர்.
- அவர்களைத் தொடர்ந்து 800 மில்லியன் டாலர் மதிப்புடன் டுவைன் ஜான்சன் இடம் பெற்றுள்ளார்.
- இப்பட்டியலில் இடம் பெற்ற ஒரே இந்தியர் ஷாருக்கான் ஆவார்.
- டாம் குரூஸ் 620 மில்லியன் டாலர்களுடன் இப்பட்டியலில் ஷாருக் கானிற்கு அடுத்த இடத்தில் உள்ளார்.
- ஜாக்கி சான் 520 மில்லியன் டாலர்களுடன் இதில் 5வது இடத்தைப் பிடித்துள்ளார்.




## சிறந்த சிறு வங்கி விருது

- தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது (TMB) '2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த வங்கிகள் கணக்கெடுப்பில்' 'சிறந்த சிறு வங்கி விருதை' பெற்றுள்ளது.
- 1 லட்சம் கோடிக்கும் குறைவான பதிவு அளவு கொண்ட வங்கிகளின் பிரிவின் கீழ் இந்த விருதை இந்த வங்கி வென்றுள்ளது.
- தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் 101 ஆண்டுகள் பழமையான இந்த வங்கியானது, புகழ்பெற்ற மற்றும் பழைமையான தனியார் துறை வங்கிகளில் ஒன்றாகும்.

## MLK கிராண்டே பரேட் சிறப்பு விருது

- இந்திய-அமெரிக்கரான கிருஷ்ணா வவிலலா MLK கிராண்டே பரேட் என்ற சிறப்பு விருதினைப் பெற்றுள்ளார்.
- பொதுச் சமூகக் குடிமை உரிமைகளின் தலைவர் ஜூனியர் மார்ட்டின் லூதர் கிங்கின் ஏகாதிபத்தியத்தினை அமெரிக்கா கொண்டாடும் விதமாக, அமெரிக்காவின் பிரதான அமைப்புடன் இந்தியச் சமூகத்தை இணைக்கும் இவரது பங்களிப்புகளுக்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- நீண்ட காலமாக ஹியூஸ்டனில் வசித்து வரும் வவிலலா இந்தியவியல் கல்வி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார்.



## நியூசிலாந்து பிரதமர் ராஜினாமா

- நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.
- ஆர்டெர்ன் 2017 ஆம் ஆண்டில் தனது 37வது வயதில் பிரதமராகப் பொறுப்பேற்றார்.
- அவர் நியூசிலாந்தின் மூன்றாவது பெண் தலைவர் மற்றும் உலகின் இளைய தலைவர்களில் ஒருவர் ஆவார்.
- 1990 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் பெனாசிர் பூட்டோவுக்குப் பிறகு, பதவியில் இருந்த போது குழந்தைப் பெற்றெடுத்த உலகின் இரண்டாவது பிரதமர் ஆர்டெர்ன் ஆவார்.
- அக்டோபர் 14 ஆம் தேதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் நியூசிலாந்து தனது அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுக்க உள்ளது.



## அசாமிய கவிஞர் நீலமணி பூகன்

- புகழ்பெற்ற அசாமியக் கவிஞர் நீலமணி பூகன் காலமானார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதான 56வது ஞான பீட விருதை பூகன் வென்றார்.
- கவிதா (கபிதா) என்ற அவரது கவிதைத் தொகுப்பிற்காக, 1981 ஆம் ஆண்டின் அசாமிய மொழிக்கான சாகித்ய அகாடமி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.
- இந்திய அரசினால் 1990 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதும் இவருக்கு வழங்கப்பட்டதோடு, சாகித்ய அகாடமி உறுப்பினர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.



## உலகின் மிகவும் வயதான மனிதர்



- அமெரிக்காவில் பிறந்த, 115வது வயதினை எய்திய ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் உலகின் மிக வயதான மனிதர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- கின்னஸ் உலக சாதனைகளின் (GWR) படி, பிரான்சு நாட்டினைச் சேர்ந்த 118 வயதான லூசில் ராண்டனின் மரணத்திற்குப் பிறகு இவர் இந்த தகுதியைப் பெற்றுள்ளார்.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, மரியா பிரான்யாஸ் மோரேரா 115 வயது 322 நாட்கள் வயதுடையவர் ஆவார்.

## FITUR சர்வதேசப் பயணக் கண்காட்சி

- சர்வதேச சுற்றுலா கண்காட்சி அல்லது FITUR பயணக் கண்காட்சியானது ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்று வருகிறது.
- FITUR என்பது Feria International del Turismo என்பதன் பெயர் சுருக்கமாகும்.
- இந்தச் சுற்றுலாக் கண்காட்சியானது, உலகின் மிக முக்கியமான மற்றும் மிகப்பெரிய சுற்றுலாக் கண்காட்சிகளில் ஒன்றாகும்.
- இந்தியாவுடன் சேர்ந்து மேலும் 30 நாடுகள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன.
- இது முதன்முதலில் 1981 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## பால்கிருஷ்ணா விதல்தாஸ் தோஷி (1927-2023)




- இந்தியக் கட்டிடக்கலை நிபுணர் B.V. தோஷி தனது 95வது வயதில் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் காலமானார்.
- லீ கோர்புசியரிடம் பயிற்சி பெற்ற இவர், பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசு பெற்ற ஒரே இந்தியர் ஆவார்.
- இவர் இந்திய நவீனக் கட்டிடக்கலையின் முன்னோடி ஆவார்.
- 2022 ஆம் ஆண்டில் இவர் பிரித்தானியக் கட்டிடக் கலைஞர்களின் ராயல் நிறுவனம் வழங்கிய தங்கப் பதக்கத்தை வென்றார்.
- தோஷி அவர்கள், அகமதாபாத்தில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் மற்றும் திட்டமிடல் சார் தொழில்நுட்ப மையம் (CEPT) மற்றும் மகாத்மா காந்தி தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் கட்டிடங்களை வடிவமைப்பதில் புகழ் பெற்றவர் ஆவார்.

## இந்தியாவின் இரும்பு மனிதர்

- இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் சபீர் அலி என்பவர் சமீபத்தில் காலமானார்.
- 1981 ஆம் ஆண்டில் டோக்கியோ நகரில் நடந்த ஆசியத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் டெகாத்லான் தங்கப் பதக்கத்தினை இவர் வென்றார்.
- காத்மண்டு மற்றும் டாக்கா ஆகிய இடங்களில் நடைபெற்ற தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் இவர் வென்றார்.
- இவர் 1979 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்ற பல்வேறு கடுமையானப் போட்டிகளில் தொடர்ச்சியாக எட்டு ஓபன் போட்டிகளின் தேசியப் பட்டங்களையும் வென்றுள்ளார்.

- அலி 1981 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலக இரயில்வே துறை சார்ந்த விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்று உள்ளார்.
- இவருக்கு 1981 ஆம் ஆண்டில் அர்ஜுனா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- அப்போதையக் காலங்களில், டேலி தாம்சன் 'ஒலிம்பிக் போட்டிகளின் இரும்பு மனிதர்' என்றும், சபீர் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்றும் அழைக்கப்பட்டனர்.




## 2022 ஆம் ஆண்டின் சிறந்த அறிவியலாளர் விருது

- R. விஷ்ணு பிரசாத் "2022 ஆம் ஆண்டின் மிகவும் புகழ்பெற்ற அறிவியலாளர்" என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- இவர் 69 காப்புரிமைகள் கொண்ட அறிவியலாளர் ஆவார்.
- இது கலாச்சாரம், அறிவியல், விளையாட்டு மற்றும் புதுமை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்தப் பங்களிப்பிற்காக தனிநபர்களை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படும் விருதாகும்.
- டாக்டர் பிரசாத் சர்வதேசப் பத்திரிகைகளில் 300க்கும் மேற்பட்ட அளவில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ள நிலையில் அவரது கண்டுபிடிப்புகளுக்கு மேலும் பல காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான பங்களிப்புகளுக்காக இந்தியாவின் உயரிய விருதான சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு உட்பட பல மதிப்பு மிக்க விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.



# விளையாட்டுச் செய்திகள்

## யோ-யோ உடற்தகுதி சோதனை

- இந்தியக் கிரிக்கெட் அணியில் தேர்வு செய்வதற்கான தகுதி நிலைகளில் யோ-யோ உடற்தகுதி தேர்வு முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- யோ-யோ சோதனை முறையோடு சேர்த்து, டெக்ஸா (எலும்பு ஊடுகதிர் சோதனை) தேர்வு நிலைகளில் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.
- யோ-யோ சோதனை என்பது உயிர்வளி தாங்குதிறன் உடற்தகுதிச் சோதனை ஆகும்.
- அது 20 மீட்டர் இடைவெளியில் உள்ள குறிப்பான்களுக்கு இடையில் அதிக வேகத்தில் ஓடி நிறைவு செய்வதனை உள்ளடக்கியது.





**Figure 1**. The setup for the Yo-Yo Intermittent Recovery Test.

## இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் சிறந்த விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2022

- கிரிக்கெட் போட்டிகளின் மூன்று வடிவங்களிலும் சிறப்பாக ஆடிய இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் பெயர்களை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ளது.
- டெஸ்ட் போட்டிகளில், ரிஷப் பந்த்தினை முன்னணி மட்டைப் பந்து வீரராகவும், ஜஸ்பிரித் பும்ராவினைச் சிறந்தப் பந்து வீச்சாளராகவும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அங்கீகரித்துள்ளது.
- ஒரு நாள் சர்வதேச போட்டிகளில், ஷ்ரேயாஸ் ஐயர் சிறந்த மட்டைப் பந்து வீரராகவும், முகமது சிராஜ் சிறந்த பந்து வீச்சாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

- T20 போட்டிகளில், சூர்யகுமார் யாதவ் சிறந்த மட்டைப் பந்து வீரராகவும், புவனேஷ்வர் குமார் சிறந்தப் பந்து வீச்சாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.




## ரஞ்சி கோப்பைப் போட்டியில் ஹாட்ரிக்

- சௌராஷ்டிரா அணித் தலைவர் ஜெய்தேவ் உனட்கட், ரஞ்சிக் கோப்பைப் போட்டியின் தொடக்க ஓவரில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்து சாதனையினைப் படைத்தார்.
- இந்த 88 வருட உள்நாட்டுப் போட்டியின் வரலாற்றில், சாம்பியன்ஷிப் போட்டியின் முதல் ஓவரிலேயே ஹாட்ரிக் எடுத்த முதல் பந்து வீச்சாளர் என்ற வரலாற்றை இவர் படைத்துள்ளார்.




## சானியா மிர்சா ஓய்வு

- இந்தியாவின் முதல் மகளிர் டென்னிஸ் வீரரான சானியா மிர்சா ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இவர் பங்கு பெற உள்ள WTA 1000 துபாய் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியே இவரது கடைசிப் பங்கேற்பாகும்.
- WTA ஒற்றையர் தரவரிசையில் முதல் 30 இடங்களுக்குள் நுழைந்த முதல் இந்தியர் மிர்சா ஆவார்.
- இவர் மூன்று கலப்பு இரட்டையர் பட்டங்கள் உட்பட ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.



## 12 மணி நேரத்தில் 4500 சமன்நீக்க உதைகள்

- 12 மணி நேரத்தில் 4,500 சமன்நீக்க உதை வாய்ப்புகளைப் பெற்று கேரள அணி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தது.
- காலை 7.38 மணிக்கு முன்னாள் இந்திய வீராங்கனை U.ஷரபாலி தொடக்க வாய்ப்பினைப் பயன்படுத்தி பந்தை கோல் அடித்தது முதல் இடைவெளியில்லாமல் வாய்ப்புகள் வழங்கப் பட்டன.
- கேரளாவின் விளையாட்டு மற்றும் இளையோர் விவகார அமைச்சர் V.அப்துரஹிமான் கடைசி சமன்நீக்க உதை வாய்ப்பினை இரவு 7.38 மணிக்குப் பெற்றார்.
- ஜெர்மனியின் 2500 சமன்நீக்க உதை வாய்ப்புகள் என்ற முந்தைய சாதனையை இந்த மலப்புரம் நிகழ்வு முறியடித்தது.



## மிகப்பெரிய ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகச் சாதனை

- 50 ஓவர் கொண்ட சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இதுவரை இல்லாத அளவுக்கு 317 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியினை வீழ்த்தி இந்திய அணி சரித்திரம் ஒன்றைப் படைத்தது.
- இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் வென்று முடித்தது.

- 391 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 22 ஓவர்களில் 73 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆல் அவுட் ஆனது.
- முன்னதாக, 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அபர்டீனில் நடைபெற்ற அயர்லாந்திற்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து அணி 290 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




## ODI போட்டியில் ஐந்தாவது அதிக ரன் எடுத்த வீரர்

- ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் வரலாற்றில் அதிக ரன் குவித்த ஐந்தாவது வீரர் என்ற பெருமையினை விராட் கோலி பெற்றார்.
- அவர் இலங்கை வீரர் மஹேலெ ஜெயவர்த்தனவை முந்தி முதல் ஐந்து இடங்களுக்குள் நுழைந்தார்.
- விராட் 268 ஒருநாள் போட்டிகளில் 57.78 என்ற சராசரியில் 45 சதம் மற்றும் 65 அரை சதங்களுடன் 12,652 ரன்கள் எடுத்துள்ளார்.
- முதல் நான்கு இடங்களில் உள்ள வீரர்கள்: சச்சின் டெண்டுல்கர், குமார சங்ககாரா, ரிக்கி பாண்டிங் மற்றும் சனத் ஜெயசூர்யா ஆகியோர் ஆவர்.



## இரட்டைச் சதம் அடித்த இளம் வீரர்

- இந்திய கிரிக்கெட் வீரர் சுமன் கில், நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்து சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளார்.
- தனது சக வீரர் இஷான் கிஷானை (24 வயது 145 நாட்கள்) விஞ்சியதன் மூலம் இந்தச் சாதனையை எட்டிய இளைய வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.
- ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்த ஐந்தாவது இந்திய வீரர் கில் ஆவார்.
- ரோஹித் சர்மா ஒருநாள் போட்டிகளில் மூன்று இரட்டைச் சதங்கள் அடித்துள்ளார்.
- சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், கெய்ல், ஃபகார் ஜமான் மற்றும் மார்ட்டின் குப்தில் ஆகியோர் தலா ஒரு இரட்டைச் சதம் அடித்துள்ளனர்.

| Year | Player | Score | Opposition | Venue |
|---|---|---|---|---|
| 2023 | Shubman Gill | 208 | New Zealand | Hyderabad |
| 2022 | Ishan Kishan | 210 | Bangladesh | Chattogram |
| 2018 | Fakhar Zaman | 210* | Zimbabwe | Bulawayo |
| 2017 | Rohit Sharma | 208* | Sri Lanka | Mohali |
| 2015 | Chris Gayle | 215 | Zimbabwe | Canberra |
| 2015 | Martin Guptill | 237* | West Indies | Wellington |
| 2014 | Rohit Sharma | 264 | Sri Lanka | Eden Gardens |
| 2013 | Rohit Sharma | 209 | Australia | Bengaluru |
| 2011 | Virender Sehwag | 219 | West Indies | Indore |
| 2010 | Sachin Tendulkar | 200* | South Africa | Gwalior |

## ICC வருடாந்திர விருதுகள் 2022

- சர்வதேசக் கிரிக்கெட் சபையானது, தனது முதல் தனிநபர் விருது வென்றவர்களின் பட்டியலினை 2022 ஆம் ஆண்டு ICC விருது விழாவில் அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு முழுவதும் பதிவான ஒட்டு மொத்த செயல்திறன் மற்றும் சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு, 13 தனிப்பட்ட பிரிவுகளில் வெற்றியாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

| பிரிவு | விருது வென்றவர்கள் |
| --- | --- |
| சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பை | பாபர் அசாம் (பாகிஸ்தான்) |
| ரேச்சல் ஹெய்ஹோ பிளின்ட் கோப்பை | நாட் ஸ்கிவர் (இங்கிலாந்து) |
| ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீரர் | பென் ஸ்டோக்ஸ் (இங்கிலாந்து) |
| ஆடவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீரர் | பாபர் அசாம் |
| மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீராங்கனை | நாட் ஸ்கிவர் |
| ஆடவர் T20 சர்வதேச கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீரர் | சூர்யகுமார் யாதவ் (இந்தியா) |
| மகளிர் T20 சர்வதேச கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீராங்கனை | தஹ்லியா மெக்ராத் (ஆஸ்திரேலியா) |
| ஆடவர் கிரிக்கெட் போட்டியின் ஆண்டிற்கான சிறந்த எழுச்சி வீரர் | மார்கோ ஜான்சன் (தென் ஆப்பிரிக்கா) |
| மகளிர் கிரிக்கெட் போட்டியின் இந்த ஆண்டிற்கான சிறந்த எழுச்சி வீராங்கனை | ரேணுகா சிங் (இந்தியா) |
| ஆடவர் கிரிக்கெட் போட்டியின் இந்த ஆண்டிற்கான சிறந்த இணை கிரிக்கெட் வீரர் | ஹெகார்ட் எராஸ்மஸ் (நமீபியா) |
| ஆடவர் கிரிக்கெட் போட்டியின் இந்த ஆண்டிற்கான சிறந்த இணை கிரிக்கெட் வீராங்கனை | ஈஷா ஓசா (இந்தியா) |
| டேவிட் ஷெப்பர்ட் கோப்பை | ரிச்சர்ட் இல்லிங்வொர்த் (இங்கிலாந்து) |
| கிரிக்கெட் உலகின் ஆன்மா விருது | ஆசிப் ஷேக் (நேபாளம்) |

## ஆஸ்திரேலிய டென்னிஸ் ஓபன் போட்டி 2023

- 2023 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் கிரீஸ் நாட்டின் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸை வீழ்த்தி, செர்பியாவின் நோவக் ஜோகோவிச் தனது 10வது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றார்.
- ஜோகோவிச் பெற்ற இந்த 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் முறையே 22 மற்றும் 20 பட்டங்களைக் கொண்ட ரஃபேல் நடால் மற்றும் ரோஜர் ஃபெடரர் மீதான அவர்களது சாதனைகளோடு மீண்டும் ஈடு செய்துள்ளது.




# முக்கிய தினங்கள்

## உலகக் குடும்ப தினம் - ஜனவரி 01

- பிற கலாச்சாரங்கள், தேசங்கள் மீதான தேவையற்ற எதிர்மறையான சில அணுகு முறைகளை கைவிடுவதனை ஊக்குவிக்கச் செய்வதற்காக வேண்டி இத் தினமானது கொண்டாடப் படுகிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் பொற்கால (மில்லினியம்) கொண்டாட்டமான "அமைதி நிலையில் ஒரு நாள்" என்பதிலிருந்து உருவாக்கப்பட்டது.


## பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் உருவாக்க தினம் - ஜனவரி 01

- "பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது" அதன் 64வது உருவாக்கத் தினத்தினைக் கொண்டாடியது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது 1958 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்திய ஆயுதத் தொழிற்சாலைகளின் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி இயக்குனரகத் தொழில்நுட்ப மேம்பாட்டு ஸ்தாபனம் ஆகியவற்றினைப் பாதுகாப்பு அறிவியல் அமைப்புடன் இணைத்ததையடுத்து இந்த அமைப்பானது உருவாக்கப் பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது 52 ஆய்வகங்களின் வலை அமைப்பைக் கொண்டுள்ளது.




## உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04

- பார்வையற்றோருக்கான மனித உரிமைகளை உணர்ந்து கொள்வதில் தகவல் தொடர்பு சாதனமாக விளங்கும் பிரெய்லி எழுத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.
- ஜனவரி 04 ஆம் தேதியானது, பிரெய்லி எழுத்து முறையைக் கண்டுபிடித்த லூயிஸ் பிரெய்லி அவர்களின் பிறந்த நாளாகும்.
- பிரெய்லி அவர்கள் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்று பிரான்சு நாட்டில் பிறந்தார்.
- பார்வையற்ற நபர்கள் படிப்பதற்கும் எழுதுவதற்குமான ஒரு வாய்ப்பினை அளித்து, அவர்கள் பிறரை சார்ந்து இருக்கும் நிலையை தவிர்த்துச் சுதந்திரமாக செயல்படும் நிலையை அதிகரித்து, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை அணுகச் செய்வதற்கான வாய்ப்பினை வழங்கும் ஒரு முறையினை அவர் உருவாக்கினார்.
- பிரெய்லி என்பது குவிய வடிவில் அமைக்கப்பட்ட ஆறு புள்ளிகளைப் பயன்படுத்தி அகர வரிசை மற்றும் எண் குறியீடுகளைக் குறிக்கும் ஒரு அமைப்பாகும்.



## போர்களின் காரணமாக ஆதரவற்று விடப்படும் குழந்தைகளுக்கான உலக தினம் - ஜனவரி 06

- போர்களின் காரணமாக ஆதரவற்று விடப்படும் குழந்தைகளின் நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவர்களின் அவலநிலையைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதையும், அந்தக் குழந்தைகள் வளரும்போது அவர்கள் எதிர் கொள்ளும் உளவியல், சமூக மற்றும் உடல் ரீதியான தடைகள் குறித்து வலியுறுத்திக் கூறுவதையும் நோக்கமாகக் கொண்டு இத்தினமானது கொண்டாடப் படுகிறது.
- இந்த உலகலாவியத் தினமானது பிரான்சு நாட்டில் உள்ள SOS என்ஃபான்ட்ஸ் என் டிட்ரேசெஸ் என்ற அமைப்பினால் நிறுவப்பட்டது.
- போர்களின் காரணமாக ஆதரவற்று விடப்படும் குழந்தைகளின் அவலநிலையை நிவர்த்தி செய்வதற்கான ஒரு வாய்ப்பினை இந்த தினம் சமூகங்களுக்கு வழங்குகிறது.
- 2001 ஆம் ஆண்டு முதல், போர்களின் காரணமாக ஆதரவற்று விடப்படும் குழந்தைகளின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையானது தொடர்ந்து குறைந்து வருகிறது, ஆனால் அது ஆண்டிற்கு 0.7 சதவீதம் என்ற விகிதத்தில் மட்டுமே குறைந்து வருகிறது.

## இந்தியப் புத்தொழில் நிறுவனங்களுக்கான புத்தாக்க வாரம்- ஜனவரி 10 முதல் 16 வரை

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (DPIIT), இந்தியப் புத்தொழில் நிறுவனங்களுக்கான புத்தாக்க வாரக் கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளது.
- இது தொழில்முனைவோர், தொழில்முனைவோராக விரும்புவோர் மற்றும் அரசாங்க அதிகாரிகள், தொழில்துறை காப்பு நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற புத்தொழில் நிறுவனச் சூழல் அமைப்புடன் தொடர்புடையப் பங்குதாரர்களை உள்ளடக்கிய பிற செயலாக்க அமைப்புகளுக்கான அறிவுப் பகிர்வுக் கூட்டங்களை உள்ளடக்கிய ஒரு நிகழ்வாகும்.
- தேசியப் புத்தொழில் தினமானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட உள்ளது.

## பிரவாசி பாரதிய திவாஸ் - ஜனவரி 09

- இது வெளிநாடு வாழ் இந்தியர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்தியாவின் மேம்பாட்டிற்கு வெளிநாடுகளில் வாழும் இந்தியச் சமூகத்தினரின் பங்களிப்பு மற்றும் சாதனைகளைக் குறிக்கும் வகையில் ஜனவரி 09 ஆம் தேதியன்று கொண்டாடப் படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- 1915 ஆம் ஆண்டில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்திய நாட்டிற்குத் திரும்பிய நிகழ்வினையும் இந்தத் தினம் நினைவு கூர்கிறது.
- இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்த நாளில் பிரவாசி பாரதிய சம்மான் விருதுகள் வழங்கப் படுகின்றன.
- இந்த விருதுகள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன - அவையாவன பிரவாசி பாரதிய சம்மான், பிரவாசி பாரதிய சம்மான் தங்கம், மற்றும் பிரவாசி பாரதிய சம்மான் வாழ்நாள் சாதனை ஆகியனவாகும்.




## தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12

- ❖ இந்தியாவின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ❖ அவர் எப்போதும் நாட்டின் இளைஞர்களை ஊக்குவித்து, நாட்டின் மேம்பாட்டில் இளைஞர்களைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தினை முன்வைத்தார்.
- ❖ அவர் ஒரு தத்துவவாதி, சமூக சீர்திருத்தவாதி மற்றும் சிந்தனையாளர் ஆவார்.
- ❖ சுவாமி விவேகானந்தர் அவர்கள் தான் கடைப்பிடித்து வாழ்ந்த தத்துவம் மற்றும் இலட்சியங்களைப் பரப்புவதே இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய குறிக்கோள் ஆகும்.
- ❖ இந்திய அரசாங்கமானது 1984 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் தினத்தை அறிவித்தது.

## சாலைப் பாதுகாப்பு வாரம் 2023 - ஜனவரி 11/17

- ❖ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், 2023 ஆம் ஆண்டு ஜனவரி 11 முதல் 17 ஆம் தேதி வரை சாலைப் பாதுகாப்பு வாரத்தைக் கடைபிடிக்கிறது.
- ❖ அனைவருக்குமான பாதுகாப்பான சாலைகள் என்ற கொள்கை குறித்து பிரச்சாரம் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் ஆனது முதல் முறையாக 1989 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- ❖ 2010 ஆம் ஆண்டில் சுந்தர் குழு பரிந்துரைத்த தேசிய சாலைப் பாதுகாப்புக் கொள்கைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது.

## 7வது ஆயுதப்படை வீரர்கள் தினம் - ஜனவரி 14


- ❖ இந்திய நாட்டின் ஆயுதப் படைகளில் பணியாற்றிய வீரர்களின் தியாகம் மற்றும் சேவையைக் கௌரவிப்பதற்காக இந்தத் தினமானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தத் தினமானது 2017 ஆம் ஆண்டில் கொண்டாடப்படத் தொடங்கியது.

- இந்தத் தினமானது, நவம்பர் 11 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் போர் நிறுத்த தினத்தில் இருந்து உருவானதாக அறியப்படுகிறது.
- முதல் போர் நிறுத்த தினமானது 1919 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- இது முதலாம் உலகப் போரின் முடிவை நினைவு கூருவதையும், அப்போரில் போராடிய துணிச்சலான வீரர்களைக் கௌரவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில், 1926 ஆம் ஆண்டில் காங்கிரஸால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இந்தத் தினமானது முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- போர் நிறுத்த நாளானது 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆயுதப்படை வீரர்கள் தினம் என மறுபெயரிடப்பட்டது.

## 75வது இந்திய இராணுவ தினம் - ஜனவரி 15

- இது இந்திய இராணுவத்தின் முதல் இந்தியப் படைத் தளபதியான ஜெனரல் (ஃபீல்டு மார்ஷல்) K.M.கரியப்பா அவர்களின் சாதனைகளை நினைவு கூருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1949 ஆம் ஆண்டில் இந்நாளில் தான், கடைசி பிரிட்டிஷ் தலைமைப் படைத் தளபதியான ஜெனரல் சர் FRR புச்சரிடமிருந்து இந்திய இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை கரியப்பா ஏற்றார்.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தளபதி ஆனார்.
- கரியப்பா மற்றும் பாதுகாப்புப் படைகளைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இராணுவ தினம் கொண்டாடப்படுகிறது.

## தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் தினம் - ஜனவரி 16




- 2021 ஆம் ஆண்டில் ஜனவரி 16 ஆம் தேதியை தேசியப் புத்தொழில் நிறுவன தினமாக பிரதமர் அறிவித்தார்.

- இந்தியப் புத்தொழில் நிறுவனங்களின் சூழலமைவினைப் புகழுறச் செய்திட வேண்டுவதற்காகவும், அதனை மேம்படுத்தச் செய்வதற்காகவும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளன.
- புத்தொழில் இந்தியா திட்டமானது 2016 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- இது தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்புத் துறையின் ஒரு முன்னெடுப்பாகும்.
- புத்தொழில் இந்தியா புத்தாக்க வாரம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் 16 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டது.

## தேசியப் பேரிடர் மீட்புப் படை தினம் - ஜனவரி 19

- இப்படையானது 2006 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக உருவாக்கப்பட்டது முதல் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்தச் சிறப்பு கொண்ட பல திறன்களைக் கொண்ட மீட்புப் படையானது, எல்லைப் பாதுகாப்புப் படை (BSF), மத்திய சேமக் காவல் படை (CRPF), மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படை (CISF), இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP), சாஸ்த்ரா சீமா பால் (SSB) மற்றும் அசாம் ரைபிள்ஸ் ஆகியவற்றின் படைப் பிரிவுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- நீரில் மூழ்குதல், கட்டிட இடிபாடுகள், நிலச்சரிவுகள், வெள்ளப் பேரழிவு நிகழ்வுகள், பூகம்பங்கள் மற்றும் சூறாவளி போன்ற பேரிடர்களின் போது மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு முதன்மை நிறுவனமாக தேசியப் பேரிடர் மீட்புப் படை விளங்குகிறது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டமானது 2005 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

## பராக்ரம் திவாஸ்/ நேதாஜி ஜெயந்தி - ஜனவரி 23

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய 126வது பிறந்தநாள் ஆனது இந்திய நாட்டில் கொண்டாடப்பட்டது.
- இவரது பிறந்த நாள் ஆனது "பராக்ரம் திவாஸ் அல்லது துணிச்சல் தினம்" என்றும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது 2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அவரது கடுமையான எதிர்ப்பிற்காக அவர் நினைவு கூரப் படுகிறார்.
- இந்தத் தினமானது இந்திய மக்களை, குறிப்பாக இளைஞர்களை, துன்பங்களை எதிர் கொள்ளும் சமயங்களில் துணிவுடன் செயல்பட ஊக்குவிக்கிறது.
- மேலும், இளைஞர்களிடம் தேசபக்தியின் உணர்வைத் தூண்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தேசியப் பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24

- இந்தத் தினமானது, 2008 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- தேசியப் பெண் குழந்தைகள் தினத்தின் குறிக்கோள் ஆனது, பெண் குழந்தைகள் எதிர் கொள்ளும் பாரபட்சம் மற்றும் அநீதியை எடுத்துரைப்பதே ஆகும்.
- மேலும், இந்தத் தினம் நம் நாட்டில் உள்ள பெண்களின் உரிமைகள் பற்றிய விழிப்பு உணர்வை ஊக்குவிக்கிறது.
- கல்வி, வேலை வாய்ப்பு, உடை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பெண்கள் எதிர் கொள்ளும் ஏற்றத் தாழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய நோக்கமாகும்.
- ஆனால் சர்வதேச பெண் குழந்தைகள் தினமானது அக்டோபர் 11 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.




## சர்வதேச கல்வி தினம் - ஜனவரி 24

- கல்வியின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தவே இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.

- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 3, அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளை அறிவிக்க வாக்களித்தது.
- இந்தத் தீர்மானம் நைஜீரியா மற்றும் மற்ற 58 உறுப்பு நாடுகளால் இணைந்து முன்மொழியப் பட்டது.
- "மக்களில் முதலீடு செய்ய, கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள்" என்பது 2023 ஆம் ஆண்டின் கருப்பொருள் ஆகும்.


## உத்தரப் பிரதேசத்தின் ஸ்தாபன தினம் - ஜனவரி 24

- உத்தரப் பிரதேச மாநிலம் ஜனவரி 24 அன்று அதன் ஸ்தாபன தினம் அல்லது உத்தரப் பிரதேச தினத்தைக் கொண்டாடுகிறது.
- 2018 முதல் இந்தக் கொண்டாட்டம் மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.
- 2023 உத்தரப் பிரதேச தினத்தின் முக்கியக் கருப்பொருள் 'முதலீடு மற்றும் வேலை வாய்ப்பு' ஆகும்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, ஐக்கிய மாகாணங்களின் கீழ் உள்ள பகுதிகள் ஒன்றிணைக்கப் பட்டு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று உத்தரப் பிரதேசம் உருவாக்கப்பட்டது.




## தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தினம் - ஜனவரி 25

- இந்தத் தின அனுசரிப்பின் பின்னணியில் உள்ள முக்கிய நோக்கம், குறிப்பாக புதிய வாக்காளர்களை ஊக்குவிப்பதும், அவர்களின் சேவைகளை எளிதாக்கச் செய்வதும், வாக்காளர் சேர்க்கையை அதிகப்படுத்துவதும் ஆகும்.
- 2011 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் இந்தத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்த நாள் 1950 ஆம் ஆண்டில் இந்தியத் தேர்தல் ஆணையம் உருவான தினத்தைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டுக்கான கருபொருள், 'வாக்களிப்பதைப் போல எதுவும் இல்லை, நான் நிச்சயமாக வாக்களிக்கிறேன்' என்பதாகும்.




## தேசிய சுற்றுலா தினம் - ஜனவரி 25

- இது முதன்முதலில் இந்திய அரசால் 1948 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இது தேசியப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும், நாடு முழுவதும் பிரபலமான சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதற்கும் நோக்கமாக இருந்தது.
- இந்த ஆண்டு, தெலுங்கானாவின் போச்சம்பள்ளியில் தேசிய அளவிலான நிகழ்ச்சி நடைபெற்றது.
- இது ஹைதராபாத்தின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கிராமம் கையால் நெய்யப்பட்ட இகாட் புடவைகளுக்குப் பெயர் பெற்றது.

## இமாச்சலப் பிரதேச மாநிலம் உருவான நாள் - ஜனவரி 25

- 1971 ஆம் ஆண்டு இதே நாளில் தான் இமாச்சலப் பிரதேசம் இந்தியாவின் 18வது மாநிலமாக உருவானது.
- இது பொதுவாக தேவ பூமி அல்லது கடவுளின் பூமி என்றும், வீர பூமி என்றும் அதாவது இந்தியாவில் துணிச்சலானப் பகுதி என்று பொருள்படும் வகையில் அழைக்கப் படுகிறது.
- கரடுமுரடான நிலப்பரப்புகள், பல சிகரங்கள் மற்றும் நதி அமைப்புகளைக் கொண்ட இந்தியாவின் மூன்று மலை மாநிலங்களில் இதுவும் ஒன்றாகும்.

## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26


- திறமையான உலகளாவிய வர்த்தக நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக அயராது உழைக்கும் அனைத்துச் சுங்க முகவர்கள் மற்றும் நிறுவனங்களை இது கௌரவிக்கிறது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் ‘அடுத்த தலைமுறையை வளர்ப்பது: சுங்கத்தில் அறிவுப் பகிர்வு மற்றும் தொழில்சார் பெருமையின் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்’ என்பது ஆகும்
- இது 1953 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகச் சுங்க அமைப்பின் (WCO) முதல் அமர்வை நினைவு கூருகிறது.
- முன்பு சுங்கக் கூட்டுறவுக் கழகம் (CCC) என அழைக்கப்பட்ட WCO, 1952 ஆம் ஆண்டில் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் உருவாக்கப்பட்டது.
- உலகச் சுங்க அமைப்பின் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் உள்ளது.

## சர்வதேச இனப்படுகொலை நினைவு நாள் - ஜனவரி 27

- இது இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக அனுசரிக்கப்படும் சர்வதேச தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஜெர்மனியில் நாஜி ஆட்சியில் ஆறு மில்லியன் யூதர்கள், ஐரோப்பாவின் யூத மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் கொல்லப் பட்டதை இந்த நாள் நினைவு கூர்கிறது.
- 1945 ஆம் ஆண்டு செம்படையினரால் ஆஷ்விட்ஸ் வதை முகாம் விடுவிக்கப்பட்ட தேதியை நினைவு கூரும் வகையில் ஜனவரி 27 தேர்ந்தெடுக்கப்பட்டது.
- "வீடு மற்றும் சொந்தம்" என்ற கருப்பொருள் 2023 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் இனப் படுகொலை நினைவு மற்றும் அது சார்ந்த கல்விக்கு வழி காட்டுகிறது.

## தரவுத் தனியுரிமை தினம் - ஜனவரி 28


- தரவுப் பாதுகாப்பிற்கான உரிமை மற்றும் மக்கள் தங்கள் தரவுகளை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கும் பல்வேறு வழிகள் குறித்து அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எண்ணிம ரீதியில் முன்னேறி வரும் உலகில் தற்போது நிலவி வரும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றைக் குறித்து விழிப்புணர்வினை எழுப்புவதற்காக இந்தத் தினமானது உலகளவில் கொண்டாடப்படுகிறது.
- இந்த நாளின் முக்கிய குறிக்கோள், இந்தத் துறையில் உள்ள சவால்களைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதும், தனியுரிமை தொடர்பான அவர்களின் உரிமைகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியப் படுத்துவதும் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ‘தனியுரிமைக்கு முன்னுரிமை அளியுங்கள்' என்பதாகும்.




## உலகத் தொழுநோய் தினம் - ஜனவரி 29

- தொழுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- தொழுநோய் தொடர்பான தவறானத் தகவல்கள் மற்றும் பாகுபாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான அழைப்பினை இந்த நாள் விடுக்கிறது.


- தொழுநோய் ஹேன்சன் நோய் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஜெர்ஹார்டு ஹென்ரிக் ஆர்மயர் ஹேன்சன் 1873 ஆம் ஆண்டில் மெதுவாக வளர்கின்ற மைக்கோபாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியம் தான் இந்த நோய்க்கான முக்கியக் காரணம் என்பதனைக் கண்டறிந்தார்.
- 2023 ஆம் ஆண்டு உலகத் தொழுநோய் தினத்தின் கருத்துரு, "தற்போது செயலாற்றித் தொழுநோயை முடிவுக்குக் கொண்டு வருதல்" என்பதாகும்.
- இது 1954 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டினைச் சேர்ந்த புரவலரான ரவுல் ஃபோல்லேரோ என்பவரால் நிறுவப்பட்டது.
- தொழுநோய் என்பது ஒரு நாள்பட்ட தொற்று நோயாகும் என்பதோடு, இது மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது.
- இது மெதுவாக அதிகரிக்கிற நிலையில், இந்த நோயின் அறிகுறிகள் தோன்றும் கால இடைவெளி சராசரியாக 5 ஆண்டுகள் ஆகும்.
- இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 30 ஆம் தேதியன்று காந்தி அவர்களின் நினைவு தினத்தை ஒட்டி இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- உலகளவில் பதிவான தொழுநோய்ப் பாதிப்புகளில் பாதிக்கும் மேற்பட்டவை இந்தியாவில் கண்டறியப் பட்டுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவில் 1,33,781 தொழுநோய்ப் பாதிப்புகள் பதிவாகியுள்ளன மற்றும் உலகளவில் 1,40,546 தொழுநோய்ப் பாதிப்புகள் (புதிய பாதிப்புகள்) பதிவாகி உள்ளன.
- இந்தியாவில், தொழுநோயின் பாதிப்பு வீதம் 10,000 மக்கள்தொகைக்கு 0.4 ஆகும்.




## புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் - ஜனவரி 30

- உலக சுகாதாரச் சபையானது, 2021 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதியன்று, ஜனவரி 30 தேதியினைப் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினமாக அங்கீகரித்தது.
- உலகெங்கிலும் உள்ள ஏழை மக்கள் மீது இந்த நோய்கள் ஏற்படுத்தும் பேரழிவு மிக்க தாக்கம் பற்றிய சிறந்த விழிப்புணர்வை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்நோய்களைக் கட்டுப்படுத்துதல், நீக்குதல் மற்றும் ஒழித்தல் ஆகியவற்றுக்கான வளர்ந்து வரும் நடவடிக்கைகளை ஆதரிக்குமாறு அனைவருக்கும் அழைப்பு ஒன்றை விடுக்கும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் என்பது, 20 நோய்களின் மாறுபட்ட வடிவங்களின் குழுவாகும் என்பதோடு, அவை பெரும்பாலும் வெப்பமண்டலப் பகுதிகளில் பரவலாக காணப்படுகின்றன.
- தென்கிழக்கு ஆசியப் பிராந்தியமானது உலகளவில் இரண்டாவது அதிக அளவில் புறக்கணிக்கப் பட்ட வெப்பமண்டல நோய்கள் பதிவினைக் கொண்டுள்ளது.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் என்பது ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள வளர்ந்து வரும் பகுதிகளில் உள்ள விளிம்பு நிலைச் சமூகங்களிடையே மிகவும் பொதுவாக காணப்படும் தொற்றுநோய்களின் குழு ஆகும்.
- அவை வைரஸ்கள், பாக்டீரியாக்கள், புரோட்டோசோவா மற்றும் ஒட்டுண்ணிப் புழுக்கள் போன்ற பல்வேறு நோய்க் கிருமிகளால் ஏற்படுகின்றன.




# இதரச் செய்திகள்

## உள்நாட்டுக் கால்நடை இனங்கள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையானது (ICAR) கடந்த ஓராண்டில், 10 புதிய வகை கால்நடை இனங்களைப் பதிவு செய்துள்ளது.
- இதில் மாடு, எருமை, ஆடு மற்றும் பன்றி ஆகியவை அடங்கும்.
- இந்தப் பதிவானது, 2023 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் தேதியன்றைய நிலவரப் படி உள்நாட்டு இனங்களின் மொத்த எண்ணிக்கையை 212 ஆக உயர்த்தியுள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபை - தேசிய விலங்கின மரபணு வளங்கள் கழகம் (NBAGR) மூலம் இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டன.
- இந்த 10 புதிய இனங்களில் பின்வருபவை அடங்கும்
  - மூன்று புதிய கால்நடை இனங்கள் - கதானி, சஞ்சோரி, மாசிலம்.
  - ஒரு எருமை இனம் - பூர்ணதடி,
  - மூன்று ஆடு இனங்கள் - சோஜாட், கரௌலி, குஜாரி மற்றும்
  - மூன்று பன்றி இனங்கள் - பண்டா, மணிப்பூரி பிளாக், வாக் சாம்பில்.




## மெட்டாவெர்ஸ் உலகில் ஹாக்கி இந்தியா நுழைவு

- ஹாக்கி இந்தியா அமைப்பானது, தனது சமூக ஊடக தளங்களில் 'ஹாக்கிவெர்ஸ்' என்பதை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மெட்டாவேர்ஸ் உலகில் நுழைந்த முதல் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு இது ஆகும்.
- 'ஹாக்கிவெர்ஸ்' என்பது உலகளாவிய ஹாக்கி ரசிகர்கள் தங்களுக்கு விருப்பமான விளையாட்டை தங்கள் வீட்டில் இருந்தபடியே சென்று அனுபவிக்க முடியும் வகையில் ஒரு புதிய மெய்நிகர் அனுபவத்தை வழங்கும்.




## இந்தியக் கடலோரக் காவற்படை கப்பல் 'கம்லா தேவி'

- இந்தியக் கடலோரக் காவற்படையின் கப்பல் மற்றும் விரைவு ரோந்துக் கப்பலான 'கம்லா தேவி' சமீபத்தில் படையில் இணைக்கப்பட்டது.
- இந்தியக் கடலோரக் காவற்படை கப்பல் கம்லா தேவி, விரைவு ரோந்துக் கப்பல் வரிசையின் அதிகாரப்பூர்வ ஐந்தாவது மற்றும் கடைசிக் கப்பல் ஆகும்.
- இது தேவைப்படும் போது கடல் பகுதிகளில் ரோந்து சென்று, கடத்தல் தடுப்பு, வேட்டை தடுப்பு மற்றும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.




## 5,000 ஆண்டுகளுக்கு முன்பு பின்பற்றப்பட்ட மரணச் சடங்குகள்



- ஜூனா காதியா கிராமத்தில் (கட்ச், குஜராத்) மிகப்பெரியக் கல்லறைகளில் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில், பீங்கான் பானைகள், மணிகளால் ஆன நகைகள், விலங்குகளின் எலும்புகள் போன்ற மதிப்பு மிக்க பொருட்களுடன் உள்ளிட்ட கல்லறைகள் கண்டறியப்பட்டுள்ளன.
- பண்டைய மனிதர்கள் தனிநபர் பயன்பாட்டுக் கலைப்பொருட்கள், புனிதத் தன்மையுடன் வணங்கப் பட்ட விலங்குகள் மற்றும் உணவு மற்றும் நீர் கொண்ட பானைகள் போன்ற பிற்காலப் பயன்பாடு கொண்ட பொருட்களுடன் இறந்தவர்களை புதைத்தனர் என்பதை இவை நிரூபிக்கின்றன.
- இவை கி.மு. 3,200 முதல் கி.மு. 2,600 வரையிலான காலகட்டத்தினைச் சேர்ந்தவை.
- இந்தத் தளமானது, மண்-மேடுகளால் ஆன புதைகுழிகளில் இருந்து கற்களால் ஆன கல்லறைகளுக்கு மாற்றமடைந்தப் பரிமாற்றத்தினைக் காட்டுகிறது.

## 1200 ஆண்டுகள் பழமையான நுண்ணிய ஸ்தூபிகள்

- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI), 'நாளந்தா மகாவிஹாரா' வளாகத்தில் உள்ள சாராய் திலா சிகரப் பகுதிக்கு அருகில், 1200 ஆண்டுகள் பழமையான இரண்டு சிறு வடிவ வழிபாட்டு ஸ்தூபிகளைக் கண்டுபிடித்துள்ளது.

- புத்தர் உருவங்களைச் சித்தரிக்கும் வகையில் கல்லில் செதுக்கப்பட்ட இவை, 1200 ஆண்டுகள் பழமையானதாக இருக்கக் கூடும்.
- இந்தியாவில் கிபி 7 ஆம் நூற்றாண்டு முதல், சிறிய நுண்ணிய டெரகோட்டா வகை ஸ்தூபிகள் வழிபாட்டுக் காணிக்கைப் பொருள்களாகப் பிரபலமடைந்தன.
- நாளந்தா மகாவிஹாரா தளமானது கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரையிலான ஒரு மடாலயம் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொல் பொருள் சார்ந்த எஞ்சியப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
- இதில் ஸ்தூபிகள், ஆலயங்கள், விகாராக்கள் (குடியிருப்பு மற்றும் கல்விக் கட்டிடங்கள்) மற்றும் ஸ்டக்கோ வகை, கல் மற்றும் உலோகத்திலான பல்வேறு முக்கியமான கலைப் படைப்புகளும் இங்குள்ளன.



## உலகின் பழமையான எழுத்து பொறிக்கப்பட்ட பாறை

- நார்வேயில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், உலகின் மிகப் பழமையான ரன்ஸ்டோன் (ஜெர்மானிய இனத்தவரது வரி வடிவ எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்) என்று கருதப்படும் கல்வெட்டு ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தக் கல்வெட்டுகள் 2,000 ஆண்டுகள் பழமையானவையாகும் என்பதோடு இது ரூனிக் எழுத்து சார்ந்த புரிந்து கொள்ள முடியாத வரலாற்று காலத்தின் ஆரம்பக் கட்ட நாட்களைச் சேர்ந்தவையாகும்.
- இது "இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பழமையான ரூனிக் கல்வெட்டுகளில் ஒன்று" மற்றும் "உலகின் மிகப் பழமையான காலம் கண்டறியக்கூடிய ரன்ஸ்டோன்" ஆகும்.
- இதற்கு முன்பு, பழைய ரூன் எழுத்துக்கள் மற்ற பொருட்களின் மீது பொறிக்கப் பட்டிருப்பது கண்டறியப்பட்டன, ஆனாலும் கற்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் கண்டறியப் படவில்லை.
- ஆரம்பக் கால ரூனிக் எழுத்தானது, டென்மார்க்கில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்பினால் ஆன சீப்பில் பதிவாகியிருப்பது கண்டறியப்பட்டது.



## அதானி குழுமத்தின் மீதான ஹிண்டன்பர்க் ஆய்வு அறிக்கை

- அமெரிக்க நாட்டின் முதலீட்டு ஆலோசனை வழங்கீட்டு நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான ஹிண்டன்பர்க் வெளியிட்ட ஒரு அறிக்கைக்குப் பிறகு, அதானி குழுமப் பங்குகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.
- அதானி குழுமம் மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக ஹிண்டன்பர்க் நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.
- உலகப் பணக்காரர்கள் பட்டியலில் அதானி 11வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.
- ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனம் பல பெரிய நிறுவனங்களில் நடந்த ஊழல்களை வெளிக் கொண்டு வருகிறது.
- தற்போது இந்த மோசடிகளின் அறிக்கையை இந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இது சமபங்கு, கடன் மற்றும் பங்குகள் ஆகியவற்றினைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு தடயவியல் நிதி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★